உ

# விநாயக புராணம்

## வசனச் சுருக்கம்



ஆக்கம்:

சிவஸ்ரீ சிவகடாக்ஷ
கணேசலிங்கக் குருக்கள்

25வது
வெளியீடு
7.2.1994

சு. செல்லத்துரை
அதிபர்
மெய்கண்டான் மகாவித்தியாலயம்
இளவாலை.
24.05.06.

# விநாயகபுராண வசனச்சுருக்கம்

2-350

ஆக்கம்:


**சிவஸ்ரீ சிவகடாட்ச கணேசலிங்கக்குருக்கள்**

(ஷெ தேவஸ்தான பிரதம சிவாச்சாரியர்)



25 ஆவது வெளியீடு:

**பாலர் ஞானோதய சபை**

காசிவிநாயகர் தேவஸ்தானம்

வீணாக்கடவை, தெல்லிப்பழை.

**07 - 02 - 1994**

முதற் பதிப்பு — 07-02-1994

வெளியீடு: 25

அச்சுப்பதிப்பு:
நீரஜா அச்சகம், சுன்னுகம்.

அட்டைப்படத் தயாரிப்பு:
ஞானம், சங்கானை

விலை: ரூபா 100/=

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர்

**கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள் வழங்கிய**

# ஆசியுரை

எமது சமய மரபில் முதன்முதலில் வழிபடுவதற்குரிய கடவுள் விநாயகப்பெருமான் ஆவர். வழிபடுவோரது இடர்களைக் களைந்து அருள்பாலிக்கும் தெய்வமும் அவரே, எனவே நாம் எக்காரியத்தையும் தொடங்கு முன்பு அக்காரியம் இடையூறு எதுவுமின்றி நிறைவேற அருள் புரியும் வண்ணம் அப்பெருமானை வேண்டுவது மரபாகும். அவரது திருவருளினாலேயே எக்கருமமும் இனிது நிறைவேறும் என்பது எமது சமய நம்பிக்கை. அத்தகைய நம்பிக்கைக்குரிய முதன்மைக் கடவுளின் தெய்வீகப்பெருமைகளையும் திருவிளையாடல்களையும் இளந் தலைமுறையினர் அறிந்து பயன்பெறத்தக்கவகையில் அவரது பெருமை கூறும் விநாயகபுராணம் சுருக்கமாக எளிய நடையில் எழுதப்பட்டு வெளிவருவது பாராட்டப்படவேண்டிய முயற்சியாகும்.

தெல்லிப்பழையில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்பாலிக்கும் விநாயகரது ஆலயத்தில் தெய்வீகக் கைங்கரியத்தில் ஈடுபட்டு வரும் சிவஸ்ரீ சி. கணேசலிங்கக்குருக்கள் இப்புராணத்தினைச்சுருக்கி வசன நடையில் இளந்தலைமுறையினரின் நன்மை கருதி உருவாக்கப்பட்ட பாலர் ஞானோதய சபை கடந்த பல காலங்களில் அளப்பரிய சமயப் பணிகளை மேற்கொண்டு வருவதைச் சைவ உலகம் நன்கறியும். அத் தகைய சீரிய பணிகளின் வரிசையில் இப்பணியும் சேர்ந்து சபையின் பெருமையை மேலும் ஒருபடி உயர்த்துகின்றது. பாலர்களது சமய அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றை வளர்க்க இத்தகைய நூல்கள் பெரிதும் உதவுவன.

இந்நூலின் தொகுப்பாசிரியர்கடமையுணர்ச்சியும் அயராதமுயற்சி யுமுடையவர், நாவலர் வகுத்த வழியில் சைவத்தை வளர்க்கும் பணி யில் தம்மை ஈடுபடுத்தியுள்ளவர், அவரது அரிய முயற்சியினால் முன் னரும் பல நூல்கள் சிறார்களின் நன்மைகருதி வெளிவந்துள்ளன. விநாயக புராணத்தில் நாம் அறியவேண்டிய பல சமய உண்மைகள் பொதிந்துள்ளன. எமது சமய மரபின் அடிப்படை விடயங்களாகிய புராணச்சிறப்பு, விரத மகிமை போன்றவை நன்கு விளக்கப்பட்டுள் ளன, விநாயகப்பெருமானின் திருவருட் சிறப்புக்களை எடுத்துக்கூறும் இப்புராணச் சுருக்கத்தை சைவ உலகம் மனமுவந்து வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

சிவஸ்ரீ கணேசலிங்கக் குருக்களது இத்தகைய சிவபுண்ணிய கைங் கரியம் மேன்மேலும் சிறக்கவேண்டும் அவற்றின்மூலம் சமய உலகு நன்மை பெறவேண்டும் இத்தகையசமய அறிவு வளர்க்கும் நூல்களை உருவாக்கும் பணி சிறக்க எல்லாம்வல்ல விநாயகப்பெருமானின் திரு வருள் பொலிவதாக.

ப. கோபாலகிருஷ்ணன்

வேதாகம ஞானபானு

**சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்கள்**

*(அதிபர் தர்மசாஸ்தா குருகுலம்)*

அளித்த

# ஆசியுரை

காசிவிநாயகர் தேவஸ்தானத்துடன் இருபது ஆண்டுகளுக்கு மேல் எனக்குத்தொடர்பு உண்டு. இவ்வாலயத்தின் கும்பாபிஷேகத்தை நிகழ்த்தியும் முதலாவது மகோற்சவத்தை நடாத்தியும் வைத்த நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள் அவர்கள் தமது காலப் பகுதியிலே எனக்கு ஓர் அன்புக்கட்டளை பிறப்பித்துள்ளார். இவ்வா லயத்தில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தவருது பங்கு கொள்ளவேண்டும் என்று இதனுல் வேறு இடங்களில் எவ்வித கட மைகள் இருந்தாலும் அவற்றைத் தவிர்த்து இங்குவருவது எமது பணி யாகக் கருதிவருகின்றேன்.

இவ்வாலயத்திலே பாலர் ஞானேதயசபையினர் சைவச் சிருர் களுக்காகச் சமய நூல்களை வெளியிட்டுவருவது பாராட்டத்தக்கது இம்முறை மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் விநாயக புராண வசனச் சுருக்கம் இருபத்தைந்தாவது வெளியீடாக வெளிவருவது அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். குருக்கள் அவர்களும் ஏனைய சைவ மக்களும் செய்துவரும் இப்பணி மேலோங்கவேண்டும் என்று ஆசி கூறுகின்றேன்.

**தா. மகாதேவக்குருக்கள்**

## துர்க்காதுரந்தரி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் அளித்த

# வாழ்த்துரை

தெல்லிப்பழையில் விளங்கும் திருக்கோயில்களில் அருள்மிகு காசி விநாயகராலயம் பழமையும் அற்புதங்களும் நிறைந்த ஒரு திருக்கோயிலாகும். இங்கு அருட்பணியாற்றிய சிவஸ்ரீ சிவகடாட்சக்குருக்கள் அவர்கள் முழுமையாகத்தன்னை அர்ப்பணித்து இக்கோயிலையும் பாலர் ஞானோதய சபையையும் எழுச்சியும் வளர்ச்சியும் அடைய வைத்தவர். இவருடைய அயரா முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்ட பாலர் ஞானோதய சபையின் பணிகள் காலத்துக்குக் காலம் விரிவடைந்துள்ளன என்பது கண்கூடு. இன்று சிவஸ்ரீ கணேசலிங்கக்குருக்கள் அவர்கள் அதனைத் தொடர்ந்து வளர்த்துவருவது பராட்டுக்குரியது. நெருக்கடியான நிலையிலும் காசிவிநாயகராலயப் பூசையை ஆற்றிக்கொண்டு வரும் குருக்கள் அவர்கள் சமய அறிவை வளர்த்துக்கொள்ள உதவும் புராணக் கதைகள், திருமுறைவரலாறுகள் ஆகியவற்றைக் காலத்துக்குக்காலம் எழுதி அச்சிட்டு வெளியிட்டு வருகிறார். இந்த வகையிலே விநாயக புராணம் என்னும் இந்நூல் வெளியிடப்படுவது வரவேற்கத்தக்கது. விநாயகபக்தர்களும் மற்றும் அன்பர்களும் இதன் பயனை உணர்ந்து வரவேற்பார்களாக என்று வேண்டி விநாயகனருளை நினைந்து அமைகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி

உ

யாழ். பல்கலைக்கழக சிரேட்ட போதனாசிரியர்

**திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள் வழங்கிய**

# மதிப்புரை

தெல்லிப்பழை காசியிற்பிள்ளையார் ஆலயகுரு சிவஸ்ரீ கணேச லிங்கக்குருக்கள் ''விநாயகபுராணவசனச்சுருக்கம்'' என்னும் இந்நூலை ஆக்கிச் சைவஉலகுக்கு உபகரித்துள்ளார்கள். நூலாசிரியர் அறிவு, அடக்கம், அநுபூதி ஆகியன கைவரப்பெற்ற விநாயகபூஜாதுரந்தரர். தெல்லிப்பழை காசியிற்பிள்ளையார் ஆலயம் அமைதியும் பக்தியும் நிறைந்துள்ள சூழலிலே அமைந்திருப்பது சைவஉலகு அறிந்ததே. அதற்கு இந்நூலாசிரியரது சேவையே பிரதானமான காரணம் என்பதையும் ஆலயத்தை அறிந்தோர் அறிவர். மிகவும் கடினமான காலப் பகுதியிலும் ஆலய நித்திய நைமித்தியங்களைச் சிறப்புற நிகழ்த்தி வரும் குருக்கள் அவர்கள் காலத்துக்குக் காலம் ஆக்கி உபகரிக்கும் நூல்கள் வரிசையிலே இந்நூலும் வெளிவருவதுகண்டு சைவஉலகம் மகிழ்ச்சியுறுகின்றது.

பிரணவ சொரூபியாகிய விநாயகப்பெருமானது பரத்துவத்தையும் அளவற்ற கருணையின் வெளிப்பாடுகளாகிய திருவிளையாடல்களையும் விரித்துப் பேசுவது விநாயகபுராணம். காலத்தின் தேவை கருதி, யாவரும் எளிதில் வாசித்துணரும்வண்ணம் ''விநாயகபுராண வசனச் சுருக்கம் ஆகிய நூலினைக் குருக்கள் அவர்கள் ஆக்கியுள்ளார்கள். இத்தகைய நூல்களுக்கேயுரிய உரைநடையில், மூலநூலின் தனி இயல் புகளைப் பேணி ஆக்கப்பட்ட இந்நூல் சைவ உலகினால் நன்கு பேணப் பெறும் என்பதில் ஐயமில்லை. நூலாசிரியர் நீண்டகாலம் வாழ்ந்து, காசியிற்பிள்ளையார் ஆலயக் கிரிகைகளைத் தொடர்ந்துசிறப்புற நிகழ்த் துவதோடு, மேலும் இத்தகைய நூல்களை ஆக்கித் தரவேண்டுமென்று அவருடைய உபாசனாமூர்த்தியாகிய விநாயகப்பெருமானை வேண்டுதல் செய்வோம்.

**ச. விநாயகமூர்த்தி**

உ

**பண்டிதை திருமதி சிவபாக்கியம் பாலநாதன் அவர்கள்**

வழங்கிய

# அணிந்துரை

''வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.''

புராணங்கள் தொன்மை மிக்கவை, மெய்ஞ்ஞான உண்மைப் பொருளைத் தன்னகத்தே கொண்டவை. புராணம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிப் பெயருண்டு. இவற்றின் பெயர்கள், தாம் எடுத்துக் கொண்ட கர்த்தாவின் பெயராகவே அமைகின்றன. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம் முதலிய பெயர்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு.

விநாயகப்பெருமானைக் கர்த்தாவாகக்கொண்டது விநாயகபுராணம், உபபதிணெண்புராணங்களிற் தலைசிறந்தது இப்புராணம். பிருகு முனிவரால் இயற்றப்பட்டமையால் இதற்குப் பார்க்கவபுராணம் என்னும் பெயருமுண்டு. உபாசனகாண்டம், இலீலாகாண்டம். என இரு பிரிவுகளையுடையது இப்புராணம். சைவத்தையும் தமிழையும், சைவ அனுபூதியையும் வளர்க்கும் புராணங்களுள் விநாயகபுராணமும் சிறப்புடைத்து. விநாயகப்பெருமானைப் பக்தியுடன் பூசனை புரிந்த முனிவர்கள், தேவர்கள், அரசர், மற்றும் பாமர மக்கள் இம்மை, மறுமைப் பயன்களைப் பெற்றுய்தியடைந்த வரலாற்றை விளக்குவது உபாசனகாண்டம். விநாயக புராணக்காப்புப் பாடலில் ''அகரமென அறிவாகி'' என்று தொடங்கி, ''புகரில் பொருள் நான்கும் இடர்தீர்த்து எய்தப் போற்றுனர்க்கு அறக்கருணை புரிந்தும் ஆண்டுகொள்ளும் நிர்மலனைக் கணபதியை நினைந்து வாழ்வோம்'' என்று முடிகின்ற அடிகளுக்கிணங்க, விதிப்படி அறம், பொருள், இன்பம், வீட்டினை அடையும் அன்பர்களுக்கு அறக்கருணை புரிந்து ஆட்கொண்ட திறனும் எப்படியும் வாழலாம் என்று விதிவிலக்காய் வாழ்பவர்க்கு மறக்கருணைபுரிந்து ஆட்கொண்ட திறனும் விநாயகபுராணம் முழுவதிலும் நாம் பார்க்க முடிகிறது.

உதாரணமாக, உபாசன காண்டத்திற் சோமகாந்தன் அரசியற் படலந்தொடக்கம், சோமகாந்தன் முத்தியடைந்தபடலமும் வரையுமுள்ள பகுதியைப் படித்துப்பார்த்தாலே எம்பெருமானின் அறக்கருணை மறக்கருணை இரண்டும் தெற்றெனவிளங்கும், இன்னும் தூர்வை

அருச்சனைப்படலம், தூர்வை யாசகப்படலம், தூர்வைதுலையேற்ற படலங்கள் விநாயகப் பெருமானுக்கு அறுகினால் அர்ச்சனைபுரிபவர்கள் பெறும் பயனையும் இலீலாகாண்டத்திற் கூறப்பட்ட பாலச்சந்திராவதாரத்தையும் எடுத்துக்காட்டுகிறது. ஐங்கரப்பெருமானின் அடியார்களின் மனப்பக்குவ நிலைக்கேற்ப வெவ்வேறு திருவவதார உருக்கொண்டு ஆட்கொள்ளுந்திறனை விளக்குவது இலீலா காண்டம். இதில் வச்சிர தண்ட விநாயகர் திருவவதாரப் படலந்தொடக்கம் வேத வியாசர் உபதேசம்பெறு படலம் வரையும் கூறப்பட்டுள்ளது.

பிருகுமுனிவர் பன்னீராயிரஞ் சுலோகங்களால் வடமொழியில் இயற்றியதைக் கச்சியப்பசிவாச்சாரியார் தென்மொழியில் ஆக்கியருளினார். பாடல்களாக அமைந்திருப்பதை அனைவரும் இலகுவாகப் படித்துப் பயன்பெற முத்துச்சாமி முதலியார் வசனபாகமாக ஆக்கினார். எனினும் வசனக்கட்டுக்கள் அதிகமுள்ள நூல் அறிவு குறைந்தவர்களால் விளங்கமுடியாது. இந்நிலை நீங்க, செயற்கரிய செய்வர் பெரியோர் என்பதற்கிணங்க, வணக்கத்திற்குரிய தெல்லிப் பழைக் காசிவிநாயகர் தேவஸ்தான, பிரதமசிவாச்சாரியார், சிவஸ்ரீ கணேசலிங்கக்குருக்கள் அவர்கள் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் முறையில் இரத்தினச்சுருக்கமாக, விநாயகபுராண வசனச்சுருக்கம் என்னும் இந்நூலை ஆக்கித் தந்தமை எமக்கு ஒரு வரப்பிரசாதமாகும். தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான, பாலர் ஞானோதய சபையினரின் உயர்ந்த சிவதொண்டு மனப்பான்மையும், ஐயா அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுத்ததால், இந்நூல் இருபத்தைந்தாவது நூல் வெளியீடாக அமைகிறது போற்றுதற்குரியது.

இத்தகைய ஞானநூல்களை வெளியிடும் பாரம்பரியத்தை மேற்கொண்டு பெருந்தொண்டாற்றி வருகின்ற பாலர் ஞானோதயசபை என்றென்றும் காசி ஐங்கரன் திருவருளாற் பல பணிகள் பெருக சிறந்தோங்கி வளரவும். சமய நூல்கள் கிடைத்தற்கு அரிய இக்கால நிலையில் ஐயா அவர்கள் பல இன்னல்களுக்கிடையிலும் அயராது ஆற்றிவரும் இப்பெரும்பணி மேன்மேலும் பெருகவும், அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து எமக்கு நல்லாசிகள் வழங்கவும் காசி ஐங்கரனை இறைஞ்சிப் பிரார்த்திப்போமாக!

''வெள்ளைக் கொம்பன் விநாயகன் அடிதொழத்
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.''

திருமதி சிவபாக்கியம் பாலநாதன்

ஓம்

# நான்முகம்

''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி.' என்றார் நன்னூலார். நாம் பாலர் ஞானோதய சபையினரது அநுசரணையுடன் திருத்தொண்டர் புராணம், திருவாதவூரடிகள் புராணம், கந்தபுராணம் ஆகிய நூல்களின் சுருக்கங்களை வெளியீடு செய்தோம். இவ்வாண்டு விநாயகப்பெருமானது மகிமைகளைக் கூறும் விநாயக புராணத்தைச் சுருக்கி வெளியிடவேண்டும் என்பது எமது பெருவிருப்பாக இருந்தது. இந்தியப் பதிப்பான விநாயக புராண நூல் எடுப்பது கஷ்டமாக இருந்தது. எமது சபையின் செயற்பாடுகளை நன்னெறிப்படுத்திவரும் வங்கி முகாமையாளர் திரு ந. சிவபாலகணேசன் அவர்களிடம் இதனைத் தெரிவித்தேன். அவர் யாழ். வளாக இந்து நாகரிகத்துறைத் தலைவர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்களிடமிருந்து இந்நூலைப் பெற்றுத் தந்தார்கள். தொளயிரத்திற்கு மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட இந்நூலை எவ்வாறு சுருக்கலாம் என்பதே புலப்படவில்லை. பலமுறை முயன்றும் கைகூடவில்லை.

ஓர் சதுர்த்தி தினத்திலன்று விநாயகருக்கு வழிபாடுகள் செய்து ஆரம்பித்தேன். விநாயகரின் கருணையால் கொஞ்சம் புலப்பட்டது. நாளதுவரையில் படலங்களைப் பலமுறை வாசிப்பதும் எழுதுவதுமாகச் செய்தேன். எமது மாணவர்கள் ப. சேயோன், இ. துளசீதரன் ஆகியோர் விடுமுறைநாட்களில் வந்து எழுதுவதற்கு உதவிசெய்தார்கள். நாட்கள் நீடித்துக்கொண்டுசெல்வதால் புத்தகம் கொடுக்கவேண்டிய தவணை வந்தது. பின்பும் அதனை எடுத்துத் தந்து இதனை நிறைவேற்ற உதவிய இந்துநாகரிகத்துறைத் தலைவரின் செயற்பாடுகள் என்றென்றும் போற்றப்படவேண்டியதாகும். இந்நூலை உருவாக்குவதற்கு துணைபுரிந்த திரு. இ. புவனதயாபரன் முதலாய அனைவருக்கும் காசிவிநாயகப்பெருமான் அருள்புரிவாராக.

சி. க. கு.

# வெளியீட்டுரை

பாலர் ஞானோதய சபையின் செயற்பாடுகள் யாவரும் அறிந்ததே. சைவ மாணவர்களின் நலன்கருதிச் சமய நூல்களை வெளியிடும்பணி 7-2-1983ல் தொடங்கப்பெற்றது. இதனால் இந்த வெளியீடுகள்மூலம் அநேக மாணவர்கள் பயன்பெற்றதை அவதானித்து வருகின்றோம். சென்ற பதினொரு ஆண்டுகாலப் பகுதியில் 24 நூல்களை வெளியீடு செய்துள்ளோம் 25ஆவது வெளியீடாக விநாயகபுராண வசனச் சுருக்க நூல் இவ்வாண்டு வெளிவருகின்றது. இந்நூல் வெளிவர உதவிய பேரறிஞர் கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கும் சபைத்தலைவர் ஐயா அவர்கட்கும், அவருக்கு ஒத்தாசை புரிந்த அனைவருக்கும், ஆசியுரைகள், அணிந்துரை மதிப்புரைவழங்கிய அறிஞர்களுக்கும் அச்சிட்டுதவிய அச்சகத்தாருக்கும் முகப்பு அட்டையை உருவாக்கிய ஞானம் அவர்களுக்கும் எமது நன்றியும் பாராட்டும்.

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ந. சிவபாலகணேசன்
கௌரவ செயலாளர்

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

# பார்க்கவ புராணம்

என்னும்

# விநாயக புராண வசனச்சுருக்கம்

## காப்பு

திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமூன் னின்ருன் யாவன்
றங்குகடற் புவிவரைப்பி னெடியோ ஞதி
சகலருக்கு மூறுதவிர்க் கின்ருன் யாவ
னங்கணவன் மெய்ச்சரித மொழிபெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணுக வடுத்து ளோர்க்கு
மங்கலசிந் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்
வாரிமட மடையுடைத்து வளரு மன்றே.

## கடவுள் வாழ்த்து

### விநாயகர்

அகரமென வறிவாகி யுலக மெங்கு
மமர்ந்தகர வுகரமக ரங்க டம்மாற்
பகருமொரு முதலாகி வேறு மாகிப்
பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு
பகரில்பொரு ளுன்கிளையு மிடர்தீர்த் தெய்தப்
போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு
நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.





ஓம்

காசிவிநாயகர் துணை

# நைமிசாரணியப் படலம்

உலகங்களில் சிறந்து விளங்கும் சூரிய உதயம்போன்ற சத்திய லோகத்திலே தவத்தர், தேவர், குமாரவருக்கங்கள் சூழும்படியாகப் பொற்பிரகாசமாக விளங்கும் சபாமண்டபத்திலே சிங்காசனத்தில் கலைமகள் சமேதராக வீற்றிருக்கின்ற பிரமதேவனை முன்பு ஓர்தினம் முனிவர்கள், கணங்கள் முதலாயினோர் வந்து இறைஞ்சிப், போற்றிச் சுவாமீ! இதுகாறும் இல்லறத்தை வழுவாது ஓம்பிய நாம் இனிய அரிய தவங்களைச்செய்து முத்தியினை அடைய விருப்பமுடையோம். ஆதலால் அதற்கு சிரேட்டராகிய தாங்கள் அநுக்கிரகஞ் செய்யவேண்டும் எனப் பிரார்த்தித்தனர். அதற்குப் பிரமதேவர் இரங்கி ஓர் தர்ப்பையினை வட்டமாக்கி நிலத்தில் உருட்டி மாதவத்தோர்களே! இதனைத் தொடர்ந்து செல்வீராகில் இது நின்றஇடம் பவித்திரமாகும். அத்தலத்தில் தங்கித் தவங்களைச் செய்யக்கடவீர் என்று சொன்னார். முனிபுங்கவர்கள் தருப்பைச்சக்கரத்தைத் தொடர்ந்து சென்றனர். தருப்பைச்சக்கரம் நின்ற இடத்தை முக்கியமாகக் கொண்டு தவங்கள் பலவற்றைச் செய்தனர். தருப்பைச் சக்கரம் நின்றஇடம் ஆனதால் அவ்விடம் "**நைமிசாரணியம்**" என்னும் காரணப்பெயரைப் பெற்றது.

அந் நைமிசாரணியமானது உபநயனத்துக்கு முன்னும் பின்னும் இருபிறவிகளை அடைந்து முத்தீக்களை வளர்த்து நான்கு வேதங்களையோதி ஐம்புலன்களை வாட்டி அறுவகைத் தொழில்களைச் செய்து எழுவகைப்பிறவிகளையுமோட்டி அட்ட யோகங்களையும் பூண்டிருக்கின்றது. அந்தணர்குழுக்களும், இருவினைகளையும் மதஞ்செய்யத்தக்க வெண்ணீறு உருத்திராக்கம் தரித்து அருளோடுங்கூடி நிட்டை செய்கின்ற முனிவர் சமூகங்களும் வசிக்கும் இடமாகும். அன்றியும் ஆகம

நெறிகளை ஆராய்கின்றவர்கள். பதினெண்புராணங்களை வாசிக்கின்றவர்கள் கேட்கின்றவர்கள் வேள்விகளை முடிக்கின்றவர்கள் ஆகிய கூட்டங்களே எங்கும் நிறைந்து விளங்குகின்றன. முனிவர்கள் செய்கின்ற யாகாதிகளின் பெருமையோ அளவிட்டுக்கூறமுடியாது. இந்த நைமிசாரிணியத்தில் சவுனக முனிவரென்பவர் சத்திர வேள்வி என்னும் வேள்வியைச்செய்யத்தொடங்கினர் அவ்வேள்வியைக் காணும் பொருட்டுத் திருநீறு உருத்திராக்கம் தரித்த முனிவர்கள் நெருங்கினர்கள். அந்தச்சமயத்தில் பதினெண்புராணங்களையும் நன்கு கற்றவரும் பரமசிவனின் திருவடிகளையே மதிக்கின்றவருமாகிய சூதமகாமுனிவர் வந்து சேர்ந்தார். அவரைக்கண்ட மற்றையமுனிவர்கள்மிகவும் களிப்படைந்து பற்பல உபசாரங்களைச்செய்து பூசித்து இளைப்பாறச்செய்து இதனை விண்ணப்பஞ் செய்தார்கள். சுவாமீ! பதினெண் புராணங்களையும் முன்னர் எங்களுக்கு அருளிச் செய்திருக்கின்றீர் எனினும் இந்தச் சவுனகாதி முனிவர்கள் செய்து வருகின்ற வேள்வி நிறைவேறுவதற்குப் பன்னிரண்டு வருடங்கள் செல்லும் அதனால் மற்றொரு புராணத்தை நாங்கள் கேட்டுப் பயனடையுமாறு தேவரீர் அருளிச்செய்ய வேண்டும் என்று வேண்டினர்கள்.

சூதமகாமுனிவர் சொல்லுவார் தவசிரேட்டர்களே! நீங்கள் குலாசாரங்களில் குறைவின்றி விளங்குகின்றீர்கள், மனவுறுதியும் கூரிய புத்தியும் உடையவர்களாக விளங்குகின்றீர்கள். சிவபெருமானிடம் பக்தியுடையவர்களாகவும் காணப்படுகின்றீர்கள். அத்துடன் நல்ல விடயத்தையே மதித்துக்கேட்கின்றீர்கள். கரும்புதின்னக்கைக்கூலியும் வேண்டுமோ? எனக்குப்பின்னும் அதிகபுண்ணியப்பயனை விருத்தி செய்தீர்கள். உங்களுடைய விருப்பம் நிறைவேறத்தக்க புராணம் ஒன்று இருக்கின்றது. அதனைச் சொல்லுவதற்குமுன் புராணம் வந்த வரலாற்றைக் கேட்பீராக என்று சொல்லுவாராயினர்.

---

திருத்தகு மார்பன் வேதன் சிவபிரான் மூவ ரோடு
விருத்திர னவியுண்டோன் விண்ணவர் பலரு மேவி
யிருத்தலின் முனிவர்வேள்வி யிலங்குநை மிசமாங் காண
முருத்தகு மேரு வொக்கு முருவமாத் திரமே வேறு.

ஓம்

# புராணவரலாற்றுப் படலம்

பிரமம் முதலாகப் பிரமாண்டம் ஈறுகப் பதினெண்புராணங்களை யும், அவைகளிற் கூறப்பட்ட நாலிலக்கத்தெண்ணுயிரம் கிரந்தங்க ளையும் கேட்டிருக்கிறீர்கள். அப்பதினெண் புராணங்களையும் முற் காலத்தில் கைலாசபதியாகிய சிவபெருமான் திருவடிகளிற் பத்தி செய்து பெற்றுக்கொண்ட நந்திதேவரானவர், சனற்குமார முனிவருக்கு உபதேசிக்க, அதை அம்முனிவரிடத்தின் மிகுந்த அன்போடு வியாச முனிவர் கேட்டுச் சுலோகங்களாக்கி இவ்வுலகெங்கணும் விளங்கி வழங்கத்தக்கதாகச் செய்தார். அதுபோலவே இன்னுஞ் சிலமுனிவர் கள் வேறு வேறு பரம்பரை வழியாக உபதேசம் பெற்று, அம்மகா புராணங்கட்கு உபபுராணங்களாகத் தங்கள் தங்கள் அபிதானத்தாற் பதினெண் புராணங்கள் செய்தார்கள். அவைகள் சனற்குமாரபுராண மென்றும், நாரசிங்க புராணமென்றும், நந்திபுராணமென்றும், சிவ தருமபுராணமென்றும், துருவாசபுராணமென்றும், நாரதீயபுராண மென்றும் கபிலபுராணமென்றும், அவுசனபுராணமென்றும். சௌமிய புராணமென்றும் வாருணபுராணமென்றும், காளிகபுராணமென்றும், வாசிட்டஇலிங்கபுராணமென்றும் மானவபுராணமென்றும், சௌர புராணமென்றும், பராசரீயபுராணமென்றும், மாரீசபுராணமென்றும் சாம்பேசபுராணமென்றும், பார்க்கவபுராணமென்றும் வழங்கப்படு கின்றன. இவைகள் எல்லாம் ஆரியத்தில் இலக்கஞ்சுலோகங்களாக இருக்கின்றன. இவ்வுப புராணம் பதினெட்டினுள் பார்க்கவ புராண மென்பது நாயகமாகியிருக்கும். இப் பார்க்கவ புராணத்தில் பிரணவப் பொருளாகியும் அப் பிரணவத்தினின்றும் வேறுபட்ட பேதப் பொருளாகியும், பேதாபேதப் பொருளாகியும் இவைகள் அனைத் தையுங் கடந்து நிற்கின்ற ஏகவஸ்துவாகியும் பிரமானந்த சொரூபி யாகிநின்ற விநாயக மூர்த்தியினது மகத்துவத்தை விளங்கக்

காட்டி இருக்கின்றமையால் விநாயகபுராணமென்று பெரியோர்கள் வழங்குவார்கள். இப்புராணத்தை முற்காலத்தில் பிரமதேவன் அநேக தவங்களைச் செய்து அந்தத் தவமுயற்சியால் கைலாயத்தில் திரிகேந்திர தாரியாகிய சிவபெருமானிடம் உபதேசம்பெற்று அதனைத் தன்னை அன்போடு வழிபாடு செய்கின்ற வியாசமுனிவருக்கு உபதேசித்தார்.

வியாசமுனிவர் பிருகுமுனிவருக்கு உபதேசித்தருளினார். பிருகு முனிவர் யாவருக்கும் உபயோகம் ஆகும் பொருட்டு உபாசனகாண்டமென்றும், லீலாகாண்டமென்றும், இருநூறு அத்தியாயங்களாக்கி அவை அவற்றுட் கூடிய தொகை பன்னீராயிரஞ் சுலோகங்களாக்கி முடித்து ஒரு புராணமாக்கினார். பிருகு முனிவரால் கூறப்பட்டமையால் பார்கவபுராணம் என்றும் வழங்கப்படுகின்றது. இப்புராணத்தின் கர்த்தா கணேசமூர்த்தியேயாகும். முனிவர்கள் தேவர்கள் ஆகியோர் விநாயகப்பெருமானைப் பூசித்து அவரது திருவருளைப் பெற்றார்கள். புராணிகராகிய பிருகுமுனிவர் பிரமதேவன் வேதவியாசருக்கு உபதேசித்த பிரகாரம் சோமகாந்தன் என்னும் அரசனுக்குத் திருவாய்மலர்ந்தருளினார். அந்த அரசன் அன்போடு கேட்டுச் சகலதீவினைகளும் நீங்கப் பெற்றுக் கணேசமூர்த்தியினுடைய சாயுட்சிய பதவியை அடைந்தான்.

---

சாற்றுசனற் குமாரமே நாரசிங்கந் தகுகாந்தஞ்
சிவதருமந் தழைதூர் வாசம்
போற்றியநா ரதமேகா பிலமெல் லோரும்
புகழுசனஞ் சவுமியமாம் பிரமாண் டஞ்சீர்
மாற்றரும்வா ருணங்காளி புராண மேத்தும்
வாசிட்ட மிலிங்கமொடு சவுரம் பாவம்
பாற்றியபா ராசரிய மாரீசம்பார் பகர்சாம்பம்
பர்க்கவமென் றவற்றின் பேராம்.

**வேறு**

விலக்கரு முனிவர் தம்மால் விளங்கிய வுபபுராணந்
துலக்கிய கிரந்தமெல்லாந் தொகையோ ரிலக்க மாகும்
அலக்கணே யறுக்கு மந்தப் புராணமு வாற னுள்ளும்
கலக்கும் பார்க் கவபுராண நாயக மாகி நிற்கும்.

ஓம்

# உபாசனு காண்டம்

## சோமகாந்தன் வரம்பெறுபடலம்

முனிவர்களே! இப்பூவுலகத்தில் சகலசெல்வங்களும் தடாகங்களும் வயற்செழுமைகளும் சிறந்து விளங்குகின்ற சௌராட்டி என்னும் நாடு உண்டு. அந்த நாட்டிலே பூமிதேவியின் திலகம்போன்று விளங்கும் தபதியர்களாற் செய்யப்பட்ட மதில்கள்சூழ்ந்த சிறப்புக்கள் பல அமைந்த ஒரு பட்டணம் உண்டு. அந்தப்பட்டணத்திலே கீர்த்தி மிக்கவனும் நான்கு வேதங்களையும் உணர்ந்தவனும் சகல வேந்தர்களையும் வென்று அரசாட்சி செய்கின்றவனுமாகிய இராஜாதிராஜனுகிய சோமகாந்தன் என்னும் அரசன் இருந்தான். அவனது மனைவி சுதன்மை வயிற்றிலே எமகண்டன் என்னும் புத்திரன் உதித்திருந்தான். சோமகாந்தமகாராஜா அரசாட்சி செய்துவரும் நாளில் அவர் முற்பிறப்பிலே செய்த தீவினை காரணமாக அவருக்குத் தொழுநோய் உண்டானது. இந்த நோயானது மணிமந்திர ஔடதங்கள் ஒன்றினுலும் தீராது மிக்க துன்பத்தை விளைவித்தது. இதனுல் மனம் தளர்ச்சி அடைந்த அரசன் ஓர்தினம் சபாமண்டபத்திலே வீற்றிருக்கும்போது அமைச்சர்கள் பிரதானிகள் முதலியோரை அழைத்துப் பின்வருமாறு கூறுவான்.

அமைச்சர்களே! இதுவரைகாலமும் உலகம்முழுவதும் நீதிதவருது அரசு செலுத்தினேன். தேவர்களுக்கு எல்லாம் திருப்தியாக யாகங்கள் செய்தேன். அளவற்ற தானதருமங்களைச் செய்தும் என்னை இடைவிடாது வருத்துகின்றநோயை நீக்கிக்கொள்ளும் ஏதுவினைக்காணேன். இனி அரசைவிட்டு வனத்தில் வாசஞ்செய்வதே நலமெனக் கருதுகின்றேன். எனது புத்திரன் எமகண்டன் என்னிலும் மேம்பாடு உடைய

வனுக இருக்கின்றுன். உங்கள் மந்திராலோசனைப்படி உலகத்தைப் பாதுகாத்துவரும்படி அவனுக்குப் போதித்து அரசுரிமையை அவனுக்கு ஒப்புவித்துவிடுகின்றேன். நீவிர் அவனை மதித்து நடந்துகொள்ளக் கடவீர்கள். இவ்வாறு சோமகாந்தராஜாசொல்லுதலும், அமைச்சர்கள் முதலானேர் இந்த அரசருக்கும் இவ்வினை வரலாமோ? என்று துன்பம் கொண்டு தெய்வத்தை நொந்தார்கள். இவ்வமயம் அரசன் மூர்ச்சை யடைந்தனன். அதன்மேல் மூர்ச்சை தெளிந்த அரசன் சிந்தனை செய்துகொண்டிருந்தான். அப்போது அமைச்சர்கள் அரசனை நோக்கி மநுநீதிதவருமல் மகன் எமகண்டன் இவ்வுலகத்தை அரசாட்சி செய்யட்டும் நாங்கள் தேவரீரோடு வனத்துக்கு வருவதாக நிச்சயித்து இருக்கின்றோம். என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அரசனும் அமைச்சர்களும் கூறியவற்றையெல்லாம் அந்தப்புரத்தில் இருந்து கேட்ட அரசனது மனைவி சுதன்மையானவள் சகிக்கமாட்டாது எழுந்து யானும் தேவரீரோடு வனத்துக்கு வருகின்றேன் எனக் கூறினுள். புத்திரன் எமகண்டனும் வனத்துக்குத் தானும் வருவதாகக் கூறினுள். இவற்றையெல்லாம் கேட்ட சோமகாந்த அரசன் அமைச்சர்களுக்குப் பல தேறுதல் வார்த்தைகளைக் கூறிவிட்டு எமகண்டனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றுன்.

## அரசியற்கைப்படலம்

மகன் எமகண்டனையும் அழைத்துச்சென்ற சோமகாந்தன் அந்தப்புரஞ் சென்று எமகண்டனைத் தன்முன்னுல் உட்காரச்செய்து அரசாட்சி நடத்தவேண்டிய முறைகளைப் போதிக்கத்தொடங்கினுன், என் உயிரினும் சிறந்த மைந்தனே! உலகத்தவர்கள் யாவரும் ஒழுகி உய்வதற்காக வருணுச்சிரமங்களும் தருமநெறிகளும் விதிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றும் அளவில்லாதவையாகயிருக்கின்றன. ஆதலால் அவைகளை இப்போது விடுத்து உனக்குரிய அரசியல் தருமத்தை மாத்திரம் கூறுகின்றேன். குமரனே! விடியுமுன் ஐந்து நாளிகை உள்ள முகூலத்திலே நித்திரைவிட்டு எழுதல் வேண்டும். அதன் மேல் வேருேர் இடத்தில் இருந்து பாவங்களை நீக்குகின்ற திருநீற்றைத்தரித்துக் குருவையும் கடவுளையும் மனத்தில் தியானிக்கக் கடவாய். பின்னர் பூமாதேவியைநோக்கி அன்னையே! அடியேன் நடக்குந்தோறும் எனது கால்கள் படுதலால் ஏற்படுகின்ற துன்பத்தைப் பொறுத்தருளுவாயாக. என்று பிரார்த்தனை செய்யவேண்டும். பின்பு வேதாகமமுடிபுப்பொருளே! மனம் வாக்குக்காயங்கட்கு எட்டாத பரம்பொருளே! அறம் முதலாய நால்வகைப் பொருள்களையும் சரணடைந்

தவருக்கு அருளுகின்ற அருட்கடலே! எனக்கு வருகின்ற விக்கினங்களைத் தீர்க்குமாறு இந்த உதயவேளையில் வேண்டுகின்றேன் என்று யானை முகப்பெருமானைத் தியானிக்கக்கடவாய். நம்மை நல்வழியில் நடத்தும் படி சந்திரசேகரனுகிய பரமசிவத்தையும், சம்சாரத்தால் வரும் துன் பங்களைப் போக்கும்படி பார்வதி தேவியாரையும் வழிபடவேண்டும். அரசியலில் செவ்வனேநடக்க அருள்புரியுமாறு சக்கராயுதரும், பூமகள் மணாளனுமானுகிய திருமாலையும், அறிவோடு சுன்மமும் வந்தேறுவ தற்குக் காரணரான சூரியபகவானையும் தோத்திரஞ் செய்யவேண்டும்.

அறம் முதலாய நான்கு உறுதிப்பொருள்களையும் காத்தற்கேதுவா யுள்ள மழைபெய்யுமாறு யாகங்களைச் செய்ய வேண்டும். நாட்டில்வறுமை வராமல் தானதருமங்களைச் செய்ய வேண்டும். ஐம்பொறிகளை அடக்கி நிற்கும் அறவோரையும் அந்தணரையும், கல்விஅறிவால் மேம்பட்டோ ரையும் வழிபட்டு அவர்கள் மீது நீங்கா அன்புடையவனுய் இருத்தல் வேண்டும். துறவிகள், பெரியோர்கள் சிறிது கோபிப்பாராயின் அந்தக் கோபாக்கினியினுலே திருமால்கூடக் கலக்கமுறுவர். ஆதலால் அவர் களை இகழக்கூடாது. ஆசாரியரையும், பெரியோரையும் மதித்து நடக்க வேண்டும். இம்மையின்பத்தையும், அழிவில்லாத முத்தியின்பத்தையும் சுவர்க்க இன்பத்தையும் கொடுக்கின்ற தருமவொழுக்கங்களினின்றும் தவறக்கூடாது. கோபம், பொறுமை, கடுஞ்சொல், இவற்றைத்தவிர்த் துக் கொள்ளவேண்டும். தருமநெறி கொண்டொழுகினுல் அதனுல் அன்பு தோன்றும் அதனுல் வரும் இன்பமே மேலான இன்பமாகும். தருமத்தை மறந்தால் கேடு உண்டாகும்.

பிரமச்சாரி, வானப்பிரஸ்த்தன், சந்நியாசி, தென்புலத்தார், சூர வர், தேவர், பிராமணர், விருந்தினர், சுற்றத்தார், பசுக்கள், யாசகர், கூன், குருடு, செவிடர், முடவர் முதலாம் அங்கயீனர்கள், நோயாளர், வயோதிபர், குழந்தைகள் இவர்களைப் பாதுகாத்தல் வேண்டும். வரவிற்கு ஏற்ற செலவு செய்து நாயகனுக்குப், புகழும் புண்ணியமும் சத்துருக்கள் முன்னிலையில் சிங்கம்போல நடக்கும் வலிமையும், முத்திப் பயனும், கற்புள்ள மனைவியாலேதான் ஒருவனுக்குக் கிட்டும். ஆகவே அத்தகைய மனைவியோடு கூடியிருந்து இல்லறத்தை நடாத்த வேண்டும். அரசன் நாட்டை ஆள்வதற்கு அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு ஆகிய ஆறும் இன்றியமையாத அங்கங்களா கும். அரசர்கள் ஒரு தொழிலைச்செய்யுங் காலத்தில் அஞ்சாமையும் செய்பவர்களுக்குப் பொருள் கொடுத்து அதனிடத்திலே மனஞ் செலுத்துதலும், ஆண்மையுடைமையும் மிக அவசியமாகும். கொலை முதலிய பாவங்களை நீக்குதலும் பிரஜைகள் வருத்தமுறுது இனிய சொற்களைச் சொல்லிக் குற்றம் உள்ளவர்களைத் தண்டித்துத் தீர்ப்பு

வழங்கவேண்டும். யுத்தகளத்தில் அரசரைக் கொன்றும், திறைவாங்கியும் நாட்டினைக் காத்தும், உயிர்கள் அறம் முதலிய உறுதிப்பொருள்களை அடையும் வண்ணம் செய்தல்வேண்டும். இதுவே செங்கோலுக்குரிய மாட்சிமையாகும்.

இங்ஙனமாகச் சோமகாந்தராஜன் மகன் எமகண்டனுக்குக் கூறிய அறிவுரைகள் யாவற்றையும் மனைவி சுதன்மையானவள் அந்தப்புரத்திலிருந்து கேட்டுவிட்டு விரைந்துவந்து நாயகனை நோக்கி யானும் தேவரீரோடு வனத்தில் சஞ்சரிப்பதல்லாது ஒருகணமேனும் இங்கு தங்கி இருக்கமாட்டேன் என்று கூறினள். இதனைக்கேட்ட மகன் எமகண்டனும் உங்கள் இருவரையும் பிரிந்து யான் இங்கு இருக்கமாட்டேன். யானும் வனத்திற்கு வருகின்றேன் என்றுகூறினன். இதனைக் கேட்ட அரசன் மனங்குளிர்ந்து, மைந்தனுக்கு கூறுவான்: அருமைப் புதல்வன் ஆவான் தாய்தந்தையர் கூறுகின்ற வாக்குப்படி நடக்க வேண்டும். ஆகவே அமைச்சரோடு கூடவிருந்து மந்திராலோசனைப்படி இராச்சிய பரிபாலனம் செய்யக்கடவாய் என்று பல ஆறுதல் வார்த்தைகளைக்கூறி எமகண்டனையும் அழைத்துக்கொண்டு மாளிகை சென்றான்.

## பட்டாபிஷேகப்படலம்

காரினை யொத்த களிற்றுச் சேனைகளையுடைய அரசன் அதன் பின்னர் கொலுச் சபையில் வந்து கணித சாஸ்திரர்களைக் கூவி, நமது குமாரனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும். அதற்குரிய நாளை ஆராய்ந்து உரைப்பீர்கள் என்றனன். அதற்கு அவர்கள் உத்தராயண புண்ணியகாலமாகிய தை மாதத்தில் பூச நட்சத்திரங் கூடிய சுபதினத்தை நன்முகூர்த்தமாக நியமித்தார்கள். பின்னர் தனது குலகுருவை அடைந்து தனது எண்ணத்தை அவருக்குத் தெரிவித்தார். அவர் கட்டளைப்பிரகாரம் அதற்குவேண்டிய பொருட்கள் எல்லாவற்றையும் சேகரித்து உரியநேரத்தில் எமகண்டனுக்கும், அவன் மனைவிக்கும் அளவற்ற மகிழ்ச்சியோடு பட்டாபிஷேகம் செய்து முடித்தனன். எமகண்டன் சகல செல்வங்களோடும் உலகனைத்திலும் உலாப்போந்து திசை அனைத்திலும் தனது செங்கோலோச்சி அரசாட்சியை நடாத்திவந்தனன். சோமகாந்தராஜா தனது நோக்கத்தை நிறைவேற்றி விட்டோமென்று களிப்படைந்து தனது புத்திரனாகிய எமகண்டனைப்பார்த்து மைந்தனே! யான் முன்பு சொல்லியிருக்கின்ற நீதிப்படி இராச்சிய பரிபாலனம் செய்வது உமது கடமை. இனி என் இஷ்டப்படி வனத்திற்குச்செல்வது எனது கடமையாகும் என்று சொல்லி விரைவில் எழுந்து அங்கிருந்த அமைச்சர் முதலானவர்களைப் பார்த்து அவர்கட்கும் சொல்லவேண்டிய கட்டளைகளைச் சொல்லிப் பிரயாணம் செய்வதாயினன்.

# வனம்புகு படலம்

அரசனானவன் பயணப்பட்டுக் கடைவாயிலை நீக்குவதற்கு முன்னர் அமைச்சர், அந்தணர் நட்போர் முதலிய கூட்டங்களோடு சுதன்மையும் ஏமகண்டனும் வெளிக்கொண்டு மிக்க மனவருத்தத்தோடு அவனை நெருங்கினர். இவ்வாறு நெருங்கிய யாவரும் தம்மைப் புடைசூழ்ந்து வர அரசன் கூப்பிடுதூரம் (குரோசம்) சென்று குளிர்ச்சியான ஒரு பொய்கையைக்கண்டு அதன் அருகில் தங்கித் தன்னோடு வந்திருக்கின்ற முனிவர்கள் அந்தணர்கள் முதலான பெரியோர்களை வணங்கி மற்றவர்களையும் கிருபையோடு பார்த்து அன்பர்களே! என்னுடன் நீவீர் யாவரும் ஏன் வீணாக இங்கிருக்க வேண்டும். உங்கள் இடங்களைச் சேர்ந்து சுகமாக இருங்கள் என்றான். மந்திரி பிரதானிகள் கூறுவார்கள்; தேவரீர் உடலில் சம்பவித்திருக்கின்ற இவ்வியாதி நீங்கும் வரைக்கும் நாங்களும் வனத்திலிருந்து பின்பு தேவரீரோடு கூடி நகருக்கு வந்து சேருகின்றோம் என்று சொன்னார்கள்.

அமைச்சர்கள் முதலானோருடைய வார்த்தைகளைக் கேட்ட சோமகாந்தராஜா மேலும் கூறுவார்; அறிவால்மேம்பட்ட பெரியோர்களே! இவ்வுலகத்தில் பிறந்த பயனை வேண்டினோர் முதலில் இல்லறவொழுக்கங்களை வழுவாமற்காத்து அதன்மேல் துறவறம்பூண்டு வனத்திற்குச் செல்லவேண்டும் என்று வேதங்களிற் சொல்லப்பட்டு இருக்கின்றது. அதனால் இதுகாறும் அதனைக்கருதாது மறந்திருந்ததினால் அல்லவா. இப்பொல்லாத பிணி எனக்குச் சம்பவித்தது. நீங்கள் இதனைச்சற்று ஆலோசனை செய்யவேண்டும். அன்றியும் ஓர் ஆலமரத்துக்குப் பழுது ஏற்பட்ட காலத்தில் அதனைத்தாங்க அதனடியில் இருக்கின்ற விழுதைப் போல எனக்குத் துன்பம் நேரிட்ட காலத்தில் என் மகன் ஏமகண்டன் இருக்கின்றான். அவன் அரசு நிலையைக் காத்துவருவான். அவனே என்னிலும் அருமையாக உங்களைக்காத்து மேலான புகழை அடையத்தக்கவன். நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டாம். இனி யான் வனஞ்செல்வதற்கு உத்தரவு கொடுங்கள். நீவீர் யாவரும் நகரத்துக்குச்செல்வீர்கள் என்று சொன்னான். பின்னர் யாவரும் கவலையால் ஒன்றும் பேசாது இருந்தார்கள். குமாரனாகிய ஏமகண்டன் தனது தாய் தந்தையரிடத்தில் வைத்திருக்கின்ற ஆசைநோயானது தம்மைவருத்த அருகில் வந்து துக்கித்து நின்றனன். சோமகாந்தராஜா மேலும் மகனைநோக்கி என் அருமைக்கண்மணியே! ஏன் கிலேசப்படுகின்றாய். இல்லறத்தாச்சிரமத்தில் இருக்கின்றவர்கள் வயது முதிர்ந்தால் வனஞ் செல்வது முறையன்றோ? அந்தமுறைப்படி யாமும் வனத்திற்குச் செல்கின்றோம் என்றார்.

மேலும் சோமகாந்தராஜா மகனை நோக்கிக் கூறுவார். விநாயக மூர்த்தியை இடைவிடாது பூசித்து சுவாமி! எனது தந்தையும் தாயும் சகல துன்பங்களும் ஒழியப்பெற்று விரைவில் இந்த நகரத்தைச் சேர வேண்டும் என்று பிரார்த்தனை செய்வாயாக. உனது ஆட்சியைக் கிரமமாகச் 'செலுத்திச் சிரஞ்சீவியாக மார்க்கண்டேயரைப் போல வாழ்வாயாக. அத்துடன் பதினாறு பேறுகளும் பெற்று மறுமைப்பய னோடு மிக்க சுகமுற்றிருக்கக்கடவை என்று பல ஆசிகளைக் கூறி விடை பெற்றனன். அதன் மேல் சோமகாந்தராஜனும் சுதன்மையும் வனத்தை நோக்கிச் சென்றார்கள். அவ்வாறு செல்லுகையில் சயலன், ஞானகம்மியன் என்னும் இரண்டு மந்திரிகளும் பின் தொடர்ந்தனர். அவர்களையும் அழைத்துக்கொண்டு வழி நடந்துசென்றார்கள். இரு அமைச்சர்களும் காய், கனி முதலியவற்றைச் சேகரித்து உணவாகக் கொடுத்தார்கள். அரசன் செய்த தவப்பயனது பலன் கொடுக்கும் காலம் நெருங்கி வந்தமையாலும் அரசனது மகன் விநாயக பூசை நிகழ்த்திய மாட்சிமையாலும் இவர்கள் நால்வரும் பிருகு முனிவரது ஆச்சிரமத்திற்கு அருகாமையில் உள்ளசோலையில் இளைப்பு நீங்க அங்கு தங்கினார்கள். அச்சமயம் முனிகுமாரனாகிய பாவியன் என்பவன் நீர் கொண்டு போவதற்கு அத்தடாகக்கரையை நோக்கி வந்தனன். சிறு வனைக்கண்ட அரசன் அவனைநோக்கி நீ சிறுபிள்ளையாக இருக்கின்றாய் ஒருவர் துணையும் இன்றி இக்கொடிய காட்டிற்கு ஏன் வந்தாய் என்று கேட்டான். அதற்கு அவன் யான் முனி சிரேட்டராகிய பிருகு முனிவரின் புதல்வன் இங்கு ஜலம் கொண்டு போக வந்தேன் என்றான். மேலும் சிறுவன் இவர்களை நோக்கி நீவீர்கள் வந்தகாரணம் யாது? என வினவினன். அதற்குச் சுதன்மையானவள் தங்களது துயரங்கள் அனைத்தும் தவறவிடாது கூறினாள். முனிகுமாரன் மிகுந்த துயரம் அடைந்து பல தேறுதல்களைக்கூறிவிட்டு ஜலம் எடுத்துக் கொண்டு ஆச்சிரமத்தை அடைந்தனன்.

## பிருகுமுனியை யடுத்த படலம்

இப்பால் அம்முனிகுமாரன் நெடுநேரம் சென்று வந்து சேர்த லும் அவன் தந்தையாகிய பிருகு முனிவர் அவனை நோக்கி அப்பா! இன்று நீ இவ்வளவு கால தாமதப்பட்டு வரக்காரணமென்ன? நீ சென்ற இடத்தில் நடந்த காரியங்கள் எவை? அவற்றை எமக்கு விளக்கமாகக் கூறு என்று கேட்டனர். அதற்குச் சிறுவன் தந்தை யைப் பணிந்து அண்ணலே யான் தடாகக்கரையை நோக்கிச் செல்லு கையில் ஓர் மரநிழலில் ஓர் அரசனும், அவனது மனைவியும் கூட இருந்தனர். அவர்கள் என்னைக்கண்டவுடன் அப்பா குழந்தாய், என

என்னை அருகில் அழைத்து இக்கொடிய காட்டில் தனியாக ஏன் வந்தாய் உனது பெயரென்ன என்று கேட்டனர். அதற்கு யான் தக்க பதில்சொன்னேன். பின்னர் அவர்கள் வரலாற்றைக் கேட்டறிந்தேன். அதனுல் காலதாமதமாயிற்று என்ருன்.

மேலும் முனிகுமாரன் கூறுவான் சோமகாந்தராஜனும் அவன் மனைவி சுதன்மையும் தங்கள் இராச்சியத்தை மகன் ஏமகண்டனிடம் ஒப்புவித்து விட்டு வனத்திற்கு வந்திருக்கின்றனர். அவர்களுக்கு உதவியாக இரு அமைச்சர்களும் வந்துள்ளனர். அமைச்சர்கள் காட்டில் உள்ள காய், கனி முதலியவற்றைப் பிடுங்கிவந்து கொடுக்க அவற்றை உண்டு சீவிக்கின்றனர். அறுசுவையோடு கூடிய உணவை உட்கொள்ளவேண்டியவர்கள், கனிவர்க்கங்களை உண்கின்றனர். மஞ்சத்தின்மீது சயனிக்கவேண்டியவர்கள் மரத்தின்கீழ் சயனிக்கின்றனர். இந்திரனும் கண்டு கொண்டாடத்தக்க சிறப்பு மிக்க அரசன் அனுபவிக்கும் துன்பங்களோ அளவிடக்கரியன என்றுகூறி முடித்தான். இதனைக்கேட்ட பிருகுமுனிவர் மனமிரங்கி அருள் சுரந்து புத்திரனே! அக்குளக்கரையில் இருக்கின்றவர்களை நீ போய் அழைத்துவரக் கடவை எனக் கட்டளையிட்டனர். உடனே முனிகுமாரன் அதிவேகத்தோடு அவர்கள் இருக்கின்ற இடத்திற்குச் சென்று அவர்களைக் கண்டு என் தந்தை உங்களை அழைத்துவரக் கட்டளையிட்டுள்ளார். விரைவில் எழுந்து வரக்கடவீர்கள் என்று மிகுந்த சந்தோஷத்துடன் கூறித் தான் முன்னே நடந்தனன். சோமகாந்தராஜன், மனைவி சுதன்மை இரண்டு மந்திரிகள் ஆகிய நால்வரும் அளவற்ற சந்தோஷத்தோடு அப்போதே வியாதி நீங்கிவிட்டதாகக் கருதி முனிகுமாரனுடன் சென்று பிருகுமுனிவரது ஆச்சிரமத்தைச் சேர்ந்தனர்.

முனிவரது ஆச்சிரமத்தில் மிருகங்கள், பாம்புகள், மயில்கள் முதலாம் சீவராசிகள் ஒன்றுக்கொன்று இரை தேடிக் கொடுக்கும், சூரியன் எந்நேரமும் கிரகணங்கள் பரப்பும், விருட்சங்கள் கொடிகள் யாவும் தளிர்த்துநின்று எந்நேரத்திலும் பூக்களைச் சொரியும், அரசன் முதலிய நால்வரும் இச்செயல்களைக் கண்டு ஆச்சரியங் கொண்டனர். பிருகு முனிவர் புலித்தோல் ஆசனத்தில் எழுந்தருளியிருந்தார். இந்த நால்வரும் தத்தம் பெயர்களைச் சொல்லி சாஷ்டாங்கமாக வணங்கி எழுந்து துதிசெய்து நின்ருர்கள். பிருகு முனிவர் அவர்களுக்கு ஆசீர்வசனங்கள் கூறி கிருபாநோக்கஞ் செலுத்தினர். அதன்மேல் அரசன் அடியேன் செய்தவை எல்லாம் பெரும்பயனை நண்ணினவென்றும் தேவரீருடைய சரணுவிந்தங்களைச் சேவிக்குமாறு எனது பிடரியைப் பிடித்துத் தள்ளியுள்ளதென்றும், தேவரீருடைய தரிசனத்தால் அடியேன் செய்த தவங்கள் சித்தியாகிவிட்டன என்றும், இதுகாறும் எம்மை வருத்திய இவ்வியாதியானது தேவரீருடைய கிருபையினுல் தீரவேண்

டிய காலம் அண்மித்துள்ளதென்றும், தேவரீருடைய ஆசிரமத்தில் பல வகைப்பட்ட மிருகஜெந்துக்கள் எல்லாம் பகையின்றி உறவு கலந்திருப்பதினுல் தேவரீரைச் சேர்ந்த அடியேனையும் இவ்வியாதி என்னை விட்டு நீங்கும் என்பதில் சந்தேகம் இல்லை என்றும், அளவற்ற துதிகளைச்செய்து நின்றனன்.

சோமகாந்தராஜன் கூறியவற்றையெல்லாம் கேட்ட பிருகுமுனிவர் மீண்டும் கிருபா நோக்கம்செய்து சற்று நேரம் தியானத்தில் இருந்து தமது ஞானசிருட்டியினுல் அவன் அவ்வியாதியை அடைந்த வரலாற்றை அறிந்துகொண்டு அரசனை நோக்கிக் கூறுவார்; நின்மல சொரூபியாகிய விநாயகக்கடவுள் அநுக்கிரகத்தால் உனது எண்ணம் நிறைவேறு கின்றது. நீ வழிநடந்து மிகவும் வாட்டமுற்றிருக்கின்றனை. ஆகவே விரைவில் அதனைத் தீர்த்துக்கொள். என்று திருவாய் மலர்ந்தனர். அவர் ஆஞ்ஞையை அருகில் நின்ற சீடர் முதலியோர் அறிந்து அரசன் முதலியோரை உள்ளே அழைத்து ஸ்நானஞ் செய்வித்து அறுவகைச்சுவையோடும் நால்வகை உணவுகளையும் அளவற்ற அன் போடும் கொடுத்து உபசரித்தார்கள். அதன் மேல் அரசன் முதலிய நால்வரும் இளைப்பாறி அதிக மகிழ்ச்சியுற்றிருந்தார்கள்.

## இருவகை வினையுமுரைத்த படலம்

பிருகுமுனிவர் பேரருள் பெற்ற அரசன் அன்றிரவு ஆனந்த நித்திரைசெய்து மறுநாள் உதயத்தில்எழுந்து நித்திய நியமங்களைச் செய்துமுடித்து ஐம்புலங்களையும் ஒரு வழிப்படுத்தித் தவசிரேஷ்ட ராகிய பிருகு முனிவர் முன்னிலையில் வந்து சாஷ்டாங்கமாக நமஸ் காரஞ் செய்து இருகரங்களையும் குவித்து அவரது அருள்நோக்கத்திற் காகத் துதிசெய்து நின்றனன். விநாயகக் கடவுளை வணங்குகின்ற பிருகு முனிவர் அரசனை வாட்டுகின்ற நோயினை நீக்கி அவனை ஆட் கொள்ளும் பொருட்டு அரசனைச் சிறந்த ஆசனத்தில் இருக்கச்செய்து அவன் முற்பிறப்பில் செய்த இருவகை வினைகளையும் எடுத்துரைக்க எண்ணமுற்றவராய் முதலில் அவன் தீவினைகளை விளம்பினர். சோம காந்தராஜனே! நீ முற்ஜனனத்தில் விந்த பர்வதத்தின் சமீபத்தில் கொல்லம் என்னும் பட்டணத்தில் சிந்துரூபனென்னும் வைசியனுக்கும் சுலோசனை என்னும் மனைவிக்கும் புத்திரனுகச் சனித்து சாமந்தன் என்னும் பெயருடன் யௌவன காலத்தில் குடும்பினி என்பவளை விவாகஞ்செய்து ஏழு ஆண்பிள்ளையையும் ஐந்து பெண்பிள்ளைகளையும் பெற்று வாழ்கின்ற நாளையில் உனது தந்தை விருத்தாபியத்தை அடைந்து இகலோக வாழ்வை ஒழித்தனன். தாயும் அனுமரணஞ்

செய்தனள். பின்னர் உனதுமனைவி கூறியதருமநெறிகளையும் கேளாதும், நீ ஆபரணங்கள், வீடுகள், நிலங்கள் முதலியவற்றை எல்லாம் விற்று வீண் விரயஞ்செய்தனை. அதனால் தரித்திரனாகி யாசகஞ்செய்தும் சூதாட்டத்தினாலும், களவு முதலியவற்றினாலும் பொருள்களைச் சேகரித்துக் கொடுத்தனை. மேலும் அந்த நகரத்திலே மது அருந்திக் களிப்புண்டு அநேக தீங்குகளை நடாத்திக்கொண்டு வந்தனை இவற்றையெல்லாம் கேள்வியுற்ற அந்தநாட்டு அரசன் உன்னை அந்த நகரத்தினின்றும் துரத்திவிட்டான்.

அதன் மேல் நீ காட்டிற்சென்று கள்வர்களுடன் கூடிக்கொண்டு அவ்வழியால் போகின்றவர்களை எல்லாம் கொலைசெய்து கொள்ளையிட்டு மிருகங்கள், பட்சிகள் முதலியவற்றைக் கொன்று பசிதீரத்தின்று அலைந்தனை. அப்போது காட்டுமார்க்கமாகக் கணவர்த்தனன் என்னும் பிராமணன் வந்தனன். அவனையும் கொலைசெய்ய எத்தனித்தனை. அந்தப்பிராமணன் நடுநடுங்கிப் பெருமூச்சுவிட்டு அப்பா! நான் அந்தணன். என்னைக்கொல்லலாமா? என்னிடம் உள்ள பொருட்களை ஒழிக்காமற் தருகின்றேன் என்னைக்கொல்லாமல் விட்டுவிடு. யான் முன்பு விவாகஞ் செய்து புத்திரப்பேறு இல்லாமையால் இப்போது இரண்டாவது விவாகஞ்செய்திருக்கிறேன். நண்பனே! எனக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும் என்று வேண்டினன். நீயோ பஞ்சமாபாதங்கள் அனைத்தையும் செய்பவன் ஆதலினால் அவனதுவேண்டுதல் ஒன்றிற்கும் மனம் இரங்காது உனது அறியாமையினால் அவனைக் கொன்று விட்டனை. உடனே உன்னைப் பிரமகத்தி பிடித்துக்கொண்டது. அதன் துன்பங்களோடு வருந்தி இருக்கின்றகாலத்தில் ஒரு புண்ணிய பலனைப் பெற்றனை. அப்புண்ணிய பலத்தால் ஆள்வதற்கான அரசுரிமையைப்பெற்றுக் கொண்டாய் என்று கூறினார்.

இவை அனைத்தையும் கேட்ட சோமகாந்தராஜா முனிவரை மீளவும் பணிந்து அப்புண்ணியத்தையும் சொல்லவேண்டும் என்று விண்ணப்பித்தனன். அதற்குப் பிருகுமுனிவர் இசைந்து கூறுவார். நீ பல துன்பங்களோடும் வனத்தில் சஞ்சரிக்கின்ற நாளில் உனக்கு நடுக்கம், இளைப்பு முதலாய வியாதிகள் நேர்ந்து வயது முதிர்ந்த வேளையில் துணைசெய்வார் ஒருவரும் இல்லாது துன்பம் அநுபவித்தனை. தூதுவன் மூலம் மனைவியின் துன்பத்தையும் அறிந்தனை நல்வினைப்பயனானது நெருங்கிய காரணத்தால் அந்தக் காட்டுமார்க்கமாகச் சென்ற வேதியன் ஒருவன் உனது வரலாறு அறியாததனால் உன்னிடம் யாசித்தனன். நீ ஆடை ஆபணரங்கள் திரவியங்களைக் கொடுத்தனை. மேலும் வேதியர்களை அழைத்து வருமாறு கூறினை. அங்ஙனம் வந்தவேதியர்கள் உன்னை இன்னாரென்று அறிந்ததும் நகைத்து உன்னிடம் யாசிக்காது சென்றுவிட்டார்கள்.

மனக்கவலையுடன் நீ இருந்தபோது உன்னிடம் வந்த வேதியர் சிலர் சொன்னார்கள் உன்னிடம் பொருள் இருக்குமாயின் இந்த வனத்தில் நிர்மலமூர்த்தியாகிய விநாயகக்கடவுளது ஆலயம் ஒன்று செடிகள் கொடிகளால் மூடப்பட்டுக் கிலமடைந்து இருக்கின்றது. அந்த ஆலயத்தைப் புதுப்பிக்கக்கடவையென்றார்கள். அதனைக்கேட்ட நீஅவ்விடஞ் சென்று விக்கினகர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுவிப்பதே மேலான தருமம் என நிச்சயித்து சேகரித்து வைத்திருந்த பொருட்களைக் கொண்டு சென்று விநாயகமூர்த்தியை அன்புடன் தரிசனஞ்செய்தனை. உனது மனக்கவலையெல்லாம் அங்கு எழுந்தருளியிருக்கின்ற கணேச மூர்த்திக்கு முறையிட்டு நமஸ்காரஞ்செய்து கம்மியர் முதலானவர்களை அழைத்துவந்து திருப்பணிகளைத் தொடங்கினாய். கர்ப்பக்கிரகம். அர்த்தமண்டபம், மகாமண்டபம், மடப்பள்ளி, யாகசாலை முதலாய மண்டபங்களைக்கட்டுவித்தாய், நான்கு கோபுரங்கள் எழுப்புவித்து, நான்கு திசைகளிலும் நான்கு தடாகங்களும் அமைக்கப்பட்டு வாகனங்கள், இரதங்கள், குடைகள் யாவும் செய்யப்பட்டன. ஆதிசைவப்பிராமணர்களைக் கொண்டுவந்து பூசை திருவிழாக்களும் நடப்பித்தனை. இத்துடன் உன்னுடைய வாழ்நாள் முடிவெய்திவிட்டது.

அரசனே! ''நீ செய்த துன்பங்களையெல்லாம் வரலாறாக எடுத்து மழைபெய்ததுபோல ஒன்றையும்விடாமல் சித்திரகுப்தன் சொல்லி, பாவத்தால் சம்பாதித்த பொருளைக்கொண்டு அந்திய காலத்தில் விநாயகர்ஆலயத்திருப்பணிசெய்தாய்என்று தர்மபூபதிக்கு சொன்னான். இவற்றைக்கேட்ட தர்மராசன், தீவினைகள் எல்லாம் ஆலயத் திருப்பணி செய்த பேற்றினால் ஒழிந்துபோயின.'' நீ அளவிறந்த பாவங்களைச் செய்தனையாதலால் இவ்வுலகத்தில் இவ்வியாதியால் தீவினைப்பயனை அநுபவிக்கின்றனை.

முற்றத்துறந்துநிற்கும் முனிவர்களே! பாதகங்களை நாடோறும் செய்துவந்த காமாந்தகன் இறக்குங் காலத்திலே அப்பாதகங்கள் குறைந்து பின்னிலை பெற்றானாயின் விநாயக்கடவுளை சதா காலமும் சிந்திக்கும் தன்மையுடையவர்கள் எவ்வளவு பேற்றைப் பெறுவார்கள்.

## சோமகாந்தன் நோய்தீர்த்த படலம்

முனிசிரேட்டர்களே! இவ்வளவு கருணையோடும் பிருகுமுனிவர் அருளிச்செய்த உண்மையினைச் சோமகாந்தராஜனும் கேட்டு அதிசயமும், சந்தேகமும் கொண்டான். உடனே அவன் சரீரத்தில் இருந்து ஆயிரம் வலியன் பட்சிகள் தோன்றி வச்சிரத்தால் வடித்து வைத்

தற்கொப்பாயிருக்கின்ற மூக்குகளால் தொழுநோய் கொண்ட சரீரத்தை எல்லாம் குத்தித் தசைஎல்லாம் பிடுங்கித்தின்றன. அதனுல் அரசன் மிகவும் பயந்து அவ்வுபத்திரத்தைச் சகிக்கமாட்டாது வருந்திக்கொண்டு பிருகுமுனிவரின் பாதத்தில் அடியற்ற மரம்போல வீழ்ந்து தவசிரேட்டரே! அபயம் அபயம்! கிருபா சமுத்திரமே! தயாநிதியே! ஞானசூரியரே! புண்ணியமூர்த்தியே! தேவரீர் திவ்விய சமூகத்தில் வலியன் பட்சிகள் அடியேனைச் சின்னுபின்னப்படுத்துகின்றன. தேவரீருடைய ஆச்சிரமத்தில் மிருகங்கள் பறவைகள் எல்லாம் உறவு கொண்டாடுகின்றன. அடியேனுக்கு மட்டும் துன்பத்தை ஏற்படுத்துகின்றனஎனப் பிரலாபித்தான். அரசனே! யான்சொன்ன வார்த்தையை நம்பாமற்போனதால் உனக்கு இத்துன்பம் நேரிட்டது. இனியாகிலும் நம்பக்கடவை. இதனுல் நீயும் புனிதனுகலாம் எனக்கூறி வலியன் பட்சிகளை நோக்கி ஓங்காரஞ் செய்தனர். அவைகள் எல்லாம் ஆகாயத்திற் பறந்துசென்றன:

பிருகுமுனீவர் அரசனுனவன் யாவற்றையும் உண்மையென்று நம்பியதின்மேல் தமது கமண்டலத்தில் ஜலத்தை நிரப்பி விநாயக மூர்த்தியைத் தியானித்து அவரது மந்திரத்தை நூற்றெட்டு உருச் செபித்து அக்கமண்டல ஜலத்தைக் கரத்தில் வார்த்து அரசன் சரீரத்தில் தெளித்தார். உடனே அரசனது பூர்வஜென்ம பாவங்கள் எல்லாம் ஓருருக்கொண்டு நின்றதுபோலக் குழிவிழுந்த கண்களும் கறுத்த நிறமும் கொண்ட பூதம் ஒன்று அவன் சரீரத்ினின்றும் தோன்றியது. அது அரசனைப் பார்த்து உக்கிரத்தோடு அரசனே! இப்போது உனது ஆயுத வல்லமையைக் காட்டு பார்ப்போம் என்றது. அதைக் கண்ட பிருகுமுனிவர் ஓங்காரஞ்செய்து அதனைப்பயமுறுத்தி அரசன் அருகில் செல்லவொட்டாது தடுத்து நீ யார்? உன் வரலாறு என்ன? என்று கேட்டார்? சுவாமி! இந்த அரசனைப்பிடித்த பிரமகத்தி யான். தேவரீர் தூவிய ஜலத்திஞல் வெளிப்பட்டு வந்தேன். எனக்கு மிகுந்த பசியாக இருக்கிறது. அரசன் முதலிய நால்வரையும் தின்று செல்கின்றேன் தேவரீர் உத்தரவு தாருங்கள் என்றது. முனிவர் கூறுவார் பலியினைவேண்டுகின்றநீ அவசரப்படாதே உனக்கு நன்மையான காரியத்தையே நாம் செய்கின்ருேம். அதுவரை அம்மரப்பொந்தினுள் புகுந்திருக்கக்கடவை என்ருர். அப்பூதமானது அவர்காட்டிய பொந்தினுள் புகுந்ததும் பூதமும் மரமும் ஒன்ருக எரிந்து சாம்பராயின. பூத சரீரத்தில் இருந்த ஆன்மா திவ்விய சரீரத்தோடு முனிவருடைய சரணுரவிந்தங்களில் வீழ்ந்து இப்பாவி முற்பிறப்பில் என்னை ஆயுதத்தால் மாய்த்துவிட்டான், தேவரீர் தரிசனத்தால் நற்கதி பெற்றேன். என்று சொல்லித்துதித்தது. அப்போது விநாயகப்பெருமானுடைய கட்டளையினுல் ஆகாயத்தில் தெய்வவிமானம் ஒன்றுவர அதிலே அப்புருடன் ஏறி ஆகாயமார்க்கமாகச் சென்றுவிட்டான்.

இதன்மேல் பிருகுமுனிவர் அரசனே உன்னைத்தொடர்ந்த பிரம கத்தி விலகியதைக் கண்டனை. அதேபோல் தொழுநோய் நீங்கும் வழியையும் கூறுகின்றேன். மூன்று நேத்திரமுள்ள பிரணவப்பொருளாயும் என்னை முழுமையாக ஆட்கொண்டவருமாகிய விநாயகமூர்த்தியினுடைய புராணத்தைக் கேட்பாயானல் சகலதுன்பமும் உன்னை விட்டு நீங்கும். இதுவே மேலான ஔடதமாகும். முற்காலத்தில் இப்புராணத்தைப் பிரமதேவர் சிவபெருமானுல் உபதேசிக்கப்பெற்று வேதவியாசமுனிவருக்கு அருளிச்செய்தார். வேதவியாசர் நமக்குத் திருவாய்மலர்ந்தருளினுர்.

மேலும் பூர்வத்தில் சிவபிரானைநீக்கித் தக்கன் யாகஞ்செய்தபோது சிவன் கோபாக்கினியில் தோன்றிய வீரபத்திரக்கடவுள் யாகம் அழியவும், அவன் துன்பம் அடைந்தான். அதனுல் அவன் முற்கல முனிவரை அணுகிப் பிதாமகருடைய உபதேசம் பெற்றுச் சிவபெருமானுடைய கிருபைக்குப் பாத்திரனுனன். ஏழு பிறவிகளிலும் செய்த பாவத்தை ஏககாலத்தில் ஒழிப்பதும் சரீரத்தில் உள்ள வருத்தத்தைப் போக்கி வரங்களை அளிப்பதும், இம்மையில் தவங்கள் முதலியன செய்யும்படி கூட்டுவித்து மறுமையில் முத்திதருவதும் விநாயக மகத்துவத்தின் கேள்விஅன்றி வேறில்லை.

சோமகாந்தன் விநாயகமகத்துவத்தைக் கேட்பதற்குத் தகுதியுடையவன் ஆனதன்மையினுல் முனிவர் கூறுவார். உனக்கு அதனை உபதேசிக்கின்றேம். நீ சென்று ஸ்நானஞ்செய்து வரக்கடவை என்று பணித்தார் அரசன் ஆனந்தமடைந்து தீர்த்தக்கரையை அடைந்து அதனை மும்முறை வலம்வந்து நமஸ்கரித்துப்பின்னர் ஸ்நானஞ்செய்து நித்திய கருமங்களை முடித்து விநாயகமகத்துவத்தைக் கேட்கச் சங்கல்பம் பூண்டனன். அச்சமயத்தில் அரசன் சரீரத்திலிருந்த தொழுநோய் நீங்கியது. அதனைக்கண்ட அரசன் ஆனந்தித்துப் பிருகுமுனிவரிடம்வந்து சுவாமீ! புராணம் கேட்பதற்குச் சங்கல்பம்பூண்டதும் தொழுநோய் அகன்றது. இந்த அற்புதத்தை என்னவென்றுசொல்லுவேன். தடாகக்கரையில் இருந்த என்னை இங்ஙனம் வருமாறு கிருபைசெய்து அதிதமான சுகத்தைக்கொடுத்த தேவரீருக்கு யான் என்ன கைம்மாறு செய்யமுடியும் இனிமேல் அருள்சுரந்து விநாயக புராணத்தைத் தினமும் திருவாய் மலர்ந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தனன். அதனைக் கேட்டருளிய பிருகுமுனிவர் மனமிரங்கி அரசனை அருகில் அழைத்து ஆசனத்தில் இருத்தித் தனது தாமரை போன்ற திருக்கையினுல் அவனுடலைத் தடவினர். அரசன் சரீரத்தில் முனிவரது கைபட்டதும் சரீரம்முழுவதும் மேலும்காந்தி உடையதாகப் பிரகாசித்தது. இச் சரீரத்தைக்கண்ட மனைவி சுதன்மையும் அமைச்சர்களும் ஆனந்தித்தார்கள்.

## வியாசமுனி பிரமதேவரை யடுத்த படலம்

சௌனகாதி முனிவர்களே! இப்பால் பிருகுமுனிவர் கிருபை கூர்ந்து அரசனே! முன்னொரு காலத்தில் சுவர்க்க மத்திய பாதாளங்களில் அமைந்த பிராணிகள் செய்த பிராரத்துவகன்மங்களில் அளவுபடாத வேதங்கள் அனைத்தும் ஆதியந்த மதக்கிரமங்கள் தடுமாறின. அக்காரணத்தினால் விண்ணவர், தவத்தர், மானிடர் முதலானவர்களுக்கு அறிவு விளங்காமல் வேத வாய்மைகளினின்றும் மாறிப், பல துர்க்கிருத்தியங்களையனுசரித்து அதற்கடுத்த சில மோகன சாத்திரங்களை உண்டாக்கிப் பூவுலகின்கண்முக்கியமாக விளங்குகின்ற தருமங்கள் அனைத்தும் கொடிய பாசபந்தவினையென்று நீக்கிப் பாதகங்களுக்கேதுவாகிய மார்க்கங்களை அனைவரும் உறுதியானவை என எண்ணி அவைகளைத் தொடர்ந்து செய்து வந்தனர். அதை விஷ்ணும் பிரமனும் கண்டு பரமசிவனது கடாட்சம் இன்றி இந்தமாறுபாடு நீங்காது என்று நிச்சயித்து இந்திரன் முதலாம் தேவர்களுடன் கயிலையை நோக்கிச் சென்றனர். அங்கே நந்திதேவரைப் பணிந்து எங்கள் வரவைச் சிவபிரானுக்கு அறிவிக்க வேண்டும் என்று வேண்டினர்.

இவர்களின் வேண்டுதலுக்கு நந்திதேவர் கிரிபைசுரந்து தேவர் முதலியோரை அவ்விடத்து நிறுத்தி விட்டு பரமசிவன் சந்நிதி சென்று கேசவன் முதலாயினோரின் வரவை விண்ணப்பஞ் செய்தார். அதன் மேல் பரமசிவனுடைய அநுமதிபெற்று வந்து விஷ்ணு முதலாயினோரை அழைத்துச் சென்றான். சிவகணங்கள் காவல்செய்கின்ற பலவாயில்களைக் கடந்து சிவபெருமானைத் தரிசித்துப் பல மலர்களைச் சொரிந்து பலமுறை கரங்கூப்பித்துதித்தனர். எம்பெருமான் அவர்களை நோக்கி உங்கள் தொழில்கள் யாவும் நடைபெறுகின்றனவா? என்று வினவினர். கேசவன் எழுந்து தேவரீர் முறைப்படிக்கு அடியேன்களின் விருத்திகள் முற்றுகின்றன. எனினும் பூமியின்கண் சாஸ்திரங்களின்படி தேவரீரைப் பரமனென்று நினையாது என்னையும் பிரமனையும் கடவுளாகத்தொழுகின்றனர். ஆதிமூர்த்தியும் உண்டோ என வினவுகின்றனர். சிலர் உண்ணல், உடுத்தல், களித்தல் இவைகள் அன்றி வேறொரு முத்தி இல்லையென்று திகைக்கின்றனர். இவ்வாறு அறியாது தீவினைகளில் படர்ந்து அலைந்து மயங்குகின்றனர். தேவரீர் திருவுள்ளத்தில் கிருபை சுரந்து சீவராசிகளின் மயக்கத்தை நீக்கியருள வேண்டும். மோட்சவீட்டிற் சேருவதற்குக் கிருபை புரிய வேண்டும் என்று இரந்தனர்.

இவற்றையெல்லாம் செவிமடுத்த சிவபெருமான் விஷ்ணுவே பூமியின் கண் அவதரித்து மாறுபட்டு இருக்கின்ற வேதங்களைச் சேகரித்து அதை நான்கு வகைப்படுத்தி ஆன்மகோடிகளது சிற்றுணர்வை நீக்கும்

படியாகத் தகுதியான இருடிகட்குப் போதித்து ஆன்மகோடிகளைப் புனிதராக்கக்கடவை ஆகமம்என்று பெயருள்ள சாத்திரம் உண்டு. அது நமது பெருமைகளையே முக்கியமாக விளக்கும் வாசித்தவர்களைப் பவித்திரராக்கும் பதினெண்புராணங்களுள் அவைகளை நந்திக்கருளி யிருக்கின்றோம். அவன் சனற்குமாரனுக்கு வரன்முறையாகப் போதித்திருக்கின்றான். அவனிடத்து அப்புராணங்களை உணர்ந்து சகலருக்கும் ஓதி அறிவு விளங்கச் செய்யக்கடவாய் என்று விடைகொடுத்து அனுப்பினார். பின்னர் விஷ்ணுவானவர் வைகுந்தம் சென்று யாவருக்கும் விடைகொடுத்து அனுப்பினார்.

பூமியின் கண் மிகுந்த தவவலிமையுடைய பராசரமுனிவர் ஓர் தினம் பிராதக்காலையில் கங்கையைக்கடக்க ஓடத்தில் ஏறிச்சென்றார். அதைச்செலுத்துகின்ற மச்சகந்தியினது சுந்தரத்தைக்கண்டு மோகித்து அவளைச் சம்மதப்படுத்தி திருமணஞ் செய்து கொண்டார். அக்காலத்தில் அவளுடைய கருப்பத்தில் பிரவேசித்துப் பின் தண்டு கமண்டலங்களுடன் அவதரித்து அவர்களிடத்து அநுமதி பெற்றுச் சென்று வதரிகாச்சிரமம் என்னும் வனவாசமே யோக்கியம் என்று தீர்மானித்து அவ்விடத்தமர்ந்தார். அக்காரணத்தினால் வரதநாராயணர் என்னும்திருநாமத்தையும் பெற்றார். பரமசிவனது கடாட்சத்தினால் வேதங்களை ஓதாது உணர்ந்தவர். அவ்வேதங்களை நான்கு வகைப் படுத்தியவர். இக்காரணத்தால் வேதவியாசர் என்னும் நாமத்தையும் உடையவர். சனற்குமார முனிவரிடத்து பதினெண்புராணங்களையும் வாசித்துணர்ந்து பின் வேதசாஸ்திரங்கள் மிருதி ஆகியவற்றைப் போலச் சுலோகங்களாக்க ஆரம்பித்தார். எக்காரியங்களையும் விக்கினமின்றி நிறைவேற்றுபவர் யானைமுகப்பெருமான் என்பதனைச் சிந்தியாது தொடங்கினார். அது முற்று பெறாமையால் கவலை கொண்டு பிரமதேவரிடம் முறையிட்டார். பிரமதேவர் விநாயகக்கடவுளை வழிபாடு செய்தே ஆரம்பிக்க வேண்டும் எனக்கூறி விநாயக மந்திரத்தையும் சொல்லிக்கொடுத்தார். மேலும் விநாயக வழிபாடு செய்து உமது மயக்கத்தைத் தீர்த்துப் புகழ் அடையக்கடவாய் என்று சொல்லியருளினார். இதனைப் பிருகு முனிவர் சோமகாந்தராஜனுக்கு உபதேசித்தருளினார்.

## வியாசர் உபதேசம் பெற்ற படலம்

இவை அனைத்தையும் கேட்ட வியாசபகவான் மீண்டும் பிரமதேவனைப் பணிந்து அந்தக் கணபதி மூர்த்தியினைப் பூசைசெய்யும் முறையினைக் கூறுமாறு கேட்டனர். பிரமதேவர் அதற்கு இசைந்து அவருக்குத் தீட்சை முதலியவற்றையெல்லாம் செய்து பிராணாயாமஞ் செய்து

இம்மந்திரத்தை மேலும் தியானிக்கக் கடவாய் என்று சொல்லி இதற்குரிய கணேசமூர்த்தியினுடைய திருவுருவை மனத்தில் தியானித்து அந்தர்ரியாகப் பூசை செய்யக் கடவாய். அங்ஙனம் பூசை செய்யும்போது உனது சக்திக்கு ஏற்றவகையில் உருச்செபித்துக்கொண்டு இருப்பாயாயின் விநாயகப்பெருமான் தமது தரிசனத்தைக் கொடுத்தருளுவர். நீ கேட்ட வரங்களை யெல்லாம் தந்தருளுவர். என்று உபதேசித்தருளினர். இதன் மேல் வியாசர் மீண்டும் பிரமதேவரை வணங்கி இதற்குமுன் இப்பூசனை புரிந்தவர்களின் சரித்திரத்தை அருளிச்செய்ய வேண்டுமெனப்பிரார்த்தித்தனர். அதற்குப் பிரமதேவர் இரங்கி யாம் அறிந்தவற்றுள் சிலவற்றைக் கூறுவதாகச் சொல்லி மேலும் கூறுவார். தமக்கு விநாயகர் விஸ்வரூபங்காட்டியதும் தாம் பின்னர் உலக சிருட்டி செய்ததும், கணேசமூர்த்தி சித்தி, புத்தி என்னும் இவர்களைத்திருமணஞ் செய்ததும், விஷ்ணு சடாட்சரமந்திரத்தை அநுட்டித்து நைடவர்களை வென்றதும், காசிபர் முதலாயினோர் சகஸ்திரநாமத்தால் அர்ச்சித்ததையும் விபரமாகச் சொன்னர்.

அதன் மேல் 'விநாயகமூர்த்தியானவர் அந்த யுகங்கள் தோறும் உலகங்கள் யாவற்றிலும் வெவ்வேறு மூர்த்தங்கள் கொண்டு செய்தருளிய திருவிளையாடல்களையும் கூறுவார். வக்கிரதுண்ட விநாயகர், சிந்தாமணிவிநாயகர், கசானனவிநாயகர், விக்கினராசவிநாயகர், மயூரேசவிநாயகர், உமாமயூரேசர், பாலச்சந்திரவிநாயகர், கணேசவிநாயகர், மதோற்கடவிநாயகர், கணபதிவிநாயகர், துண்டிவிநாயகர், வல்லபைவிநாயகர் ஆகிய இத்திருவிளையாடல்களையெல்லாம் உபதேசிக்கும் கணேசகீதையை உபதேசித்தருளினர். மேலும் பிரமதேவர் நீவிர் விநாயகமூர்த்தியை உபாசனைசெய்யக்கடவீர் என்று கூறியருளினர் இதனைப் பிருகுமுனிவர் சோமகாந்தராஜனுக்கு விபரமாகச் சொல்லி அருளினர்.

## வியாசர் வரம்பெறு படலம்

பிருகு முனிவரை அதன்மேல் சோமகாந்தராஜன்மீண்டும் பணிந்து கூறுவான் சுவாமீ! 'வேதவியாசர் விநாயகரை உபாசித்ததும் அவர் அடைந்த பெறுபேறுகளையும் கூறுவீர்கள் என வேண்டினர். வியாசமுனிவர் பிரமதேவரை வழிபாடு செய்து சுவாமீ விநாயகமூர்த்தியினுடைய மகிமையை யான் தெளிவுறுமாறு அறிவுறுத்தினீர் என்று துதிசெய்து அவருடைய உத்தரவு பெற்று விநாயகக்கடவுளுடைய மந்திரத்தைச் செபித்துக் கந்தமூலங்கள் இருக்கின்ற வனஞ் சென்று கணேசமூர்த்தியினுடைய ஏகாட்சர மந்திரத்தைச் செபித்துக்கொண்டு

பன்னிரண்டு வருடங்கள் தவஞ்செய்தார். தவத்திற்கு இரங்கிய விநாயகப்பெருமான் கோடி சூரியர்கள் போன்ற பிரகாசத்துடன் யானை முகங்கொண்ட திருமேனியையுடையவராய்த் தரிசனங்கொடுத்தார்.

வியாசமுனிவர், பிரகாசத்தினது உக்கிரத்தைத் தாங்கமாட்டாது மந்திரத்தை மனதில் தியானித்துக் கண்ணைமூடிக்கொண்டார். அப்போது கணேசமூர்த்தியானவர் மைந்தனே! அஞ்சற்கஎன்று அபயங்கொடுத்து அருள்புரிந்து உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக என்று கூறினர். அப்போது வியாசபகவான் அளவற்றதோத்திரங்களைச் சொல்லித் துதித்துப் பின்வருமாறு வேண்டினர். அடியேனுடைய மயக்கங்களை நீக்கிப் பதினெண் புராணங்களையும் இடையூறின்றி நிறைவேற்றத்தக்க வல்லமையையும் எனக்குத் தந்தருளும் என்று பிரார்த்தித்தார். அவ்வாறே அருள்புரிவதாகச் சொல்லி கணேசமூர்த்தி தவசீலனே! நீ கேட்டுக்கொண்டபடி எல்லாக்குறைகளும் ஒழிந்து யாவர்க்கும் குரவனய் மெய்ஞ்ஞானம் பெற்றுச் சுகமாக இருப்பாய் பதினெண்புராணங்களுக்கும் நீ அதிகாரியானதுபோல உப புராணங்களையும் சொல்லத்தக்க வல்லமையையும் உனக்குத் தந்தோம். நீ முன்னர் என்னைத்தியானியாது தொடங்கினமையால் மயக்கம் அடைந்தாய் இனி உன் மனத்திலிருந்து எவ்லாவற்றையும் நிறைவேற்றுவோம் என்று அநுக்கிரகித்தார். இதன்மேல் வியாசபகவான் விநாயகமூர்த்தி தமக்கு வரம்கொடுத்த இடத்தில் அவருக்கு ஓர் ஆலயம் அமைத்து அக்கடவுளைப் பிரதிட்டைசெய்து பூசை வழிபாடுகளை நிகழ்த்தினர். அதன்மேல் பதினெண்புராணங்களையும் வழுவின்றி நிறைவேற்றினர். இதனைப் பிருகுமுனிவர் சோமகாந்தனுக்குச் சொல்லியருளினர்.

## சோமகாந்தன் முத்தியடைந்த படலம்

முற்றுந் துறந்த முனிவர்களே! பின்னும் பிருகுமுனிவர் அரசனை நோக்கிச் சொல்லுவார். வேந்தனே! இவ்வாறு வியாசமுனிவர் கணேசமூர்த்தியினுடைய பெருங்கருணையைக்கொண்டு நிறைவேற்றிய பதினெண்புராணங்களையும், பிரமதேவனல்உபதேசிக்கப்பட்ட விநாயக மகத்துவத்தையும் வைசம்பாணர் முதலாகிய எங்களுச்கு உபதேசித்து அவைகளை யாவருக்கும் வரன் முறையாகப் போதிக்கக் கட்டளையிட்டுள்ளார். அதனல் யாங்களும் அவ்வாறே பரிபக்குவம் உடையவர்களுக்கு உணர்த்தினேம். அவற்றுள் விநாயகமகத்துவத்தை உனக்கு ஒழுங்காக உபதேசித்தோம். இனி நீயும் கணேசமூர்த்தியைஅநுஷ்டித்து உனது இஷ்டகாமியார்த்தங்களை நிறைவேற்றிக்கொள்ளுவாய் என்று சொல்லினர்.

பின்பு அந்த அரசன் ஆசிரமத்தில் இருந்து தான் கேட்ட கணேச மான்மியத்தையும் பிரதிதினம்பாராயணஞ்செய்து பிருகுமுனிவருடைய பாதங்களையும் பூசைபுரிந்து வந்தனன். இவ்வாறு அரசன் ஒரு வருட காலமாக வழிபாடு செய்து வந்ததும் இதற்குக் கணேசப்பெருமான் கிருபைசுரந்து தேவகணங்களைப்பார்த்து தமது அன்பனுகிய சோம காந்தராசனை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார். தேவ கணங்கள் ஒரு தெய்வ விமானத்தைக்கொண்டு வந்து பிருகுமுனிவ ருடைய ஆசிரமத்தின் முன் நிறுத்தினுர்கள். பிருகுமுனிவர் அரசனே! உனது வழிபாட்டிற்கு இரங்கிய விநாயகப்பெருமான் விமானம் அனுப் பியுள்ளார். அந்த விமானத்தில் சென்று அவருடைய உலகத்தில் சுகமாக இருப்பாய் என்று பணித்தருளினுர். அரசன் கூறுவான் சுவாமீ தேவரீருடைய கருணையினுல் விநாயகருடைய அநுக்கிரகத்தைப் பெற்றேன். என்னிடம் இருந்த தீராதவியாதியும் நீங்கியது எனத் துதித்தனன். முனிவர் கூறுவார் நீ கணேசமகத்துவத்தைக் கேட்டதி ஞலே இக்கதி உனக்குக் கிடைத்துள்ளது என்ருர். அரசனுனவன் பிருகுமுனிவரையும் விமானத்தையும் தனது பத்தினியோடும் வழி பாடு செய்து இரு அமைச்சர்களோடும் விமானத்தில் ஏறினுன். விமானம் ஆகாய மார்க்கமாகச் சென்றது.

விமானம் செல்லும் போது அரசனுடைய பத்தினியாகிய சுதன்மை கூறுவாள். சுவாமீ! மகன் ஏமகண்டன் எமது வரவை எதிர்நோக்கி யிருப்பான். நம்மைக்காணுவிடில் துயருறுவான். என்றனள் இதனைக் கேட்ட தேவகணங்கள் விமானத்தை அந்நகரின் புறத்தே கொண்டு சென்று நிறுத்தினுர்கள். இருமந்திரிகளும் ஏமகண்டனுக்கு விடயத்தை அறியச்செய்தார்கள். உடனே மகனுகிய ஏமகண்டனும் நகரத்து மக்களும் அவ்விடம் வந்து தாங்களும் விமானத்தில்வருவதாகக் கூறி னுர்கள். தேவகணங்கள் கூறுவார்கள் உனது மகனும் விநாயகபூசை செய்திருக்கின்ருன். ஆனுல் நகரத்தார் விநாயகப்பெருமானுடைய ஐம்பத்தாறு (மூர்த்தியினுடைய) நாமங்களையும் சொல்லுகின்ருேம். அதனைக்கேட்பாராயின் விமானத்தில் ஏறுவதற்குத் தகுதிபெறுவார்கள் என்று கூறி அந்தநாமங்களைச் சொல்லுவாராயினர் இந்த நாமங்களைக் கேட்டதும் ஏமகண்டனும் நகரத்தாரும் தெய்வசரீரம் உண்டாகிச் சோமகாந்தனுடனே விமானத்தில் ஏறி விநாயகலோகத்தை அடைந்து சாமீப பதவியைப் பெற்ருர்கள்.

மேலும் முனிவர் கூறுவார் இந்த விநாயகபுராணத்தைப் பக்தி யுடனே கேட்பவர்களுக்கு வியாதி துக்கம் முதலாயின ஒன்றும் அவர் களைப் பிடிக்கமாட்டாது. மேலும் இப்புராணத்தை கரத்தால் எழுதி னவனும், வாசிக்கின்றவனும் பொருள்கொடுத்து எழுதிவித்தவர்

களும் இதனைப்பூசிக்கின்றவர்களும் பெறும்பயனை அளவிட்டுக் கூற முடியாது. அட்டமாசித்திகளும் கைகூடும். அறுபத்துநான்குகலைகளும் அப்பெருமானுடைய கிருபையினால் கிட்டும். கணேச மகத்துவத்தை கொடுக்கின்ற புராணமானது சேமித்து வைத்திருக்க வேண்டிய ஒரு பொக்கிஷம் என்று சூதமகாமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்துரைத்தார்.

## மூவர் உபாசித்த படலம்

ஐம்புலன்களையும் வென்ற முனிசிரேட்டர்களே! பிருகுமகாமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய முறைப்படி மூவர் உபாசித்த வரலாற்றினைக் கூறுவோம் கேட்பீராக. பூர்வத்தில் ஒருபிரளயம் உண்டான போது பன்னிரண்டு சூரியர்களும் உதயமாய் நூறுவருடம் மழையில்லாமல் பஞ்சபூதங்களையெல்லாம் பஸ்மம்செய்து விஷாக்கினியும் சூரியாக்கினியும் ஒன்றாகி நூறுவருட பரியந்தம் யானைத்துதிக்கைபோல் நீர்த்தாரைகளை வர்ஷிக்க அஃது எங்கும் நிறையும் வாயுவினால் ஸ்தம்பிக்கப்பட்டு வடவாமுக்கினி வாயுவில் ஒடுங்க இவ்வாறே ஒவ்வொன்றாக ஒடுங்கிச் சக்தி சிவத்தில் ஒடுங்கச் சிவம் பராபரத்தில் ஒடுங்கா நிற்கும் அப்பராபரமே பரப்பிரம்ம சொரூபியாய் நிற்கும், பிரணவம் நீங்கியவுடன் மீளவும் சிருட்டி, திதி, சங்காரம் என்னும் முத்தொழில்களையும் நடைபெறுவதற்குப் பிரமா, விஷ்ணு உருத்திரன் என்னும் மூவரையும் உண்டாக்கி அவர்களுக்கு அருளையும் அறிவையும் வழங்கினர். பின்னர் அவர்கள் தங்களைப் படைத்தருளிய பரப்பிரம சொரூபம் இன்னதென்று அறியாது வேறுவெளி எங்கணும் காணாது மூவரும் ஆயிரம் தேவ வருடம் தவஞ் செய்தார்கள்.

இம்மூர்த்திகளினது தவத்திற்குக் கிருபை கூர்ந்த வக்கிரதுண்ட விநாயகர் யானைமுகத்துடனும் நான்கு திருக்கரங்கள் கொன்றைமாலை இரண்டு திருவடிகள் ஆகியவற்றைக் கொண்டவராய் அம்மூவர் முன்னிலையில் தோற்றினார். அவர்கள் மூவரும் ஆனந்தங்கொண்டு ஆடிப் பாடிப்பரவசங் கொண்டு பலதோத்திரங்களைச் செய்தனர். சுவாமீ தங்களைத்தரிசித்தவர்கள் பேரின்பத்தைப்பெறத் தக்கவர்கள் யாங்கள் அனைவரும் கிருகஸ்தராகும்படி இரட்சிக்கவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

## மூவர் வரம்பெறு படலம்

முனிவர்களே! விநாயகக்கடவுள் மூவரினதும் தோத்திரங்களுக்குக் கிருபை சுரந்துநீங்கள் கருதிய வரங்களைக்கேட்பீர்களாக என்று அருளிச் செய்தார். பரப்பிரம்ம சொரூபியே தேவரீருடைய பாதாரவிந்தங் களில் என்றும் திரமான பக்தி உண்டாகும்படி அநுக்கிரகிக்க வேண்டும். அத்துடன் நாங்கள் நடந்து கொள்ள வேண்டிய பணியினை அருளிச் செய்தல் வேண்டும். அவ்வாறு அருளிச்செய்தால் யாங்கள் அதனை மேலாக மதித்து நடத்துவோம் என்றார்கள். விநாயகக்கடவுள் அவற் றைக்கேட்டு சந்தோஷித்து நமது முக்குணங்களினின்றும் உண்டான வர்களே! நம்மிடம் உங்களுக்கு அளவிறந்த பக்தி உண்டாகும் படி யான வரத்தைத்தந்தோம். நீங்கள் நடந்து கொள்ளவேண்டிபணியும் சொல்லுகின்றோம். அதாவது இராசத வடிவில் தோன்றிய பிரமனே நீ இராசததாமத நீழலில் இருந்து யாவற்றையும் சிருட்டி செய்யக் கடவாய். தாமத குணத்திற்தோன்றிய விஷ்ணுவே நீ சாத்வீகத் தொழிலிருந்து யாவற்றையும் இரட்சிக்கக்கடவாய், சாத்வீக வடிவிற்கு முன்தோன்றிய உருத்திரனே. நீ தாமத்தொழிலிலிருந்து யாவரையும் சங்காரஞ்செய்து வரக்கடவாய். என்று அருளிச்செய்தார்.

பின்னர் வேதாகம புராணங்களைக்கொண்டு யாவையும் சிருட்டி சத்தியை பிரமதேவனுக்கும் யோகத்தினால் வேண்டி வடிவங்களைக் கொண்டு யாவையும் இரட்சிகத்தக்க சத்தியை விஷ்ணுவுக்கும் ஏகாட் சரசடாட்சர மந்திரங்களைக் கொண்டு எங்கும் தானாக விளங்கும் யாவையும் சங்காரஞ் செய்யத்தக்க சத்தியை உருத்திரனுக்கும் கொடுத் தருளினார்.

## விஸ்வரூபங் காட்டிய படலம்

சௌனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தியானவர் வரங்கொடுத் தருளிய பின்னர் பிரமதேவன் மீண்டும் வணங்கிச் சுவாமீ! எவ்வாறு சிருட்டி செய்யவேண்டும் என்பதனையும் அநுக்கிரகிக்க வேண்டும் என்று வேண்டினான். அப்போது வக்கிரதுண்ட விநாயகர் அருள்சுரந்து பிரமனே! நமது உதரத்துள் புகுந்து அங்கிருக்கின்ற சகலலோகங் களையும் பார்த்து அதன்படியே சிருட்டிக்கக், கடவை என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன்மேல் தனது தும்பிக்கையிலிருக்கின்ற புழையின் வழியாக அப்பிரமனை எடுத்து விழுங்கினார் அதனைப்பார்த்துக் கொண்டி ருந்த விஷ்ணுவும் உருத்திரனும் விநாயகக் கடவுளைத்தீர்க்க தண்டஞ் செய்து கைகூப்பி நிற்றலும் அவர்களையும் அவ்வழியே விழுங்கினார்.

திரிமூர்த்திகளும் வயிற்றிலிருந்து பார்த்தபோது அளவிறந்த அண்டங்கள் அடங்கியிருந்தன மேலுலகங்கள், கீழுலகங்கள் நவவடிவங்கள், நாற்பாதங்கள், நால்வகைமுத்திகள், பஞ்சபூதங்கள், ஐவகை நிலங்கள், உலோகங்கள், மணிகள், தீவுகள் வேதங்கள், உபவேதங்கள், வேதாங்கங்கள், சாத்திரங்கள், ஆச்சிரமங்கள், திக்குப்பாலகர்கள், சூரியர்கள், உருத்திரர்கள், வசுக்கள், வாயுக்கள், கிரகங்கள், புறப்புறச்சமயங்கள். அகப்புறச்சமயங்கள், அகச்சமயங்கள், கணங்கள், குலமலைகள், மேகங்கள், சமுத்திரங்கள், நதிகள் முதலியன அமைந்துள்ள அந்தந்த அண்டங்கள் தோறும் சென்று அநந்தம் பேர்களாக விளங்கியிருக்கின்ற சீவராசிகள் யாவற்றையும் அந்தந்த அண்டங்கள் தோறும் கண்டார்கள். அவரது வயிற்றுள் இருந்தபடியே விநாயகப் பெருமானைத் தரிசனஞ் செய்தார்கள். அப்போது வக்கிரதுண்ட விநாயகர் பிரமனைத்தனது துதிக்கையினின்றும் விஷ்ணுவையும் உருத்திரனையும் இரண்டு செவிகளினின்றும் வெளியில்வர விடுத்தார். தனது திருவுருவைக் கரந்தருளினார்.

## பிரம சிருட்டிப் படலம்

இதன் மேல் முனிவர் கூறுவார் விநாயகக்கடவுளது விசுவரூபத்தைத் தரிசித்தபின்னர் பிரமதேவன் உலகங்களைப் படைக்க ஆரம்பித்தான். விநாயகரைத்தியானிக்கவில்லை. தானே எல்லாவற்றையும் செய்யலாம் என்று தொடங்கினான். இதனால் அவன் நினைத்த ரூபங்கள் ஒன்றும் கைகூடவில்லை. விகாரரூபங்களே தோன்றின. இதனால் மனக்கலக்கம் அடைந்த பிரமன் மீண்டும் விநாயகரைத் துதிசெய்தான். அப்போது விநாயகக்கடவுள் குழந்தை உருவில் கனவில் தரிசனங் கொடுத்துப் பிரமனே! உன்னுடைய நிருவாகங்கொண்டு செய்யலாம் என்று துணிந்தனை. சிருட்டி செய்வதற்கு எமது ஏகாட்சரமந்திரத்தைப் பத்துலட்சம் உருச்செபித்தால் முடிவில் நாம் நடக்கவேண்டிய சிருட்டிமுறையை அறியத்தருவோம் எனக்கூறி அநுக்கிரகித்தார்.

இதன் பின்னர் பிரமதேவன் ஏகாட்சர மந்திரத்தை உபதேசமாகப் பெற்றுத் தாமரைமலரில் ஒரு காலை ஊன்றிக்கொண்டு நின்று பன்னிரண்டு வருடம் ஏகாட்சர செபஞ்செய்தான். இதன்மேல் விநாயகக் கடவுளானவர் தரிசனங்கொடுத்துப்பின்வருமாறு கூறுவார். நம்மிடத்து அனந்தசத்திகள் இருக்கின்றன. அவற்றுள் கிரியாசத்தி, ஞானசத்தி என்னும் இரு சத்திகளையும் மனத்திலே தியானித்து உன்தொழிலைச் செய்யக்கடவாய் என்று அருளிச்செய்தார். விநாயகக்கடவுள் கூறிய

பிரகாரம் அவர் கட்டளையைச் சிரமேற்கொண்டு இரு சத்திகளையும் வருமாறு வேண்டிப் பிரார்த்தித்தான். அவர்கள் இருவரும் பேரழகு வாய்ந்தவர்களாகச் சித்தி, புத்தி என்னும் நாமத்துடன் அவனெதிரிலே தோன்றினார்கள். அவ்விருவரையும் பிரமன் தீர்க்கதண்டஞ் செய்து என் தவக்கொழுந்துகளே! நீங்கள் எனக்கு இடையூறு வராமற் காத்து அருள்புரியவேண்டும் என வேண்டினன். அத்துடன் அருமைப் புத்திரிகளாக இருவரும் விளங்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனன். அவ்வாறே செய்வதாகச் சித்தி, புத்தி இருவரும் வரங் கொடுத்தனர். அதன்மேல் பிரமதேவனானவன் ஓர் இடயூறுமின்றி ஏழு புத்திரர்களைச் சிருட்டித்தான். அவர்கள் எழுவரும் துறவிகளாகத் தவஞ்செய்யச் சென்றார்கள். பின்னர் ஏழுபுத்திரர்களைப் படைத்தான். அவர்களும் துறவுபூண்டு பின் முத்தியடைந்தார்கள். இதன்மேல் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களையும் நாரதமுனிவரையும் சிருட்டித்தான்.

தனது முகத்தினின்று அக்கினியையும், பிராமணர்களையும், வைசியர்களைத் தொடையினின்றும், பாதத்தினின்று சூத்திரர்களையும் சூரியனை விழியினின்றும் இந்திரனை வதனத்தினின்றும், பிராணன் முதலாய மருத்துக்களைச் செவியினின்றும், ஆகாயத்தை உந்தியினின்றும் தேவலோகம் முதலான மேலுலகங்களை முடியினின்றும் திருவடியிலிருந்து கீழுலகங்களையும், கிழக்கு முதலாம் திசைகளைக் கரத்தினின்றும் இவ்வாறே பர்வதங்கள் முதலான சகல சராசரங்களையும் சிருட்டி செய்தான். அது முதல் இந்த உலகமானது உருத்திரன், விஷ்ணு ஜலம், பிரமன், அக்கினி, பூமி, ஆகாயம், வாயு, திக்குப்பாலகர்கள், மனுக்கள் முனிவர்கள், வசுக்கள், இயக்கர்கள், மிருகங்கள், மற்றும் பயிர்வர்க்கங்கள் என்னும் இருபத்தொரு வகுப்புக்களுடனேபொருந்தியிருக்கின்றது.

## திருமணப் படலம்

முனிவர்களே! கணேசமூர்த்தியினுடைய கிருபையினால் பிரமதேவன் சிருட்டி செய்த வரலாறு கூறினோம். முன்னர் கூறிய பிரகாரம் பிரமதேவன் சகல சீவராசிகளையும் சகல அண்டங்களையும் படைத்து முடிந்த பின்பு ஆன்மகோடிகள் உலகத்தில் நிலைபெற்று வாழ்ந்தன. விநாயக மூர்த்தியானவர் கைலாயத்திலே சிவபெருமானுக்குப் புத்திரராக அமர்ந்திருந்தார். அக்காலத்திலே மகாதவசிரேட்டராகிய நாரத முனிவர் நிர்மலசொரூபியாகிய கணேசமூர்த்தியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து சுவாமீ பிரமதேவரானவர் தமது தியானசக்தியினால் உதித்த இரு கன்னியரையும் தேவரீருக்குத் திருமணஞ் செய்வதான ஓர் எண்

ணத்தையுடையவராய் இருக்கின்ருர். என்று கூறி யாழின் நரம்புகளை மீட்டிக் கணேசப்பெருமான் புகழைப் பாடினுர். அத்துடன் சித்தி, புத்தி என்னும் நாமங்கொண்ட அக்கன்னியரின் வனப்புக்களையும் குணதிசயங்களையும் விரிவாக எடுத்து விளம்பினுர். இவை அனைத்தை யும் செவியுற்ற விநாயகப்பெருமான் பிரமன் புத்திரிகளைத் திருமணஞ் செய்வதற்குச் சம்மதம் தெரிவித்தார். நாரதமுனிவர் இச்சமாச் சாரத்தைப் பிரமதேவனிடம் கூறினுர். பிரமனுனவன் மகிழ்ச்சி கொண்டு திருக்கைலாயம் சென்று பரமசிவனையும் பார்வதிதேவியை யும் பணிந்து முத்தொழில்களையும் தந்து ஆட்கொண்ட கணேசமூர்த் திக்கு இருபுத்திரிகளையும் திருமணஞ் செய்துகொடுக்க ஆவலுற்றேன் என்ருன். இதனைச் செவிமடுத்த பரமன் பார்வதிதேவியாரை நோக் கினுர். அவர் விநாயகக்கடவுளுடைய திருமணத்தை நடத்துவதே நல்லது என அருள் புரிந்தார்.

இதன் மேல் பிரமதேவன் விநாயகப்பெருமானுடைய பாதார விந்தங்களைப் பணிந்து சுவாமீ! இவ்வுலகம் நடைபெறுவதற்குத் தாங்கள் முன்னேடியாக இத்திருமணத்தை நிகழ்த்த வேண்டும் என வேண்டினுன். விநாயகப்பெருமான்கிருபை சுரந்துபிரமனே! நீ கேட்டுக் கொண்டபடி திருமண ஏற்பாடுகளை மேற்கொள்வாயாக. யாம் உரிய நேரத்தில் யாவர்களோடும் இட்டமாக வருவோம் என்று கூறி விடை கொடுத்தருளினுர். அதன் மேல் பிரமதேவன் வைகுந்தம் சென்று திருமாலுக்கும், சுவர்க்கலோகம் சென்று இந்திரன் முதலாய தேவர் கட்கும் சமாச்சாரத்தை அறியச்செய்தான். விசுவகர்மாவைஅழைத்துக் கல்யாணமண்டபத்தைச் சாத்திரவிதிப்படி அமைக்குமாறு பணிப்புரை பகர்ந்தான். விஸ்வகர்மா மகிழ்ச்சியுடன்ஒரு நகரத்தை உண்டாக்கி நான்கு புறத்தும் உயர்ந்தகோபுரங்களையும், மதில்களையும் அமைத்து திருக்கல்யாணம் தரிசிக்கவருபவர்கள் வாசஞ்செய்யத்தக்க கூடங்களும் உபரிகைகளும் உண்டாக்கினுன். மாலைகளைத் தொங்கவிட்டுப் பொற் பாவைகள், சித்திரப்பாவைகள், நிலைக்கண்ணுடிகள் யாவற்றையும் பதித்து ஓமகுண்டத்தையும் விசாலமாக அமைத்துவிட்டு பிரமதேவ னிடம் சென்று யாவற்றையும் தெரிவித்தான்.

இதன் பின்னர் பிரமதேவனுல் அனுப்பப்பட்ட, திருமணவோலை கண்டு அனைவரும் மகிழ்ச்சிகொண்டார்கள். ஆகாயகங்கை வருவிக்கப் பட்டது. ஓமத்திற்குவேண்டிய பொருட்கள்சேகரிக்கப்பட்டன. இங்ஙனம் சகல ஏற்பாடுகளும் குறைவின்றி நிறைவாக இருப்பதையும் பந்தல் அலங்காரங்களையும் நாரதமுனிவர்கண்டு மனங்களிப்படைந்தார். வெள்ளியங்கிரியை அடைந்து சிவபிரானை வணங்கிச் சுவாமீ விநாயகப் பெருமானுடைய திருக்கல்யாணத்திற்குச் சகல ஆயத்தங்களும் நிறை

வேறிவிட்டன என்றார். சிவபெருமான் கிருபைகூர்ந்து விநாயகக் கடவுளைப்பார்த்துச் சித்தி புத்திகளை விவாகஞ் செய்வதற்குத் திருமணக் கோலம் புனையுமாறு பணித்தார். விநாயகப்பெருமான் தெய்வகங்கை யில் நீராடி வனப்பு வாய்ந்த திருமேனியையுடையவராய் பீதாம் பரங்களைச்சாத்திப் பொன்ஆபரணங்களைச்சாத்தித் திருமணக்கோலம் புனைந்தார். தமது ஐராவதத்தில் விநாயகரை வரச்செய்து சிவபெரு மானும் பார்வதியும் ஆசீர்வசனங்களைக்கூறித் தாம் இடபாரூடராக எழுந்தருளினர். முருகக்கடவுளும் மயில்வாகனத்தில் வேலாயுதத்து டனும் மற்றும் இருசக்திகளுடனும் எழுந்தருளினர், அட்ட வித்தியா தரர்கள், அட்டவசுக்கள், சப்தகோடி மகாமந்திரங்கள், இருபத்தெட்டு ஆகமங்கள் அனைவரும் தெய்வ வடிவங்களாகித் திரண்டு வந்தனர்.

இங்ஙனமாக விநாயகப்பெருமான் மணக்கோலம்பூண்டு பலவாத்தி யங்கள்முழங்க வருகலும் சரஸ்வதி தேவியானவள் தெய்வகங்கையை ஏந்திவரப் பிரமதேவனும் வந்து மணமகனது பாதங்களுக்கு அபிஷே கித்து ஆடைகொண்டு ஒற்றிப் பாதபூசை செய்தனர். பார்வதி பரமேஸ் வரன், வேலாயுதப்பெருமான் முதலாயினோர் தத்தமக்கு உரிய ஆசனங் களில் அமர்ந்தனர். கண்ணாடி, கும்பம், சாமரை முதலியவற்றை மகளிர் சுமந்துகொண்டுவர, விநாயகக்கடவுளாகிய மணமகன் ஐரா வதத்தின்மேல் இவர்ந்து வந்து நடுவில் அமைக்கப்பட்டுள்ள சிங்கா சனத்தில் எழுந்தருளியிருந்தார். அந்தப்புரத்தில் எழுந்தருளியிருக் கின்ற சித்தி, புத்தி ஆகிய இரு கன்னியர்களையும் தேவமாதர்களா கிய சரஸ்வதி, இலக்குமி, அதிதை. அநுசூயை, அருந்ததி முதலாம் பெண்கள் அனைவரும் வந்து வாழ்த்துக்கூறினார்கள். வாசனைத் திரவி யங்கள் யாவும் கொண்டுவரப்பட்டன. தேவமாதர்கள் நலங்கிட்டுத் தைலத்தைக் கூந்தலில் பூசினார்கள். கங்காஜலத்தினால் இரு கன்னி யருக்கும் திருமஞ்சனம் ஆட்டினார்கள். ஆடையினால் ஈரம் துவட்டி அகிற்புகையும் ஊட்டினார்கள். அதன்மேல் மணப்பெண்களுக்குப் பட்டாடைகளைச் சாத்தினார்கள். அரைப்பட்டியல் முதலாம் ஆபர ணங்கள் அனைத்தையும் அணிவித்தார்கள். மலர்மாலைகளைப் புனைந் தார்கள். தேவியர் இருவர்க்கும் மணக்கோலஞ்செய்தார்கள். அதன் பின்னர் உமாதேவியாரின் பணிப்பின் பிரகாரம் மங்கையர் இருவரை யும்நவரத்தினச்சிவிகையில்ஏற்றிப் பலவாத்தியங்கள் முழங்கக் கல்யாண மண்டபத்திற்குக் கொண்டுவந்து கணேசமூர்த்திக்கு இரு மருங்கிலும் அமர்த்தினார்கள்.

சகலகலாவல்லவராகிய சனகமகாமுனிவர் சங்கற்பங்கூறிப் புண் ணியாகவாசனமும் செய்து தூய்மையாக்கி அர்க்கிய - பாத்தியம் - ஆச மனீயம் முதலாய மூன்று ஜலங்களையும் தந்தார். அதன்மேல் பிரம தேவனானவன் வந்து விநாயகக்கடவுளுடைய பாதங்களுக்குப் பாத

பூசை செய்து தூபதீபங் காட்டினன். அதன் பின்பு சித்தி, புத்தி இருவருடையதிருக்கரங்களையும் விநாயகப்பெருமானுடையகரங்களில் சேர்த்து சுவாமீ! அடியேன் அருமையாக வளர்த்தெடுத்த இம்மங்கை யரைக் தேவரீர் அங்கீகரித்து என்னை ஆட்கொள்ளவேண்டும் என்று பிரார்த்தித்து சரஸ்வதிதேவியார்விட்ட தெய்வகங்கைத்தீர்த்தத்தினல் தாரதத்தஞ் செய்து வணங்கினன். இவ்வமயம் முனிபுங்கவர்கள் வேதாகமங்களைத் துதித்து வாழ்த்தினர்கள். மங்கல வாத்தியங்கள் முழங்கின. சனகமகாமுனிவர் ஓமகுண்டத்தைச் சுற்றி அந்தணர்களை இருத்தித் தர்ப்பைகளைப் பரப்பிப் பிரணவம் முதலிய தேவதைகளை வழிபட்டு விநாயகக்கடவுளையும், சித்தி புத்தி ஆகிய தேவியர்களையும் அதனருகில் எழுந்தருளச்செய்து நவக்கிரக ஓமம் முதலியன செய்து வேதசாகைகளைச் சொல்லிச் சமித்துக்களை ஓமகுண்டத்தில் போட்டுப் பூர்ணகுதி கொடுத்து மைக்குழம்பை மணமக்களின் திருநுதலில் அணியச்செய்தார். அதன்பின்பு மகாவிஷ்ணு தோழனுக வந்து கைலாகு கொடுத்தார். இலக்குமி முதலிய அறுவரும் புடைசூழ்ந்து போற்றி வரும்படியாகக் கணேசமூர்த்தியானவர் சித்தி, புத்தி சமேதரராய் அத்தீக்குண்டத்தை மும்முறை வலம் வந்து இறுதியில் அவர்களின் திருவடிகளை அம்மி மீது வைத்துத் திருக்கண்ணேக்கம் செய்தருளினர்.

திருக்கல்யாண வைபவம் நிறைவேறியதும் விநாயகப்பெருமான் தேவியர்களுடன் சென்று இறைவனையும் இறைவியையும் வணங்கினர்கள். பார்வதி பரமேஸ்வரன் இவர்களுக்கு ஆசீர்வதித்தார்கள். திருக்கல்யாணம் தரிசிக்கவந்த அனைவருக்கும் உணவுவகைகள், தான வகையாவும்,பிரமதேவனுடையஏற்பாட்டின்பிரகாரம் வழங்கப்பட்டன திருமணம் தரிசிக்க வந்த அனைவரும் விநாயகக்கடவுளையும் சித்தி, புத்தி ஆகிய தேவியரையும் பல முறை வணங்கினர்கள். இதன் பின்னர் சிவபெருமான் தம்மோடு வந்த கந்தவேள் முதலான அனை வரும் புடைசூழப் பார்வதி தேவியாரோடும் சித்தி, புத்தி மணாளனுகிய கணேசமூர்த்தியையும் அழைத்துக் கொண்டு கைலைக்கு எழுந்தருளினர். விநாயகப்பெருமான் இருசக்திகளோடும் தமது உலகத்திற்குச்சென்று வீற்றிருந்தருளினர்.

## விஷ்ணு சடாக்கரம் அநுட்டித்த படலம்

சற்குரு மூர்த்தியாகிய வியாசபகவான் பிரமதேவர் தமக்குக் கூறியபடி கூறுவார். இதுகாறும் விநாயகமூர்த்தியானவர் சித்தி, புத்தி என்னும் இருவரையும்திருமணஞ்செய்தவரலாறு கூறினேம். இனிமேல் விஷ்ணுவானவர் விநாயகமூர்த்தியை உபாசித்த வரலாற்றினையும் கூறுவோம் என்று ஆரம்பித்தார். மகாவிஷ்ணுவானவர். திருப்பாற்

கடலில் அனந்த சயனத்தில் நித்திரை செய்கையில் அவரது இரு செவிகளின்றும் மிக்க வலிமையுடைய மதுகைடவர் என்னும் இரு அசுரர்கள் தோன்றினார்கள். அவர்கள் இருவரும் தேவர்கள். முனிவர்கள் எவரையும் மதியாது துன்பஞ் செய்தார்கள். பூலோகத்தில் உள்ளவர்களையும் தேவலோகத்தில் உள்ளவர்களையும் துன்புறுத்திக் கொண்டு இறுதியில் பிரமதேவரைப் பிடிக்கச் சென்றார்கள். பிரமதேவன் விஷ்ணுவிடம் முறையிடச் சென்றபோது விஷ்ணுவானவர் அனந்தசயனத்தில் நித்திரைசெய்து கொண்டிருந்தார். பிரமதேவன் நித்திராதேவியை வேண்டுதல் பண்ணியதின் பேரில் நித்திராதேவி விஷ்ணுவைவிட்டு அகலுதலும், விஷ்ணுவானவர் சயனத்தினின்றும் எழுந்து பிரமனைப் பார்த்து நீவந்த காரணம்யாது? என வினவினார். பிரமதேவன் கூறுவான் தங்கள் செவியினின்றும் இரு அசுரர்கள் தோன்றி அளவற்ற இடையூறுகளைச் செய்கின்றார்கள். அவர்களைக் கொல்லவேண்டும் எனக் கூறினான். விஷ்ணுவானவர் போர்க்கோலம் புனைந்து சென்று அந்த இரு அசுரர்களுடன் பெரும்போர் நிகழ்த்தினார். ஆனால் அசுரர்களை வெல்ல முடியவில்லை.

இரு அசுரர்களையும் வெல்ல முடியாத விஷ்ணுவானவர் சிவபிரானிடம் சென்று முறையிட்டார். சிவபெருமான் நீ போர் தொடங்கும் போது விநாயகக் கடவுளை வழிபாடு செய்யவில்லை எனவே அவரது சடாட்சரமந்திரத்தைச் செபித்து அவரை வழிபட்டால் யாவும் கைகூடும் என்றார். விஷ்ணுவானவர் அதன்படி ஸ்நானஞ் செய்து அநுட்டானம் முதலாய கடமைகள் முடித்தபின் விநாயக மூர்த்தியைத் தியானித்துச் சடாட்சரமந்திரத்தை நூறுவருடம்வரை செபித்தார். அப்போது வக்கிரதுண்ட விநாயகர் விஷ்ணுவின் வேண்டுதலைஏற்று மேலும் கூறுவார் கேசவனே! சத்துருக்களை வெல்லக்கூடிய வல்லமை உனக்குத் தந்தோம். நீ எனது சடாட்சர மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு போருக்குப் போகக்கடவாய் என்று பணித்தருளினார். அதன்மேல் வீரகர்ச்சனை செய்து போருக்குச் சென்ற விஷ்ணுவானவர் பாஞ்சசன்னியத்தை முழங்கச்செய்து விநாயகக்கடவுளை மனதிலே தியானஞ் செய்து சடாட்சரத்தை உச்சரித்தார். அதன்மேல் சக்கராயுதத்தை விடுத்தார். சக்கராயுதம் சென்று மதுகைடவர் என்னும் இரு அசுரர்களையும் துண்டங்களாக வெட்டி வீழ்த்தியது. இதனால் மகிழ்ச்சி கொண்ட விஷ்ணு, பிரமன் முதலாய தேவர்கள் அனைவரும் சித்தி கேந்திரன் என்னும் தலத்தில் விநாயகக் கடவுளுக்கு ஆலயம் அமைத்து விநாயகக்கடவுளை முறைப்படி பூசை செய்து பல வரங்களைப் பெற்றார்கள்.

## விசுவாமித்திரனை வீமனடுத்த படலம்

முனிவர்களே! விஷ்ணு விநாயகமூர்த்தியை அநுட்டித்து மது கைடவர்களை வென்ற வரலாறு கூறினேன். இனித்தக்கன் உபாசித்த திறத்தினைக் கேட்பீராக.

விதர்ப்பநாட்டிலே வயற்செழுமைகளும், குடிவனப்புக்களும் சிறந்தோங்கிய கோபுரங்களும் முதலாய அலங்காரங்களோடு விளங்கியிருக்கின்ற கவுண்டிய மென்னும் நகரமுண்டு. அந்நகரத்தைப் பல சிறப்புக்களுடன் விளங்கி நின்ற வீமராசன் என்பவன் அரசாண்டு வந்தான். அவனும் மனைவி சாருகாசினியும் சேர்ந்து இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தார்கள். பலதான தருமங்களையெல்லாம் செவ்வனே நிறைவேற்றினார்கள். இவ்வாறு சகல பாக்கியங்களோடும் விளங்கிய வீமராசனுக்குப் புத்திரப்பேறு இல்லாமையால் இருவரும் துக்கப்பட்டார்கள், வீமராசன் சிந்திப்பான் யாம் பூர்வத்தில் செய்த பயனால் இவ்வாறு நேர்ந்தது இனியாகிலும் ஒரு புதல்வனைப் பெற்று அகனால் நன்மையை அடையவேண்டும். எனவே வீமராசனும் அவன் மனைவி சாருகாசினியுமாகப் புறப்பட்டுச் சென்று விசுவாமித்திரமுனிவருடைய ஆசிரமத்தை அடைந்தார்கள், அங்கே சகலவளங்களும் நிறைந்து காணப்பட்டன. தேவர் முதலாயினோரும் திருநீறு உருத்திராக்கம் தரித்த முனிபுங்கவர்களும் அந்த ஆசிரமத்தில் வசிக்கின்றார்கள்.

பற்பல சிறப்புக்களையெல்லாம் கண்ட வீமனும் அவனது மனைவி சாருகாசினியும் இவ்வாறு ஆசிரமங்களையெல்லாம் நோக்கிக் கொண்டு செல்லுகையில் பற்பல முனிபுங்கவர்களைக்கண்டு வணங்கினார்கள். அவ்வமயம் விசுவாமித்திரமுனிவர் கருணைகூர்ந்து உங்களுக்குப் புத்திரன் உண்டாகுக என்று ஆசிர்வதித்தார். அப்போது வீமராசன் சொல்லுவான் நாங்கள் பூர்வத்தில் செய்த தவப்பயனால் தங்களைக்கண்டோம் எனக்கூறி அட்டாங்கமாக வணங்கினான். அப்போ விசுவாமித்திரர் கூறுவார் நராதிபனே! உனது முன்னோர் நித்தமும் விநாயக பூசை செய்து வந்திருக்கிறார்கள். அந்தப்பூசையைச் செய்யாமல் கைவிட்டபடியால் இவ்வாறு புத்திரப்பேறு இல்லாது போயிற்று. நீங்கள் இருவீரும் விநாயகமூர்த்தியைப்பூசனை செய்து வருவீர்களாயின் நீங்கள் வேண்டிய புத்திரசம்பத்து உண்டாகும் என்று கூறியருளினார்.

## தக்கன் பிணிநீங்கு படலம்

விசுவாமித்திரர் மேலும் கூறுவார் உனக்கு ஏழாவது தலைமுறைச் சந்ததியாரில் வல்லவன் என்னும் அரசன் இருந்தான். அவன் மனைவி கமலை என்பவளுக்கு ஒரு புதல்வன் பிறந்தான், அப்புதல்வன் தொழு



சித்தி புத்திகளை விநாயகக் கடவுள் கல்லியாணம் செய்திடல்

நோய் உடையவனுய் இருத்தலினுலே பார்ப்போர் அனைவரும் பெரும் துன்பம் அடைந்தனர். கண்ணும் தெரியாது காதும் செவிடாகிப் பிறக்கும்போதே இவ்வாறு பிறந்ததையிட்டு அரசனும் மனைவியும் பெருங்கவலை கொண்டனர். அப்புதல்வனுக்குச் சோதிடர் கூறிய பிரகாரம் தக்கன் என்று நாமஞ்சூட்டினர். பன்னிரண்டு வயதாகியும் நோய்நீங்கவில்லை. இதனுல் கவலை கொண்ட அரசன் மனைவியைப் பார்த்துக் கூறுவான். உனது மகனின் நோய் நீங்குவதாக இல்லை ஆகவே இவனையும் எடுத்துக்கொண்டு இவ்விடத்தைவிட்டு வேறிடத் துக்கு நீ செல்லவேண்டும். இதன்மேல் தாயாகிய கமலையானவள் மைந்தனையும் எடுத்துக்கொண்டு வெளியில்வந்து புலம்பினுள்.

பலவாறு துன்பப்பட்ட கமலையானவள் மனவுறுதி கொண்டு இனி மேல் பரம்பொருளைவிட வேறுதுணை இல்லை என்னும் நிலைப்பாட் டுடன் வனத்திலே சஞ்சரித்துக்கொண்டிருந்தாள். தான்உயிர்விட்டால் நோய் உள்ள மகனை எவரும் பார்க்கமாட்டார்கள் என்ற எண்ணத் தினுல் மகனைக்கோவிலுக்குள் இருத்திவிட்டுத் தான் யாசகஞ்செய்து கொண்டு வந்து மகனுக்கும் கொடுத்துத் தானும் உண்டுசீவித்தாள். இவர்களுக்கு நல்லகாலம் நெருங்கியதும் மகனையும் அழைத்துக்கொண்டு குண்டிவனத்திலே செல்லும் போது கணேசமூர்த்திக்கு அன்பராகிய முற்கலமுனிவர் வந்தார். அவரது காற்றுப்பட்டவுடன் தக்கனுடைய சரீரத்தை வருத்திய நோய்கள் அனைத்தும் நீங்கின. கண்பார்வை தெரிந்தது காதுகேட்டது அந்நகரத்து மக்களுக்கு இவர்கள் மேல் கிருபை உண்டானது. இவ்வாருகக் கமலையும் மகன் தக்கனும் காட்டிலே சஞ் சாரஞ் செய்துவரும் போது ஓர் ஆதிசைவப்பிராமணர் இவர்களைக் கண்டார். தாயும் மகனும் அவ்வேதியரை வணங்கினுர்கள். அவர் இவர்களுக்கு கணேசமூர்த்தியினுடைய சடாட்சரமந்திரத்தைஉபதேசஞ் செய்து அதனைச்செபிக்கின்ற முறையினையும் கூறினுர். அதன் பிரகாரம் தக்கனுகிய சிறுவனும் தாயும் செபஞ்செய்து வருகின்றநாளில் விநாயகப் பெருமான் பல இரத்தினுபரணங்கள் அணியப்பெற்ற மேனியையுடைய வராய்க் காட்சி கொடுத்தார். இதனைக்கண்ட தக்கனுனவன் பேரா னந்தம் கொண்டு எம்பெருமானைத் தோத்திரஞ் செய்தான்.

தக்கனது தோத்திரங்களைக் கேட்ட விநாயகப்பெருமான் கூறுவார் நாம் நமதன்பனுகிய முற்கலமுனிவரது உருவத்தைப்பெற்றிருக்கின்றேம் நானும் அவனும் வேறல்ல. முன்னர் அவனது காற்றுப்பட்டதும் உனது உடம்பிலுள்ள நோய்கள் யாவும் நீங்கின. ஆகவே அவனைச் சரண டைந்தால் உனது கோரிக்கைகள் நிறைவேறும் நீ தேவேந்திரனைப் போலச் சகலசெல்வங்களோடும் வாழ்வாயாக என்று அருள்புரிந்தார்.

## முற்கலமுனிவர் தக்கனுக்கு உபதேசித்தபடலம்

இவ்வாறு காட்சிகொடுத்த விநாயகக் கடவுள் மறைந்தருளியதும் தக்கனனவன் பூமியில் வீழ்ந்து புரண்டு அலறினன். கிருபாமூர்த்தியை எவராவது கண்டீர்களா? என்று புலம்பினன். ஆனந்தக்கூத்தாடினன். இதன்மேல் முற்கலமுனிவருடைய ஆசிரமத்தை அடைந்தான். விநாயகமூர்த்தியைச்சதாகாலமும் பூசிக்கின்ற முனிவரானவர் தக்கனைப்பார்த்து அன்பனே உனது பெயரென்ன? நீ கருதி வந்த எண்ணங்கள் எவை? என்று வினவினர். உடனே தக்கனனவன் பேரானந்தங் கொண்டு கூறுவான் எனது தந்தையார் கருநாடகேசத்தை ஆள்கின்ற வல்லவராசன் தாய் கமலை என்பவள். மேலே சொல்லிய இருவருக்கும் புதல்வனகப்பிறந்தேன். பிறக்கும்போதே தொழுநோய் உடையவனகப் பிறந்தேன் பன்னிரண்டு வயது வரை நோய் நீங்கவில்லை. தந்தையார் என்னையும் தாயாரையும் நாட்டைவிட்டுத் துரத்தி விட்டார். அதனால் இந்தக் காட்டில் பிச்சை எடுத்து உண்டு கொண்டு அலைந்து திரிகின்றேம். ஓர் தினம் சுவாமிகளின் காற்றுப்பட்டதும் எனது உடம்பில் இருந்த பிணி அனைத்தும் நீங்கியது. ஒரு மறையவர் உபதேசித்த பிரகாரம் மந்திரத்தை அனுட்டித்துக் கணேசமூர்த்தியினுடைய தரிசனம் கண்டோம். அவர் இட்டருளிய கட்டளைப் பிரகாரம் தேவரீருடைய கருணை கடாட்சம் எமக்குக் கிடைக்கவேண்டும் என்று பிராத்தித்தான்.

முற்கலமுனிவர் சொல்லுவார் நீயே இவ்வுடம்பின் பயனைப்பெற்றவன். முத்தொழில்களையும் நடாத்தி அம்மூவர் முன்னிலையில் இந்த உலகத்துக்குத் தாமே முதல்வராய் இருக்கின்ற கணேசமூர்த்தியானவர் தரிசனந் தந்ததே பெரும்பேருகும். கணேசமூர்த்தியினுடையகிருபைக்கு உரியவரானீர்கள். சகலவினைகளையும் வென்றீர்கள். அவ்விநாயகக் கடவுளுடைய ஏகாட்சரமந்திரத்தை உபதேசிக்கின்றேன். அம்மந்திரத்தை ஜெபஞ்செய்து முடிவில் தேவேந்திரன்முதலியோர் மதிக்கத்தக்க அரசாட்சியைப் பெற்று வாழ்வாய் என்று விடை கொடுத்தனர். என்று விசுவாமித்திரர் வீமராசனை நோக்கிச் சொன்னர்.

## வல்லாளன் வேதனை நீங்கு படலம்

முனிவர்களே! விநாயகமூர்த்தியைத் தக்கன் உபாசித்த சரிதை கூறினேம். இப்பால் வல்லாளன் உபாசித்த திறத்தினையும் சொல்லுவோம் கேட்பீராக என்றார். வீமராசன் விசுவாமித்திரரை மீளவும் பணிந்தெழுந்து சுவாமி முற்கல முனிவரது காற்றுனது தக்கனது சரீரத்தில் பட்டதும் அக்கொடிய வியாதி அவனை விட்டு நீங்கியது.

உடனே கணேசமூர்த்தியினது தரிசனங் கிடைத்தது. எனவே தக்கன் பூர்வஜென்மத்தில் என்ன தவத்தினைச் செய்து இருக்கின்றான் என்பதை அருள வேண்டும் என்று வேண்டினான். விசுவாமித்திரர் கிரிபை சுரந்து சொல்லுவார். வளம்பலசிறந்த சிந்து தேயத்திலே பல்லி என்கின்ற பட்டணத்திலே வைசிககுலத்திலே கலியாணன் என்பவனுக்கும் அவன் மனைவி இந்துமதி என்பவளுக்கும் தவக்குறையை நிறைவேற்றத்தக்க புதல்வன் ஒருவன் பிறந்தான். தானதருமங்களைச் செய்த கலியாணன் சோதிடர் சொற்படி தனது புத்திரனுக்கு வல்லாளன் என நாமஞ் சூட்டி வளர்த்து வந்தான். புதல்வனானவன் வளர்பிறைபோல வளர்ந்து சகபிள்ளைகளோடும் விளையாடிக் கொண்டிருக்கும் நாளில் ஓர் தினம் அயல் வீட்டுச்சிறார்களையும் அழைத்துக்கொண்டு சென்று தோப்புக்களிலே விளையாடிவந்தான். வல்லாளனுக்குப் பூர்வீக நல்வினைப் பயனானது நெருங்குதலும் வல்லாளன் ஓர்கல்லை எடுத்து வைத்து விநாயகமூர்த்தியாகப் பாவித்துச் ஜலத்தால் அபிஷேகித்தும் புஷ்பத்தால் அர்ச்சித்தும் பக்தியுடன் இவற்றைச் செய்து விட்டுச் சிறுவர்களுடன் வீட்டிற்குச் செல்லுவான்.

பாவனையால் அர்ச்சித்த விநாயகமூர்த்திக்கு நாள்தோறும் பல சிறப்புக்களைச் செய்து ஆராதனை நடாத்தி வந்தான். இங்ஙனம் பூசனைகளை விருத்தி செய்து வரும் நாளில் ஓர்தினம் பிராதக் காலையில் எழுந்து அந்தச்சிறுபிள்ளைகளை அழைத்துக்கொண்டு தோப்பின்கண் சென்று மிகுந்த பக்தியுடனே கணேசமூர்த்திக்கு ஆராதனைகள் செய்யத் தொடங்கினான். கூடவந்த பிள்ளைகளில் சிலர் பூமாலைகளைத் தூக்கினார்கள். சிலர் திருமஞ்சனம் கொண்டுவந்தார்கள். சிலர் கனிவர்க்கங்களைச்சேகரித்துக்கொண்டு வந்தார்கள். இதன்மேல் விநாயகமூர்த்திக்கு அபிடேகம், நைவேத்தியம் முதலியன செய்து ஆராதனைகள் நிகழ்த்தினார்கள். இதனால் பிராதக்காலையில் சென்ற சிறுவர்களும் வல்லாளனும் மாலைவரை போசனம் ஒன்றுமில்லாது தோப்பிலேயே நின்றார்கள்.

இதன்மேல் அப்பிள்ளைகளின் பெற்றோர் வல்லாளனின் தந்தை கலியாணனிடம் சென்று உன்மகன் எங்கள் பிள்ளைகளையும் அழைத்துச் சென்று தோப்பிலே (வீட்டிற்கும் வராமல்) விளையாடிக்கொண்டிருக்கின்றான் அவனை நீ தண்டியாது விட்டால் நாங்கள் அரசனிடம் முறையிட்டு அதற்குரிய தண்டனையைப் பெற்றுத்தருவோம் என்றார்கள் இதனால் கோபங்கொண்ட கலியாணன் ஒரு தடியையும் எடுத்துக் கொண்டு சிறுவர்கள் விளையாடும் தோப்புக்குச் சென்றான். அங்கே அலங்காரஞ் செய்யப்பட்ட பந்தல்களையெல்லாம் பிடுங்கி எறிந்தான். ஆவாகனஞ்செய்து வைத்திருக்கின்ற விநாயகமூர்த்தியையும் எடுத்து எறிந்தான். மகன் வல்லாளனுக்கு உதிரம் ஒழுகும் படி தடியால் அடித்தான். அதன்மேல் மகனை ஒரு மரத்துடன் இறுகக்கட்டினான்

அதன் பிறகு கூறுவான், நீ விநாயகரைப் பூசை செய்தது உண்மை யானால் அவரே வந்து இந்தக்கட்டை அவிழ்த்து விடவேண்டும். நீ இனிமேல் எமது வீட்டிற்கு வரக்கூடாது. இவ்வாறு கூறிவிட்டுக் கலியாணன் வீடுநோக்கிப் புறப்பட்டான்.

வல்லாளன் தோப்பை நோக்கிப் பார்த்தான். தன்னுடன் நின்ற சிறுவர்களும் சென்று விட்டார்கள். தந்தையும் சென்றுவிட்டார் வல்லாளனுக்கு ஒருதுணையும் இல்லை. அப்போ அவன் விநாயகக் கடவுளை நோக்கிக்கூறுவான் சுவாமீ! யான் உமது அடிமை. இது உண்மையானால் உங்களது ஆலயத்தையும் உருவத்தையும் எவன் எடுத்து எறிந்தானோ அவன் காதும் கேளாது. கண்ணும் தெரியாது தொழுநோய் உடையவனாகவேண்டும். எனது கட்டையும் தேவரீரே அவிழ்த்துவிடவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் எனது உயிரை விடுவதல்லால் வேறுவழியை யான் அறியமாட்டேன் இவ்வாறு வல்லாளன் உயிரைவிடத்துணிந்த சமயம் விநாயகக்கடவுள் ஒரு பிராமணச்சிறுவனாக அவன் முன்னே வந்தார். அச்சிறுவன் வந்ததும் வல்லாளனைக் கட்டியிருந்த கட்டு அவிழ்ந்தது. அப்போது வல்லாளன் விநாயகப்பெருமானை நோக்கிப் பலவாறு தோத்திரஞ் செய்தான்.

''தந்தை தாய் சுற்றமுற்றுந் தமியனேற் கடிகளன்றி
யிந்நிலை யகத்தில்வேறே யிலையென்ப தின்று கண்டேன்
முந்துல கனைத்துந் தோற்றி முடித்தருண் முதல்வமூவா
வந்தன மென்றுன் மைந்த னந்தணன் றழுவிச்சொல்வார்.''

கலியாணன் வீடு செல்லுமுன் அவன் விநாயகக்கடவுளுக்குச் செய்த பாதகத்தினால் வல்லாளன் கூறிய பிரகாரம் கண்ணும் தெரி யாது, காதும்கேளாது தொழுநோய் உடையவனாய் நடக்கமுடியாது வீடு சென்றடைந்தான். பிராமணச்சிறுவன் வல்லாளனை அன்போடு தழுவி நீ உன் துயரத்தை நீக்கி வேண்டிய வரங்களைக் கேட்பாய் என்று அருளிச்செய்தான். வல்லாளன் கூறுவான். இன்று முதல் விநாயகக்கடவுளே எனக்குத்தாயும் தந்தையுமாக விளங்க வேண்டும் எம்பெருமானுடைய திருவடிகளில் நீங்காத பக்தி ஏற்பட வேண்டும். எம்மால் வழிபாடு செய்யப்பட்ட கணேசப்பெருமான் வல்லாள கணபதி என்னும் நாமத்துடன் உலகத்தார் அனைவராலும் வழிபாடு செய்யப்பட வேண்டும். அவற்றுக்கெல்லாம் கணேசப்பெருமான் கிருபை சுரந்து மூவுலகத்தாரும் இங்குவந்து வழிபடக்கடவார்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். சகல உலகத்தாரும் வணங்கக்கூடியதாக விக்கிரகவடி வுடன் அமர்ந்து கொண்டார்.

# வல்லாளன் முத்தியடைந்த படலம்

கணேசமூர்த்தியானவர் விக்கிரகவடிவாக அமைந்திருக்கின்ற அற்புதக்காட்சியை வல்லாளன் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டு பூசைக்குரிய உபகரணங்களையும் திருமஞ்சனம். புஷ்பம் முதலானவற்றையும் கொண்டு வந்து மீண்டும் அபிடேக ஆராதனைகளை ஆரம்பித்தான் வல்லாளனுடன் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்கள் தந்தையின் வரவைக்கண்டதும் விரைந்து ஓடிச்சென்று வல்லாளனின் தாயாரிடம் நடந்தவற்றைக் கூறினார்கள், தாயாகிய இந்துமதி கவலை கொண்டு இருக்கும் நேரத்தில் நாயகன் கலியாணன் மகனைத் துன்புறுத்தியதற்காக விநாயகமூர்த்தியினுடைய கோபத்தினால் நோயுடன் வீடு சேர்ந்ததைக் கண்டு உடனே மகன் இருக்குமிடம் சென்று அவன் விநாயகமூர்த்திக்கு ஆராதனைகள், வழிபாடுகள் செய்வதைக்கண்டு என் அருமைச் செல்வமே நாங்கள் தனித்துவிட்டோம். உன்தந்தையும் நோயினால் பீடிக்கப்பட்டு விட்டார். நீ விநாயகமூர்த்தியைப் பூசை செய்துவிட்டு ஏனைய நேரங்களில் வீடுவர வேண்டும். தவறு விடும் மைந்தர்களைத் தண்டிப்பது தந்தையின் கடமையல்லவா? என்று பல ஆறுதல் வார்த்தைகளைப் பகன்றாள். இதன்மேல் வல்லாளன் தாயைப் பார்த்துக் கூறுவான். யாவர்க்கும் முதற்கடவுளாகிய விநாயகமூர்த்தியினுடைய ஆலயத்தைத்தள்ளி வீழ்த்தி அப்பெருமானுடைய திருவுருவையும் எடுத்தெறிந்து என்னையும் துன்புறுத்திய காரணத்தால் அவருக்கு இவ்வாறு வந்தது, இந்தச்சன்மத்தில் அதனை மாற்றமுடியாது மற்ற ஜென்மத்திலும் சிறிதுகாலம் அனுபவித்திருப்பான் என்று கூறி மேலும் சொல்லுவான் நீ மறு சென்மத்தில் வல்லவராஜனுடைய மனைவியாகிய கமலை என்னும் பெயருடன் இருப்பாய். அப்போது உனது புருடனாகிய கலியாணன் இந்தவியாதியோடும் உனக்கு மகனாகப்பிறப்பான். அந்தநோய் தீராத காரணத்தால் வல்லாளராசன் உன்னையும் மகனையும் காட்டிற்கு அனுப்பிவைப்பான். அதன் மேல் முற்கலமுனிவரது காற்றுப்பட்டதும் இந்தவியாதி நீங்கும் என்று சொல்லித்தாயை அனுப்பிவைத்தான்.

வல்லாளன் மனஉறுதியுடன் விநாயகக் கடவுளைப் பூசை செய்து வந்தான். இவனது உறுதிப்பாட்டைக்கண்ட கணேசப்பெருமான் தேவகணங்களைப்பார்த்து வல்லாளனை அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டார். அவர்கள் தேவவிமானத்தைக் கொண்டு வந்து வல்லாளனைப் பார்த்துத் தவசிரேட்டரே விநாயகப்பெருமானிடம் உம்மை அழைத்துப் போகவிமானம் கொண்டு வந்தோம் என்றார்கள். வல்லாளன் விமானத்தைச் சாஷ்டாங்கமாக வணங்கினான். யாவர்க்கும் கிடைத்தற்கரிய பேற்றைப்பெற்ற வல்லாளன் விமானத்தில் ஏறி ஆகாயமார்க்க

மாகச்சென்று கணேசமூர்த்தியினுடைய லோகம் சென்று அவரது சரணாரவிந்தங்களில் இரண்டறக்கலந்து பெருவாழ்வைப் பெற்றான். தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தார்கள். இத்தகைய அற்புதங்களைக் கண்ட அந்நகரத்து மக்கள் களிப்புற்று அவ்விடத்திலே விநாயகருக்கு ஓர் ஆலயம் கட்டுவித்துச் சதுர்த்திதோறும் ஆதிசைவப்பிராமணர் களைக் கொண்டு அபிடேக ஆராதனைகளை நிகழ்த்தினார்கள், இந்த விநாயகருக்கு வல்லாள கணேசர் என்னும் நாமம் சூட்டப்பட்டது.

தக்கனும் தாயும் முற்கலமுனிவருடைய காற்றுப்பட்டதும் நோய் நீங்கப்பெற்று விநாயகக்கடவுளுடைய சடாட்சரமந்திரத்தை உச்ச ரித்துச் சுகம் பெற்றார்கள் என்று விசுவாமித்திர முனிவர் வீமராச னுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

## தக்கன் அரசாட்சி செய்த படலம்

இதன் மேல் வீமராசன் விசுவாமித்திரரைப் பணிந்து சுவாமீ தக்கன் முற்கலமுனிவரிடம் அருள்பெற்றபின் என்ன நடந்தது என்ப தைச் சொல்லியருளவேண்டும் என்று பணிந்தான். விசுவாமித்திரர் சொல்லுவார் தக்கன் ஏகாட்சரமந்திரத்தை உபதேசித்த முற்கல முனிவரைப் பணிந்து தானும் தாயும் அவரிடத்தில் விடைபெற்று அவ்விடத்தைவிட்டு நீங்கிக் கவுண்டிய நகரத்தின் சமீபமாகவுள்ள தடாகக்கரையில் திவ்வியபுராதனமான விநாயகஉருவம் இருக்கக்கண்டு அவ்விடத்தை அடைந்து கணேசமூர்த்தியினுடைய திருவடிகளைத் தியானித்துப் பன்னிரண்டு வருடம்வரையில் மந்திரம் செபித்து அதன் மேல் புஷ்பம் திருமஞ்சனம் ஆதியன கொண்டு விநாயகரை இருபத் தொருநாள் பூசித்தான். இதன் இறுதியில் நான்காம் சாமத்தில் அத்தக்கனுடைய சொப்பனத்தில் ஒரு யானையானது தனது துதிக்கை யால் ஒரு மாலையைக் கொண்டுவந்து தனது கழுத்தில் போடவும் தன்னைத்துதிக்கையால் தூக்கி முதுகின்மேல் வைத்துக்கொண்டு ஒரு பட்டணத்துக்குக் கொண்டு செல்வதையும் கண்டு நித்திரைவிட்டு எழுந்து தனது தாயாகிய கமலையிடம் சென்று தான் கண்ட சொப் பனத்தைச் சொன்னான். இதனைக்கேட்ட கமலை கூறுவாள் நீ இப்போது அவனியைக்காக்கத்தக்க அரசனாவாய் என்று கூறினாள். இருவரும் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கவுண்டிய நகரை அரசாட்சிசெய்து வந்த சந்திரசேனமகாராசன் அன்றைய தினம் எந்தக்காரணமும் இன்றித் திடீரென இறந்து விட்டான். அவனது மனைவி சுலபை என்பவள் ஆறாத்துயரில் மூழ்கினாள். பலவாறு புலம்பி அழுதாள். அமைச்சர் பிரதானிகளும் செய்வது

அறியாது துயரப்பட்டார்கள். அச்சமயம் புரோகிதர் வந்து கூறுவார், நீங்கள் யாவரும் உங்களது நலனில் அக்கறை கொண்டு அழுகின்றீர்கள் இறந்த அரசனுடைய இறுதிக்கிரியைகளை நிறைவேற்றுவதில் ஈடுபட வில்லை. ''பிறந்தவர் யாவரும் இறப்பது திண்ணம்'' என்று ஆறுதல் கூறினார். அதன்மேல் சுலபை தன் காதலன் சந்ததியிலுள்ள ஒருவனைக்கொண்டு அரசனது இறுதிக்கிரியைகளை நிறைவேற்றினாள். இதன் பின்னர் சுலபையானவள் வேப்பிலை அருந்தி ஸ்நானஞ்செய்து தர்ப்பணாதிகளையெல்லாம் முடித்துப்பதின்மூன்று நாட்களிலும் செய்ய வேண்டிய கிரியைகளையெல்லாம் புரோகிதர் மூலம் நிறைவாகச்செய் வித்து முடிப்பித்தாள்.

இவற்றின் மேல் அமைச்சர், காரியக்காரர் நகரத்தார் முதலாயி னோர் அனைவரையும் அழைத்துச் சந்திரசேனராசனுக்குப் புத்திரன் இல்லாத காரணத்தால் நாட்டைக்காக்க ஓர் அரசனை நியமிக்க வேண்டும் என்று ஆலோசனை நடாத்தினார்கள். அத்தருணம் முற்கல முனிவர் வந்து சபையில் இருக்கின்றவர்களைப் பார்த்து கூறுவார். பட்டத்துயானையை அலங்கரித்துத், துதிக்கையில் மாலையைக் கொடுத்து அனுப்புங்கள் அது மாலையிட்டு அழைத்துவருபவரை அரசர் ஆக்குங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர் கூறிய பிரகாரம் பட்டத்து யானை அலங்கரிக்கப்பட்டு சுலபைக்கெதிரிலே கொண்டு வரப்பட்டது. அவள் தன் கணவன் மார்பில் அணிந்திருந்த பொற்றாமரை மாலையை எடுத்து வந்து யானையின் தும்பிக்கையில் தந்து இவ்ராச்சியத்தை அரசாளத்தக்க ஓர் அரசனைக்கொண்டு வருவாய் என்று பணிப்புரை பகர்ந்தாள்.

உடனே பட்டத்துயானையானது புறப்பட்டது. பராக்கிரமம்மிக்க அரசனை யானையானது கொண்டுவருமெனச் சனங்கள் எல்லோரும் சந்தோஷம் அடைந்தார்கள். எல்லோரையும் விலக்கிக்கொண்டு கோட்டைவாயிலை நீங்கிய யானையானது வனத்திற்கு வந்து முற்கல முனிவருடைய ஆச்சிரமத்தை அடைந்தது. ஆச்சிரமத்தின் அருகில் சென்று தக்கன் கழுத்தில் பொற்றாமரைமாலையை இட்டது. மாலையை அணிந்த உடனே தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். சேனாதி பதிகள். அமைச்சர்கள் முதலாயினோர் இருபக்கத்திலும் சூழ்ந்து ஆனந்தங் கொண்டாடினார்கள். தக்கன் எழுந்து கணேசமூர்த்தியினு டைய பாதாரவிந்தங்களை வணங்கினான். இதன்மேல் உதயசூரியன் போலப்பட்டத்து யானையின்மேல் ஆரோகணித்து வெண்குடை நிழற்றப் பட்டணத்துள் நுழைந்து சென்றான். அதன் பின்னர் சிங்காசனத்தில் வீற்றிருந்து கொண்டு மந்திரிகள், பிரதானிகள் முதலானவர்களை அழைத்து என்னையாட்கொண்ட முற்கலமுனிவரைச் சகல சிறப்புக் களோடும் அழைத்து வரக்கடவீர்கள் என்று கட்டளையிட்டான்.

மந்திரி, பிரதானிகள் முதலாயினோர் அவ்வாறே சென்று முற்கல முனிவரைத் தேரில் ஏற்றி அழைத்து வந்தார்கள். முனிபுங்கவர் வருதலும் தக்கனனவன் ஆசனத்தைவிட்டு இறங்கிச் சென்று மலர்களால் அர்ச்சித்து அருட்கடலே! தேவரீருடைய கருணைகடாட்சத்தினால் அடியேன் இராச்சியத்தைப் பெற்றேன். எனவே தாங்கள் என்னை ஆசிர்வதிக்க வேண்டும் என்று வேண்டினன். முற்கலமுனிவர் சந்தோஷம் கொண்டு தன் இருகரங்களையும் அவன்முடிமீது வைத்துச் சகல ஐஸ்வரியங்களோடும் வாழ்ந்திருக்கக்கடவாய் என்று ஆசீர்வதித்தார். அதன்மேல் தக்கராசனுக்குக் கூறுவார். அருணோதயத்துக்கு ஐந்து நாழிகைக்கு முன் நித்திரைவிட்டு எழுந்துவிடவேண்டும். அமைதியான இடத்திற்குச் சென்று சரீரசுத்தி செய்து திருநீற்றை அணியவேண்டும் குருவையும் வழிபடுகடவுளையும் மனதில் தியானிக்கவேண்டும். பூமாதேவியை நோக்கித் தாயே எனது கால்படுகின்ற பிழையை மன்னிப்பாயாக என இரந்து கேட்க வேண்டும். விநாயகக் கடவுளைத்தியானித்துப் பூசை, தோத்திரம் ஆதியன செய்து உதய வந்தனம் செலுத்தவேண்டும். ஏனைய கடவுளர்க்கும் சூரியபகவானுக்கும் காலைவந்தனம் கூறல் வேண்டும்.

திருவள்ளுவப் பெருந்தகையினால் இயம்பப்பட்ட அறங்களையெல்லாம் தக்கனுக்கு விரிவாக எடுத்துக்கூறினர். அரசாட்சி நடாத்தும் முறைகளையும், நாட்டைக்காக்கும் முறைகளையும் பொருளீட்டும் திறனையும் முனிபுங்கவர் முறையாக எடுத்துரைத்தார் இதன் மேல் தக்கராசனனவன் தாயாகிய கமலையைப் பணிந்து அவளது ஆசியையும் பெற்றான். பெரியோர்கள் ஆசியுடன் தக்கனனவன் எல்லா உயிர்களையும் பாதுகாத்து அரசு செய்துவந்தான். இந்தச் சமாச்சாரங்களை எல்லாம் கேள்வியுற்ற வல்லவராசன் அங்குவந்து தன்மகனையும் மனைவியையும் கண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு அளவளாவியிருந்தான். இதன்பின்பு கணேசமூர்த்தியினுடைய அருட்பிரகாரம் வீமசேனன்என்னும் அரசனது குமாரத்தியைத்தக்கனுக்கு விவாகம் செய்து வைத்தார்கள். அவனுக்குப் பிரகற்பானு பிறந்தான். அவனுக்குச் கட்சுதன் பிறந்தான். அவனுக்கு வபுத்திரன் பிறந்தான்' அவனுக்குச் சுபாலன் பிறந்தான், அவனுக்குச் ஏகாதரன் பிறந்தான், அவனுக்குச் சித்திரசேனன் பிறந்தான், அவனுக்கு வீமனாகிய நீபிறந்தாய். தக்கன் முதலாக உன் தந்தை வரையிலிருந்த யாவரும் விநாயகக்கடவுளைப் பூசைசெய்துவந்தார்கள். எனவே நீயும் விநாயகக்கடவுளைப்பூசை செய்துவந்தால் எண்ணிய கருமங்கள் யாவும் நிறைவேறும் என்று கூறிமுடித்தார்.

## வீமனுபதேசம் பெற்ற படலம்

விநாயகமூர்த்தியைப்பூசை செய்ய வேண்டிய விதியையும் கேட்பாயாக என்று விசுவாமித்திரர் சொல்லுவார். பாவங்கள் அனைத்தையும் விலக்கிக் கணேசமூர்த்தியினுடைய ஏகாக்ஷரமந்திரத்தை உபதேசித்து அதை அநுட்டிக்கின்ற முறையையும் சொல்லி விநாயகர் ஆலயத்திலிருந்து தினந்தோறும் செபஞ் செய்துவருவாய் என்று விடைகொடுத்து அனுப்பினர். முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு வீமராசன் மனைவியோடும் அவ்வனத்தைப்பிரிந்து நகரத்தை அடைந்தான். மீளவும் அரசன் வருகின்றதைக்கண்ட நகரமக்கள் மனங்களிப்புற்றுச் சகலவரிசைகளோடும் பட்டத்து யானையின்மேல் ஆரோகணித்து மனைவியைச் சிவிகையில் இருக்கச்செய்து சகல வாத்தியங்களோடும் விநாயகக்கடவுளைத்தியானித்துக் கொண்டு அரண்மனை சென்றான்.

அரண்மனை சென்ற வீமராசன் முனிவரால் உபதேசிக்கப்பட்ட ஏகாக்ஷரமந்திரத்தைத் தினமும் இடைவிடாது ,செபித்து வருகின்ற நாளில் கணேசப்பெருமான் கருணைகூர்ந்து அவன் எதிரில் பிரசன்னமாயினர். அப்போது வீமராசன் அஷ்டாங்கமாகப்பணிந்து சுவாமீ தேவரீரிடம் மாறாத பக்தியும், சிறந்தபுத்திரனும் வேண்டும் என்று வேண்டினான். விநாயகப்பெருமான் வீமராசனைப்பார்த்து நீ கேட்டபடியே தந்தோம் என்று விடைகொடுத்துத் தமது திருவுருவைக் கரந்தருளினர். இப்பால் வீமராசன் சிவபெருமானையும் விநாயகமூர்த்தியையும் தவறாது பூசனைபுரிந்து வரும்நாளில் அவனது மனைவி சாருகாசினி வயிற்றிலே ஒரு புத்திரன் உற்பவித்தான். சகல சடங்குகளும் நிறைவேற்றப்பட்டன. பிள்ளைப்பருவம் கடந்தபின் உருக்குமாங்கதனைக் கபில முனிவரது ஆச்சிரமத்தில் கொண்டுசென்று சேர்த்தனர். முனிவருடைய திருவடிகளிற் பக்திசெய்து சகல வித்தைகளையும் உருக்குமாங்கதன் கற்று வந்தான். இதன்மேல் விநாயகக்கடவுளது ஏகாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்று அதை அநுட்டிக்கும் முறையையும் தந்தையிடமிருந்து அறிந்த உருக்குமாங்கதன் அதனைச்செபஞ் செய்து கணேசமூர்த்தியிடம் சதாகாலமும் அன்பு செலுத்தி ஆராதித்துக் கொண்டிருந்தான்.

## உருக்குமாங்கதன் பட்டாபிஷேகப்படலம்

இதன்மேல் வீமராசன் தனது அரசுரிமையை உருக்குமாங்கனுக்குக் கொடுத்துப்பட்டாபிஷேகம் செய்ய எண்ணங்கொண்டான். கணித சாஸ்திர விற்பன்னர்களை அழைத்துப்பட்டாபிஷேகம் செய்வதற்கு ஏற்ற நாளை ஆராய்ந்து கூறுமாறு பணித்தான். அவ்வாறு ஆராய்ந்த

சோதிடர்கள் ஒருசுபதினத்தைக் கூறினர். அதன்மேல் அமைச்சர், பிரதானிகளை அழைத்து மகுடாபிஷேகத்திற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்யுமாறு பணித்தான். பின்பு தனது குலகுருவை அடைந்து இருகரங்களும் கூப்பி சுவாமீ குமாரனுக்குப்பட்டாபிஷேகம் செய்ய வேண்டும், அதற்குவேண்டிய பொருட்களை அடியேற்கு உணர்த்தியருள வேண்டும் என விண்ணப்பித்தான். குருவாகிய ஆசிரியர் சகலபொருட்களையும் ஒரு நறுக்கோலையில் பொறித்துக்கொடுத்தார். மேலும் அவ்வாசிரியர் கூறுவார், மகுடாபிஷேகம்செய்யத்தக்க தானம் முப்பத்தாறு தூண்களோடு பூஜாமண்டபமும் உயர்ந்திருக்கின்ற இரண்டு வேதிகைகளையும், இரண்டு பீடங்களையும், ஏனைய வேதிகைகளையும் விரைவில் நிறைவேற்ற வேண்டும் எனப்பணித்தார்.

ஆசிரியர் கூறிய பிரகாரம் வீமராசன் கம்மியர்களை அழைத்து அவற்றைச் செய்யும்முறைகளையும் சொல்லி அவற்றைச் செய்யுமாறு கட்டளையிட்டான். கம்மியர்கள் அரசன் கூறியபிரகாரம் பலவித இரத்தினங்கள் பவளங்கள் முதலாயினவற்றைக் கொண்டு பலவித மண்டபங்கள், வேதிகைகள் முதலாயினவற்றையெல்லாம் யாவரும் கண்டுகளிக்கும்படி நிறைவேற்றினார்கள். அதன்மேல் அரசனிடம் தெரிவித்தார்கள். வீமராசன் அவை அனைத்தையும் பார்த்து மகிழ்ச்சிகொண்டு அவர்களுக்கு வெகுமதியும் கொடுத்தான். பின்னர் ஆசிரியர் பூஜாமண்டபத்தை அடைந்து அதில்பதின் மூன்று வீதிகள் உண்டாக்கி நூற்று அறுபத்தொன்பது வீடுகள் அமைத்துச் சிவபிரானும் உமாதேவியாரும் எழுந்தருளியிருக்கத்தக்க ஓர் இரத்தினவேதிகையை அமைத்து அதனைச்சூழவுள்ள பதினாறுவீடுகளிலும் சோடசதாதுக்களுக்கும் வேதிகைகள் நிறுவி அதை அடுத்துள்ள இருபத்து நான்கு வீடுகளையும் யாவரும்உலாவும்படியான வீதியாகவிடுத்து நாற்புறத்திலும் நடுவேயிருக்கின்ற மூன்று வீடுகளையும் வாயில்களாக்கி, நூற்றெட்டு வீடுகளில் சொல்லப்பட்ட அஷ்டாதசருத்திரர்களுக்கும் தனித்தனி வேதிகைகளை அமைத்து வீதி முற்றிலும் நவகுண்டங்களையும் நிறுவினார்.

அமைச்சர்கள் பிரதானிகள் தங்கள் தங்கள் பணிகளைச் செய்தனர். பலதேசத்து அரசர்களுக்கும் திருமுகவோலைகள் அனுப்பப்பட்டன. வள்ளுவனானவன் யானைமீதேறி முரசறைந்தான். இச்செய்தியை அறிந்ததும் சகலதேசத்து இராசாக்களும் தங்கள் வரிசைகளுடன் வந்துசேர்ந்தனர். பன்னிரண்டுவகையான மலர்களும் சமித்துவகைகளும் சுத்திசெய்து கொண்டுவரப்பட்டன. எல்லாத்தெய்வங்களுக்கும் பூசை வழிபாடுகள் நிகழ்த்தப்பட்டன. முதலாசிரியர் குண்டங்களில் அக்கினியை எழுப்பி ஓமாதிகளை நடாத்தி ஆகுதி கொடுத்தார். இரண்ணியவர்ணம், கூர்மாண்டம் முதலியமந்திரங்களைக்கூறி எழுந்து உருக்குமாங்கதனைக் கீழ்த்திசைமுகமாகப் பீடத்திலிருத்தினார்கள் வேதவோசையும் மங்கல ஓசையும் முழங்கும்படியாகக் கும்பங்களை எடுத்து

மகுடாபிஷேகஞ் செய்தார்கள். கணேசப்பெருமான் உமாபரமேஸ்வரன் மும்மூர்த்திகள் அனைவரும் ஆசீர்வதித்தார்கள். இராஜகுமாரனுக்குச் சிலர் சந்திரவட்டக்குடை பிடித்தார்கள். அபிஷேக நிகழ்வு நிறைவுற்றதும் உருக்குமாங்கதன் ஈரம்புலர்த்திப் புதிய பட்டாடைகளை மாற்றிக்கொண்டு மாலைகள்புனைந்து சிங்காசனத்தில் வந்து ஆரோகணித்தான்.

பிறதேயத்து அரசர்கள் அனைவரும் திறைகொடுத்து வணங்கினார்கள். மேலும்பலர் பொன் ஆபரணங்களைக் கையுறையாகத் தந்தார்கள். குலகுருவாகிய ஆசிரியர் உருக்குமாங்கதனைப் பூசைமண்டபத்துக்கு அழைத்துச்சென்றார். சாந்திகளையும், புஷ்பாஞ்சலிகளையுஞ் செய்வித்தார். ஆசீர்வசனங்களையும் சொல்லி நிறைவுபடுத்தி யாவருக்கும் விடைகொடுத்து அனுப்பினார். முனிவர்கள் அந்தணர்கள் வறியவர்கள் அனைவருக்கும் தானங்கள் வழங்கப்பட்டன. உருக்குமாங்கதராஜன் உலகம் முழுவதும் மாதம் மும்மாரி பொழியத் தனது ஆட்சியை நடத்துவாராயினான். தந்தையும் தாயும் சதாகாலமும் கணேசமூர்த்தியை வந்தித்துவந்தார்கள்.

## உருக்குமாங்கதன் சாபம்பெற்ற படலம்

மகுடாபிஷேகம் செய்யப்பட்ட உருக்குமாங்கதராஜன் கணேசமூர்த்தியிடத்தில் பேரன்பு உடையவனாக விளங்கினான். அநுதினமும் ஏகாட்சரமந்திர செபஞ்செய்து எல்லாத் திக்குகளிலும் தன்னாணையைச் செலுத்திவந்தான். மந்திரிமார், புரோகிதர், தபோதனர்கள் இருமருங்கிலும் சூழ்ந்து வீற்றிருக்கும்படியாகவும், பிற அரசர்கள் திறைகளைக் கொண்டுவந்து கொடுக்கவும், அரசபரிபாலனஞ்செய்து வரும் நாளில் நாட்டுமக்கள் வந்து பணிந்து காட்டிலுள்ள மிருகங்கள் நாட்டிற்குள் வந்து அழிவுசெய்கின்றன என்று முறையிட்டார்கள். இதனைக்கேட்ட உருக்குமாங்கதராஜன் அவற்றை அழிப்பதற்காக வேட்டைக்குப் புறப்பட்டான். காட்டிலே யானை, சிங்கம், கரடி, புலி முதலான மிருகங்களை அழித்துக்கொண்டு செல்லும்போது கவிமகா முனிவர் பத்தினியாகிய முகுந்தையைக்கண்டு வணங்கினான். தண்ணீர் தருமாறு அவளைக் கேட்டான்.

முகுந்தையானவள் தன்னை மணஞ்செய்யுமாறு வேண்டினாள். அதற்கு உருக்குமாங்கதராஜன் கூறுவான் தாங்களோ முனிவர்பத்தினி. இவ்வாறு கேட்பது அநீதி. எனக்குத் தாய்க்குச் சமானமாவீர்கள். என்று மேலும் எத்தனையோ அறிவுரைகளைக் கூறினான். இவற்றைச் செவிசாய்க்காத முகுந்தையானவள் கோபங்கொண்டு அரசனுக்குக் குட்டரோகம் உண்டாகவேண்டுமென்று சாபம் இட்டாள். இதனால்

துயரம் அடைந்த உருக்குமாங்கதன் மேலும் சொல்லுவான்: கர்த்தரே! யான் எவ்விதகுற்றமும் செய்திலேன். அப்படியிருக்கத்தக்கதாக இவ் விதம் பொல்லாத தீங்கு வந்து என்னைச் சூழ்ந்துகொண்டது. எவ் வித குற்றமும்செய்யாத அடியேனுக்கு இவ்வித வியாதி உண்டாக லாமா? என்றுகூறி நகரத்திற்குச் செல்லாது ஓர் ஆலமர நிழலிலே இருந்தான். அரசனுடன் வந்த பரிசனங்கள் அரசனைக் காணாது மதி மயங்கி மீளவும் நகரத்துக்குச் சென்றார்கள். உருக்குமாங்கதராஜனைப் பசி, தாகம், இளைப்பு ஆகிய மூன்றும் நெருங்கி வருந்தச்செய்தன.

## நாரதர் சாபநிவாரணம் உரைத்த படலம்

இவ்வாறு அரசனானவன் உணவு உறக்கம் ஒன்றும் இல்லாது துன்பம் அடைந்து இருக்கும் சமயத்தில் சூரியன் மேற்குத் திசையில் மறைந்தருளினன். உருக்குமாங்கதன் கணேசப்பெருமானுடைய திருவடி களையே பூசைசெய்துகொண்டு இருக்கும்போது நாரதமுனிவரானவர் ஆகாயமார்க்கமாகச் செல்வதைக் கண்டான். தெய்வமுனிவரே! தங்களது திருவடிகளுக்கு அடியேன் அடைக்கலம். யான் வீமராசனு டைய புத்திரன் உருக்குமாங்கதராஜன். அடியேனுக்கு இத்துன்பத்தை நீக்கும் உபாயத்தை இரட்க்ஷிக்க வேண்டும். சுவாமி! இக்கொடிய நோயைத்தாங்க முடியாமையினால் உயிரையும்விடத் தீர்மானித்தேன். என்றான். அப்போது நாரதமுனிவர் கூறுவார். விதர்ப்பதேசததில் ஓர் விநாயகர் ஆலயம் இருக்கிறது. அங்குள்ள தீர்த்தமும் விசேடம் நிறைந்தது அந்தஆலயத்தின் பெருமையைத், தேவர்களும் அறிவார்கள் ஒரு சூத்திரன் குஷ்டரோகத்தினால் துன்புற்றான். அந்தத் தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து எழுந்ததும் நோய் நீங்கப்பெற்று விநாயகமூர்த்தி யினுடைய சாரூபத்தை அடைந்தான். நீயும் அவ்விடம் சென்று அந்தக் குளத்திலே ஸ்நானஞ்செய்து விநாயகமூர்த்தியைப் பூசைசெய்து தானதருமங்களைச் செய்வாயானால் இந்தக் குஷ்டரோகம் தீரும். இல் லாவிடில் எவ்வகையிலும் தீராது என்று கூறினார்.

## இந்திரன் சாபம்பெற்ற படலம்

இவ்வாறு நாரதமுனிவர் சொல்லியவற்றை உருக்குமாங்கதன் கேட்டு மீளவும் பணிந்து எழுந்து முனிபுங்கவரே கதம்பவனத்தில் இருக்கின்ற விநாயகமூர்த்தியை யாவர் பிரதிட்டை செய்து பூசித்தவர்கள் என்று வினவினான். நாரதமுனிவர் கூறுவார் அரசனே! முன்னொருகாலத்தில் தேவேந்திரனானவன் தேவர்கள் தொழும்படியாக அரசு செய்து வருகின்ற நாளில் நாம் அங்கு சென்றோம். அப்போ அவன் பல

உபசாரங்கள் செய்து சுவாமீ! புவனங்கள் அனைத்திலும் சஞ்சரிக்கின்ற தாங்கள் ஏதாவது அதிசயம் உண்டாயின் கூறவேண்டும் என்று வேண்டினான். அதற்கு யான் பூவுலகத்தில் கௌதமர் பத்தினியாகிய அகலிகையைக் கண்டேன். அவளுக்கு ஒப்பான அழகுள்ளவர்கள் இவ்வுலகத்தில் எங்கும் இல்லையென்று கூறினேன். இதனைக் கேட்டதும் இந்திரனுக்கு அந்த அகலிகைமேல் விருப்பம் உண்டானது. யாம் அவ்விடத்தைவிட்டு அகன்றுவிட்டோம்.

அகலிகையின்மேல் விருப்பம்கொண்ட இந்திரனானவன் அகலிகை கணவராகிய கௌதமர்போல் வேடந்தாங்கி அங்கு சென்றான். அதிகாலையில் கௌதமர் ஸ்நானஞ் செய்யச் செல்கின்ற சமயம் அகலிகை இடத்திற்கு வந்து மஞ்சத்தின் மீது அமர்ந்து பல இனிய வார்த்தைகளைக் கூறி அவளுடன் உறவு கொண்டான் அகலிகையும் தனது கணவனே என நினைத்து அதற்கு இசைந்தாள். இந்திரனுடைய வார்த்தைகளால் சந்தேகங்கொண்ட அகலிகை நீயார்? எனக் கேட்டாள். அதன்மேல் தேவேந்திரன் என்பதை அறிந்ததும் கோபங் கொண்டு இதற்கு யாது செய்யலாம் என்று சிந்தித்தாள். இச்சமயம் கௌதமமுனிவர் தமது நியமங்களை முடித்துக்கொண்டு வந்தார். வாசலில் நின்று மனைவியைத் தண்ணீர் கொண்டுவரும்படி அழைத்தார். அகலிகையானவள் நடுக்கத்துடன் கொண்டுவருதலும் முனிவர் கோபத்துடன் நடந்தது யாது? எனக்கூறுமாறு பணித்தார். அகலிகை தேவேந்திரன்செய்த சூழ்ச்சியைக்கூறினாள். இவற்றைக்கேட்ட இந்திரன் தனது தவற்றை நினைத்து வருந்தினான். கௌதமர் காண்பாராகில் என்னை நீறாக்கிவிடுவார் என எண்ணங்கொண்டு பூனை உருவத்தில் வெளிச்சென்றான்.

கௌதமர் இந்திரன் பூனை வடிவு கொண்டு செல்வதை அறிந்தார். அவருக்கும் கோபம் மேலிட்டது, அடா! தூர்த்தனே! நீ தேவர் உலகைக்காக்கும் அரசனாய் இருக்கின்றாய் அதனால் நீறாக்காது மன்னித்து விடுகிறேன். நீ ஒரு பெண்யோனியை விரும்பி இவ்வாறு நடந்தாய். ஆகவே உனது உடல் முழுவதும் பெண்யோனியாகக் கடவது என்று சாபம் இட்டார். முனிவரது சாபத்தின் காரணமாக இந்திரன் உடலில் பெண்யோனிகள் ஏற்படுதலும் அவன் செய்வது அறியாது அவ்விடத்தினின்றும் நீங்கி ஒரு மடுவிற்குள் புகுந்து அதில் இருக்கின்ற தாமரை நாளத்தில் ஒளித்துக்கொண்டான் உருக்குமாங்கதராஜனே! தேவேந்திரன் சகலசம்பத்துக்களும் இருந்தும் எழிலார்ந்த இந்திராணியானவள் இருந்தும் ஒரு பெண்ணின்மேல் விருப்பம்கொண்ட காரணத்தால் இத்தகைய கதி அவனுக்கு ஏற்பட்டது. கணேசமூர்த்தியினுடைய பாதாரவிந்தங்களைத் தியானிக்கின்ற இன்பமே மேலான இன்பம் என்று சொல்லி முடித்தார்.

## அகலிகை சாப நிவாரணப் படலம்

மனத்தை ஒரு வழிப்படுத்தி இருவினை கடிந்து ஐங்கரகரக்கடவுளது பாதாரவிந்தங்களைப் பரவும் அந்தணர்களே! மேலும் கௌதமர் கூறியதைக் கூறுகின்றேன், என்று விசுவாமித்திரர் புகலுவார். அகலிகையைப் பார்த்துக் கௌதமர் சொல்லுவார். மதிமயக்கங்கொண்டு இவ்வாறு செய்தாய். நாம் இல்லை என்று அறிந்தபின்னும் துரோகம் செய்தபடியால் கருங்கல்லாகக் கிடக்கக்கடவாய் என்று சபித்தார். இதனால் பெருந்துன்பம் அடைந்த அகலிகையானவள் தனக்கு விமோசனம் அளிக்குமாறு இரந்து வேண்டுதலும், கௌதமர் சாபநிவாரணம் கூறுவார். திருக்கைலாயமலையின்கண் விளரி இராகத்தைப்பாடி அருள் பெற்றவன் இராவணன். இலங்கையை ஆண்ட இராவணனானவன் தேவர்களுக்குத் துன்பம் செய்தபோது இந்திரன் முதலாம் தேவர்கள் அனைவரும் திருமாலிடம் சென்று முறையிட்டனர். அதற்குத் திருமால் கூறுவார். நம்முடைய வடிவத்தில் நான்கு கூறுகளாகத் தசரதச்சக்கரவர்த்தியின் புதல்வர்களாக அவதரிப்போம். நீவிர் மலைகளிலும் வனங்களிலும் குரங்குகளாகப் பிறக்கக் கடவீர்கள் என்று பணித்தார்.

தசரதமகாராஜன் புத்திரப்பேறு இல்லாமையால் புத்திரகாமேட்டி யாகஞ் செய்விப்பான். அந்த யாகாக்கினியினின்றும் தெய்வபுருடன் தோன்றி அவிப்பாகத்தைக்கொடுப்பான். அரசன் அந்த அவிப்பாகத்தை நான்கு கூறாக்கித் தனது மனைவியர்களுக்கு வழங்குவான். அவர்கள் அதனை உண்டு கருப்பந்தரிக்கப் பெறுவார்கள். அதனால் இராமன், இலட்சுமணன். பரதன், சத்துருக்கன் என்னும் நான்கு புதல்வர்களைப் பெறுவார்கள். தசரதமகாராஜன் இவர்களுக்குச் சாதகருமம் முதலாய சடங்குகளை நிறைவேற்றி வைப்பான்; வேதம் முதலாய சாஸ்திரங்களையும் வில்வித்தை முதலியவற்றையும் பயிற்றுவிப்பான்.

விசுவாமித்திரமுனிவர் ஓர் தினம் தசரதமகாராஜனுடைய சபைக்கு வருவார். அரசன் முனிவரை ஆசனத்தில் இருக்கிச் சகல உபசாரங்களையும் செய்ததும் முனிவர் தாம் ஒரு யாகம் செய்யப்போவதாகவும் அதற்கு இராக்ஷதர் துன்பஞ் செய்யாது காப்பாற்றுவதற்கு இராமனை அனுப்புமாறும் கேட்பார். தசரதன் சொல்லுவான் இராட்சதர்களோ கொடியவர்கள். இராமனோ சிறுவன் இவனால் எப்படி வெல்லமுடியும். இதனைக் கேட்ட இராமன் சொல்லுவான் தந்தையே சர்வானுக்கிரக மூர்த்தியாகிய முனிபுங்கவருடைய அருளினால் அரக்கர் மாயங்களை எல்லாம் வெல்லமுடியும் என்றான். அதன்மேல் விசுவாமித்திரரது உபதேசப்படி விநாயகரை இராமன் பூசித்தான். அவனது வழிபாட்டிற்கு இரங்கிய கணேசமூர்த்தியானவர் காட்சிகொடுத்து இராமனே நீ வேண்டியதைக்கேள் என்றார். இராமன் கூறுவான் விசுவாமித்திர

செய்யும் யாகத்தில் இராட்சதர்கள் இடையூறு செய்யுங்கால் அவற்றை நீங்குவதற்கு அருள் தரவேண்டும் எனவேண்டினன். கணேசப்பெருமான் அவ்வாறே அநுக்கிரகஞ் செய்வதாகக் கூறித், திருவுளுவைக் கரந்தருளினர். ஐங்கரக்கடவுளுக்கு அடியவனாகிய இராமபிரான் விசுவாமித்திரருடன் சென்று அவரது யாகத்திற்கு இடையூறுசெய்த இராட்சதர்களையெல்லாம் வென்று அவ்விடத்திற்கு வரும்போது அவனது பாதத்தூளிபட்டதும் நினது சாபம் நிவர்த்தியாகும். அதன்மேல் நீ பழையவடிவத்துடன் இவ்விடம் வந்து என்னுடன் வாழ்வாய் என்று சாபத்தீர்வு கூறினன். இவை அனைத்தையும் கேட்ட அகலிகையானவள் மனக்கிலேசம் நீங்கிச் சிலையுருவானள்.

## கௌதமர் உபதேசித்த படலம்

தேவேந்திரன் இல்லாததினுல் தேவர்கள் பல விடங்களிலும்தேடிக் காணுது துயரங்கொண்டு பிரகஸ்பதி தேவரைக்கண்டு நமஸ்காரஞ் செய்து எங்கள் அரசன் எங்குள்ளான் எனக்கேட்டனர். இதன்மேல் தேவேந்திரன் செய்த தவறு காரணமாக இவ்வாறு நேர்ந்துள்ளது என்று தீர்மானித்தனர். சாபம் கொடுத்தவரே விமோசனம் தர வேண்டும் என்று தேவர்கள் தீர்மானித்துக் கௌதமமுனிவரது ஆச்சிரமம் சென்றனர். அங்கு அவரைவழிபட்டுச் சுவாமீ தேவரீர் பெருமையை அளவிட்டுக்கூறமுடியுமா? அளவற்ற வல்லபங்களைத் தவமுயற்சியினுல் வெவ்வேறு முனிவர்கள் செய்திருக்கிறர்கள். முனிபுங்கவர்களாகிய உங்களைத் தரிசித்தாலும் சகலதீவினைகளும் நீங்கும். இவ்வாறு பல வசனங்களைக் கூறித்துதித்தார்கள். கௌதமமுனிவர் தேவர்களைப் பார்த்து நீங்கள் இங்கு வரக்காரணம் யாது? எனவினவினர். இதன் மேல் தேவர்கள் ஆனந்தங்கொண்டு சுவாமீ! தேவேந்திரனையமனுலகிற்கு அனுப்பாதுவிட்டது எங்கள் பொருட்டன்றோ அடியேங்கள் அரசனில்லாது துன்புறுகிறோம். மீண்டும் அரசாள்வதற்காகச் சாபவிமோசனம் தந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

இதன்மேல் கௌதமர் கூறுவார் நீங்கள் எல்லீரும் பாதகன்மீது தயவு வைத்தீர்கள். தெய்வமந்திரியே! முத்தொழில்களையும் முத்தேவராய் இருந்து நடாத்துகின்ற விநாயகமூர்த்தியின் சடாட்சாமந்திரத்தை உமது வல்வினை நீங்குவதற்காக உபதேசிக்கின்றேம். நீர் அந்தமனுவைத் தேவேந்திரனுக்கு உபதேசம் செய்தால் அவன்சரீரத்தில் இருக்கின்ற குறிகள் மாறிக் கண்கள் ஆகும். பின்னும் அவன் செய்திருக்கின்ற பாதகங்கள் அனைத்தும் நீங்கும் என்று கூறினர். அதன்பின்பு கௌதமர் பிரகஸ்பதிதேவருக்குச், சடாட்சரமந்திரத்தை உபதேசித்தார். பின்னர் அதனை அநுட்டிக்கும் முறையையும் அருளிச்செய்தார். பிரகஸ்பதி தேவரும் ஏனைய தேவர்களும் ஆனந்தங்கொண்டு முனிவரை நமஸ்காரஞ்செய்து மீண்டனர்.

## இந்திரன் உபதேசம் பெற்ற படலம்

மேலும் முனிபுங்கவர் கூறுவார் உருக்குமாங்கதனே! தம்மை விழைந்தாரைப்பாதுகாக்கவல்ல தேவேந்திரனனவன் செய்தபாவங்கள் ஏழுவகைப்பிறவியிலும் தீராது பிரகஸ்பதிதேவரும் ஏனையதேவர்களும் கௌதமமுனிவரது அருளைப்பெற்ற காரணத்தாலேயே இதற்கு நிவாரணம் கிடைத்தது. இதன்மேல் முனிவர் கூறுவார். முன்பு யான்கூறிய பிரகாரம் தேவர்கள் இந்திரன் ஒளித்திருக்கின்ற இடத்தைக் காணும் பொருட்டு மகாமேருமலைச்சாரலில் உள்ள மடுக்கரையில்சென்று அழைக்கின்றார்கள். தைத்திரியகுல காவலரே! மருதநிலத் தலைவரே! வெளியில் வாரும். உமக்கு ஏற்பட்டதுன்பங்களை நீக்குவதற்காகத் தவசிரேட்டராகியநாரதமுனிவர் வந்திருக்கிறார். அவரிடம் நீர்செய்த குற்றதைக் கூறுவீராயின் அது, தீரத்தக்க மார்க்கத்தை அறியத்தருவார் உமது மனக்கவலையைவிட்டு வெளியில்வருவீர்என்று அழைத்தார்கள். இவை அனைத்தையும்கேட்ட தேவேந்திரன் தாமரை நாளத்திலிருந்து வெளிப்பட்டான். தேவர்கள் அவனது தேகத்தில் இருக்கின்ற பெண்குறிகளைக் கண்டார்கள். அரசன் தனது குற்றங்களை அவர்களிடம் வெளியிட்டான். பின்னர் பிரகஸ்பதிதேவரால் விநாயகருடைய சடாட்சர மந்திரம் முறையாக உபதேசிக்கப்பட்டது. சடாட்சர மந்திரம் செவியில் ஏறியதும் கௌதமரின் சாபத்தினால் ஏற்பட்ட பெண்குறிகள் யாவும் கண்களாக மாறின. சந்திரனைக்கண்ட செவ்வாம்பல் மலரைப் போல இந்திரன் முகமலர்ந்து ஆனந்தமாயினான். நாரதமுனிவரும் தேவர்களும் ஆசிர்வசனங்களைச் சொல்லி வாழ்த்தின.

இதன்மேல் தேவர்கள் அனைவரும், இந்திரனைத் தீர்க்கதண்டஞ் செய்து துதித்தார்கள். பின்பு தேவேந்திரனனவன் வெளியில் வந்து முனிவர்களைப் பணிந்து வணங்கினான். மித்திரர்களே! மகத்துவம் மிக்க முனிவர் இட்டசாபம் நீங்கும் வண்ணம் நீங்கள் செய்த உதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்ய இருக்கின்றது. இப்போ எனக்கு ஆயிரம் கண்களைத் தந்தீர்கள். இனிமேல் விநாயகமூர்த்தியை அவரது க்ஷேத்திரத்தில் இருந்து வழிபாடுசெய்து சடாட்சரமந்திரத்தை அநுட்டித்து அநுக்கிரகம் பெறுவேன். அதன்மேல் சுவர்க்கலோகஞ்சென்று அரசாட்சி செய்வேன். யாவரும் தேவலோகஞ் சென்று வாசஞ் செய்யுங்கள். கணேசமூர்த்தியை அர்ச்சிப்பதற்குக் கற்பக விருட்சம் முதலாம் திரவியங்களைக் கொண்டுவந்து தாருங்கள் எனக்கூறி எல்லோரையும் விடைகொடுத்து அனுப்பினான்.

## இந்திரன் உபாசித்த படலம்

இப்பால் தேவேந்திரராஜன் கதம்பவனத்துக்குச்சென்று அங்கே ஒரு தடாகக்கரையில் இருந்து தேவர்களால் கொண்டு வரப்பட்ட ஆகாய கங்கையைக்கலந்து அதன் கரைமீது பளிங்குக்கற்களால் ஓர் ஆலயம் கட்டப்பட்டது. அவ்வாலயத்திலே விநாயகமூர்த்தியைப் பிரதிட்டைசெய்து அங்கே ஐம்புலன்களையும் அடக்கிப்பக்தியோடு கணேசமூர்த்தியைத் தியானம் செய்தான். அதன்மேல் சடாட்சர மந்திரத்தைச் செபித்துச் சுத்தபவித்திரனாகும்படி வேண்டினான். இவ்வாறு ஆகாரம் இல்லாது ஆயிரம்வருடம் தவஞ்செய்தான். இத்தவத்திற்கு இரங்கிய விநாயகப்பெருமான் வெள்ளித்திருமேனியும் தண்டைகள், சதங்கைகள் அணிந்த இருபாதங்களும் முப்புரிநூல் முத்துமாலை ஆகியன அணிந்த திருமார்பும் உடையவராய் சிங்கவாகனத்தில் காட்சி கொடுத்தார்.

கணேசப்பெருமானின் அலங்காரத்திருவுருவைக், கண்ட தேவேந்திரன் துண்ணென எழுந்து சரீரம்புளகாங்கிதங் கொள்ள இருகைகளையும்கூப்பி வணங்கினான். பற்பலதோத்திரங்களைச் செய்து கண்ணீர் சொரிந்து துதித்தான். விநாயகப்பெருமான் கருணையோடு பார்த்துச் சுராதிபனே! உனக்கு வேண்டியது யாது? எனக் கேட்டார். தேவேந்திரனவன் ஆனந்தங்கொண்டு விளம்புவான். தேவரீரிடத்தில் மாறாத பக்தியும் சுவர்க்கலோக வாழ்வை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அருள் செய்யவேண்டும். இங்கே அமைக்கப்பட்ட ஆலயமானது சிந்தாமணி விநாயகர் ஆலயமென வழங்கவேண்டும் எனவும் வேண்டிக்கொண்டான். கணேசப்பெருமான் அவ்வாறே அநுக்கிரகித்துத் தமது திருவுருவைக்கரந்தருளினார். தேவராஜன் மீளவும் சிந்தாமணி விநாயகரை வழிபட்டுச் சடாட்சரசெபஞ்செய்து அங்கிருந்து விடைபெற்றுச் சுவர்க்கலோகம் அடைந்து ஓர் இடையூறும் இல்லாது அரசாட்சி நடாத்திவந்தான். நீயும் விநாயகமூர்த்தியைச் சரணடைந்து பூசித்தால் இப்பிணி நீங்கும். அன்றியும் பலவரங்களையும் பெறுவாய் என்று நாரதமுனிவர் உருக்குமாங்கதராஜனிடம் சொல்லியருளினார்.

## உருக்குமாங்கதன் முத்தியடைந்த படலம்

சவுனகாதி முனிவர்களே! தேவேந்திரன் விநாயகமூர்த்தியைப் பூசித்து வரங்களைப்பெற்ற சரித்திரம்சொன்னோம். இனிமேல் உருக்குமாங்கதராஜன் அநுட்டித்த திறத்தையும் கூறுவோம் அறிவீர்களாக. இங்ஙனம் நாரதமுனிவர் சொல்லிவிட்டு அங்கிருந்து நீங்குவதற்கு முன்னமே உருக்குமாங்கதராஜனைக்காணமல் நகரஞ்சென்ற

பரிசனங்கள் மலைகாடு முதலாய இடங்கள்தோறும் தேடிக் காணாத வர்களாகி, நாரதமுனிவரும் தங்கள் அரசனும் சம்பாஷித்துக் கொண்டிருந்த இடத்திற்கு வந்தார்கள். அங்கே உருக்குமாங்கத ராஜன் குஷ்டநோயுடன் இருக்கக்கண்டு வேட்டைக்குச்சென்ற உமக்கு இந்தநோய் வரக்காரணமென்ன? என்று வினவினார்கள். அரசன் நடந்த காரியங்கள் அனைத்தையும் கூறினான்.

உடனே அவர்கள் அனைவரும் கதம்பவனம் சென்று சிந்தாமணி விநாயகரைத் தரிசித்தார்கள். அதன்மேல் அரசன் சகல வினைகளையும் தீர்க்கத்தக்க சிந்தாமணி தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தான். உடனே அவன் தேகத்தைப் பற்றியிருந்து குஷ்டரோகமும் நீங்கியது. உருக்கு மாங்கதரூபம் பெற்றான். உருக்குமாங்கதராஜன் மீளவும் ஆனந்தத் துடன் சிந்தாமணி விநாயகரைப் பூசை செய்தான். அத்துடன் அந்தணர் முதலியோருக்கு அளவற்ற தான தருமங்களைச் செய்தான். இச்சமயத்தில் ஒருதெய்வவிமானம் ஆகாயமார்க்கமாக வந்து அரசனுக் கெதிரில் நின்றது. அதில்வந்த தேவகணத் தலைவன் புண்ணியசீலரே! சிந்தாமணி விநாயகரைப் பூசைசெய்த புண்ணியத்தினால் நீர் மேன்மை யடைந்துள்ளீர். இந்த விமானத்தில் ஆரோகணித்துக் கணேச மூர்த்தியின் உலகத்திற்கு வருவீர் என்று சொன்னார்கள்.

இதனைக்கேட்ட அரசனானவன் அந்தக் கணத்தலைவரைப்பணிந்து சொல்லுவான். விநாயகப்பெருமானுடைய பெருங்கருணையினால் உம் முடைய தரிசனம் கிடைக்கப்பெற்றேன். எனது தந்தை வீமராசனும் தாயார் சாருகாசினியும் அளவற்ற தவங்கள் செய்து என்னைப்பெற் றார்கள். அவர்களை விடுத்து யான் மாத்திரம் எவ்வாறு வருவது என்று விண்ணப்பித்தான். அப்போது தேவகணத்தலைவர் புகலுவார். தாய் தந்தையரை நினைத்து இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தர்ப்பணம் செய்தால் அவர்களும் உம்முடன் வருவார்கள் என்று கூறுதலும், வீமராஜன் அவ்வாறே தருப்பையை முடித்துத் தாய் தந்தையரை நினைத்துத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தான். பின்னர் மடுக்கரைமீதேறித் தர்ப்பணஞ்செய்தான். தனக்கு நல்வழிகாட்டிய நாரதமுனிவரை நினைத்தான். ஏனையோரும் அவ்வாறே செய்து தெய்வரூபம் பெற்றார்கள். அரசன் மீளவும் சிந்தாமணிவிநாயகரைப் பூசித்து விமானத்தில் ஏறிக் கவுண்டிய நகரஞ்சென்று தான் ஸ்நானஞ் செய்த பலனைத் தாய், தந்தையர் முதலியோருக்குத் ,தத்தஞ் செய் தான். மற்றைய சேனைகளும் அவ்வாறே தத்தஞ் செய்தார்கள். விநாயகப்பெருமானுடைய கிருபையால் எல்லோருக்கும் வெவ்வேறு விமானங்கள் வந்தன. வீமராசன் முதலாய அனைவரும் விமானத் தைப்பணிந்து அதிலேறிச்சென்று விநாயகலோகத்தை அடைந்தார்கள்.

# கிருச்சதமர் உபதேசம் பெற்ற படலம்

முனிபுங்கவர்களே! இதுகாறும் உருக்குமாங்கதராஜன் கணேச மூர்த்தியை வழிபட்டு முத்தியடைந்த சரிதையைச் சொன்னோம். இனி மேல் கிருச்சதமுனிவர் உபதேசித்த வரலாற்றையும் கூறுகின்றோம். முகுந்தையானவள் இட்டசாபத்துடன்உருக்குமாங்கதன் அவ்விடத்தை விட்டு நீங்கிச்சென்றுவிட்டான். முகுந்தையானவள் அவ்வரசன்மேல் கொண்ட விருப்பங்காரணமாகத் துன்பப்பட்டுக்கொண்டிருந்தாள். இச் சமாச்சாரங்களைக்கேள்வியுற்ற தேவேந்திரன் உருக்குமாங்கதன் போல் வேடந்தாங்கிவந்து அவளுடன் தொடர்புகொண்டு அவளது மனக் குறையை நிவர்த்தி செய்து சென்றனன். இதன்மேல் முகுந்தை என்பவள் கவிமுனிவருக்குப், பணிவிடை செய்து கொண்டிருந்தாள். முகுந்தைவயிற்றில் கருவுண்டாகி ஒரு ஆண்மகனைப் பெற்றாள். கவி முனிவர் மகிழ்ச்சியோடு குழந்தைக்கு கிருச்சதமர் என நாமஞ்சூட்டி உபநயனம் முதலாய சடங்குகளையும் நிறைவேற்றிவைத்தார். முகுந்தையானவள் புதல்வனைச் சீராட்டி வளர்த்து வந்தாள். கிருச் சதமர் வளர்ந்து வேதாகமம் முதலாம் சகல கலைகளையும் ஆசிரியர் கூறியவுடனேயே கற்கும் திறமை மிக்கவராய்த் திகழ்ந்தார். கவி முனிவர் ''கணுணந்துவா'' என்னும் மந்திரத்தை உபதேசித்துக் குழந்தாய் இம்மந்திரத்தை அன்போடு செபித்து வருவாயாயின் கணேச மூர்த்தியினுடைய திருவருள் கிடைக்கும் என்று சொன்னார்.

கிருச்சதமர் நித்திய கடமைகளை முடித்து விநாயகக் கடவுளைத் தியானிப்பார். கவிமுனிவர் கூறிய மந்திரத்தைச் செபிப்பார். இதனால் அவர் சாமர்த்தராகித் திகழ்ந்தார். இத்தருணத்தில் மகத நாட்டிலே சூரன் என்னும் ஓர் அரசன் வாழ்ந்துவந்தான். அவன் தந்தையி னுடைய சிரார்த்ததினத்திற்கு வசிட்டர், அத்திரி முதலான முனி வர்களை அழைத்திருந்தான். அவர்களுடன் கிருச்சதம முனிவரும் சென்றிருந்தார். அப்போது அத்திரி முனிவருக்கும் கிருச்சதமமுனிவ ருக்கும் விவாதம் நேரிட்டது, அதில் கிருச்சதமர் வெற்றிபெற்றார். இதனால் கோபங்கொண்ட அத்திரிமுனிவர் உருக்குமாங்கதராஜனுக்கு நீ பிறந்த கதை தெரியாதா? எனஇழிவுபடுத்தினர். இதனால் துன்பம். அடைந்த கிருச்சதமர் தாயிடம் சென்று தனது பிறந்த கதையை அறிந்தான். தாயை இலந்தைமரமாகக் கடவாய் என்று சபித்தான். முகுந்தையானவள் தயாகிய என்னை நடுங்கும்படி சாபமிட்டாய் ஆதலினால் உனது மனமும் நடுங்கும்படியான புத்திரன் உனக்குப் பிறப்பான் என்று சாபம் இட்டுவிட்டு இலந்தைமரமானாள்.

இதன் மேல் கிருச்சதமமுனிவர் தான் இராஜபுத்திரன் என்பதைக் குறித்து வெட்கி உயிரைவிடுவதற்கு எண்ணங்கொண்டிருந்தார்.

அச்சமயம் "நீ தேவேந்திரனுடைய புத்திரன் என்று அசரீரி வாக்குக் கேட்டது. கிருச்சதமர் சிறிது சிந்தைதேறினர். தன்னை அவமானஞ் செய்த அத்திரிமுனிவர் நாணுறும்வண்ணம் வரங்களைப் பெறவிரும்பி வேறோர் வனத்தை அடைந்தார்.

## கிருச்சதமர் வரம்பெறு படலம்

சோமகாந்தனே! பலவாசனைமிக்க புஷ்பச்செடிகளும் கொடிகளும் நிறைந்த தடாகங்களையும் கண்டு வேதவோசையோடு கிரீடாதிபதி களாகிய தேவர்சமூகங்களையுங் கண்டு தீர்க்கதண்டஞ்செய்து பணிந்தனர். அவர்கள் இக்கிருச்சதமமுனிவருடைய நல்வரவைக்கண்டு மகிழ்ந்து இங்ஙனம் இருப்பீர்களாக என்று கட்டளையிட்டனர். அவர் அவ்வனத்தின் ஒரு பக்கத்தில் இருந்து வலக்காற் பெருவிரலை நிலத்தில் ஊன்றி ஐம்புலன்களையும் அடக்கிக் கணேசமூர்த்தி உருவை மனதில் தியானித்தார். தந்தையால் உபதேசித்த மந்திரத்தைச் செபித்தார். இவ்வாறு தேவவருடத்தில் பதினாயிரம் வருடம் தவம் செய்தார்.

இந்தத் தவாக்கினியானது திரிலோகத்தவரையும் வருத்தியது. மெஞ்ஞானியர் உள்ளக்கோயிலில் வீற்றிருக்கின்ற விநாயகப்பெருமான் யானைவதனம் பத்துப்புயங்கள் ஒற்றைக்கோடு, இருமருங்கிலும் சித்தி புத்திகள் சிங்கவாகனம்இவற்றோடு காட்சி நல்கினர். கணேசமூர்த்தியின் பிரகாசத்தைத் தாங்கமாட்டாத முனிவர் சுவாமீ இவ்விக்கினத்தை விளக்கியருளவேண்டும் என்று பிரார்த்தித்தார். கணேசப்பெருமான் ஞானமாகிய அகக்கண்ணையளித்தருளினர். கிருச்சதமமுனிவர் அக மகிழ்ந்து கண்ணீர் சொரிந்து துதிப்பார்.

"நித்தியமாய் நின்மலமாய் நிர்க்குணமாய் நீடொளியாய்த்
தத்துவமாய்த் தத்துவத்துக் கப்பாலா யப்பாலு
மத்துவிதமான வரும் பொருளே நீ யடியேன்
சித்தமுவப்பத் திருக்காட்சி தந்தையே."

கிருச்சதமரின் தோத்திரங்களுக்குக்கிருபைபாலித்த விநாயகப்பெருமான் அன்பனே! நீ வேண்டிய வரங்கள்யாவை எனக்கேட்டனர். முனிவர்கூறுவார் தேவரீரிடத்தில் என்றும் மாருத பக்தியை நல்க வேண்டும். இத்தலத்தில் என்றும் எழுந்தருளியிருந்து புட்பகவனம், புட்பகநகரம் ஆகிய பெயர்களை விளங்கச்செய்யவேண்டும். ஏனைய முனிவர்கள் என்னை இகழாமல் வழிபட்டு நடக்கவேண்டும். கணேசப் பெருமான் இவை யாவற்றையும் அருளிச்செய்து திருவுருவைக் கரந்தருளினர். இதன்மேல் கிருச்சதமர் அங்கே விநாயகரைப் பிரதிட்டை

செய்து வரதகணபதி என நாமம் சூட்டினூர். தீர்த்தத்திற்குக் கணேச தீர்த்தம் என்று பெயர்வைத்தார். அந்தத் தீர்த்தத்தால் அபிடேகித்து பூசனை புரிந்தார். தேவர்கள் முதலாயினோரும் அந்த மூர்த்தியைப் பூசனை புரிந்து தமது இஷ்டசித்திகளைப்பெற்றூர்கள். இவ்வாறு பிருகு முனிவர் சோமகாந்தனுக்குக் கூறியதாகச் சூதமுனிவர் கூறினூர்.

## திரிபுரன் வரம்பெறு படலம்

இப்பால் பிருகு முனிவர் மகிழ்ச்சியுடன் விநாயகரைத் தொழுது ஆரம்பிப்பார் சோமகாந்தனே! கணேசப்பெருமானைக், கிருச்சதமர் உபாசித்து வரங்கள்பெற்றதனைக் கூறினோம். இனிமேல் திரிபுரன் உபாசித்த திறனையும் சொல்லுவோம் கேட்பீராக என்று சொல்லுவார். கணேசமூர்த்தி கொடுத்தருளிய வரங்களைப்பெற்றுக்கொண்டதினூல் கிருச்சதமர் முனிவர்களுக்கெல்லாம் மேலான மாட்சிமையைப் பெற்றூர். உபாத்தியாயராகித் தினமும் கணபதிபூசைசெய்து வந்தார். பஞ்சேந்திரியங்களையும் அடக்கித் தவஞ்செய்து யோகத்தில் இருந்து கண்களை விழித்துப் பார்த்தனர். அந்த வேகமான பார்வையின் காரணமாக இடியைப்போல ஆர்ப்பரித்துக் கொண்டு பலி என்னும் அவுணன் உதித்தனன். இதனைக்கண்ட முனிவர் நடுநடுங்கி இவன் யார்? என ஆலோசித்து கணேசமூர்த்தியினுடைய கிருபையால் நமக்குப் புதல்வனூக வந்தனன் எனத் தெளிந்து அப்பா நீ ஏன் வந்தனை? என்று வினவினூர்

அப்போது பலி என்பவன் கூறுவான் அண்ணலே யான் தேவரீர் புத்திரன், என்னைச் சிலநாள் பாதுகாத்து விடவேண்டும். அதன்மேல் மூவுலகங்களையும் சயங்கொண்டு அரசாள்வேன் என்றூன். இதனைக் கேட்ட கிருச்சதமர் மைந்தனே! சோதிசொரூபியாகிய விநாயகப் பெருமானுடைய மந்திரத்தை உனக்கு உபதேசிக்கிறேன். அம் மந்திரத்தை ஆகமவிதிப்படி அநுட்டித்தால் உனது எண்ணம் நிறைவேறும் என்றூர். இதன்மேல் பலி என்பவன் பேருவகை கொண்டு அந்தவனத்தின் மற்றோர்புறஞ் சென்றூன். கிருச்சதமரைப்போலவே பிருதுவி தத்துவம் முதல் நாததத்துவம் ஈறுக ஓர் ஆசனங்கற்பித்து அதிலே சோதிவடிவான கணேசமூர்த்தியை ஆவாகனஞ்செய்து அம் மூர்த்திக்கு அருள் என்னும் திருமஞ்சனம் ஆட்டிச் சாந்தம் என்னும் சந்தனத்தைச்சாத்தி அட்டபுட்பங்களையும் அணியச்செய்து பஞ்ச விதானங்களையும் நிவேதித்து அலங்காரம் என்னும் தீபங்காட்டி ஐந்து சக்திகளையும் பஞ்சாலத்தியாகக்காட்டி ஆன்மசொரூபம் என்கின்ற மாலையை அணிந்து கணேசப்பெருமானின் ஞானப்பிரகாசத்தைப் பிரசாதமாக அறிந்து அத்துவிதமுற்றுச் சகல அவத்தைகளும் நீங்கக் கணேசமூர்த்தியினது திருவுருவைத் தரிசித்து முன்னைப் பழம் பொருளே அடியேற்கு வேண்டுவன அளித்திடுக என்று பலி துதித்தான்.

விநாயகப்பெருமான் காட்சிகொடுத்துப் பலியே நீ வேண்டியதைத் தருகிறோம் என்றார். சித்தி, புத்தி என்னும் சக்திகளைக் கொண்டருளிய ஆனந்திமலமுத்தரே! மூவுலகங்களும் அடியேன் வசமாகவேண்டும். தேவர்கள்எனது ஏவலைத்தட்டாது நடக்கின்ற அரசாட்சி வேண்டும். தேவரீரிடம் நீங்காதபக்தியும் என்சரீரம் அழியும்போது முத்தியும் வேண்டும் என்றான். கணேசமூர்த்தி கருணைசெய்து சிறியவனே! நீ கருதிய வரங்களைத்தந்தோம். உனக்குத் திரிபுரன் என்னும் நாமமும் உண்டாகும். சிவபிரான் கணையால் அன்றி உனக்கு முடிவில்லை. உனக்கு முத்தி கிடைக்கும் எனக்கூறித் திருவுருவைக்கரந்தருளினார். இவற்றையெல்லாம் கேட்டதேவர்கள் நடுநடுங்கினார்கள். பலியானவன் தந்தையாகிய கிருச்சதமுனிவரைப்பணிந்து தான் பெற்றுவந்த வரங்களையெல்லாம் கூறினான். மூவுலகத்திலும் சென்று போர்செய்வதான எண்ணத்தோடு திரிபுரன் என்னும் நாமத்துடன் புட்பகவனத்தில் வாசஞ்செய்தான்.

## திரிபுரன் அரசாட்சிப் படலம்

சவுனகாதி முனிவர்களே! எமது ஆசிரியராகிய வியாசபகவான் பிரமனைநோக்கி அண்ணலே! திரிபுரன் பின்பு என்னசெய்தனன் என்று கேட்டலும் அவர் கூறுவார் பலி என்பவன் புட்பகவனத்தில் கண்டகற்சிலையினால் ஓர் ஆலயம் சமைத்தான். கண்டகற்சிலையினால் கணேசமூர்த்தியினுடைய திருவுருவையும் சமைத்து அவ்வாலயத்திலே பிரதிட்டை செய்தான். தினமும் விநாயகமூர்த்தியை ஆராதனை செய்தான் சிலநாளின் பின்னர் பூலோகத்திலுள்ளவர்களையெல்லாம் வெளிக்கொண்டு சென்று போரில் வெற்றி கொண்டு அவர்கள் அனைவரையும் தன் ஆணைக்கு உட்படுத்தினான். பின் பாதாளலோகஞ் சென்று நாகேந்திரன் முதலாம் வீரர்களையெல்லாம் யுத்தத்திலே ஜெயித்து மாணிக்கம் முதலாய செல்வங்களையெல்லாம் பூலோகம் கொண்டுவந்தான். இதன்மேல் தான் வெற்றிபெற்ற இடத்துச் சேனைகள் ஆயுதங்கள் யாவற்றையுங்கொண்டு சரேலென்று சுவர்க்கலோகஞ் சென்றான். அங்கு கற்பகச்சோலையை நாசஞ்செய்தான். இதன்மேல் இந்திரனுடைய சேனைகளுக்கும் திரிபுரனது அவுண சேனைகளுக்கும் கடும்போர் நடைபெற்றது. இந்திரனானவன் ஐராவதத்தில் ஏறி பலி என்பவனுடைய குதிரையைத் தாக்கினான்.

பலி என்பவன் இந்திரனுடன் மோதினான். இதனால் இந்திரன் சிறிது மயக்கம் அடைந்தான். மயக்கம் தெளிந்ததும் இருவரும் மற்போர் செய்தார்கள். பலி என்பவன் தேவேந்திரனுடைய இருகால்

களையும் பிடித்துத் தூக்கி ஆகாயமார்க்கமாக எறிந்தான் தேவேந்திரன் மெலிந்து மூர்ச்சித்து இமயமலைச்சாரலிலே வீழ்ந்தான். இதனை அறிந்த இந்திராணி அவ்விடம்சென்று பற்பலவுபகாரங்களைச் செய்து மூர்ச்சை தெளிவித்தாள். மலைச்சாரலிலே உள்ள குகையிலே இந்திரனைவன் ஒளித்துக்கொண்டான். பலியானவன் ஐராவதத்தில் ஏறி அங்குள்ள சிங்காசனத்தில் இருந்து யாவற்றையும் தனதாக்கிக்கொண்டான் சத்தியலோகம், வைகுண்டலோகம் ஆகியவற்றிற்குச் சென்றபோது அங்கு எவரும் இல்லாததால் கற்பகதரு, காமதேனு சிந்தாமணி இவற்றையெல்லாம் கவர்ந்து சென்று தனதாக்கிக்கொண்டான். திரிபுரன் என்ற நாமத்துடன் மூன்றுகோட்டைகளை உண்டாக்கினன். இரும்பாலான கோட்டைக்குச் சுக்கிலமென்றும், வெள்ளியிலான புரத்திற்கு கபிலமென்றும், பொன்னலான புரத்திற்குச் சுவர்த்தி என்றும் நாமஞ் சூட்டினன். விநாயகக்கடவுளைத் தியானித்து மூன்று புத்திரர்களை உண்டாக்கினன்.

இரும்புக் கோட்டையை வச்சிரதமிட்டிரனுக்கும், வெள்ளிக் கோட்டையை விமகாயன் என்பவனுக்கும் பொன்னலான கோட்டையைக் காலகூடன் என்பவனுக்கும் கொடுத்துத் தான் ஏகச்சக்கிராதிபதியாய் இருந்து ஆணைசெலுத்தினன். இக்கோட்டைகளில் சென்று எதிரிகளை வென்றும் வந்தான். இதன்மேல் வங்காளநகரை அடைந்து மீளவும் மனத்தால் இரண்டு புத்திரர்களை உண்டாக்கினன். அவர்களுக்குச் சண்டன் என்றும், பிரசண்டன் என்றும் பெயர்சூட்டிச் சத்தியலோகத்தையும், வைகுண்டத்தையும் அரசாட்சிசெய்யுமாறு பணித்தான். பின்னர் ஓர் மனைவியை விவாகம் செய்து அவள்மூலம் ஒரு புத்திரனைப் பெற்றான். இவ்வாறு திரிபுரனைவன் சகல சௌபாக்கியங்களோடும் வாழ்ந்து வந்தான். அவன் கீர்த்தி அட்டதிசைகளிலும் பரவியது. நீதிநெறிதவறாமல் விநாயகபூசையும் சிவபூசையும் பன்னெடுங்காலமாகச் செய்துவந்தான்.

## தேவர்கள் வரம்பெறு படலம்

சோமகாந்தனே! விநாயகமூர்த்தியைத் திரிபுரன் பூசித்து வரங்களைப்பெற்ற வரலாற்றைச் சொன்னேம். இதன்மேல் தேவர்கள் திரிபுரனை அழிப்பதற்காகப்பூசித்து வரங்கள்பெற்ற திறனையும் கூறுகின்றேம் என முனிவர் ஆரம்பிக்கின்றார். திரிபுரனைவன் சுவர்க்க, மத்தியபாதாளம் முதலாய சகலலோகங்களுக்கும் தனது ஆணையைச் செலுத்தி அரசாட்சி செய்துவருகின்றவேளையில் இமயமலைச்சாரலிலும் குகைகளிலும் தேவர்கள் ஒளித்து வாழ்ந்தார்கள். இத்தேவர்களிடம் நாரதமுனிவர் ஓர்தினம் சென்றார். தேவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து சுவாமீ! மூவுலகங்களையும் ஆட்சி செய்கின்ற திரிபுரனல்

நாங்கள் மெலிவடைந்துள்ளோம். இந்த வரங்களைப்பெற்ற இவன் எப்போது யாரால் அழிக்கப்படுவான். என்ற விபரங்களை அடியேங்களுக்கு அருளிச்செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

ஞானநோக்கினால் இனிமேல் நிகழவுள்ளவற்றையும் அறியத்தக்க நாரதமுனிவர் கூறுவார். விண்ணுலகவாசிகளே! விநாயகக்கடவுளைப் பூசைசெய்து அளவற்ற வரங்களைப் பெற்றதினால் திரிபுரன் இவ்வாறு ஆட்சிசெய்கின்றான். திரிபுரங்களும் சிவபிரானது பாணத்தினாலேயே அழியவேண்டும். அவ்வாறு அழிவதானால் நீங்களும் விநாயகப்பெருமானைப்பூசை செய்யவேண்டும். எனவே நீவிர் ஸ்நானஞ்செய்து அநுட்டானம் முதலியவற்றை முடித்துக்கொண்டு வருவீர்கள் எனப் பணித்தார். நாரதர்கூறிய பிரகாரம் தேவர்கள் நித்தியகடமைகளை நிறைவேற்றியதும் நாரதமுனிவர் கணேசப்பெருமானுடைய ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்தார். பின்னர் அதனை அநுட்டிக்கும்முறையையும் எடுத்துக்கூறினார். தேவர்கள் விநாயகருடைய திருவுருவை மனத்தில் தியானித்து ஏகாட்சர மந்திரத்தைச் செபித்தார்கள். இவ்வாறு அளவற்றநாள் தவஞ்செய்துகொண்டிருந்தார்கள். தேவர்களது தவத்திற்கு இரங்கிய கணேசப்பெருமான் பேரொளி நிறைந்த திருமேனியை உடையவராய் அவர்கள்முன் காட்சி நல்கினார். தேவர்கள் அனைவரும் அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இருகைகளையும் கூப்பித் தோத்திரஞ் செய்தார்கள்

விண்ணவர்களின் தோத்திரங்களைச்செவிமடுத்த விநாயகப்பெருமான் நீங்கள் விரும்பியவரங்கள் யாது எனக் கேட்டார். அவர்கள் சுவாமீ திரிபுரனின் துன்பங்கள் தாங்கள் அறிந்ததே. அவனை அழிப்பதற்கு ஏற்ற உபாயத்தைத் தாங்களே கூறவேண்டும் என வேண்டினார்கள். கணேசப்பெருமான் அமரர்களே! நீங்கள் அனைவரும் சிவபிரானிடம் செல்வீர்கள். யான் உபாயம் செய்கிறேன் என்று தேவர்களை அனுப்பினார். பின்னர் தாம் ஓர்வேதியர் வடிவம் தாங்கி வங்காள தேசத்தில் திரிபுரன்வாழ்கின்ற இடம்சென்றார். திரிபுரன் அந்தணரை வரவேற்று ஆசனத்தில் இருத்தித் தாங்கள் வந்தகாரணம் யாது? எனவினவினான். வேதியர் வடிவில் வந்த கணேசமூர்த்தி கூறுவார். கைலாசபதியானவர் ஓர் சிந்தாமணி விநாயகரை வைத்து உபாசிக்கின்றார். அந்த மேலான மூர்த்தியை எமக்குப் பெற்றுத்தர வேண்டும் என்றார்.

வேதியர் கூறியதைக்கேட்ட திரிபுரன் அடியேன் பராக்கிரமத்தைப் பாருங்கள் என்று கூறினான். உடனே ஒற்றர்களை வரவழைத்து இவ்வாறு கூறுவான். கையிலையங்கிரி சென்று பரமசிவனைப்பணிந்து எங்கள் திரிபுரராஜன் தேவரீர் பூசிக்கின்ற சிந்தாமணிவிநாயகரை வாங்கிவருமாறு கட்டளையிட்டான் எனக்கூறுங்கள் அவ்வாறு அவர்

தராது மறுத்தாரேயானுல் எங்கள் அரசனே நேரில்வந்து வலோற்கார மாகப் பெற்றுக் கொள்ளுவான். என்று உறுதியாகச்சொல்லி அம் மூர்த்தியை வாங்கிவரக்கடவீர்கள் என்று கூறிஅனுப்பினுன். ஒற்றர் களும் அவ்வாறே சென்ருர்கள்.

## விமலன் வரம்பெறு படலம்

முனிபுங்கவர்களே! இதுகாறும் தேவர்கள் திரிபுரனை அழிக்கு மாறு கணேசமூர்த்தியை உபாசித்ததிறனைக் கூறினேம். இனிமேல் திரிபுர தகனத்தின் பொருட்டுச் சிவபெருமான் கணேசமூர்த்தியை உபாசித்து அருள் பெற்ற வரலாற்றினையும் கூறுகின்ருேம். என்று தொடங்கினுர். விநாயகப்பெருமானின் அருளைப்பெற்ற தேவர்கள் அனைவரும் ஒருங்காகக்கூடி வேதங்களைக் குதிரைகளாகவும், உபநிட தங்களைக் குதிரைகட்கு ஆபரணங்களாகவும் உள்ள சிறந்த ஓர் இரதத்தை உண்டாக்கினுர்கள். அந்த இரதத்தைக் கைலாசபர்வத வாசலில் கொண்டுசென்று நிறுத்தினுர்கள். இதன்மேல் அனைவரும் சந்திர சடாதரமூர்த்தியாகிய சிவபிரானிடம் சென்ருர்கள். அனைவரும் அட்டாங்க நமஸ்காரஞ் செய்தார்கள். சுவாமீ யாங்கள் அனைவரும் துன்பத்தில்அழுந்துகின்ருேம். தாங்கள் எழுந்தருளித் திரிபுரனை அழிக்க வேண்டும். தாங்கள் இவர்ந்து செல்வதற்கு ஓர் இரதம் செய்து கொண்டு வந்துள்ளோம். என்று பிரார்த்தித்தார்கள். இதனைச் செவி மடுத்த எம்பெருமான் பார்வதி சமேதரராக எழுந்தருளிக் கோபுர வாசலை அடைந்து தமது திருக்கண்களால் அந்த இரதத்தை நோக் கினுர். இதன்பின்னர் தேவர்களைப் பார்த்து இனி உங்கள் துயரினை நீக்கி ஆனந்தமாய் இருங்கள் என்று கூறிவிட்டுக் கோயிலுட் புகுந்தார்.

திரிபுரனுல் அனுப்பப்பட்ட தூதுவர்கள் எம்பெருமான் கோயி லினுட் புகுந்தசமயம் அங்குவந்து அடிபணிந்து தங்கள் அரசன் சொல்லிய வார்த்தைகளை அவ்வாறே கூறினுர்கள். இதனைக்கேட்ட இறைவன் புன்னகைசெய்து உங்கள் அரசனை யுத்தத்திற்கு வரச்சொல் லுங்கள் எனச் சொல்லிஅனுப்பினுர். அதன்மேல் தனியாக இருந்து கண்களைமூடிக் கணேசமூர்த்தியைத் தியானித்தார். ஐங்கரக் கடவுளே திரிபுரனைச்சங்கரிக்கும் உபாயத்தினை அருளவேண்டும்எனத் துதித்தார். உடனே விநாயகக்கடவுள் சர்வேஸ்வரரது முகத்தினின்றும் ஐந்து முகங்களோடு தோன்றி அவர் எதிரில் நின்றனர். சர்வேஸ்வரன் மகிழ்ச்சி கொண்டு உமது நாமம் யாது என்ருர்? விநாயகர் நீல கண்டப் பரம்பொருளே! உலகிலுள்ள உயிர்களைக் காக்கும் பொருட்டு

உமது முகாரவிந்தங்களினின்றும் தோன்றியுள்ளோம் எமது நாமம் கணேசனாகும் எனக்கூறினர். அப்போது பரமசிவன் புகலுவார். திரிபுரனைச் சங்கரிக்கவேண்டும். உமது மந்திரத்தை உபதேசிக்கவேண்டும் என்றார். அவ்வாறே பீஜாக்ஷத்தை உபதேசஞ்செய்து கடுமையாகக் கணைவிடும்போது இதனை மூன்றுமுறை செபிக்கவேண்டும் எனவும் கூறினர். பரம்பொருளாகிய சிவபெருமான் நீவீர் சகல தேவகணங்களுக்கும் தலைவராவீர். உமக்குக் கணேசமூர்த்தி என்ற நாமம் வழங்குவதாக. வைதீகநெறி, சைவநெறி இருநெறிகளைக் கைக்கொள்வோரும் உம்மை வழிபடக் கடவர். உம்மைப் பணியாது ஆரம்பிக்கும் அற்பமேயாயினும் அதுகைகூடாது எனவும் கூறினர். பின்னர் அங்குள்ள தேவர்களை நோக்கி விண்ணுலக வாசிகளே! நமது பிரார்த்தனைக்கு அருள்சுரந்து கணேசமூர்த்தி எழுந்தருளியுள்ளார். நீங்கள் அனைவரும் சகஸ்திர நாமங்களால் அருச்சிப்பீர்கள் என்று ஆணையிட்டார். அவ்வாறே தேவர்கள் அருச்சித்ததும் விநாயகக்கடவுள் அனைவருக்கும் அநுக்கிரகம் செய்து திருவுருவைக் கரந்தருளினர்.

## திரிபுர தகனப் படலம்

இதன்மேல் சிவபிரானிடம் விடைபெற்றுச்சென்ற தூதுவர்கள் திரிபுரனிடம் சென்று தீர்க்கதண்டஞ்செய்து இராஜாதி இராஜேஸ்வரனே! நீர் கட்டளையிட்ட பிரகாரம் கைலாசபதியிடம் சென்று சிந்தாமணி விநாயகரைக் கேட்டோம். அவர் புன்னகை செய்து தேவரீரை யுத்தத்திற்கு வருமாறு பணித்துள்ளார் எனக்கூறினர்கள். இதனைக்கேட்ட திரிபுரனனவன் சிம்மம்போலக் கோபித்து கமதசண்டன், பிரசண்டன் முதலாய வீரர்களையும் திரிபுராதிகளையும் விரைவில் யுத்தத்திற்கு ஆயத்தமாகுமாறு பணித்தான். வீரர்களுக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களையெல்லாம் செய்தான். திரிபுரனது படையெடுப்பை அறிந்த சிவபெருமான் நந்திதேவரை அழைத்துச்சகல சேனைகளையும் சர்வாயுதபாணிகளாகவந்து கோபுரவாசலுக்கு எதிரே நிற்குமாறுஆணை பிறப்பித்தார். திரிபுரனது படைகளும் கோபுரவாசலுக்கு அண்மையில் வந்து சேர்ந்தன. பின்னர் நந்தியெம்பெருமான் பரமசிவனிடம்சென்று வணங்கிச் சுவாமீ சேனைகள் யாவும் தங்கள் படைகளோடு கோபுரவாசலுக்கு எதிரில்வந்து நிற்கின்றன என்று கூறினர்.

பிரமதேவர் தேரை நடாத்திக்கொண்டு வந்திருக்கிறார் என்பதைத் தேவர்கள் கூறியதும் எம்பெருமானனவர் தேவர்கள் துயர்தீர்க்கத் திருவுளம் கொண்டு தேவியரோடும் திடீரென எழுந்து பாதுகைகளைத் திருவடிகளில் சூட்டிக்கொண்டு அலங்காரமான இரதத்தில்

ஆரோகணித்தார். தேவர்கள் அனைவரும் ஆரவாரஞ்செய்தார்கள். சிலர் வெள்ளைக்குடை பிடித்தார்கள். சிலர் ஆலவட்டம் வீசினார்கள். வெற்றிக்கொடிகளை ஆகாயமார்க்கமாகச் சிலர் உயர்த்தினார்கள். வீரபத்திரக்கடவுள் நாலாயிரம் கோடி தேவகணங்களுடன் வேறோர் இரதத்தில் புறப்பட்டார். சண்முகக்கடவுள் முப்பத்து முக்கோடி தேவர்களும் புடைசூழ மயில்வாகனத்தில் ஆரோகணித்தார். இவ்வாறு சிவபிரானது தேருருளைகளும் சகலசேனா சமூகங்களோடு எங்கும் திரண்டுகாட்சி நல்கின. இரு பகுதியினரது சேனைகளும் சப்த சாகரங்களை ஒத்திருந்தன. இருதிறத்தாரும் ஏந்துகின்ற வாள்கள், விற்கள் முதலியன கடலில் வசிக்கின்ற மீன்களை ஒத்திருந்தன. இருதிறத்தாரும் ஏந்துகின்ற கேடயங்கள் கடலின் அலைகளை ஒத்துவிளங்கின.

இருதிறத்தினரும் மாறிமாறி நாணைத்தொடுத்து நாணொலி செய்து அம்புமழை ஒருவருக்கொருவர் பொழிந்தார்கள். சுப்பிரமணியப் பெருமானோடு பிரசண்டன் எதிர்த்தான், நந்தி தேவரோடு சண்டன் எதிர்த்தான். இந்திரனோடு திரிபுரன் மந்திரி எதிர்த்தான் சயந்தனோடு மதன் எதிர்த்தான். புட்பதந்தனோடு காலகூடன் கோட்டையுடன் வந்து எதிர்த்தான். வீரபத்திரரோடு வச்சிரதமிட்டிரன் தனது இரும்புக்கோட்டையுடன் வந்து எதிர்த்தபன். இலக்கவீரரோடு வீமகாயன் என்பவன் தனது வெள்ளிக்கோட்டையுடன்வந்து எதிர்த்தான்.

இங்ஙனமாக ஒருவரோடு ஒருவர் கைகலந்து போர் செய்யும் சமயத்தில் வாள்கள், வில்லுகள் யாவும் முறித்தும் ஒடித்தும் தள்ளப்பட்டன. சிலருக்குத் தோள்கள் முறிந்தன சிலருக்குச் செவிகள் அறுந்தன. சுப்பிரமணியக்கடவுளும் பிரசண்டனும் போர் செய்யும் போது ஐந்துபாணங்களால் அவனுடைய சேனைகளையும் அவனையும் நாசமாக்கினார். சண்டன் என்பவனை நந்திதேவர் எதிர்த்து அவனது மாயங்களை எல்லாம் குன்றச்செய்து மூன்றுபாணங்களால் அவனைக் கொன்றார். ஆகாயமார்க்கத்தில் போர்செய்த காலகூடனைப் புட்பதந்தன் என்பவர் ஆகாயத்தில் போர்செய்து ஐந்துபாணங்களால் அவனது உயிரையும் கோட்டையையும் பொடிபடுத்தினார். வெள்ளிக்கோட்டையோடுபோர் செய்த வீமகாயனை இலக்கவீரரும் எதிர்த்து அளவற்ற யுத்தஞ்செய்து நாலுபாணங்களாலும் அவனுயிரையும் கோட்டையையும் நாசஞ் செய்தனர். இரும்புக்கோட்டையோடு போர் செய்த வச்சிரமிரட்டிரனை வீரபத்திரக்கடவுள் எதிர்கொண்டு போர் செய்து அவுணசேனை கலங்கும்படி யுத்தஞ் செய்து தேரை நேராகச் செலுத்தி நாலுபாணங்களால் அவனுயிரைப் நாசஞ்செய்தார். இந்திரன் திரிபுரன் மந்திரியோருடன் அளவற்ற போர்செய்து வச்சிராயுதத்தால் அவனது சிரசை அறுத்து வெற்றிமாலை சூடினான்.

மகாமேருமலையை வில்லாகவுடைய கர்த்தரானவர் திரிபுரனுடைய வில்லைக் கண்டதுண்டமாக்கினர். திரிபுரன் சிவபிரான் இரதத்தின் மீது ஆயிரம், பதினாயிரம் என்னும் எண்ணிக்கை கொண்ட பாணங்களைச் செலுத்திப் பாணமழை பொழிந்தான். சிவபெருமானானவர் அவனைப்பார்த்து இன்னும் ஏதாவது யுத்தங்கள் இருக்குமாயின் அதனை யோசித்துவந்து செய் என்று கூறினர். தப்பியர்கள் இறந்ததைக்கண்டு கோபாவேசங்கொண்டு தனது மூன்று புரங்களையும் வரவழைத்தான் அதனுள் புகுந்து மூன்று லோகங்களுக்கும் சென்று அளவற்ற கொடுமைகளைச் செய்தான். இவனது அளவற்றநாள் யுத்தத்தினல் பதினறு லோகங்களும் கலங்கின. இதனைக்கண்ட தேவர்கள் மனந்துவண்டு கர்த்தரே திரிபுரனைச் சங்கரித்து வாகைமாலை சூடவேண்டுமென வேண்டினர்கள். உமையம்மையும் அவ்வாறே வேண்டினர். திரிபுரனுடைய பராக்கிரமத்தைக் காண்பிக்குமாறு இவ்வாறு யுத்தஞ் செய்தோம் எனக்கர்த்தன் கூறியருளினர். இனிப்பாருங்கள் எனக்கூறிய பரமபதியானவர் கணேசமந்திரத்தை உச்சரித்துத் தமது திருக்கரத்தில் இருக்கின்ற முத்தலைச் சூலத்தைக் கையில் எடுத்தார். உடனே திரிபுரமும் பலியும் நீறானதை அனைவரும் கண்டார்கள். சூலம் எவ்வாறு சென்றது என்பதை எவரும் காணவில்லை. சூலமானது கர்த்தனது கையில் சேர்வதற்குமுன் திரிபுரன் கர்த்தனது பாதங்களில் ஐக்கியமாயினன். அன்றுமுதல் பரம்பொருளுக்குத் திரிபுரசங்காரி என்ற நாமத்தால் எல்லோரும் துதித்தார்கள்.

சிவபெருமான் கிருபாநோக்கஞ் செய்ததும் களத்தில் மடிந்த பூதகணங்கள் அனைத்தும் உயிர்பெற்று எழுந்தன. திரிபுரனை வதஞ் செய்தஇடத்தில் கைலாயவண்ணனை வைத்துப் பூசித்தார்கள். திரிபுரன் முத்தியடைந்த தினமான பூரட்டாதிப், பூரணை நாளில் பாகுளி என்ற தைலத்தாலும் நெய்யாலும் திருவிளக்கேற்றி அன்போடு பூசிப்பவர் கட்கு முற்பிறவியில்செய்த பாவங்கள் அகலும், அத்தினத்தில் அர்ச்சிப்பார்களாயின் அவர்கள் விரும்பிய சகல பொருட்களும் கைகூடும்.

## விநாயக விரதம் கேட்ட படலம்

முனிசிரேட்டர்களே! சிவபெருமான் விநாயகமூர்த்தியை உபாசித்துத் திரிபுரதகனஞ் செய்த வரலாறு கூறினேம் இனிமேல் உமையம்மை உபாசனைசெய்த திறனையும் சொல்லுவோம் கேட்பீர்களாக என்று ஆரம்பித்தார். பிரம்ம குமாரர்களுள் ஒருவராகிய தக்கன் என்பவன் அரிய தவங்களைச் செய்து தேவர்கள் தனது ஆணையின் கீழ் நடக்கவேண்டும். உமையம்மை தனது புத்திரியாக அவதரிக்க வேண்டும் என்று அநேக வரங்களைப் பெற்றுக்கொண்டான். வரத்தின்

பிரகாரம் உமையம்மை மகளாக அவதரித்துச் சிவபிரானுக்கு விவாகஞ் செய்து கொடுத்து அதனால் பிரசித்திபெற்று வாழ்ந்துவந்தான். இச் சந்தர்ப்பத்தில் ஓர்தினம் கைலாயம் சென்றான். அப்பொழுது மருக ராகிய சிவபிரான் தனக்கு எழுந்து மரியாதை செய்யவில்லை என்று அகம்பாவம் கொண்டான். இந்த ஆணவமறைப்புக் காரணமாகச் சிவனை நிந்தனைசெய்து விண்டுவாதி தேவர்களையெல்லாம் அழைத்து ஓர் யாகஞ்செய்தான். இதனை அறிந்த உமையம்மை சிவபிரானிடம் அநுமதிபெற்று அவ்விடஞ் சென்றாள். தமது தாய் தந்தையர் இறைவனை நிந்தனை செய்வதைக் கண்டார். இதனால் கோபங்கொண்ட உமா தேவியார் யாகசாலை, பேய்கள் நடமாடும் சுடலையாகக்கடவது எனச் சாபம்இட்டுவிட்டுச் சிவபிரானிடம்சென்று முறையிட்டார்.

உமாதேவியார் கூறியவற்றைக் கேட்ட சிவபிரானுக்குக் கோபம் உண்டானது. அக்கோபாக்கினியினின்றும் வீரபத்திரக் கடவுள் தோன்றினார். அவரைச் சிவபிரான் பார்த்துத் தக்கனது யாகத்தை அழித்துவருமாறு பணித்தார். வீரபத்திரர் யாகஞ்செய்யும் இடம் சென்று அங்கு வந்திருந்த அனைவரையும் நாசஞ்செய்து திரும்பினார். அதன்மேல் சிவபிரான் கிருபை கூர்ந்து யாகத்தில் இறந்த தேவர்களை எல்லாம் பிழைப்பித்து நீவிர் இனிமேல் இப்படியான துர்க்குணங்களில் ஈடுபடாதீர்எனப் பணித்துத் தக்கன் அருகில்வந்து நீ சிவநிந்தை செய்த படியால் அபராத அடையாளமாக இருக்க வேண்டுமென்று ஆட்டுத் தலையைப் பொருத்தி எழுந்திருக்கச் செய்தார். இதன்மேல் கோபந் தணிந்து உமாதேவியார் தக்கன் மகள் என்பதைத் தவிர்த்துப் பர்வத ராஜனுக்கும் மேனைக்கும் மகளாகத் திருவவதாரஞ் செய்தார் நாளுக்கு நாள் வளர்பிறைபோல் வளர்ந்து சிவபெருமானை அடைவதற்கு ஓர் விரதத்தை அநுட்டிக்க விரும்பினார். இதனைப் பர்வதராஜனிடம் தெரிவித்தார்.

தந்தையாகிய பர்வதராஜன் கூறுவான் இந்திரன், பிரமன் முதலியோருடைய சாபங்களை நிவர்த்தி செய்த விரதம் ஒன்று இருக் கின்றது. இது விநாயகக்கடவுளைக் குறித்து அநுட்டிப்பது. ஆவணி மாதம் பூர்வபக்கச் சதுர்த்தி தினத்தில் அவ்விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். அன்று அதிகாலையில் எழுந்து நித்திய நியமங்களை முடித்துக் கொண்டு, அபிஷேகத்துக்குரிய பொருட்களைச் சேகரித்துவைத்துக் கொள்ளவேண்டும். பின்னர் பரிசுத்தமான இடத்தில் மிருத்திகை (மண்) எடுத்து அதை நன்கு பரிசோதித்து நன்றாகப் பிசைந்து விநாயகர் திருவுருவைச் செய்யவேண்டும். அதன்மேல் அபிடேக ஆராதனை நிகழ்த்துதல்வேண்டும். விநாயகருக்குரிய மந்திரத்தால் அர்ச்சிக்க வேண்டும் பின்பு ஓமஞ்செய்யவேண்டும். அறுசுவைகளோடு கூடிய உணவுகளை அன்னதானஞ் செய்யவேண்டும். யாவும் நிறைவுற்றபின்

விநாயகர் திருவுருவைத் தடாகத்திலாவது நதியிலாவது வைத்துவிடல் வேண்டும் இவ்வாறு பலவருடங்கள் பல உருவங்கள் சமைத்துச் செய்வாராயின் அவர்கள் வேண்டியன கைகூடும்என்று கூறியருளினான்.

பர்வதராஜன் கூறியவற்றைக் கேட்ட உமாதேவியார் இவ் விரதத்தை முன்னர் யாவர் அநுட்டித்தார்கள் என்பதையும் கூற வேண்டும் என்று கேட்டாள் அதற்குத் தந்தையாகிய பர்வதராஜன் சொல்லுவான். முன்னொருநாள் சுப்பிரமணியப் பெருமான் சுவாமி சந்நிதானம் சென்று பலவரங்களையும் தரத்தக்க ஓர் விரதத்தைக் கூறுமாறு பணிந்து கேட்டார். அப்போது இறைவன் இருபைசுரந்து விநாயகக்கடவுளுடைய சதுர்த்திவிரதமே என்று அருளிச்செய்தார். மேலும் புகலுவார். பிரணவத்தினின்றும் சகலபுவனங்களையும் சகளீகரித்திருக்கின்ற மூர்த்தி கணபதியேயாகும். துஷ்டநிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ்செய்யும் பொருட்டு அனந்தமுறை வெவ்வேறு அவதாரங் களைச் செய்துகொண்டிருக்கின்றார், ஓர் அவதாரத்தில் எமக்குப்புத்திர ராகவும் அவதரித்திருக்கின்றனர். இந்தச்சதுர்த்திவிரதம் சகல வித்தை களையும் தரவல்லது. சங்கடசதுர்த்தியும், கணேசப்பெருமானுடைய மேலானவிரதமாகும். இத்தினங்களில் அளவற்றபேர்கள் கணேசமூர்த்தி யின் திருவுருவைப்பூசித்தும் தியானித்தும் மும்மலங்களையும்ஒளித்து நாற் பயன்களையும் பெற்றுள்ளார்கள். இவ்வாறு சிவபிரான் சுப்பிரமணியக் கடவுளுக்கு உபதேசித்ததாகப் பர்வதராஜன் பார்வதிதேவிக்குக் கூறினன்.

## விநாயகசதுர்த்தி அநுட்டித்த படலம்

பர்வதராஜன் கூறியதைக் கேட்ட பார்வதிதேவியானவர் தாம் இவ்விரதத்தை அநுட்டிக்கப்போவதாகவும் அதற்குவேண்டிய திரவி யங்களைச் சேகரித்துத் தருமாறும் தந்தையைவேண்டிக்கொண்டாள் உடனே அரசன் ஏவலாளர்களை அழைத்து விநாயகபூசைக்கு வேண்டிய பொருட்களைக்கொண்டு வருமாறு பணித்தான். உடனே ஏவலாளர்கள் சென்று கங்கை, காவிரி இவற்றின் நீரைக்கொண்டு வந்தார். மேலும் சிலர் வன்னி, அறுகு முதலியவற்றைக்கொண்டு வந்தார்கள் ஏனையோர் பலவித மாலைகளைக்கொண்டுவந்து கொடுத்தார்கள். சிறந்தஓமகுண்டம் அமைக்கப்பட்டது. பூசைக்குவேண்டிய புட்பங்கள் பத்திரங்கள் யாவும் விதிப்படி கொண்டுவரப்பட்டன. இவ்வாறு யாவும் ஆயத்தஞ்செய் யப்பட்டதும் புவனேஸ்வரியாகிய பார்வதிதேவியார் தெய்வகங்கையில் நீராடி பூஜாமண்டபத்தில்வந்து வெண்ணீறு, உருத்திராக்கம் அணிந்து நியாசஞ்செய்து, ஆசமனம், பிராணயாமம் பூதசுத்தி முதலியவற்றை நடாத்தினர் பின்னர் சங்கல்ப்பம் கூறிப் பஞ்சரத்தினங்களையும் வைத்து அதற்குச் சந்தனம், புஷ்பம், அக்ஷதை, சாத்திக் கும்பபூசைசெய்து பரிமளதிரிரவியங்களை எல்லாம். அதனுள் போட்டுத் திரவியங்களை

முறைப்படி அர்ச்சித்து அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் என்னும். மூவகை நீரையும் மந்திரபூர்வமாக உண்டாக்கி அட்க்ஷதை, புஷ்பம் இவைகளைக்கொண்டு தியானம் கூறிச்சிந்தித்து ஆவாகனத்துடன், ஸ்தாபனமுஞ்செய்து விநாயகருக்கு ஆசனம் இட்டு இவரே சர்வேஸ் வரப்பெருமான் என்று மந்திரங்களைக்கூறி மீண்டும் பாத்தியம், அர்க்கியம், ஆசமனீயம் முதலியவைகளைக் கொடுத்து அதன்மேல் தேன் கலந்த பாலினால் அபிஷேகஞ் செய்தார். பின்னர் ஐந்து அமிர் தத்தையும் கங்கை நீரையும் கொண்டு திருமுடியிலே ஊற்றிப் பின்னர் இரண்டு பீதாம்பரங்களை அவருக்குச் சாத்தினார். இதன்மேல் சந்தனம் குங்குமம் அட்க்ஷதை இவைகளை அவரது மேனியில் அணிந்தார். பின்னர் மந்திரத்துடன் அங்கநியாசஞ் செய்தார். ஸ்ரீகணநாயக நம என்று அஷ்டோத்தரசதநாமங்களால் பூசைசெய்து தூபதீபங்களைக் காட்டினார். இரு அறுகுகள் வீதம் கையில் கொண்டு இருபத்தொரு தரம் நாமாவழிகளைக்கூறி அர்ச்சித்தார். ரட்சாபந்தனம் செய்து சர்க்கரைப் பொங்கல், பலகாரவகைகள், கனிவகைகள் தேங்காய் இளநீர் இவைகளை மந்திரபூர்வமாக நிவேதித்துச் சோடசதீபங் களையும் காட்டி நிறைவேற்றினார். பின்னர் விநாயகரது திருவுருவையும் நவரத்தினங்களையும் தானமாகக் கொடுத்தார்.

கணேசமூர்த்தியை மங்கலவாத்தியங்களுடன் எழுந்தருளச்செய்து வழிபாடுகளை நிறைவேற்றினார். விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை அநுட்டித்து மேற்கண்டவாறு பூசைகள் நிகழ்த்திய காரணத் தால் உமாதேவியார் சிவபெருமானைத்திருமணம் செய்யும் நிகழ்வு சிறப்பாக நிறைவேறியது என்று கூறிமுடித்தார். இதனைக்கேட்ட சகல ஆன்மாக்களும் விநாயகமூர்த்தியை வழிபட்டு அவரது அருளைப் பெற்றார்கள்.

## கர்த்தமன் விநாயகசதுர்த்தி அநுட்டித்த படலம்

சோமகாந்தராஜனே! உமையம்மையார் சதுர்த்திவிரதம் அநுட் டித்துச் சிவபிரானைத் திருமணம் செய்த வரலாறு கூறினோம். இனி மேல் கர்த்தம மகாராசன் சத்துருக்களை வெல்லத்தக்க புஜபராக்கிர மங்களோடு ஆட்சி நடாத்திக்கொண்டிருந்தான். ஓர் தினம் தவத் தால் மேம்பட்ட பிருகுமுனிவர் எழுந்தருளினார். அரசனானவன் அவரை எதிர்கொண்டு ஆசனத்தில் இருத்தி வேண்டிய உபசாரங்களை எல்லாம் செய்து சுவாமீ! தவசிரேட்டரே அடியேன் யாதொரு குறையும் இல்லாது இவ்வுலகம் முழுவதையும். ஒரு குடைக்கீழ் ஆட்சிசெய்து வருகின்றேன். இவ்வாறு அடியேனுக்குகிடைத்தற்கு என்ன காரணம்? என்று வினவினான். பிருகுமுனிவர் சொல்லுவார்.

அரசனே! நீ முற்சனனத்தில் வைசியகுலத்திற் பிறந்தாய். உன் குல தருமங்களை எல்லாம் கைவிட்டுவிட்டனை. இதனால் சுற்றத்தவர்கள் உன்னை வெறுத்தார்கள். வறுமையும் உன்னைச் சூழ்ந்துகொண்டது. எனவே நீ காட்டிற்சென்று உயிரைமாய்க்க எண்ணங்கொண்டாய் வீட்டைத் துறந்து காட்டிற்குச் சென்றனை. அங்கு ஓர் ஆச்சிரமம் இருக்கக்கண்டாய். வேதாகம புராணங்களை வாசிக்கின்றவர்களும் தவம் முதலியவற்றை நிறைவேற்றுபவர்களும் புடைசூழ்ந்திருக்கும் படியாகச் சவுபரிமகாமுனிவர் எழுந்தருளியிருந்தார். நீ அவர் அருகில் சென்று பணிந்து நின்றனை. முனிபுங்கவர் உன்னைப்பார்த்து வந்த காரணம் யாது என்று வினவினார். நீ சொல்லுவாய் சுவாமி! வறுமை காரணமாக அடியேனைச் சுற்றத்தவர்கள் வெறுத்துவிட்டனர். இதன் நிமித்தம் காட்டில் உயிரை நீக்கிக்கொள்ளும் எண்ணத்துடன் வந்தேன். எனது தவப்பயனால் தங்கள் திவ்விய தரிசனம் கிடைத்தது என்று விளம்பினான். இதனைக்கேட்ட சவுபரி முனிவர் விநாயகக்கடவுளுடைய மந்திரத்தை உனக்கு உபதேசித்து அதை அநுட்டிக்கும் முறையையும் உனக்குச் சொல்லியருளினார். நீ அதன்பிரகாரம் அநுட்டித்து வரும் நாளில் விநாயக சதுர்த்தியும் வந்தது. அத்தினத்தில் முனிவரும் உன்னுடன் இருந்து ஆகம விதிப்படி விரதத்தை அநுட்டிக்கச்செய்தார்.

சதுர்த்தி விரதத்தை அநுட்டித்த மகிமையினால் விநாயகக் கடவுள் உனது வீடுமுழுவதும் சகலபொருட்களும் நிறையும்படி கருணை செய்தார். இதனைச் சவுபரிமுனிவர் உனக்கு அறிவித்தார். மேலும் உடனே வீடுசெல்லுமாறு பணித்தார். நீ மிகுந்த மகிழ்ச்சியுடன் முனிவரைப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு வீட்டினை அடைந்து அளவற்ற செல்வங்களோடும் வாழ்ந்துவந்தனை. உன்னை வெறுத்த சுற்றத்தவர்கள் மீண்டும்வந்து எதிர்கொண்டனர். விநாயகவிரதத்தின் மகிமையே இவ்வாறு நீ சிறப்பாக வாழ்வதற்குக் காரணம் என்று விடைபகர்ந்தார். பிருகுமுனிவர் அரசனிடம் விடைபெற்றுத் தமது ஆச்சிரமத்தை அடைந்தார். கர்த்தமமகாராஜன் ஆனந்தத்துடன் சதுர்த்தி விரதத்தை மேலும் அநுட்டித்து வந்தான். தனது புத்திரனிடம் பூமிபாரத்தை ஒப்படைதுவிட்டுக் கணேசமூர்த்தியின் பேரின்ப முத்தியை அடைந்தான்.

## நளன் விநாயகசதுர்த்தி அநுட்டித்தபடலம்

சோமகாந்தராஜனே! நளமகாராஜன் சதுர்த்திவிரதத்தை அநுட்டித்த திறத்தினையும் சொல்லுவோம் கேட்பீராக என்று ஆரம்பிக்கின்றார். பூஞ்சோலைகள் சூழ்ந்த நிடதநாட்டில் மாடமாளிகைகள் நிறைந்த மாவிந்த நகரம் என்னும் ஒரு பட்டினம் உண்டு. அங்கே

அழகேசனையும் வெல்லும்படியான பேரழகு வாய்ந்த நளன் என்னும் இயற்பெயருடைய ஓர் அரசன் இருந்தான். அந்த அரசன் தரும சாஸ்திரங்களில் ஆங்கிரசமுனிவருக்கு ஒப்பானவன். இந்த நளமகா ராசன் பதுவத்தன் என்னும் மந்திரியோடு திசை அனைத்தையும் செங் கோலோட்சி வந்தான். அவனது மனைவி தமயந்தியோடு இல்லறம் நடாத்தி வருகின்ற நாளில் இந்திரனுக்கு ஆயிரங்கண்களைத் தந்த கௌதமமுனிவர் அங்கு எழுந்தருளினர். அரசன் எதிர்கொண்டு ஓர் ஆசனத்தில் அமரச்செய்து அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து சுவாமீ அடியேனுக்குச் சகல நன்மைகளும் கிடைக்கக்கூடிய ஒரு விரதத்தைத் தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தனன்.

கௌதமமுனிவர் அதற்குக் கிருபை சுரந்து அரசனே! நீ முற் சனனத்தில் சகலரும் புகழத்தக்க அரசனாய் விளங்கும் நாளில் மேலும் ஏனைய தேசங்களையும் கைப்பற்றும் நோக்குடன் ஓர் வனத்தில் சென்றாய். அப்போது கௌசிகமுனிவர் கிருபாநோக்கஞ்செய்து சதுர்த்திவிரதத்தை உனக்கு உபதேசஞ்செய்து ஆகமவிதிப்படி அநுட்டிக்கச்செய்தார். ஆதலி னால் நீ சகல சிறப்புக்களோடும் வாழ்ந்தனை. அந்தவிரதம் அனுட்டித்த புண்ணியத்தால் சகல பேறுகளுடனும் வாழ்ந்து வருகின்றாய் எல்லா விரதங்களிலும் மேலானது விநாயகசதுர்த்தியே யாகும். இதனையே மேலும் அநுட்டித்து விநாயகப்பெருமானுடைய அருளைப்பெறுவாய் என்று கூறிவிட்டு அம்மகாமுனிவர் தெய்வலோகத்திற்குச் சென்றார். நளமகாராஜன் அவ்விரதத்தை வருடம்தோறும் அனுட்டித்து மெஞ் ஞானமாகிய சுகத்தை அடைந்து ஆனந்தவெள்ளத்தில் மூழ்கினன்.

## சந்திராங்கதன் விநாயகசதுர்த்தி அநுட்டித்தபடலம்

முனிசிரேட்டர்களே! நளமகாராஜன் விநாயகசதுர்த்தியை அநுட்டித்து வரம்பெற்றதைக் கூறினேம். சந்திரகாந்தமகாராஜன் சதுர்த்திவிரதத்தை அநுட்டித்ததிறனை இனிமேல் எடுத்துரைப்போம் கேட்பீர்களாக, என ஆரம்பித்தார். சகல வளங்களும் நிறைந்த மாளவ தேசத்திலே கன்ன நகரத்திலே வேலாயுதத்தைத் தாங்கிச் சகல உயிர் களையும் இதஞ்செய்கின்ற சந்திராங்கதன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அந்த அரசன் தனது மனைவி இந்துமதியுடன் சகல பாக் கியங்களோடும் அரசியற்றிவரும் நாளில் மந்திரித்தலைவர்கள் முதலா யினோர் அரசனை வணங்கி மண்டலேஸ்வரா! காட்டில் மிருகங்கள் வெகுத்துவிட்டன. அவற்றை வேட்டையாடத் தாங்கள் எழுந்தருள வேண்டும்என வேண்டினார்கள். அரசனானவன் அதற்குச் சம்மதித்துத் தனதுசேனைகளோடு புறப்பட்டுக் காட்டிற்குச் சென்றான். வனத்திலே மிருகங்களையெல்லாம் கொலைசெய்து வந்தான். இச்சமயத்தில் இராக்கதர்கள் சிலர் வந்து அவனை எதிர்த்தனர். அவர்களையும் கண்ட

துண்டமாக்கி இரத்த வெள்ளம் ஓடும்படி செய்தான். இச்செய்தியைக் கேள்வியுற்ற அரக்கியானவள் வந்து அரசனை எதிர்த்துப்போர்செய்து அவன் கரத்தைப் பற்றுமாறுவந்தாள். வலியிளந்த அரசன் ஓர் மடுவில் பாய்ந்தான். அந்தமடுவில் ஸ்நானஞ்செய்ய வந்த நாகலோக ஸ்திரீகள் அரசனைக் கண்டார்கள். அவர்கள் உபசாரவார்த்தைகளைக்கூறித் தம்மைத் திருமணஞ்செய்யுமாறு கேட்டார்கள். அதற்குச் சந்திராங்கதன் மறுத்து விட்டான்.

இவ்விதமாக அரசன் மடுவில் இருக்கின்ற சமயத்தில் வேட்டைக்கு வந்த மந்திரி பிரதானிகள் காடுகள் முழுவதிலும் தேடியும் காணமல் அரசன் மடுவில் வீழ்ந்திறந்தான் எனநிச்சயித்து இந்துமதியிடம் கூற அவள் துயரங்கொண்டு வருந்தினாள். பின்னர் நாயகருக்குச் செய்ய வேண்டிய கருமாதிகளையெல்லாம் நிறைவேற்றினாள். இதன்பின்பு பன்னிரண்டு வருடங்கள் கழிந்தன. நாரதமுனிவர் அவ்விடத்திற்கு எழுந்தருளினார். இந்துமதி நமஸ்காரஞ்செய்து நிகழ்ந்ததைக் கூறினாள். முனிவர்விளம்புவார் உனது துன்பத்தை நீக்குவாய். உன்கணவர்நாக லோகத்தில் இருக்கின்றார். அரசன் வருவதற்குஓர்உபாயம்கூறுகின்றேன் விநாயகமூர்த்தியினுடைய சதுர்த்தி விரதத்தை அநுட்டித்து ஏகாட்சர மந்திரத்தைச் செபித்தால் பலன் விரைவில் கிட்டும் எனக்கூறி மறைந்தருளினார். இந்துமதி நாரதமுனிவர் கூறிய பிரகாரம் ஆகமவிதிப்படி சதுர்த்திவிரதத்தை அநுட்டித்து ஏகாட்சர மந்திரத்தை செபித்து வந்தாள்.

விநாயகருடைய திருவருளினால் நாகலோகக் கன்னியர்கள் மனம் இரங்கினார்கள். சற்றும் மனவுறுதி தளராத சந்திராங்கதனை அழைத்து வந்து மடுக்கரையில் விட்டுவிட்டு நாகலோகஞ் சென்றார்கள். அரசன் குதிரைமேல் ஏறி அரன்மனை நோக்கிச் சென்றான். அமைச்சர்கள் புரோகிதர்கள் யாபேரும்வந்து யானைமேல் ஏற்றி அரன்மனையை வலம்வரச் செய்தார்கள். அரசன்சகலருக்கும்தானதிகளை வழங்கினான். சகலசடங்குகளும் நிறைவேறியபின் மனைவியாகிய இந்துமதியுடன் இன்பமாக வாழ்ந்துவந்தான். நாரதமுனிவர் எழுந்தருளியதையும் அவர் கூறிய பிரகாரம் சதுர்த்தி விரதத்தை அநுட்டித்ததையும் மனைவியாகிய இந்துமதி கூறக்கேட்ட சந்திராங்கதராஜன் பேரின்பவீட்டை அடைந்து ஆனந்தசாகரத்தில் மூழ்கினான்.

## சண்முகர் அநுட்டித்த படலம்

முனிபுங்கவர்களே! விநாயகமூர்த்தியின் சதுர்த்தி விரதத்தால் சந்திராங்கதராஜன் தான் இழந்த நகரத்தை மீண்டும் பெற்று இறுதியில் முத்தியடைந்த வரலாறு கூறப்பட்டது. இனிமேல் சண்முகப்

பெருமான் அருட்டித்து அசுரர்களை வதஞ்செய்த திறனையும் சொல்லு வோம் என ஆரம்பித்தார். முன்னொரு காலத்திலே தாருகாசுரனும் அவன் சகோதரர்களும்அளவற்ற தவங்களைச்செய்தார்கள். அப்போது உமாபரமேஸ்வரராகிய சிவபெருமான் காட்சிகொடுத்து ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகம் அரசாளும் திறத்தினையும் வரமாகக் கொடுத்தருளினர். தாருகனுடைய ஆட்சியின்போது தேவர்களையெல் லாம் சிறைப்படுத்தி அளவற்றதுன்பத்தைச்செய்தனர்.இத்துன்பத்தைத் தாங்கமாட்டாத தேவர்கள் சிவபிரானை வேண்டித் துதித்தனர். அவ்வ மயம் ஆகாயத்திலே சிவபெருமான் சுப்பிரமணியக் கடவுளைத் தோற்று வித்தால்தான் உங்கள் துன்பமானது நீங்கும் என்று ஒர் அசரீரி கேட்டது இதனைக்கேட்ட விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலாம் தேவர்கள் சிவபெ ருமானை தரிசிக்க கைலையங்கிரி சென்றனர். அங்கு கோளரகிரியில் சன காதி முனிவர்களுக்குத் தத்துவஞானத்தைஉபதேசிப்பதைஅறிந்தார்கள்.

இதன்மேல் தேவர்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு சண்முகப் பெரு மானின் அவதாரம் பற்றி ஆராய்ந்தார்கள். அதன்மேல் மோனத்தில் இருக்கும் பரமசிவனிடம் அனங்கனை (மன்மதன்)சென்று மோனத்தைக் குலைக்கவேண்டும் என்று தீர்மானித்தார்கள். தேவர்களின் கட்டளையை மீறமுடியாத மன்மதன் தனது பாணங்களோடு சென்று எம்பெருமானது எதிரில் நின்றுபஞ்சபாணங்களையும் பிரயோகித்தான். அவ்வமயம் எமது பரம்பொருளானவர் தனது அனல் விழியைத்திறந்து அனங்கனைநோக்கினர் நோக்கியதும் அவ்விழியின் சுவாலையால் மன்மதனானவன்எரிந்து சாம்ப லாயினான். இதனைக்கண்டுஅனைவரும் நடுங்கினர். பார்வதிதேவியார் இறைவனை வணங்கித் தேவர்களது துயரை நீக்கியருள வேண்டும் என விண்ணப்பித்தனர்.

இதன்மேல் எம்பெருமான் கைலை சென்று உமாதேவியாருடன் அந் தப்புரத்தில் வீற்றிருந்தனர். அக்கினிதேவன் முதலாயினோர் மீண்டும் கைலைசென்று பிரார்த்திக்கபோது பரமசிவனானவர் தனது நெற்றிக்கண் ணின்றும் ஆறுபொறிகளைத் தோற்றுவித்து அக்கினிதேவனிடம் கொடுத் தார். அக்கினிதேவன் அதன் வெப்பத்தைத் தாங்கமாட்டாது சரவணப் பொய்கையில் சேர்த்தனன். சரவணப்பொய்கையில்சேர்க்கப்பட்ட ஆறு பொறிகளும் ஆறுகுழந்தைகளாக உருப்பெற்று வளர்ந்துவந்தன. இவர் களுக்குக் கார்த்திகைப் பெண்கள் பாலூட்டி வளர்த்தனர். இதனைப் பார்வதிதேவியார் விஷ்ணு மூலம் அறிந்தார். இறைவனும் இறைவியும் ஒருதினம் சரவணப்பொய்கை சென்றனர் பார்வதிதேவியார் பரம்பொ ருளின் அநுமதியுடன் ஆறுகுழந்தைகளையும் ஒன்றாகத் தூக்கினர். அப் போது ஆறுமுகங்களுடன் ஒரே குமரனாகக் காட்சி நல்கினர். இறைவி யானவர் குழந்தைக்குப் பாலூட்டி குழந்தையை இறைவனது திருக் கரத்திற் கொடுத்தார் பொய்கையில் வளர்ந்த குழந்தையைக் குகன் என்றும் கார்த்திகேயன் என்றும் பல பெயர்களைச் சூட்டி மக்கள் வழிபட்

டார்கள் சண்முகப்பெருமான் உலகம் உவக்கும்படி திருவிளையாடல்களை செய்து கொண்டிருந்தார். தேவர்கள் அனைவரும் சென்று சண்முகப்பெருமானைத் துதிசெய்து தாருகாசுரன் முதலாய அவுணர்கள் செய்துவருகின்றதுன்பங்களை நீக்கியருளுமாறு பிரார்த்தித்தனர். முருகக்கடவுள் தேவர்களுக்குஅபயங்கொடுத்து விரைவில்அநுக்கிரகிப்பதாகக்கூறினர்.

இதன்மேல் முருகப்பெருமான் கிருஷ்ணநதிக்கரைசென்று கணேசப்பெருமானைத்தியானித்துச் சடாட்சரமந்திரத்தைச் செபித்துத் துதித்தனர்விநாயகமூர்த்தியானவர் அருள்சுரந்து முருகப்பெருமானுக்குகாட்சி கொடுத்து சன்முகன் கேட்டவரங்களையும்கொடுத்து மயில்வாகனத்தையும்பரிசாகக்கொடுத்தார். இதன்மேல்விநாயகர் காட்சிநல்கியஇடத்தில் இலக்க விநாயகரைப் பிரதிட்டை செய்தார். அறுகு புட்பம் முதலியவற்றைக்கொண்டு அர்ச்சித்தார். மோதகம் முதலானவற்றை நைவேதித்து வழிபாடு நிகழ்த்தினர். இதன்மேல் தந்தையாராகிய சிவபிரானிடம் கைலைசென்றுஅவரின்அருளைப்பெற்றுக் கொண்டார். மயில்வாகனத்தில் ஆரோகணித்து வேலாயுதம் முதலாம் ஆயுதங்களுடன் போருக்குச் சென்றார்.தேவசேனைகளுடன்போருக்குச்சென்றமுருகப்பெருமான் தாருகாசுரன் முதலாய அவுணர்களை யெல்லாம் வதஞ் செய்தார். இதனல் தேவர்கள் முதலாய சகலஉலக மக்களுக்கும் இடையூறு நிகழாதவாறு அருள்புரிந்தார். இலக்க விநாயகரை வழிபடுவோருக்குத் துன்பங்கள் அனுகமாட்டாது அந்தத்தலமானது மயூரேசம் என்னும் பெயரால்வழங்கப்படுகின்றது.

## மன்மதன் உருவம் பெற்றபடலம்

முனிசிரேட்டர்களே! முருகக்கடவுள் விநாயகரை அநுட்டித்துத் தாருகாசுரன் முதலாய அவுணர்களை வென்ற சரிதம் கூறினோம். இனிமேல் மன்மதன் உருவம்பெற்றவரலாற்றைச்சொல்லுவோம்கேட்பிராக என்று ஆரம்பித்தார். சிவபிரானது நெற்றிக் கண்ணினல் மன்மதன் நீறானதும் அவனது பத்தினியாகிய இரதிதேவியானவள் பூமியில் விழுந்துபுரண்டு புலம்புவாள் காளகண்டரே! ஏழைப்பங்காளரே. எமது காதலர் செய்த அபராதத்தைப் பொறுத்தருளவேண்டும். அடியேனுக்கு மாங்கல்யப் பிச்சை தந்தருளவேண்டும் என பணிவாக வேண்டினள். தேவதேவோத்தமராகிய பரமசிவனனவர் இவ் வேண்டுகோளுக்குக் கருணைசுரந்து ஏ சிறுமியே! நம்மால் இறந்த மன்மதனனவன் உனக்கு மாத்திரம் உருவமாகவும் ஏனையோருக்கு அருவமாயும் இருப்பான் அஞ்சலை என்று திருவாய் மலர்ந்தருளினர். இரதிதேவியின் வேண்டுதலின் பிரகாரம் மன்மதனனவன் உயிர்பெற்று எழுந்து பரமசிவனைத் தோத்திரஞ் செய்தான். அடியேனை இரட்சிக்க வேண்டுமென்று இரந்தான். அதற்கு எம்பெருமான் புகல்வார் அனங்கனே! ஐந்துகரத்தையுடைய கணேசமூர்த்தியை வழிபாடுசெய்தால்

உனது எண்ணம் நிறைவேறும். எனக்கூறி ஏகாட்சரமந்திரத்தையும் அதனை அநுட்டிக்கும் முறையையும் கூறியருளினர்.

இதன்பின்னர் மன்மதனனவன் மயூரேசர் தலத்தை அடைந்து ஏகாட்சரமந்திரத்தை இடைவிடாது அநுட்டித்து வந்தான். கணேச மூர்த்தி தோன்றியதும் தேவகணநாயகமே! அடியேன்நல்லஉருவத்தைப் பெறுவதற்குத் தேவரீர் கருணைபாலிக்க வேண்டும் என விண்ணப்பித் தனன். இதற்கு இரங்கிய கணேசமூர்த்தி சொல்லுவார். விஷ்ணு வானவர் கண்ணனாக அவதாரம் செய்யப்போகின்றார். அந்தக்காலத்தில் உனக்கு நல்ல உருவம் உண்டாகும் எனக் கூறித் திருவுருவைக் கரந் தருளினர். மன்மதனனவன் விநாயகக் கடவுளுடைய திருவருளினல் கண்ணபிரானுக்கு மகனாகப்பிறந்தான். அப்போது நல்ல உருவத்தைத் தாங்கிப் பிரத்தியும்மன் என்னும் பெயருடன் யாவரும் புகழும்படி யாக வாழ்ந்திருந்தான்.

சம்பவன் என்னும் தானவன் தெய்வலோகஞ் சென்று இரதி தேவியைக் கைக்கொண்டு சென்றான். அவ்வமயம் அவனது கரத்தி னின்றும் நழுவி இரதிதேவியானவள் கடலினுள் விழ, ஓர் மச்சமானது இரதிதேவியை விழுங்கியது. சிலநாட் சென்றபின் வலையில் அகப்பட்ட மீனைச் செம்படவர் பிளந்தபோது அதற்குள் பெண் இருப்பதைக் கண்டார்கள் அப்பெண்ணைத் தம்புத்திரியாக வளர்த்து வந்தார்கள். நாரதமுனிவர்மூலம் கண்ணன் மகனாகிய பிரத்தியும்மன் இச்செய்தியை அறிந்தான். விநாயக சதுர்த்தியை அநுட்டித்த பிரத்தியும்மன் சம்பா சுரனுடைய உயிரை வதஞ்செய்தான். அதன்மேல் தனது மனைவியாகிய இரதிதேவியைக் கைப்பற்றிக்கொண்டு தன்பதியைச் சேர்ந்தனன். யாவரும் விநாயகவிரதத்தின் பெருமையை நோக்கி அளவற்ற தானங்களை வழங்கினர்.

மன்மதன்மகனாகிய அநுத்திரன் என்பவன் காளைப்பருவம் அடைந்து வாணன் என்னும் அரசனுடைய மகள் உஷை என்னும் பெண்ணை விவாகஞ் செய்தான். உஷை வயிற்றில் கருவுண்டாகியது இச் செய்தியை வாணன் அறிந்து அநுருத்திரனைச்சிறையில் இட்டனன். தாயாகிய உருக்குமணி இதனை அறிந்தாள். கணேசமூர்த்தியினுடைய விரதத்தை அநுட்டித்தாள். விரதநாள் முடியுமுன் தந்தையாகிய கிருஷ்ணரிடம் நாரதமுனிவர் செய்தியைத் தெரிவித்தார். கோபம் அடைந்து வாணனுடன் போர்செய்து அவனை வென்றார், தனது பௌவுத்திரனையும் அழைத்துக் கொண்டு வந்தார்.

## ஆதிசேடன் அநுட்டித்த படலம்

சவுனகாதி முனிவர்களே! மன்மதனுனவன் விநாயகவிரதத்தை அநுட்டித்த காரணத்தினுல் தனது படைகளுடன் பழைய உருவத்தைப் பெற்ற சரிதம்கேட்டீர்கள். மேலும் ஆதிசேடனுனவன் விநாயக விரதம் அநுட்டித்த சரிதையை இனிமேல் சொல்லுகின்ருேம். கேட்பீர்களாக என்று ஆரம்பித்தார். முன்பு ஒருகால் இருக்காதி வேதங்களாலும் தேவர்களாலும் காணடற்கரிய சாம்பசிவமூர்த்தியானவர் கைலையங்கிரியில் உமாதேவிசமேதரராக வீற்றிருந்தருளினுர். அவ்வமயம் பிரமனுதி தேவர்களும் முனீஸ்வரர்களும் வந்து வணங்கி வரம்பெற்றுக் கொண்டிருந்தார்கள். சிவபெருமானுடைய சடாமுடியில் இருக்கின்ற ஆதி சேடனுனவன் அறியாமையினுலே இத்தனைபேரும் தன்னையே வணங்குவதாக நினைத்துக் கர்வம் கொண்டான். ஆதிசேடனது கர்வத்தை அடக்க எண்ணிய எம்பெருமான் தமது கையினுல் ஆதிசேடனைத் தண்ணென்று இழுத்து நிலத்தில் மோதினுர். ஆதிசேடன் மயக்கமடைந்து செய்வது அறியாதவனுய் மூர்ச்சையாகிச் சுவாசம் அற்ற உடல்போலக் கிடந்தான். கைலையங்கிரிக்குப் பரமசிவனைத் தரிசிக்க வந்த நாரதமுனிவர் இதனைக் கண்டார்.

ஆதிசேடனை நாரதமுனிவர் பார்த்து உனக்கு என்ன நிகழ்ந்தது எனக்கேட்டார். ஆதிசேடன் நாணத்துடன் பதில் சொல்லாது கிடந்தான் நாரதமுனிவர் சொல்லுவார் நீ கர்வம் கொண்ட காரணத்தால் இவ்வாறு துன்பப்படுகின்ருய். இத்துன்பம் நீங்கவேண்டுமானுல் விநாயகக்கடவுளுடைய சடாட்சரமந்திரத்தை உபாசிக்க வேண்டும் என்ருர். அத்துடன் அதனைச் செபிக்கும் முறையையும் எடுத்துரைத்தார். ஆதிசேடனுனவன் மிகுந்த பயபக்தியுடன் சடாட்சரமந்திரத்தைச் செபித்துச் சதுர்த்திவிரதத்தையும் அநுட்டித்தான். ஆதிசேடனது வழிபாட்டிற்கு இரங்கிய கணேசப்பெருமான் யானைமுகம் பத்துத் திருக்கரங்கள் ஆகியவற்றுடன் சித்தி புத்தி சமேதரராகக்காட்சி நல்கினுர். நாகராஜன் சாஷ்டாங்கமாகப் பணிந்து பல தோத்திரங்களைக்கூறினுன்.

கணேசப்பெருமான் அன்பனே! நீ ஆயிரம் தலைகளோடு பூமியைத் தாங்குவாய் ஐந்து தலைகளோடு சிவபிரானுடைய திருமுடியில் விளங்குவாய். இப்போது இருக்கின்ற இந்த உருவத்துடன் எமக்கு ஆபரணமாக இருக்கக்கடவாய் இவ்வாறு அநுக்கிரகித்து விசுவரூபவடிவத்தில் ஆதிசேடனை எடுத்து வயிற்றைச் சுற்றிக்கொண்டனர். அதன் பின்பு ஆதிசேடன் அவ்விடத்தில் கணேசமூர்த்திக்கு ஓர் ஆலயம் அமைத்தான் அங்கே விநாயகமூர்த்தியைப் பிரதிட்டை செய்து தனக்கு அருள் வளங்கிய பெருமானைப் பூக்களைக்கொண்டும் திரவியங்களைக் கொண்டும் வழிபாடு செய்தான்.

# இந்திரன் விமானம் மண்ணழி படலம்

தலசிரேட்டர்களே விநாயக விரதத்தை ஆதிசேடன் அநுட்டித்துப் பயன்பெற்ற வரலாறு சொன்னோம் இனிமேல் இந்திரன்விமானம் மண்ணிழிந்த செயலினையும் கூறுவோம் கேட்பீராக எனத் தொடங்கினார். அழகுபொருந்திய சோலைகள் சூழ்ந்த பிரதேசத்திலே வேண்டிய வரங்களை நல்கக்கூடிய சுகந்திரபுரி என்னும் பட்டினத்திலே சூரசேன மகாராஜா என்பவர் கற்பிற் சிறந்த புஷ்ணியசீலை என்னும் மனைவியுடன் இருந்து தனது ஆஞ்ஞாசக்கரத்தைச் செலுத்திவந்தார் அவர் சகல பரிசனங்களும் புடைசூழச் சிங்காசனத்தில் வீற்றிருந்து மக்கள் அனைவருக்கும் கிருபைசெய்து கொண்டிருந்தார். அந்தச் சமயம் பல கோடி சூரியர்கள் சேர்ந்தாற் போன்ற பிரகாசத்துடன் ஓர் விமானம் வந்து பூமியில் இறங்கியது. இதனை அறிந்த சூரசேனராஜன் தனது படைகள் புடைசூழ அவ்விடம் சென்றான். அங்கு விமானத்தில் தேவேந்திரன் வீற்றிருப்பதைக் கண்டு வணங்கினான். மேலும் அவன் தேவேந்திரனைப் பார்த்து சுரலோக சக்கரேஸ்வரா தவரீர் பொன்னுலகத்தை விட்டு இங்கு வந்த காரணத்தை அறியத்தர வேண்டும் எனவேண்டினான். அதற்கு இந்திரனானவன் விளம்புவான் விநாயகமூர்த்தியினுடைய அநுகிரகத்தைப் பெற்ற புருசுண்டி என்னும் மகான் பூமியில் இருப்பதாக நாரதமுனிவர் கூறினார். அதன் பிரகாரம் நாம் அவரைக் கண்டு அவரது பாதகமலங்களைத் தொழுதோம். அதன்மேல் மீண்டும் ஆகாய மார்க்கமாகச் சென்றோம். இவ்விடத்திற்கு நேராக வந்தபோது குட்டநோய்கொண்ட வைசியகுமாரனுடைய பார்வையால் விமானம் உனது பூமியில் இறங்கியது சதுர்த்தி விரதம் அநுட்டிக்கின்ற ஒருவனால் விமானம்பூமியை விட்டெழும் எனச்சொன்னான்.

இந்திரன் கூறியவற்றைக் கேட்ட சூரசேனமகாராஜா செய்த தவங்களைப்பற்றிக் கூற வேண்டும் எனப்பிரார்த்தித்தான். அதற்குத் தேவேந்திரன் அரசனே இலக்குமி விலாசம பொருந்திய தண்டகவனம இருக்கின்றது. அங்கே பழமையான நந்துமென்னும் நகரம் இருக்கின்றது அந்த நகரத்திலே கொடுந்தொழில்களைப் புரிகின்ற விப்பிரதன் என்னும் வேடன் ஒருவன் இருந்தான அவன் காட்டிலே ஓர் அந்தணன் வருவதைக்கண்டு அவனைப் பின்தொடாந்தான். நெடுந்தூரம் சென்றும் அவனைப்பிடிக்க முடியவில்லை மனவேதனையோடு திரும்பிவந்தான் அவ்வாறு வரும்போது அந்தவனத்தில் ஓர் விநாயகமூர்த்தியினுடைய கோயிலும் தீர்த்தமும் இருக்கக் கண்டான், அவவிடம் சென்று தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்தும் தனது மனக்குறைநீங்காது இருந்தான் தலசிரேட்டராகிய முற்கலமுனிவர் சென்றார். அந்தவேடன் அம்முனிவருடைய உயிரைக் கவரும்படியாகவந்து வாளை ஓங்கினான் உடனே

முற்கலமுனிவர் திரும்பி வேடனைத் தமது விழிகளால் அவனை நோக்கினார் உடனே அவனது எண்ணமும் பாதகங்களும் நீங்கி அவன் மெய்யறிவு பெற்றான்.

உடனே நல்லறிவுடன் சுவாமீ! என்மீது கிருபை வைத்து என்னைக் காத்தருள வேண்டும் எனத் தொழுதான். முற்கலமுனிவர் விப்பிரதனுடைய அன்பினை உணர்ந்து இவனுக்கு நன்மை செய்ய வேண்டும் என உறுதிபூண்டார். விப்பிரதனே நீ ஸ்நானஞ் செய்து வருவாய் என்று கட்டளையிட்டார். அதன் பிரகாரம் அவன் வந்ததும் அவனது தலையிலே தமது கையை வைத்து "ஓம் கணேசாய நம" என்னும் மந்திரத்தை அவன் காதிலே உபதேசித்தார் அதன்மேல் விப்பிரதனுடைய எதிரிலே ஒரு உலர்ந்த தடியை நாட்டினார். அன்பனே இந்தத் தடி தளிர்க்கும்வரை விநாயகமூர்த்தியைத் தியானித்து இந்த மந்திரத்தைச் செபிக்கக்கடவாய் சகலதும் சித்திக்கும் என்று கூறிச் சென்றார்

வேடனானவன் முனிவர் கூற்றின்படி மந்திரத்தைத் தொடர்ந்து செபித்து வந்தான் தண்டானது ஆறுவருடங்களின் பின் தளிர்த்துப் பூத்தது. அந்நேரம் முற்கலமுனிவர் அங்கு எழுந்தருளினார். விப்பிரதனுடைய மனவுறுதியைக்கண்டு மகிழ்ந்தார். மந்திரித்த நீரை அவனது உடலில் தூவினார் அந்த நீரின் மகிமையால் அவன் முன் செய்த பாதகங்கள் அனைத்தும் நீங்கின. மந்திர ஜலத்தின் பெருமையால் விப்பிரதனுடைய புருவமத்தியில் துதிக்கை தோன்றியது அவன் விநாயகமூர்த்தியைப்போன்ற உருவ அமைப்பைக் கொண்டான். அன்பே உருவமாக அமைந்த முற்கலமுனிவர் கணேசமூர்த்தியினுடைய ஏகாட்சர மந்திரத்தை விப்பிரதனுக்கு உபதேசித்தார் அதனை அவன் ஆயிரவருடம் செபித்து வந்தான், கணேசமூர்த்தி கிருபை கூர்ந்து தரிசனம் கொடுத்தார்.

விநாயகப்பெருமான் தரிசனங் கொடுத்ததும் புருசுண்டி முனிவர் நமஸ்காரஞ்செய்து ஐங்கரப்பெருமானே அடியேன் தேவர்களுக்கும் கிடைத்தற்கரிய தங்கள் திருவுருவை அடைந்தேன். தேவரீருடைய திருவடிப்பேற்றை எனக்கு அருளவேண்டும் எனப்பிரார்த்தித்தனன் விநாயகப்பெருமான் அதற்கு இரங்கினவராய்ச் சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கு புருஷார்த்தங்களையும் அவற்றின் தன்மைகளையும் போதித்தார். அன்பனே நான்கு உபாயங்களையும் கடைப்பிடித்து மனதிலே ஆசிரியருடைய உருவத்தைப்போலத் தியானஞ்செய்து சொரூப பாவனையாக மனத்திலே அபிஷேக ஆராதனைகளை நிகழ்த்துதல் வேண்டும். இதுவே பரம்பொருளின் திருவடிகளை அடையத்தக்க மார்க்கமாகும். இதனைக்கூறிய கணேசப்பெருமான் புருசுண்டிக்குப் பூரணகடாட்சமும் வழங்கி விட்டுத் திருவுருவைக் கரந்தருளினார்.

புருசுண்டி முனிவர் இவை அனைத்தையும் அன்போடு கேட்ட மகத்துவத்தால் சீவன்முத்தராயிருக்கின்றனர் என்று சொல்லியருளினர். மீண்டும் சூரசேனமகாராசன் தேவேந்திரனைப் பணிந்து இவ்விடத்தில் சங்கடசதுர்த்தி அநுட்டிக்கின்ற ஒருவனுல் இவ்விமானம் திரும்பவும் மேலெழும்பித் தேவலோகம் செல்லும் என்று சொன்னீர்கள் அவ்விரதத்தின் மகிமைகளையும் அடியேற்குச் சொல்லவேண்டும் என வேண்டி நின்றனன் அதற்குத் தேவராசன் அரசனே! புருசுண்டி என்பவர் தான் இந்தத்தன்மைக்கான மகத்துவம் மிக்கவர் என்று சொல்லியருளினர்.

## புருசுண்டி சங்கடசதுர்த்தி விரதமனுட்டித்த படலம்

சகலசித்திகளையும் பெற்ற முனிவர்களே!

இந்திரவிமானம் மண்ணிழிந்ததையும் புருசுண்டி சீவன்முத்தரானதையும் சொல்லக் கேட்டீர்கள் இனிமேல் அப்புருசுண்டிமுனிவர் சங்கடசதுர்த்தி அநுட்டித்த முறையினைக் கூறுகின்றேம் என ஆரம்பித்தார்.

ஓர்தினம் நாரதமுனிவர் நீதிசெலுத்தி வருகின்றயமதருமராசன் உலகிற்குச் சென்றார். அங்கே யமதருமராசன் விரைந்து எழுந்து பூசித்துச் சுவாமீ தாங்கள் இங்கு எழுந்தருளிய காரணம் யாதோ? என வினவினன் அதற்கு முனிவர் கூறுவார் உனது உலகத்தின் வளங்களைக் காணவந்தேன் என்றார். தருமராசன் இது மகாபாக்கியம் எனக்கூறி நாரதமுனிவரை அழைத்துக்கொண்டுசென்று அந்நகரத்தின் விநோதங்களையெல்லாம் காண்பித்தான மேலும் நரகலோகத்திற்கு அழைத்துச் சென்றபோது அங்கு அளவற்றபேர்கள் நரகங்களில் வருந்துவதைக் காண்பித்தனன் அவ்வாறு பார்த்துக்கொண்டுசெல்லுகையில் கும்பிபாதம் என்னும் நகரத்தைக்கண்டார்கள். அங்கே புருசுண்டிமுனிவரின் சுற்றத்தவர்கள் யாவரும் கிடந்துவருந்துவதை நாரதமுனிவர கண்டார். பின்பு நாரதமுனிவர் சிவபெருமானைத் தியானித்துக்கொண்டு தருமராசனிடமும் விடைபெற்று அவ்விடத்தை விட்டு அகன்றார்.

இதன்மேல் நாரதமுனிவர் புருசுண்டி முனிவரிடம் சென்று சர்வசித்திப் பிரதாபகரே நீர் விநாயகக்கடவுளுடைய பெருங்கருணையினுல் சாருபத்தைப் பெற்றிருக்கின்றீர் உம்முடைய உறவினர்கள் யமலோகத்தில் கும்பிபாதம் என்னும் நரகத்தில் வீழ்ந்து வருந்துகின்றார்கள் அவர்களை நற்கதி சேர்ப்பிக்க முயற்சி எடுப்பீர் என்று சொல்லிவிட்டு ஆகாயமார்க்கமாகச் சென்றுவிட்டார்.

நாரதமுனிவர் கூறியவைகக் கேட்ட புருசுண்டி சிறிதுநேரம் தியானத்தில் இருந்து மனத்தில் ஓர் தீர்மானம் கொண்டவராஞர். பொருட்களைச் சேகரிப்பதற்காகப் பாவங்களைச் செய்து நரகத்தில் வீழ்ந்து வருந்தும் சுற்றத்தாருக்கு விமோசனம் நல்க முற்பட்டார். தாம் ஆகம முறைப்படி சங்கடசதுர்த்தி அனுட்டித்த விரதபலனை முன்னர் தம்மை ஆட்கொண்ட கணேசமூர்த்தியினுடைய திருக்கரத்தில் தத்தஞ்செய்தனர் உடனே கும்பிபாகம் என்ற நரகத்தில் இருக்கும் சுற்றத்தவர்கள் அனைவரும் விமானங்களில் ஏறித் தெய்வலோகம் சேர்ந்தார்கள். எனவே ஓர்தினம் அனுட்டித்தபலன் இவ்வாறாயின் அநுதினமும் அனுட்டிப்போர் பெறும்பயனை யாரால் அளவிட்டுக் கூறமுடியும் என்று தேவேந்திரராஜன் சூரசேனராசனுக்குச் சொன்னுன்.

## கிருதவீரியன் தவம்புரி படலம்

முனிபுங்கவர்களே விநாயக்கடவுளின் சங்கட சதுர்த்தியைப்புருசுண்டி அனுட்டித்துத் தமது சுற்றத்தவர்களைத் தெய்வலோகஞ்சேர்த்த மகத்துவத்தை உங்களுக்குச் சொன்னேம் கிருதவீரியன் தவம்புரிந்து பலன்பெற்றதையும் இனிமேல் சொல்லுவோம் என்று தேவேந்திரன் சூரசேனமகாராஜனுக்குக் கூறுவான், அரசனே! உலகம் முழுதும் தொழும்படியாகக் காலந்தவருமல் நீர்சுரந்தளிக்கின்ற காவிரிநதியை உறைவிடமாகக் கொண்ட சையவரையில் வையகம் முழுதும் வணங்கத்தக்க கிருதவீரியன் என்னும் இயற்பெயரை உடைய ஓர் அரசன் இருந்தான் அவன் சுகந்தை என்னும் மனைவியோடு இல்லறம் நடாத்தி வருகையில் அவனுக்குப் புத்திரப்பேறு கிடைக்கவில்லை அவனும் மனைவியும் வனஞ்சென்று காற்றையும் சருகையும் புசித்துக் கடுந்தவஞ்செய்தனர். இதனை நாரதமுனிவர் அறிந்தார் அவர் உடனே பிதிர்லோகஞ்சென்று கண்டு பிதிர்தேவனே! உனது குமாரனாகிய கிருதவீரியன் புத்திரப்பேறு குறித்து மிகுந்ததவம் செய்கின்றுன். புத்திரன் கிடைக்காவிட்டால் உயிர் வைத்திருக்கமாட்டான். விரைவில் புத்திரப்பேறு கிடைக்க முயற்சியை மேற்கொள்ளுவாய் எனக்கூறி ஆகாயமார்க்கமாகச் சென்றுர்.

இதனைக்கேட்ட பிதிர்தேவன் உடனே சத்தியலோகம் சென்று பிரமதேவனை வணங்கிச் சுவாமீ எனது செல்வக்குமாரனுக்கு மகப்பேறு கிடைக்காத காரணத்தை அடியேனுக்கு அறியத்தரவேண்டும் என்று இரந்தான், அதற்குப் பிரமதேவர் கூறுவார் உனது மைந்தனுகிய கிருதவீரியன் முற்சனனத்தில் இவ்வூரில் அரசவம்சத்தில் சாமந்தன் என்னும் பெயருடன் வாழ்ந்தான், அவனுக்குக் கணேசன் என்னும் புத்திரன்

பிறந்தான். இவ்வாறு இருக்கின்றநாளில் வறுமை காரணமாக இரண்டு மூன்று தினங்கள் பட்டினி கிடந்தான். உணவு கிடைக்காத காரணத்தால் கானகஞ் சென்றான். காட்டிலே பன்னிரண்டு பிராமணர்கள் வழிக்கொண்டு செல்வதைக் கண்டு அவர்களை இருப்புத்தடியால் அடித்துக் கொலைசெய்தான் அவர்களிடம் இருந்த பொருட்களை எடுத்து வீடுசென்றான் வீடு தாள்இட்டு இருப்பதைக் கண்டான் கணேசா என்று மூன்றுமுறை கூவினான். அதன்மேல் தனது மகன் உயிரற்ற நிலையில் சடலமாகக் கிடப்பதைக் கண்டு தாங்கமுடியாத துக்கம் கொண்டான் பிரமகத்தி அவனைப்பிடித்துக் கொண்டது.

சாமந்தனின் மகன் கணேசன் பசியின் கொடுமையால் இறந்த போதிலும் சங்கடசதுர்த்தியிலன்று இறந்தமையால் விநாயகப்பெருமானின் விமானத்தில் சென்று விநாயகலோகத்தை அடைந்தான். அந்தணனைக் கொன்றமையால் பிரமகத்தி பிடித்துக்கொண்டது கொலைப்பாதகம் ஒழியவேண்டுமானால் யானைமுகக்கடவுளினது சங்கடசதுர்த்தியை அநுட்டிக்கவேண்டும். மாசி மாசத்தில் அபர பட்சத்தில் செவ்வாய்க்கிழமையில் கூடிய சதுர்த்தி தினத்திலன்று உதயநேரத்தில் எழுந்துஸ்நானம் முதலியவைகளை முடித்துச் சிவசின்னங்களை அணிந்து கணேசமூர்த்தியின் பாதகமலங்களைத் தியானித்து ஏகாட்சரம் முதலாம் மந்திரங்களைச் செபிக்கவேண்டும். சந்திரோதயத்தில் சந்திரனுக்குப் பூசைசெய்யவேண்டும் வேதியர்களுக்கு அறுசுவையோடுகூடிய உணவை வழங்கவேண்டும் அன்றிரவு நித்திரையின்றி விநாயகப்பெருமானுடைய சரித்திரத்தைக்கேட்க வேண்டும் இவ்வாறு ஒருவருடம் வரை அநுட்டிப்போர்க்குப் புத்திரப்பேறு முதலான பாக்கியங்கள் கைகூடும். செவ்வாய்க்கிழமைகளில் வரும் சதுர்த்தி விநாயகப்பெருமானுக்கு விசேடமானது என்று பிரமதேவன் கூறுதலும் அதன் விசேடத்தையும் சொல்லுமாறு பிருகுதேவன் கேட்டுக் கொண்டான்.

பிரமதேவன் கூறுவான் முன்னொரு காலத்திலே விநாயகமூர்த்திக்கு அன்பராகிய பரத்துவாசமுனிவர் நருமதையில் ஸ்நானஞ் செய்துவிட்டுச் செல்லும்போது கங்கைக்கரையில் அழகியபெண் ஒருத்தி நிற்கக் கண்டு அவள்மேல் மையல்கொண்டார். அதன் காரணமாக ஒரு மகன் தோன்றினான். அங்காரகன் என்னும் அவனைப்பூமகள் வளர்த்துவந்தாள் பின் பரத்துவாசர் ஆச்சிரமத்தில் சேர்த்தாள். முனிவர் அக்குழந்தைக்கு உபநயனம் முதலாம சடங்குகளை நிறைவுசெய்து கணேசமந்திரத்தை உபதேசித்தார். அங்காரகன் வனஞ்சென்று கணேசப்பெருமானின் திருவடிகளைத்துதித்துக் கணேச மந்திரத்தை ஆயிரம் வருடம் வரையில் செபித்துக் கொண்டிருந்து தவஞ்செய்தான் கணேசப்பெருமான் அருள்சுரந்து காட்சி கொடுத்தார். அன்பனே நீவிரும்பியபடி

அங்காரகவாரமும் சதுர்த்தியும் வரும்நாளில் என்னைப் பூசிப்பவர்களுக்குச் சகல சங்கடங்களையும் நீக்கியருளுவோம் என்று வரம் கொடுத்தார். இதனைப் பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொன்னதாகத் தேவேந்திரன் சூரசேனமகாராஜனுக்கு விளம்பினான்.

## சந்திரன் அநுட்டித்தபடலம்

முனிவர்களே விநாயகமூர்த்தியை அங்காரகன் அநுட்டித்தத்திறத்தினைச் சொன்னோம் இனிமேல் சந்திரனனவன் அநுட்டித்துசனது சாபத்தை நிவர்த்தி செய்ததையும் கூறுவோம் என்று பிரமதேவன் சொல்லுவான் முன்னொரு கால் யான் கைலையங்கிரி சென்றபோது பரமசிவனுடன் விநாயகர் சுப்பிரமணியர் ஆகியோரும் வீற்றிருந்தாாகள். நாரதமுனிவர் ஒரு மாங்கனியைக் கொண்டு வந்து பரமசிவனது முன்னிலையில் வைத்து நமஸ்காரஞ்செய்து யாழைமீட்டினுர். அவ்வமயம் நமது இறைவனனவர் என்னைப்பார்த்துப் பிரமனே இக்கனியாருக்குத் தரத்தக்கதுஎன வினவினர்: யான் இளையவராய் இருக்கின்ற முருகக்கடவுளுக்கே கொடுக்கத்தக்கது என்று கூறினேன், கணேசமூர்த்தியானவர் கோபங்கொண்டு விழிகளில் தீப்பொறிகள் பறக்க நோக்குதலும் யான் பலமுறைதுதித்து மன்னிக்குமாறு வேண்டினேன் இதனைக்கண்ட சந்திரன் சிறிது நகைத்தனன். இதனைக்கண்ட கணேசப்பெருமான் நீஎன்னைப்பார்த்து நகைத்தபடியால் உலகத்தில் பிரகாசம் இல்லாது இருக்கக்கடவாய் என்று சபித்தனர்.

இவ்வாறு சாபத்தைப் பெற்றுக்கொண்ட சந்திரனனவன் தன்னொளி மறைக்கப்பட்டவனாய் ஆகாய மார்க்கமாகத் திரிதல் இன்றி மனவருத்தத்தோடு இருந்தனன் தேவர்களுக்கு அமுதபானமுங் கிடைக்கவில்லை. இந்திரன்முதலாம் தேவர்கள் விநாயகப் பெருமானிடஞ் சென்று பாதாரவிந்தங்களைத் தொழுது சுவாமி சந்திரன் செய்தகுற்றத்தைத் தேவரீரே பொறுத்தருள வேண்டும். சந்திரனுடைய சாபத்தை நிவர்த்தி செய்யவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள். சந்திரனும் நிவர்த்தி செய்யுமாறு இரந்தனன். இதன்மேல் கணேசப்பெருமான் சொல்லுவார் ஆவணிமாதத்தில் பூர்வபட்சத்தில்வருகின்ற சதுர்த்தியில்மாத்திரம் யாரும் சந்திரனைப்பார்க்கக்கூடாது. மற்றைய நாட்களில் முன்போலவே அவர் உருவைப்பார்க்கலாம் இவ்வாறு சாபநிவர்த்தி செய்கின்றோம் என்று திருவாய் மலர்ந்தார். தேவர்கள் அனைவரும் யாம்உய்ந்தோம் என்று ஆனந்தம் கொண்டார்கள்: சந்திரனிடம் சென்று ஏகாட்சர மந்திரத்தை உபதேசித்து இதனை இடைவிடாது செபித்துக் கணேசப்பெருமானின் கருணையைப் பெறுவாய் எனக்கூறிவிட்டுத் தேவர்கள் சொர்க்கலோகஞ் சென்றனர்.

இதன்மேல் சந்திரன் கங்கைக்கரையில் மனேதிடத்துடன் ஏகாட் சரமந்திரத்தை இருபத்தைந்து வருடம் செபித்துவந்தான். விநாயகப் பெருமான் காட்சிதந்து சந்திரனே. வேண்டிய வரங்களைக் கேட்பாய் எனக்கூறினுர். சந்திரன் தான் அறியாமையினுல் செய்த பிழைகளைப் பொறுக்குமாறு பிரார்த்தித்தனன். கணேசமூர்த்தியானவர் சந்திரஉத யத்தில் என்னைப்பூசிக்கின்றவர்கள் உன்னையும் பூசிக்கவேண்டும் அத்து டன் பாலச்சந்திர விநாயகர் என்னும் நாமம் உனக்கு வழங்குவதாக என்று அருளிச்செய்தார் விநாயக்கடவுளை அனுகினுல் பூசிக்கின்றவர் கள் பெரும்பயனைப் பெறுவார்கள் எனக்கூறியருளினுர்.

## விடைகலப்புலேச்சி விடுறு படலம்

முனிசிரேட்டர்களே விநாயகப்பெருமானின் திருமுடிக்குச் சந்திரன் ஓர் அணியான தன்மையும் அங்காரத சதுர்த்தியில் சந்திரனைப் பூசிக்க வேண்டிய காரணத்தையும் சொன்னேம். இனிமேல் தூர்வை மகத் துவத்தைக் கூறுவோம் என்று தேவேந்திரன் சூரசேனமகாராசனை நோக்கிச் சொல்லுவான் அரசனே பிதிர்தேவன் அழகுவாய்ந்த அவந்தி என்னும் பட்டணத்திலே சுலபன் 'என்னும் 'பெயரையுடைய ஓர் அரசன் இருந்தான் அவனுக்குச் சுபத்திரை என்னும்மனைவி இருந்தாள் இருவரும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வந்தனர் நீதிவழுவாது அரசிபற்றிவந்தான் கங்காதரராகிய சிவபெருமானிடத்து அளவற்ற பக்திபூண்ட மதுசூதனன் என்னும் வேதியன் அந்த அரசனிடம் வந்து யாசித்தான். அரசனுனவன் முன்செய்த ஊழ்வினைப்பயன் காரணமாக நகைத்தான். இதனுல் கோபங்கொண்ட வேதியன் இடபத்தைப்போல என்னைப்பார்த்து நகைசெய்தனே. ஆதலால் எருதின் வடிவாகிப்புல்லைப் புசிக்கக்கடவாய்என்று சபித்தனன். இதனைக்கேட்டசுபத்திரைகூறுவாள் வேதியனே நீ அரசன் என்பதனையும் பொருட்படுத்தாமல் இவ்வாறு சாபம் இட்டனை ஆகவே நீகழுதையாகி வண்ணுன் கையில் சிக்கண்டு மூட்டைகளைச் சுமக்கக்கடவை எனச் சபித்தனள் இதன்மேல் வேதி யன் சொல்லுவான் நீபுலேச்சியாகி உணவு இல்லாது துன்பப்பட கடவை என்று சபித்தனன்.

இவ்வாறு மூவரும் தாங்கள் இட்டசாபத்தினுல் துன்பப்படத் தொடங்கினுர்கள் சுபலமகாராஜன் எருதினது வடிவத்துடன் ஓர் உழ வனிடஞ் சென்று துன்பப்பட்டான். வேதியன் சழுதையாகி வண்ணுன் கையிச்சிக்கித் துன்பப்பட்டான். சுபத்திரை புலேச்சியாகிப் பிச்சை எடுத்துஉண்டாள் எருது ஏரியில் உழுது கொண்டிருந்தது. கழுதை வண் ணுன் மூட்டைகளை முதுகெலும்பு நோகச்சுமந்து புல்லை மேய்த்து

கொண்டிருந்தது புலைச்சியாளவள் குளிர் காய்வதற்காக மரப்பட்டைகளையும் புல்லையுஞ் சேகரித்துக் கொண்டு சென்றாள் எனவே இம்மூவரும் ஓர் இடத்தில் சந்திக்கின்றனர். ஆகாயத்தில் மழைபொழிந்தது உழவன் எருதினது கட்டை அவிழ்த்துவிட அது விநாயகர் ஆலயம் புகுந்தது அக்கோயிலின் பக்கத்திலே புல்லை மேய்ந்து கொண்டிருந்த கழுதையும் அவ்வாறே சென்றது. மழைகாரணமாகப் புலைச்சியும் ஆலயத்திலே ஒதுங்கினாள் கழுதையும் எருதும் புலைச்சி வைத்திருந்த புல்லைப் பிடுங்கித்தின்றன புலைச்சி ஒரு கோலை எடுத்துக் கழுதையை அடித்தனள் கழுதை தனது காலால் எருதை உதைத்தது.

எனவே மூவரும் ஒரே நேரத்தில் சத்தம் இட்டார்கள் அன்றைய தினம் விநாயகசதுர்த்தியாகும் கணேசப்பெருமானுக்கு அந்த ஆலயத்தில் பூசைகள் நிறைவேற்றி மந்திரங்கள் செபித்துக்கொண்டிருந்த முனிவர்கள் தடி கொண்டுவந்து இவற்றை அடித்துத்துரத்தினார்கள் இச் சந்தர்ப்பத்தில் வடைக்காற்று வீசி மழைபொழிந்தது இதனால் அம் மூவரும் செல்வதற்கு இடம் இல்லாது அந்த ஆலயத்தைப் பலமுறை சுற்றி வந்தார்கள் புலைச்சிகையில் இருந்த புல்லும் காற்றின் நிமித்தம் கணேசமூர்த்தியினது திருமேனியிலும் எருது, கழுதை இவற்றினது வாயினின்று எழும்பிய புற்கள் திருவடியிலும் வீழ்ந்தன. இவற்றையெல்லாம் அசுத்தம் எனக்கருதிய முனிவர்கள் அந்தப்புற்களை அகற்றிச் சுத்தஞ்செய்து பூசைகளை நிறைவேற்றினர் மேலே கூறப்பட்ட மூவரும் ஆலயத்தை வலம்வந்ததாகவும் காற்றின் நிமித்தம் திருமேனியில் பட்ட அறுகம்புல்லு அர்ச்சனையாகவும் ஏற்றுக்கொண்ட கணேசப்பெருமான் ஓர் விமானத்தை அனுப்பி மூவரையும் அழைத்துவருமாறு தேவகணங்களிடம் பணித்தார். சதுர்த்தி தினத்தில்நடந்த விசேடம் ஆகையால் அம்மூவரும் தேவசரீரம் பெற்று விமானத்தில் ஏறிச் சென்றனர். என்று பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் சொன்னதாகத் தேவேந்திரன் சூரசேன மகாராஜனுக்குக் கூறினன்.

## பாலச்சந்திராவதாரம்
## தூர்வையருச்சனைப் படலம்

முனிசிரேட்டர்களே! இதுகாறும் தூர்வை மகத்துவத்தைச் சொன்னோம். இனிமேல் தூர்வை அருச்சனையைச் சொல்லுகின்றோம். என இந்திரன்சூரசேனமகாராஜனை நோக்கிக்கூறுவார். புலைச்சி முதலாய மூவரும் விமானத்தில் சென்றபின்னர் என்னநடந்தது எனக்கேட்டு தவசிரேட்டர்கள் அனைவரும் ஒருங்குகூடிச்சிந்தித்தார்கள். இழிவான

தொழில்களைச் செய்வோருக்கும் ஒரு அறுகு உயர்ந்த புண்ணியத்தைக் கொடுத்துள்ளதாயின் விநாயகக்கடவுளை அறுகினல் அர்ச்சிப்போர் பெறும் மேன்மையை அருளவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் இதற்கு விடை கூற விழைந்து தேவகணங்கள் கூறுவார்கள்.

தாபரம் என்னும் நகரிலே தென்திசையிலே ஒடக்கரையைத் தமக்கு ஆச்சிரமமாகவுடைய கவுண்டின்னிய முனிவர் இருந்தார். அவரது பத்தினி பெயர் ஆசிரியை. இவர்கள் தவஞ்செய்து வருகையில் முனிவரானவர் பக்திமேலிட்டினல் தினமும் குற்றமற்ற பதினயிரம் அறுகுகளைக் கொண்டு வந்து அருச்சனை செய்தார். இதனைக்கண்ட அவரது மனைவி சுவாமி! வாசனை மிக்க புட்பங்கள் பல இருக்கும் படியாகப் பிரதி தினமும் அறுகுகளைக்கொண்டு வந்து அர்ச்சிக்கின் றீர்கள் இதற்கு என்ன காரணம் என்று கேட்டனள் முனிவர் புகலு வார் அறுகின் பெருமை பரம இரகசியமாகும், எனினும் கூறுகின் றேன் எனப்பின்வருமாறு சொல்லுகின்றார்.

முன்பு ஒரு காலத்தில் கருடர் கிம்புருடர் விஞ்சையர் முதலாம் முனிவர்கள் புடைசூழ்ந்திருக்க தருமராசனுடைய சபையில் திலோத் தமை அரம்பையர் முதலான தேவஸ்திரீகளது நடனம் முதலியன நடந்தபோது அதனை யமதருமராஜன் கண்டு களித்தான். அவன் ஆசையின் நிமித்தம் அனலாசுரன் என்பவன் தோன்றினன். பெருவலி யுடைய இந்த அவுணனைககண்டு விஷ்ணுமுதலாம் தேவர்கள் நடுங்கி னர்கள். பின்னர். விநாயகமூர்த்திதான் இவனை அழிக்கத்தக்கவர் எனத்தீர்மானித்து அனைவரும் ஒரு கூட்டமாக இருந்து கணேசப் பெருமானைத்தோத்திரஞ் செய்தார்கள். அனலாசுரனை அழித்து அடி யேங்களைக் காக்க வேண்டும் என விண்ணப்பித்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் தேவர்கூட்டத்தை தேடிக்கொண்டு அனலாசுரன் அவ்விடம் வந்தான். இவன் வரவைக்கண்ட தேவர்கள் விநாயகப் பெருமானைச் சரணடைந்தார்கள். தனக்கு எதிரில் வந்த அனலாசுரனைத் தமது கரத்தில் அடங்குமாறு செய்த கணேசமூர்த்தி அசுரனே! நீ இவ்வுலகத்தை வருத்தினை இன்னும் பல உலகங்கள் நமது அகட்டினுள் இருக்கின்றன அவற்றையும் பார்க்கக் கடவை என்று ஒரு கவளமாக எடுத்து விழுங்கி விட்டார். கணேசப்பெருமானின் உதிரம் எல்லாம் அனலாகப் பற்றிக்கொண்டது. இதனை நீக்கும் பொருட்டுக் குளிர்ச்சி யான பல பொருட்களைக் கொண்டு வந்து அபிஷேகித்தார்கள். வெப்பம் நீங்கவில்லை. எண்பதாயிரம் முனிவர்கள் வந்தார்கள். ஒவ்வொருவரும் தனித்தனி இருபத்தொரு அறுகுகளைக்கொண்டு சிரசு முதல் பாதம் வரை சொரிந்தார்கள். அப்பொது வெப்பம் நீங்கியது

விநாயகப்பெருமான் முனிவர்களைப் பார்த்துக்கூறுவார். உங்களது அறுகினால் வெப்பம்குறைந்தது பூசனைக்குக் குறைந்தது ஒரு அறுகாயினும் சாத்திவழிபட்டால் அவர்களுக்குப் பலன் கிடைக்கும் எனக் கூறித் தமது திருவுருவைக் கரந்தருளினார். தேவர்கள் முதலாயினோர் அந்த இடத்திலே கணேசமூர்த்தியைப் பிரதிட்டை செய்து பல திரவியங்களைக் கொண்டு வந்து அபிஷேகித்தார்கள். அறுகினால் அருச்சனை செய்தார்கள். அசுரனை விழுங்கியகாரணத்தால் காலானலப் பிரசமரென்றும் சந்திரனைப்போலக் குளிர்ச்சி தந்தமையால் பாலசந்திரனென்றும் நாமம் இட்டுத் தங்கள் தங்கள் பதவிகளைச் சேர்ந்தார்கள். விநாயகருடைய பூசைக்கு அனந்தம் மலர்களிலும் அறுகு சிறந்ததாக அமைந்ததின் காரணத்தைக் கவுண்டினிய முனிவர் தமது பத்தினிக்குச் சொன்னதாகத் தேவகணங்கள் முனிவருக்குச் சொன்னார்கள். இதனைப்பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் எடுத்துரைத்தான். அதனைத்தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்கு விளம்பினான்.

## தூர்வை யாசகப் படலம்

சவுனகாதிமுனிவர்களே! விநாயகப்பெருமான் அனலாசுரனை விழுங்கித் தேவர்களைக் காத்தருளியதும் அப்பெருமானது வெப்பம் நீங்குமாறு தூர்வை அருச்சனை புரிந்ததும் சொன்னோம் இனிமேல் விநாயகமூர்த்தியானவர் தூர்வை யாசகஞ் செய்த வரலாற்றையும் கூறுவோம் என்று பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் எடுத்துரைப்பான். அளவற்ற வளப்பகங்களோடும் விளங்குகின்ற மிதுலாபுரிப்பட்டிணத்திலே எல்லா நன்மைகளையும் தன்னகத்தே கொண்ட சனகமகாராசன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் திசை அனைத்தும் தனது ஆணையைச் செலுத்தி அரசாட்சி செய்து வந்தான். அவனது அரண்மனைக்கு ஓர் தினம் நாரதமகாமுனிவர் எழுந்தருளி வந்தார் தானே பரத்துவம் என அறியாமையினாலே மதிமயங்கிய அரசன் நாரதமுனிவருக்கு வழிபாடு செய்யாமல் இருந்தான். நாரதமுனிவர் இதனைப் பொருட்படுத்ாது சனகராசனைப்பார்த்து அரசனே! எல்லாச் செல்வங்களையும் பகவான் அருளக்கடவர் என்று ஆசிர்வதித்தார். இதனைக் கேட்ட அரசன் முனிவரே! வேறு பகவானும் இருக்கின்றனரா எனக் கேட்டான். மேலும் புகலுவான் அறிவில்லாதவர்களே பேதப்படுத்திக் கூறுவார்கள். யாவையும் கொடுக்கின்ற பகவானும் வெறுக்கின்ற யோகியும் நானே அன்றி வேறில்லை என்று சொன்னான். நாரதமுனிவர் கூறுவார் அரசனே! நீ பேதமையால் கூறுகின்றனை. இறைவன் உண்டென்பதை உன்னெதிரில் க்காட்டுவோம் அப்போது அறிந்து கொள்வாய் என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

கவுண்டினியமுனிவர் பூசிக்கின்ற விநாயகப்பெருமானின் சந்நிதிக்கு நாரதமுனிவர் சென்றார். யாழ் நரம்புகளை மீட்டினார். கணேசப்பெருமானே! தேவரீர் கிருபையால் சகலசெல்வங்களையும் பெற்ற கனகராசன் தானே இறைவன் என்று ஆணவமுழைப்பினால் அல்லலுறுகின்றான். இதனைத் தங்களுக்கு விண்ணப்பிக்கவே வந்தேன். எனக்கூறிப் பணிந்து சென்றார். இதன்மேல் கணேசப்பெருமான் கனகராசனுடைய மயக்கதை நீக்கத் திருவுளங்கொண்டார். தொழுநோய் கொண்ட வேதியர் வேடக்கில் அரண்மனை வாசலை அணுகினார். அரசன் வேதியனர நோக்கி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். வேதியர் எனது பசிநோயை நீக்க அமுதூட்ட வேண்டும் என்றார். அரசன் தன் குமாரனை அழைத்து அறுசுவைப்பாதார்த்தங்களோடு அமுதூட்டுமாறு பணித்தான். வேதியர்க்குச் சகல உபசாரங்களும் செய்து உணவுபரிமாறப்பட்டது. வேதியர் வடிவில் வந்த விநாயகக்கடவுள் தொட்டதும் உணவு வகைகள் யாவும் மறைந்தன. அரசன் தனது நாட்டிலுள்ள பதார்த்தங்கள் யாவும் மலைபோலக் குவித்தாலும் வேதியர் கைபட்டதும் காணப்படவில்லை. அரசனானவன் சொல்லுவான் வேதியரே நீர் பசியுடன் வந்தமையால் உணவுதர ஒப்புக்கொண்டேன். சகல பதார்த்தங்களும் கொண்டு வந்தும் உமது பசி தீரவில்லை. இக்குறையை நீக்கத்தக்கவர்களிடம் செல்லுவீர் எனக் கூறினான். இதனைக் கேட்ட வேதியர் நகைத்துச் சனகனே! நீயே பிரமம் எனக் கூறினாய். உனது பிரமத்தை நெருப்பில் போடுவாய் எனக் கூறிச் சென்றார்.

அந்த நகரத்திலே திரிசிரன் என்பவனும் அவனது மனைவி விரோசனை என்பவளும் வேதவொழுக்கத்திற் தவறாது வாழ்ந்து வந்தனர். அந்தவீட்டிற்குச் சென்ற வேதியர் கூறுவார் கனகராசன் வீடு சென்றோம் அவனால் எனது பசியைத்தீர்க்க முடியவில்லை. ஆகவே உன்னிடத்துத் தீர்த்துக்கொண்டு போக வந்தோம் என்று புன்னகையோடு கூறினார். இதனைக் கேட்ட விரோசனை சுவாமீ! "தடாக நீர் அருந்தித்தீராத தாகம் குடநீரால் தணியுமோ" எனக்கூறினாள் இதுகாறும் யாசகம் எடுத்துப் புசித்துவந்தோம் இன்று அதுவும் இல்லை. விநாயகமூர்த்திக்கு அர்ச்சித்த ஓர் அறுகு மாத்திரம் இருக்கின்றது என்றனள். வேதியர் அன்போடு கொடுக்கப்படும் பொருள் எள்ளளவாயினும் அதுவே மேலானதாகும் அதனைக்கொண்டு வந்து அளிப்பீர் எனக்கூறினார் விரோசனை அந்த அறுகை எடுத்து வந்து நீட்டுதலும் அதனைத் தமது கரத்தினால் வாங்கிக் கணேசமூர்த்தி தின்று ஏப்பம் விட்டார். இதன்மேல் விநாயகப்பெருமானின் அருளினால் சகலசெல்வங்களும் திரிசிரனுக்குக் கிடைத்தன.

இந்த அற்புதங்களை அறிந்த கனகராசன்விநாயகக்கடவுளே வேதியராக வந்து தம்மை யாசித்தார் என்பதை அறிந்து தனது அகங்காரங்களை ஒழித்தான். நாரதமுனிவர் நவின்ற பிரகாரம் நன்மார்க்கங்களை மேற்கொண்டான். தனக்குக்கிருபை செய்யுமாறு கணேசப்பெருமானைப் பிரார்த்தித்தான் இதற்கு இரங்கிய யானைமுகப்பெருமான் மூன்று புருஷார்த்தங்களையும் நான்கு தவநிலைகளையும் தெளிவாக உபதேசஞ் செய்தருளினார். அரசனே! ஆணவமலத்தை நீக்கிச் சுகமாக இருக்கக் கடவை என்று அருள் சுரந்து திருவுருவைக் கரந்தருளினார் அதன் மேல் கனகராசன் நிட்டை கூடிச்சிவன் முத்தனுயினான். இதனைத் தேவகணங்கள் முனிவர்களுக்குச் சொன்னதாகப் பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் கூறியபிரகாரம் சூரசேனமகாராசனுக்குத் தேவேந்திரன் எடுத்துரைத்தான்.

## தூர்வை (அறுகு) துலையேற்ற படலம்

மகாமகத்துவம் மிக்க யோகேந்திரர்களே! விநாயகப்பெருமான் தூர்வையாகஞ் செய்து திரசிரனுக்கு அளவற்ற செல்வங்களை அளித்தும் கனகராஜனுக்குப் பரத்துவத்தை நிச்சயித்தும் திருவிளையாடல்களைப் புரிந்துள்ளார். கவுண்டினியமுனிவர் விநாயகக்கடவுளைப்பூசை செய்து வருகின்ற நாளில் அன்னாரது மனைவியானவள் தனதுநாயகரைப்பணிந்து சுவாமீ! மிதுலாபுரி அந்தணரைப்பார்க்கிலும் நாம்வெகுவாக அறுகினால் பூசிக்கின்றோம். எமக்கு ஏன் கணேசப்பெருமான் அருள்தரவில்லை என்றனள். இதனைக்கேட்ட முனிவர் புன்னகை செய்து ஆசிரியையிடம் கூறுவார். நாம்ஓர் அறுகுதருகின்றோம் அதனைஎடுத்துச்சென்றுதேவேந்திரனிடம் கொடுத்து அதன் எடையளவு பொன்னைப்பெற்று வருவாய் எனக்கூறினார். அர்ச்சித்த அறுகுகளில் ஒன்றை ஆசிரியையிடம் கொடுத்தார் கவுண்டினிய முனிவரின் பத்தினிநாயகரின் கட்டளைப்பிரகாரம் அறுகையும் எடுத்துக்கொண்டு சுவர்க்கலோகம் சென்று தேவேந்திரனிடம் விஷயத்தைக்கூறினள் தேவராசன் குபேரனிடம் செல்லுமாறு பணித்துச்சில தூதுவர்களையும் அனுப்பிவைத்தான். குபேரன் முனிவர் பத்தினி என்பதைக் கருத்திற்கொண்டு அறுகம்புல்லிற்குச் சமனான பொன்னைக்கொடுக்குமாறு கட்டளையிட்டான். ஆசிரியை குபேரனைப் பார்த்துக் கூறுவாள் ஐயா இந்த அறுகிற்குச்சமனான எடையுள்ள பொன்வாங்கிவருமாறு காதலர் பணித்துள்ளார் என்றனள். குபேரனது கட்டளைப்படி அறுகு தராசில் இடப்பட்டது. மறுதட்டில் சிறு துண்டு பொன் இடப்பட்டது. அறுகுத்தட்டு நிலத்திலும் மறுதட்டுஆகாயத்திலும் நின்றது. இந்த அற்புதத்தைக் கண்டவர்கள் அதிசயித்தார்கள் அளகேசன் பொக்கிஷத்தில் உள்ள பொன்னையும் ஏனையவற்றையும் கொண்டுவந்து இருதட்டையும் சமனுக்குங்கள் என்றார்கள்.

ஏவலாளர்கள் வரிசையாகக் கொண்டு வந்து பொன்னைத் தட்டில் இட்டார்கள். அளகாபுரியில் இருந்த திரவியங்கள் எல்லாம் இட்ட போதிலும் தராசு சமன் பெறவில்லை. அதன்மேல் குபேரனும் மனைவியும் தராசுத்தட்டை வழிபாடு செய்து தட்டில் ஏறினார்கள். அப்போதும் தட்டுமேலோங்கி நின்றது. மும்மூர்த்திகளும் தராசுத்தட்டில் ஏறிய போதும் தட்டு அசையவில்லை. இந்த அதிசயப்புதத்தைக் கண்ட தேவர்கள் முனிவர்கள் அனைவரும் அறுகின்மேன்மையை உணர்ந்து துதிசெய்தார்கள். சுவர்க்கலோகவாசிகள் அனைவரும் முனிவர் பத்தினி ஆசிரியையுடன் புடைசூழ்ந்து சென்று கவுண்டினிமுனிவர் ஆச்சிரமத்தை அடைந்தார்கள். இதனைக்கண்டு திடுக்கிட்ட கவுண்டினி முனிவர் புகலுவார். அடியேன் செய்ததவத்தின் பெருமையை இன்றல்லவோ கிடைக்கப்பெற்றேன் என்றார். அறுகினை அருச்சித்த அனைவரும் வெவ்வேறு விமானங்களில் ஏறிக் கணேசலோகஞ்சேர்ந்தார்கள். சுவாமீ அறுகின் பெருமையை யாரால் விளம்பமுடியும் என்றான் முனிவர் பத்தினி ஆசிரியை. கிருதவீரியனையும் அவ்வாறே நிறைவேற்றச் செய்வாய் என்று பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொன்னான். அதனைத் தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்கு எடுத்துரைத்தான்

## வன்னி மகத்துவப் படலம்

முனிசிரேட்டர்களே! கவுண்டினியமுனிவர் கணேசமூர்த்திக்கு அர்ச்சித்த தூர்வையைத் துலையேற்றிய மகத்துவம் கூறினோம். அதனைத்தொடர்ந்து வன்னிமகத்துவத்தையும் சொல்லுகின்றோம் கேட்பீராக என்றார். தொடர்ந்து தேவேந்திரன் சூரசேனராசனுக்குக் கூறுவான். அரசனே! பிதிர்தேவன் மீண்டும் பிரமனை வணங்கிச் சுவாமீ! அர்ச்சிப்பதற்கு ஓர் அறுகுநானும் கிடைக்கவில்லையாயின் என்ன செய்வது எனவினவினான். பிரமன் சொல்லுவார். விநாயக மூர்த்திக்கு எல்லா விதமான புஷ்பங்களைக் காட்டிலும் அறுகுதான் மேலானது. அதற்கு அடுத்ததாக வன்னிப்பத்திரமும் மந்தாரமலரும் உவப்பானதாகும். அறுகினது பலனை இவையும் கொடுக்கும் என்று பகர்ந்தான். வன்னியைக்கொண்டு பூசை செய்தவர்கள் பெற்றபலனையும் கூறுகின்றோம் என ஆரம்பித்தார்.

எல்லாவுயிர்களும் துன்பமற வாழ்கின்ற விதர்பதேசத்திலே அஷ்ட திசைகளிலும் புகழ்பெற்று வாழ்கின்ற ஆதேயம் என்னும் நகரத்திலே வீமனென்னும் பெயரினையுடைய ஒரு வேடன் இருந்தான். அவன் தீமையே அன்றி நன்மை சிறிதும் செய்து அறியாதவன். வழிப் போக்கர்களை மடக்கிப்பொருள் பறித்தும் மிருகங்களைத் துன்புறுத்திக்

கொண்டும் இருந்தாள். அக்காட்டிலே ஓர் ஆலயவிழாவைச் செய்வதற்காக வந்து தரிசித்துவிட்டுச் சிலவேதியர்கள் அவ்வழியே சென்றூர்கள் வேடன் அவர்களை வழிமறித்துப் பொருட்களைக் கொள்ளையிட்டுக் கொலைசெய்தான். அந்தணர்களைக் கொன்றதால் பிரமகத்தி அவனைத் துரத்திஞன். இதனுல் அஞ்சி ஓடிய வேடன் வன்னிமரத்தில் ஏறிஞன். அப்போது வன்னியிலை ஒன்று அங்கே எழுந்தருளியிருந்த கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் விழுந்தது. இருவரும் கைகளால் பிணித்துக்கொண்டு தங்கள் பாவதேகத்தினின்றும்நீங்கித் தெய்வரூபம் பெற்றுக் கணேசமூர்த்தியினுடைய உலகத்திற்குப் பொன்விமானத்தில் சென்றூர்கள்.

இவர்கள் பூர்வத்தில் செய்தவினை சொல்லுவதாகப் பிரமதேவன் கூறுகின்றுன் விதர்ப்பதேசத்திலே புண்ணியகீர்த்தி என்னும் அரசன் இருந்தான். அவன் யாகங்கள் பலவற்றைச் செய்து வெற்றிக் கொடியுடன் விளங்கிஞன். அவன் மனைவி மதனுவதி இருவரும் சந்தோஷத்துடன் வாழ்ந்து வாழ்நாள் முடிவுற்றதும் இருவரும் மரணமாஞர்கள். இவர்களுக்குப் புத்திரப்பேறு இல்லாமையால் இவர்களது ஞாதியாகிய சாம்பன் என்பவனை அரசனுக்கிஞர்கள். சாம்பவன் என்பவனது அரசாட்சி நிலைதவறிக் கள் அருந்துவதும் பாவங்களைச் செய்வதுமாய் இருந்ததது. ஓர் தினம் மந்திரியுடன் வேட்டைக்குச்சென்று திரும்பும் போது வசிட்டமுனிவரால் பிரதிட்டை செய்யப்பட்ட விநாயகர் ஆலயத்தைக்கண்டான் அந்தவரதகணபதியைப் பொங்கல்இட்டு மக்கள் வழிபடுவதைச் சாம்பவன் கண்டான். சுவாமி! நாங்களும் உங்களது அடிமை எனக்கூறிக் கோயிலை வலம்வந்து காய்கனிகளை வைத்து வணங்கிஞன் இவ்வாறு விளையாட்டாகக் கூறிஞலும் அதை புத்திபூர்வமானபூசை என ஏற்றுக்கொண்டு வாமன கணேசர் மோட்சத்தைக் கொடுத்தார் என்று பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் கூறியதாகச் சூரசேன மகராசனுக்குத் தேவேந்திரன் செல்லியருளிஞன்.

## வாமனர் வரம்பெறு படலம்

வேதவிற்பன்னர்களே! அரக்கனும் கிராதனும் முத்தியடைந்த செயற்பாடு செப்பினேம். வன்னி நீழலில் வீற்றிருக்கின்ற விநாயகரை வாமனர் வழிபட்டு வரம்பெற்றதைக் கூறுவோம் என்று தொடங்கிஞர் இதனைப்பிதிர்தேவன் கேட்டதற்கிணங்கப் பிரமதேவன் கூறியருளிஞர். வாசிகயோகமுள்ளவர்களுக்கு ஆனந்தத்தை அளிக்கவல்ல தேசிகனுயும் உருத்திராக்கம் கண்டிகை தரித்து அரிய தவங்களைச் செய்கின்ற காசிப முனிவரானவர் அதிதி, திதி என்னும் இரு பெண்களை விவாகஞ் செய்து

வாழ்ந்து வந்தார். திதியானவள் விஷ்ணுவானவர் தனக்குப் புத்திரராக வரவேண்டும் என விருப்பம் கொண்டாள். இதனைத் தனது நாயகராகிய காசிபரிடம் தெரிவித்தாள்.

காசிபமுனிவருக்கு இரண்ணியகசிபன் இரண்ணியாக்கதன் என்னும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இரண்ணிய கசிபன் என்பவன் அதிக தவங்களைச் செய்து சிவபிரானிடம் மூன்றுலோகங்களையும் ஆட்சி செய்யும் வரத்தைப்பெற்றான். தனக்கு எவ்வித ஆயுதத்தினாலும் மரணம் ஏற்படாத ஒரு பேற்றையும் பெற்றுக்கொண்டான். இதனால் தேவர்கள் துயர் அடைந்தார்கள். இரண்ணிய கசிபனைக் கொல்ல வேண்டும் என்று மகாவிஷ்ணு தீர்மானித்தார். வன்னிமரத்தடியில் விநாயகருக்குப் பூசைசெய்து சடாட்சரசெபஞ்செய்து இரண்ணிய கசிபனைக் கொல்ல உபாயம்கேட்டார். கணேசப்பெருமான் விஷ்ணுவே! விண்ணும், மண்ணும் இல்லாத, மடியிலே அவனை வைத்து அத்திர சத்திரமில்லாத நகத்தினாலே கீறிப்பிழந்து உதிரம் நிலத்திலே விழாதபடி உறிஞ்சக்கடவை என்று உபாயங் கூறினார். விஷ்ணுவானவர் அந்த உபாயத்தின்படி நரசிம்ம அவதாரம் எடுத்து அவனுயிரைப் போக்கினார். அதன் பின்னர் வராக அவதாரம் எடுத்து இரண்ணியாக்கதனையும் அழித்தார்.

பிதிர்தேவன் விண்ணப்பம் செய்து கொண்ட பிரகாரம் விஷ்ணுவானவர் வராக அவதாரத்தில் செய்தருளிய திருவிளையாடல்களைப் பிரமதேவன் கூறுவான். இரண்ணிய கசிபனுடைய மகன் விரோசனன் சூரியனைக்குறித்துக் கடுந்தவஞ் செய்தான். சூரியனானவன் அவனுக்குக்காட்சி கொடுத்து ஒரு சொர்ணக் கிரீடத்தை வழங்கினான். மேலும் சூரியபகவான் விளம்புவார் இக்கிரீடத்தைச் சூடிக்கொண்டு மூன்று உலகங்களையும் ஆட்சிசெய்யக்கடவாய். உனது சிரசின்மேல் இன்னொருவர் கரம்படுமாயின் உடனே சிரம் நூறுபிளவாகப்பிளக்கப்பட்டு உயிரும்போகும் என்றார். இதன்மேல் விரோசனன்மூன்றுஉலகங்களையும் ஆட்சி செய்து வந்தான். அவனுக்கு மாவலி என்னும் புத்திரன் பிறந்தான். மீண்டும் தேவர்களது துன்பத்தைத் துடைக்க விஷ்ணு முடிவு கொண்டார். மோகினிவடிவுங்கொண்டு விரோசனன் எதிரில் சென்றார். விரோசனன் மோகினியிடத்து மோகங்கொண்டான். அப்போது மோகினி வடிவுகொண்ட விஷ்ணு சொல்லுவார் இப்போது நீ தைலம் ஆடிவருவையாயின் உன்து எண்ணம் நிறைவேறும் என்றார். விரோசனன் கிரீடத்தை நிலத்தில் வைத்தான். பின்னர் விஷ்ணுவானவர் ஒரு கையால் அவனது சிரத்தைப்பிடித்துக் கொண்டு மற்றக் கையால் தைலத்தை அள்ளிவிட்டுத் தேய்த்தனர். அப்போ அவன் ரமானது நூறுபிளவாகிப் பிளந்து இறந்துபோனான்.

விரோசனன் இறந்ததும் மாவலி அரசு உரிமையைக்கையேற்ருன். மாவலி என்பவன் தமது குருவாகிய சுக்கிரனிடஞ் சென்று தேவேந்திரன் சுவர்க்கலோகத்திற்கு அரசனுக இருக்கும் காரணத்தை வினவினுன். தானும் யாகஞ் செய்யத்தொடங்கினுன். நூருவது யாகம் தொடங்கியதும் தேவேந்திரன் பெரிதும் கவலை கொண்டான். விஷ்ணு வாமன அவதாரங்கொண்டு காசிபர் மனைவி அதிதி வயிற்றில் காயாம் பூ நிறத்துடன் அவதாரஞ் செய்தார். காசிபமுனிவர் இது விநாயகரது அருளினுல் வந்தது என்று தீட்சை அளித்துச் சடாக்கரத்தை உபதேசித்தார். வாமனர் விதர்ப்பதேசஞ் சென்று ஆதேயநாட்டில் வன்னி விருட்சத்தின்கீழ் இருக்கும் விஷ்ணு விநாயகரைப்பூசை செய்து ஓர் வருடம் சடாக்கரசெபம் நிகழ்த்தினுர். விநாயகப்பெருமான் காட்சி நல்கி வாமனருக்கு வேண்டிய வரங்களை நல்கினுர்.

கணேசப்பெருமானின் கருணைபெற்ற வாமனர் மாவலியாகஞ் செய்யும் இடஞ்சென்ருர். மாவலி தேவரீர் யார்? வந்த காரணம் யாது? எனக்கேட்டான். அதற்கு வாமனர் யான் இருந்துதவஞ் செய்வதற்கு மூன்றடி நிலம் தானஞ்செய்யுமாறு கேட்டார். அசுரகுருவாகிய சுக்கிரன் இவர் தவசியல்லன். கொடுக்கவேண்டாம் என்று தடை செய்தான் மாவலி இவற்றைப்பொருட்படுத்தாது மூன்றடி நிலத்தைத் தாராதத்திரம் செய்து கொடுத்தான். வாமனர் விசுவரூபங்கொண்டு தமது திருவடிகளால் மூவுலகத்தினையும் ஈரடியாக அளர்ந்து மூன்ரும் அடிக்கு அம்மாவலி சென்னியில் தமது பாதத்தை வைத்து அவனைப் பாதாள லோகத்தில் அழுத்தி தமது வஞ்சகத்தை நிறைவேற்றிக் கொண்டார்.

வன்னி விநாயகர், விஷ்ணு விநாயகர் வாமனவிநாயகர் ஆகிய இம்மூன்று விநாயகர்களையும் எவர் நினைத்தாலும் இமைப்பொழுதில் அவர்கள் விரும்பியதைக் கொடுத்தருளுவர் என்று பிரமதேவன் பிதிர் தேவனுக்குச் சொல்லியதாகத் தேவேந்திரன் சூரசேனராசனுக்குக் கூறினுன்.

## கீர்த்தி மகப்பெறு படலம்

முனிவர்களே! இதுகாறும் வாமனர் வரம் பெற்றதைக் கூறினேம். அவ்வன்னியின் மகத்துவத்தால் கீர்த்தி மகப்பேறு பெற்றசரிதையையும் சொல்லுவோம் கேட்பீராக. கைலைங்கிரியிலே நவரத்தின மயமான திருவோலக்காவில் கங்காதரமூர்த்தியாகிய சிவபெருமான் வீற்றிருக்கும் போது உமாதேவியார் நமஸ்காரஞ் செய்து சுவாமி! கணேசப்பெருமானுக்கு வன்னிபத்திரத்தில் விருப்பு உண்டாகக்காரணம் யாது? என வினவினுர். அப்போது பரமன் கிருபைகூர்ந்து புகலுவார்.

மண்ணுலகத்தில் யாவராலும் போற்றப்படும் தானதருமங்களைச் செய்கின்ற பிரியவிரதன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு இரண்டுமனைவியர் மூத்தவள் கீர்த்தி, இளையவள் பிரபை. அரசனானவன் இளையவளிடத்தே கூரிய அன்பு செலுத்திவந்தான். இதனால் கீர்த்தி என்பவள் கவலைகொண்டு கணவன்பணிகளைத்தவறாது செய்துவந்தாள். இளையவளாகிய பிரபை கருவுற்றுப் பத்தாந்திங்களில் ஓர் மகனைப் பெற்றனள். அப்பிள்ளை வளர்ந்து பாஞ்சாலதேசத்து அரசனது குமாரத்தியை விவாகம் செய்து வாழ்ந்தது.

மேற்கூறிய காரணங்களால் இளையவள் மூத்தவளாகிய கீர்த்தியைக் கிருமியிலும் கீழாக நடத்தினாள். கற்பு நெறிதவறாது கீர்த்தியானவள் மனம் நொந்து உயிரைவிட உத்தேசித்தாள். இவளது நிலையைக்கண்ட புரோகிதர் அம்மணி கணேசமூர்த்தியைப் பூசைசெய்வாயாயின் உனது கவலை நீங்கும் எனக்கூறினார். விநாயகரை அருச்சிக்கும் முறையையும் சொல்லிக்கொடுத்தார். கீர்த்தியானவள் மந்தாரமர நிழலில் இருக்கும் விநாயகரைப் பிரதிதினமும் பூசிக்கத்தொடங்கினாள். சகல திரவியங்களையும் சேகரித்து வன்னிவிருட்சத்தையும் தேடிஎடுத்து அதனால் அருச்சித்துப் பூசையை நிறைவேற்றினாள். கவலை கொண்டு உணவை ஒழித்து நித்திரை செய்யும்போது யானை முகப்பெருமான் காட்சி கொடுத்து நல்லருள் செய்தார். மேலும் வன்னிப்பத்திரத்தினால் அருச்சனையைத் தவறாது செய்து வந்தாள்.

கணேசப்பெருமானின் அருளினால் பிரியவிரதன் கீர்த்தியிடத்து அன்பு கொண்டான். அதனால் கீர்த்திக்கும் கருவுண்டாகி ஓர் ஆண்டின் பின் கிப்பிரப்பிரசாதனன் என்னும் மகனைப்பெற்று மகிழ்ச்சியோடு வாழ்ந்தாள். பார்வதிக்குப் பரமன் கூறியதாகப் பிதிர்தேவனுக்குப் பிரமதேவன் சொல்லியருளினான்.

## விடம்நீங்கு படலம்

தபோதனர்களே! கணேசமூர்த்தியின் பெருங்கருணையினால் கீர்த்தி என்பவள் மகப்பேறு பெற்றதைச் சொன்னோம். இனிமேல் விடம் நீங்கிய திறத்தையும் கூறுகின்றோம் எனத்தொடங்கினார். கிப்பிரப்பிரசாதன் வளர்ந்து வருகின்றபோது இளையவளாகிய பிரபை சிந்திப்பாள். இவன் சீவித்திருப்பானாகில் நமது குமாரனுக்கு அரசபட்டம் இல்லாது போய்விடும் எனப் பொறாமை கொண்டாள். கிப்பிரப்பிரசாதனுக்கு நான்கு வயதாக இருக்கும்போது ஓர்தினம் உணவில் விடத்தைக் கலந்து கொடுத்தாள். விடமானது தலைக்கேறுதலும் கிப்பிரப்பிரசாதனன் பூமியில் வீழ்ந்து சோபமாகக் கிடந்தான். மணி

மந்திர ஔஷதங்களால் அதை நிவர்த்தி செய்யமுடியவில்லை. தாயானவள் பலவாறு பிரலாபித்தாள்.

இவை அனைத்தையும் கண்ட கிருச்சதமமுனிவர் அம்மணீ நீ யார்? எனவினவினர். கீர்த்தியானவள் விடம்ஊட்டப்பட்ட வரலாறு அனைத்தையும் கூறினள் மனமிரங்கிய கிருச்சதமர் வன்னிப்பத்திரத்தினல் அர்ச்சித்த பலனை உனது புத்திரன் கையில் தத்தஞ்செய்வாய் என்று பணித்தார். அவ்வாறு செய்ததும் சிறுவன் உறங்கி விழித்தவன் போல எழுந்து கிருச்சதமருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினன். பரமசிவன் பார்வதிக்குச் சொல்லியதைப் பிரமதேவன் பிருகு தேவனுக்கு எடுத்துரைத்தான்.

## சமி மந்தார வுற்பத்திப் படலம்

வேத விற்பன்னர்களே! விநாயகருக்கு வன்னியும் மந்தாரமும் கொண்டு அர்ச்சனை செய்ததும் கீர்த்தியின் மகன் உயிர் பெற்றதும் கூறினேம். வன்னியும் மந்தாரமும் உற்பத்தியான வரலாறு செப்புகின்றேம் கேட்பீராக, என்று கூறுவார். வன்னியின் மகத்துவம் தெரியாமலே அதை மனத்தில் நினைத்தாலும் வன்னியை வலம் வந்தாலும் பல பிறவிகள் தோறும் செய்த பாவங்கள் அனைத்தும் நிவர்த்தியாகும் முன்னொரு காலத்திலே தந்திகேந்திரன் என்னும் முனிவர் இருந்தார். அவருக்கு ஆகம அறிவு நிரம்பிய அவுரவன் என்னும் ஒரு புத்திரன் இருந்தான். அவன் மனைவி சுமேதை இருவரும் இல்லறம் நடாத்துகையில் அவர்களுக்குச் சமி என்னும் பெண் குழந்தை பிறந்தது. அப்பெண் குழந்தை வளர்ந்து மணப்பருவத்தை எட்டியது.

சவுனகமுனிவருக்கு ஏவல் செய்கின்ற முனிபுத்திரன் மந்தாரனுக்கும் சமி என்னும் பெண்ணுக்கும் விவாகஞ் செய்யப்பட்டது. மந்தாரன் மனைவியை வீட்டில் இருத்திவிட்டு முனிவருக்குப் பணிவிடை செய்து வந்தான். ஓர் தினம் மந்தாரன் சமியையும் அழைத்துக்கொண்டு தந்தையாரது ஆசிரமம் சென்றான். அப்போது விநாயகர் பெருமானுடைய சாயலையுடைய புருசுண்டி முனிவர் துதிக்கையும் தொந்தியுமாகச் சென்றார். முன்வினைகாரணமாக இவர்கள் நகைத்தார்கள். புருசுண்டி கோபங்கொண்டு மரமாகக்கடவீர்கள் என்று சபித்தனர். சமியும் மந்தாரனும் நடுங்கினர்கள். தமது பிழையை மன்னிக்குமாறு துதி செய்தார்கள். இதற்கு மனமிரங்கிய முனிவர் எமது அமைப்பைக்கொண்ட கடவுள் எழுந்தருளும்போது அவருக்கு உரிமையாகுங்கள் எனக் கூறிச்சென்றார்.

சவுனகமுனிவர் மந்தாரனையும் சமி என்பவளையும் காணாது தூது வர்களை அனுப்பினர். அவர்கள் காடுகள்எங்கும் தேடினர்கள். இறுதியில் புருசுண்டி மூலம் நிகழ்ந்ததை அறிந்தார்கள். சவுனகமுனிவர் கணேச மூர்த்தியைத் தியானித்துப் பன்னிரண்டு வருடங்கள் தவத்தில் இருந் தார். கணேசப்பெருமான் சிங்கவாகனத்தில் காட்சிகொடுத்தார். வன்னிவிருட்சத்தின் பத்திரத்தினலும் மந்தாரமலரினலும் அர்ச்சிப் பவர்களுக்கு வேண்டியதை நாம் நல்குவோம் என்று அருளிச்செய்தார். புருசுண்டி சாபம் எல்லாத் தேவர்கள் சேர்ந்தாலும் தீர்க்கமுடியாதது. வன்னிபத்திரத்தினல் அர்ச்சிப்பவர்களுக்கு வேண்டியதை நாம் நல்கு வோம். எனக்கூறித் திருவுருவைக் கரந்தருளினர். பிரமதேவன் பிதிர் தேவனுக்குச் சொல்லியதைத் தேவேந்திரன் சூரசேனமகாராசனுக்குச் சொல்லினன்.

## தேவர்கள் சாபந்தீர்த்த படலம்

சவுனகர்களே! கணேசப்பெருமானுக்குரிய வன்னியும் மந்தாரமும் உற்பவித்த வரலாறு உரைத்தோம். இனிமேல் வன்னியருச்சனையால் பலன் பெற்றோர் வரலாறு கூறுவோம் என ஆரம்பித்தார். தேவேந்தி ரன்சூரசேனராசனுக்குஇயம்புவான் அரசனே! கிருச்சதமமுனிவர் கீர்த்தி என்பவனுக்கு மற்றுமோர்கதை கூறியதாகச் சிவன் உமையம்மைக்குச் சொல்லியதாக விபரிக்கப்படுகின்றது. முன்னேர் காலத்திலே பிரம தேவனுனவன் தனது பத்தினியாருள் காயத்திரியை மட்டும் அழைத்துக் கொண்டு கைலமலைச்சாரல் சென்று ஓர் வேள்வியைச் செய்தான். கணேசமூர்த்தியை வழிபடாமலே இதனைத்தொடங்கினன். சாவித்திரி அவ்விடஞ்சென்று என்னை இல்லாது செய்தபடியால் நீங்கள் அனைவீரும் வெவ்வேறு சலவுருவாகக்கடவீர்கள் எனச்சாபம் இட்டனள்.

சாவித்திரியின் சாபத்தினல் திருமால் முதலாம் தேவர்கள் அனை வரும் சலவுருவாகி யாகசாலை முழுவதையும் நனையச்செய்தார்கள். இதனல் கவலை கொண்ட தேவமாதர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து விநாயகமூர்த்தியைப் பூசைசெய்தார்கள் வன்னி, அறுகு, மந்தாரை இவற்றினல் அர்ச்சனை புரிந்தார்கள். கணேசப்பெருமான் மூஷிக வாகனத்தில் காட்சிநல்கினர். தேவமாதர்கள் தங்கள் நாயகர்களது சலவுருவை மாற்றுமாறு வேண்டினர்கள். விநாயகப்பெருமான் இந்திரன் முதலாம் தேவர்களது கலவுருவை மாற்றி அவர்களது இதயத்தில் கோயில் கொண்டு வீற்றிருந்தருளினர். தேவர்கள் பிறிதோர் மந்தாரமரநிழலில் கணேசப்பெருமானைப் பிரதிட்டை செய்து குளிர்ச்சி பொருந்திய வன்னிப்பத்திரத்தினல் அருச்சனை புரித்

தார்கள். ஏரம்ப விநாயகர் என நாமஞ்சூட்டினார்கள். பிரமதேவன் வன்னிப்பத்திரத்தினால் அருச்சனைசெய்து சாவித்திரியின் மனக் குறையை நிவர்த்திசெய்தான். வன்னிப்பத்திரத்தின் மகிமையை எவராலும் அளவிட்டுக் கூறமுடியாது. இதனால் அர்ச்சிப்பவர்களுக்கு விநாயகப் பெருமான் வேண்டிய வரங்களைக்கொடுப்பார் என்பதில் ஐயமில்லை.

கீர்த்தி என்பவள் கிருச்சதமரைப் பணிந்து சுவாமி! அடியாள் புதல்வன் கிப்பிரப்பிரசாதனுக்கு எவ்வித இடையூறும் வரவொட்டாமல் பாதுகாக்க வேண்டும். கணேசப்பெருமானுடைய ஒரு மந்திரத்தை உபதேசிக்கவேண்டும் என்று இரந்தனள். அதனை ஏற்றுக்கொண்ட கிருச்சதமதர் கிப்பிரப்பிரசாதனனை ஸ்நானஞ்செய்து வருமாறு பணித்தார். விநாயகப்பெருமானுடைய நாலெழுத்து மந்திரத்தை நவின்றார். பின்னர் காசித்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற துண்டிவிநாயகர் சந்நிதி சென்று செபிக்கக்கடவை என்று சொல்லினர். கீர்த்திக்குக் கிருச்சதமர் சொல்லியதைச் சிவபிரான் உமைக்குச்சொல்லியபடி பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொல்லியபடி தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குச் சொல்லினன்.

## கிப்பிரப்பிரசாதன் வரம்பெறு படலம்

முனிசிரேட்டர்களே! தேவமாதர்கள் விநாயகமூர்த்தியை வன்னிப் பத்திரத்தால் அருச்சனை செய்து தங்கள் தலைவர்களது சாபத்தை நிவர்த்தி செய்தவரலாறு செப்பினோம். கீர்த்தி மகன் கிப்பிரப்பிர சாதனன். உபாசித்ததிறனையும் சொல்லவேண்டும் என உமை கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பரமசிவன் பகர்ந்தருளினார். உமையானவள் காசித்தலம் ஏன் விசேடம் பெற்றது என வினவினார்.

எண்பத்து நான்கு யோனி பேதத்துள்ளும் அறிவுடையோராக இருந்து பிரமஞானத்தை அறிந்து ஆண்டவன் திருவடிகளைச் சார்தல் அரிது. அஃதே போன்று மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்று விசேடங்களும் நிறைந்ததலம் காசித்தலமாகும். விசுவநாத மூர்த்திக்கு அபிடேகம் நடைபெற்றபோது அவரது காதில் உரககுண்டலத்தி னின்றும் ஓர் மணியானது சிதறித்தடாகத்தில் விழுந்தது. அதனால் மணிகர்ணிகை என்ற பெயரைப்பெற்றது. பின்பு ஒரு நாள் ஆகாய கங்கையை பகீரதன் அத்தீர்த்தத்தில் விடுத்தனன்.

இவ்வாறு எம்மால் கூறப்பட்ட நாலெழுத்து மந்திரத்தைச் செபித்து வன்னி மந்தாரை இவைகளால் அர்ச்சித்து வரங்களைப்

பெறுவீர்கள் என்று விடைகொடுத்துத் தமது ஆச்சிரமத்தை நோக்கிச் சென்றனர். கீர்த்தியும் மகனும் காசித்தலத்தை அடைந்து மணிகர்ணிகையில் ஸ்நானஞ் செய்து துண்டிவிநாயகருடைய திருவடிகளைப் பணிந்து நீராகாரம் நீத்து வன்னிமரத்தடியில் இருந்து நாலெழுத்து மந்திரத்தைச் செபித்தார்கள் சந்திரோதயமானவுடன் சகலதிரவியங்களோடும் விநாயகரை வழிபாடு செய்தார்கள். அறுகு, வன்னி, மந்தாரை இவைகளைக் கொண்டு அருச்சனைபுரிந்து தியானஞ் செய்து கொண்டிருந்தனர். இவர்களது தவத்திற்குக் கணேசப்பெருமான் பஞ்சமுகவிநாயகராகக் காட்சிநல்கினர். கீர்த்தியும் மகனும் கேட்டருளிய வரங்களைக் கொடுத்தருளினர். மேலும்ஆயிரம்வருடம் உயிருடன் இருந்து யாகங்கள் செய்வாய் என்றருளிச் செய்து வச்சிராயுதத்தைக் கொடுத்துப் ''பரசுபாணி'' என்னும் நாமத்தைச் சூட்டினர்.

துண்டி விநாயகர் திருவுருவைக் கரந்ததும் கீர்த்தியும் கிப்பிரப்பிரசாதனும் காசித்தலத்தை நீங்கிக்கண்ணமாபுரிக்குச் சமீபமாயினர் இவற்றை அறிந்த தந்தையானவர் இவர்களை அழைத்து வருமாறு மந்திரிகளை ஏவினன். கீர்த்தி சிவிகையிலும் கிப்பிரன் யானையிலும் அழைத்துச்செல்லப்பட்டனர். இருவரும் சென்று பிரியவிரதனுடைய பாதங்களைப்பணிந்தனர். இதன்மேல் பிரியவிரதன் பரசுபாணிக்குப்பட்டஞ்சூட்டி சித்த சுத்தியுடன் அரசுரிமையைக் கொடுத்தனன். பரசுபாணி விநாயகர் திருவுருவை மணியிலே செய்வித்து அதனைத் தனது கண்டத்திலே அணிந்து நூறு ஆண்டுகளுக்கு மேல் இராச்சிய பரிபாலனஞ் செய்து வந்தான். பின்பு தெய்வவிமானம் வர அதிலேறிச் சென்று விநாயகலோகத்தில் முத்திப்பேற்றை அடைந்தனன் இகனை இறைவன் இறைவிக்கு எடுத்துக்கூறியதாகப் பிரமதேவன் பிதிர்தேவனுக்குச் சொல்ல அதனைத்தேவேந்திரன் சூரசேனராசனுக்கு எடுத்துரைத்தான்.

## கிருதவீரியன் மகப்பெறு படலம்

தவசீலர்களே! கிப்பிரப்பிரசாதன் கணேசமூர்த்தியை வன்னி, அறுகு முதலியவற்றால் அர்ச்சித்து வரம்பெற்றதைச் சொன்னோம். இனிக் கிருதவீரியன் உபாசனை செய்த திறனையும் சொல்லுகின்றோம் என்று தேவேந்திரன் சூரசேனராசனுக்கு விளம்புவான். பிரமதேவனைவன் சதுர்த்திவிரதத்தின் பெருமைகளைக் கூறக்கேட்டதன் பின் பிதிர்தேவன் சொல்லுவான் இவ்விரதத்தை நிறைவேற்றிய பின் யாது செய்யவேண்டும் எனக்கேட்டனன். அந்த விரதத்தைத் தொடங்கிய நாளிலிருந்து ஐந்து, ஏழு ஆகிய ஒரு தினத்தில் சதுர்த்தி

நாளில் சித்தி, புத்தி சமேதரராகிய கணேசப்பெருமானைப் பொன்னினால் செய்து அவருக்குக்கூடிய எண்ணிக்கையில் ஆகுதி கொடுக்க வேண்டும் அந்தணர்களுக்கு அன்னதானங் கொடுத்தல் வேண்டும். அன்னதானத்தில் எஞ்சிய சேடத்தைத் தாம் அருந்த வேண்டும். விநாயக உருவத்தை ஆசிரியருக்குத்தானமாகக் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்தால் விரதபலன் கிட்டும் எனக்கூறினர்.

மேலும் இவ்விரதத்தை உமாதேவியார் அநுட்டித்துச் சிவபிரானின் இடப்பாகத்தைப் பெற்றார். தமயந்தி அநுட்டித்து நளனை அடைந்தாள். அகத்தியர் அநுட்டித்து நீரைக்கரத்திலடக்கியுண்டார். தேவேந்திரன், விஷ்ணுமுதலியோர் அநுட்டித்து யானைமுகக்கடவுளின் அருளைப் பெற்றனர். சுவாமீ! விநாயகப்பெருமானின் சங்கடசதுர்த்தி விரத மகத்துவங்களை ஒரு புத்தகத்தில் எழுதித்தருமாறு பிதிர்தேவன் கேட்டுவாங்கினன் பின்னர் தனது புதல்வனாகிய கிருதவீரியன் கனவிலே தோன்றி இப்புத்தகத்தை வாசிப்பித்து விரதம் அநுட்டிப்பையாயின் உனக்குப் புத்திரசம்பத்து உண்டாகும் எனச் சொல்லி மறைந்தனன்.

கனவினைக்கண்ட கிருதவீரியன் விழித்தெழுந்து மனைவியை அழைத்துக்கொண்டு அந்த வனத்தை விட்டு நீங்கிப்பிராமணர்களை அழைத்துப் புத்தகத்திற்குப் பூசைகள் நிகழ்த்துவித்தான். காப்பை அவிழ்த்து வாசித்து விநாயகருடைய மகத்துவத்தைப் பிரமதேவன் சொல்ல எழுதப்பட்டது. இது காறும் எவ்விடத்திலும் இல்லை. தபோவலிமையினால் யாங்கள் அறிவோமாயினோம் என்று உள்ளன்போடு விடைகொண்டு போயினர். இதன்மேல் விரதகாலம் சமீபித்தலும் கிருதவீரியன் குலகுருவாகிய அத்திரிமுனிவரை அழைத்து அபிஷேகதிரவியங்கள் அர்ச்சனை மலர்கள் யாவற்றையும் ஏவலாளரைக்கொண்டு எடுப்பித்தான். மண்டபத்தை நவரத்தினமயமாக அலங்கரிப்பித்தான். சைவர்கள் மத்தியில் இருந்து ஆசமனம். பிராயாமணம் பூதசுத்தி இவைகளைச் செய்து நியாசஞ் செய்து சங்கல்பம், கலசபூசை என்பன நிகழ்த்தி அபிஷேகம், அலங்காரம், அங்கபூசை, ஆவர்ண பூசை, புஸ்பார்ச்சனை, துவாதச நாமபூசை, அஷ்டோத்தர நாமபூசை இவைகளையும் செய்து நைவேத்தியம் கொடுத்துத் தூப தீபங்காட்டி இருபத்தொருநாமங்களால் தூர்வை அர்ச்சனை செய்து தியானம், ஆலாத்தி, பிரதட்சுணம் இவற்றையும் செய்து ஆசாரிய பூசை செய்து வேதப்பிராமணர்கள் பதினாயிரம் பேருக்குத் தானதிகள் கொடுத்து விநாயகபூசையை நிறைவுசெய்தான்.

இதன்மேல் யதாப்பிரகாரம் அரசனது மனைவி சுகந்தையானவள் கருவுற்றுப் பத்துத்திங்கள் நிறைவேறியதும் ஒரு புத்திரனைப்பெற்றாள்

அப்புத்திரனுக்குக் காலுங் கையும் இல்லாமல் ஏனைய அவயங்கள் இருக்கக்கண்டு தாயும் தந்தையும் துயரங்கொண்டனர். அப்பிள்ளைக்கு கார்த்தவீரியன் எனநாமஞ்சூட்டி வளர்த்தனர். பிள்ளைக்குப்பன்னிரண்டு வயதாகியும் இக்குறை நீங்கவில்லை. ஓர்சமயம் தேத்தாத்திரிய முனிவர் தற்செயலாக அரசமாளிகைக்கு வந்தார். அரசனுனவன் தனது குறையை முறையிட்டுச் சுவாமீ! யான் செய்து வந்த தவங்களில் ஏதாவது குறையுள்ளதோ? என இரந்தனன். புதல்வனைப் பார்த்த தேத்தாத்திரியமுனிவர் இவன் சக்கிரேஸ்வரனுய் இருப்பான் எனக் கூறினுர். அத்துடன் அவனுக்குத்தீட்சை அளித்து ஏகாட்சரமந்திரத்தை உபதேசித்துப்போயினர். இதன் பின்னர் தந்தையின் அநுமதியுடன் கார்த்தவீரியன் வனத்தில் இருந்து ஐம்பொறிகளையும் அடக்கி ஏகாட்சரமந்திரசெபம் பன்னிரண்டு வருடம் இடைவிடாது செய்து வந்தான்.

கணேசப்பெருமான் காட்சி நல்கியதும் கார்த்தவீரியன் சுவாமீ! வணங்க முடியவில்லையே என்று வருந்தினுன். விநாயகமூர்த்தி கார்த்தவீரியனுக்கு இரண்டு கால்களையும் ஆயிரங்கைகளையும் தந்தார். மேலும் கார்த்தவீரியனை நோக்கி நீ சத்துருக்களை வென்று கற்பகாலம் வரை வாழக்கடவாய் என்று அநுக்கிரகித்தருளினுர் ஆனந்தங்கொண்ட கார்த்தவீரியன் மண்ணினுலும் பொன்னினுலும் ஆலயம் அமைத்தான். பவளத்தினுல் கணேசஉருவை அமைப்பித்தான். பிரவாள விநாயகர் என நாமஞ்சூட்டினுன். ஆதிசேடனுனவன் இந்த விநாயகரை பூமிபாரம் பொறுக்கும்படி வழிபட அவர் அருள்பாலித்தருளினுர். ஆதிசேடன் தரணிதரவிநாயகர்என்றுநாமஞ்சூட்டினுன். பஞ்சபாண்டவரும் இந்த விநாயகரை வந்து துதித்து வரம்பெற்றுள்ளனர் இராவணனும் பூசித்து இலங்காதிபத்தைப் பெற்றுக்கொண்டான். இத்தகைய சிறப்புமிக்க சங்கட சதுர்த்தி விரதம் அநுட்டித்த பலனை யாராவது தத்தஞ் செய்தால் இந்தவிமானம் விண்ணெழும் என்று தேவேந்திரன் சூரசேன மகாராசனுக்குக் கூறினுன்.

## இந்திரவிமானம் விண்ணெழு படலம்

முனிபுங்கவர்களே! கிருதவீரியன் விநாயகவிரதத்தை அநுட்டித்துக் கார்த்தவீரியனைப்பெற்ற வரலாறு சொன்னேம். இனிமேல் இந்திரவிமானம் விண்ணில் எழுந்து சென்ற செயற்பாட்டினையும் சொல்லுகின்றேம். என ஆரம்பித்தார். சூரசேனமகாராசன் மீண்டும் தேவேந்திரனைப்பணிந்து சுவாமீ! இதுகாறும் விநாயகப்பெருமானது சதுர்த்திவிரதத்தின் பெருமையையும் அறுகு, வன்னி, மந்தாரை இவை

களின் பெருமைகளையும் கேட்டோம். அங்காரசதுர்த்தியை அநுட்டித்த விரதியைக்கண்டு பிடித்து விமானத்தை விண்ணெழச் செய்ய வேண்டும் என்று தூதுவர்கள் நாற்றிசைகளிலும் உள்ளவீடுகள்தோறும் சென்று விசாரித்தனர் இச்சமயத்தில் மற்றொருவிமானம் ஆகாயத்தில் இருந்து பூமியில் இறங்கிவருவதை எல்லோரும் கண்டார்கள். இஃதென்ன ஆச்சரியம்? என்று அவ்விடம் சென்றபோது புலைச்சிக்குத்தெய்வ சரீரம் கொடுத்து அவளை விமானத்தில் ஏற்றுவதை அவர்களால் பார்க்க முடிந்தது.

விமானத்தில் வந்த கணநாதர்களைப் பணிந்து இவளுக்கு இப்பேறு கிடைத்தகாரணம் என்ன என்று தூதுவர்கள் கேட்டார்கள். அதற்குக் கணநாதர்கள் கூறுவார்கள். வங்காளதேசத்தில் சாரங்கதரன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குச்சுந்தரி என்னும் புதல்வியிருந் தாள் சுந்தரி, சித்திரன் என்னும் அரசகுமாரனுக்கு மனையாட்டி யானாள். அவள் கற்புநெறியையும் அரசமுறைகளையும் கைவிட்டுக் கணவனை மதியாது நடந்தாள். பரபுருடனிடம் உறவுகொண்டாடினாள். கணவனை நித்திரை செய்யும் சமயத்தில் வாளினால் அவனது உயிரை மாய்த்துவிட்டாள். இவளை யமதூதுவர்கள் உடனே கொண்டு சென்று கொடியநரகங்களிலே போட்டு வருத்தினார்கள். அதன் பின்னர் இந்தப் பூமியில் புலைச்சியாகப் பிறக்குமாறு விடுத்தார்கள். புலைச்சியானவள் பகல்முழுதும் உணவின்றி இருந்து கள் அருந்திவிட்டு ஒரு வீட்டின் அருகில் சென்று தங்கினாள். அவ்வீட்டிலுள்ளோர் அன்று சதுர்த்தி விரதத்தை அநுட்டித்து விட்டுக் கணேசமூர்த்திக்கு நைவேதிக்க பொருட்களைத்தாங்கள் உண்டார்கள். சேஷத்தைத் தெருவில் வீசினார்கள். இப்புலைச்சி அதனை எடுத்துப்புசித்தாள். மேலும் அவ்வீட்டார் ''கணபதி'' என்று மும்முறை துதி செய்தார்கள். புலைச்சியும் அவ்வாறே மும்முறை கூறினாள். அதனால் அவளுக்குத் தெய்வசரீரம் கொடுத்து விமானத்தில் ஏற்றினோம் எனக்கூறினார்கள்.

தேவேந்திரனானவன் புகலுவான் எமதுவிமானமானது ஆகாயத்தில் செல்லுகையில் ஒருநோயாளியின் பார்வைபட்டதும் விமானம் இவ் விடத்தில் இறங்கியது. அந்த விமானத்தை எழும்பும்படியாக அருள் செய்யவேண்டும் என்று தேவகணங்களைக் கேட்டான். அதற்கு அவர்கள் கணேசமூர்த்தியின் கட்டளை இல்லாது செய்யமுடியாது என்றார்கள். இப்போ புலைச்சிசரீரம் நீங்கித்தெய்வசரீரம் பெற்றிருக்கின்றவளது பார்வையானது இந்திரனுடைய விமானத்தில் பட்டது. பின்னர் அந்த விமானமும் ஆகாயமார்க்கத்தில் சென்றது தூதுவர்கள் தங்கள் அரசனிடத்தில் இந்திரவிமானம் விண்ணெழுந்ததையும் சொன்னார்கள். விநாயகப்பெருமானை அனைவரும் வணங்கி மகிழ்ந்தார்கள்.

# சூரசேனன் முத்திப் படலம்

மகாத்மாக்களே! பிரணவசொரூபியாகிய விநாயகப்பெருமான் பரிபாகருடை குறிப்பின்வழியே இந்திரனுக்கு உவந்ததையும் சங்கடசதுர்த்தியின் பேராற்றலையும் புகன்றோம். இனிமேல் சூரசேனன் முத்திப்பேற்றினைக்கூறுவோம். தம்குலகுருவாகிய வசிட்டர் வருதலும் சூரசேனன பேருவகை கொண்டு வழிபாடு செய்து தமது குறையை முறையிட்டனன். பின்பு குருவினது பேராதரவுடன் மாசி மாத அபரபட்சத்தில் வருகின்ற அங்காரகசதுர்த்தியில் விரதத்தை ஆரம்பித்தார்கள். மாதந்தோறும் வருகின்ற சதுர்த்தியை இடைவிடாது அநுட்டித்துக் கணேசமூர்த்திக்குப் பூஜைகள் நிகழ்த்தி வந்தார்கள். கணேசமூர்த்தியினுடைய கருணையினால் தேவகணங்கள் ஓர் விமானத்தைக் கொண்டு வந்து அந்த அரசன் எதிரில் நிறுத்தினார்கள். அரசனே! உன்னை அழைத்து வருமாறு விநாயகப்பெருமான் கட்டளை என்றார்கள். சூரசேனராஜன் விமானத்தை மும்முறை வலம்வந்து அட்டாங்கநமஸ்காரஞ் செய்தான். கணநாதர்களே! இந்த ஊரில் உள்ளவர்கள் ஓர் இமைப்பொழுதாயினும் நம்மைவிட்டுப்பிரியமாட்டார்கள் என்றான். அவர்களையும் அழைத்துச்செல்ல வேண்டுமென்று இரந்து கேட்டான்.

சூரசேனனின் வேண்டுகோளின் பிரகாரம் சுற்றத்தார், பரிசனங்கள் ஆகியோரும் விமானத்தில் ஏறினார்கள். தொழுநோய்கொண்ட வணிகனும் ஏறினான். அதனால் விமானம் எழும்பவில்லை. இதன்காரணத்தைக் கூறுமாறு கேட்டனர். கவுடதேசத்திலே தவசீலர் என்கின்ற வேதியர் இருந்தார். அவரது மனைவி பெயர் ஜானகி இருவருக்கும் புதன் என்னும் புத்திரன் பிறந்தான். அவன் வளர்ந்துகலைகளையெல்லாம் கற்று அறிஞனாயினான். அவனுக்கு சாவித்திரி என்னும் பெண்ணை விவாகஞ் செய்து கொடுத்தனர். அப்புதனானவன் இல்லறம் நடாத்தி வருகையில் ஊழ்வினை காரணமாக மதிமயக்கங்கொண்டு தாசியிடம் செல்வதாயினன். குமாரனைக்காணாத தந்தையார் அவன் இருக்கும் இடத்தை விசாரித்துக்கொண்டு வீதிவழியே சென்றார். வேசியர் பால் குமாரன் இருப்பதை அறிந்தார். புத்திரசோகம் காரணமாக அவ்விடம் சென்று மகனைப்பார்த்துக் கலங்கினார். மகனாகிய பாதகன் பொரிந்து தள்ளினான். பின்பு தந்தையார் தாடையில் அறைந்தான். இதனால் மனவேதனை கொண்டு தவசீலர் இறந்துவிட்டார்.

மகனாகிய கொடும்பாவி திலத்தைக் கீறி அவரை அடக்கஞ் செய்தான் பின்னர் பொருட்களை எடுக்கும் நோக்குடன்வீடு சென்றான். தாயானவள் தந்தையாரை அழைத்து வருமாறு கூறினாள். அவன் தடி கொண்டு தாயையும் மோதினான். அவளும் உயிர் இழந்து விழ

தலும் அவளையும் குப்பை மேட்டில் புதைத்து விட்டனன். இவற்றை யெல்லாம் கண்டமனைவி கொடிய பாதகத்தைச் செய்தீரே! தீராத நோய் வரப்போகின்றதே என்று புத்திமதிகூறினுள். அவளையும் காலால் உதைத்துத் தள்ளிக்கொன்ருன். அதன்மேல் மனைவியினது ஆபரணங்களையும் எடுத்துக்கொண்டு வனத்திற்குச்சென்ருன். வனத்தில் தாலவனமுனிவர் ஆச்சிரமஞ் சென்றபோது அவரது பத்தினியைக்கண்டு அவளது கையைப்பிடித்தான். அவள் கோபங்கொண்டு உனக்குக் குட்டநோய் உண்டாகக்கடவது என்று சபித்தாள். இவன் இறந்ததும் யமதூதுவர்கள் கொடிய நரகங்களிலே போட்டு வருத்தினுர்கள் அப்போது பாவம் தீராத காரணத்தால் இப்பிறவியிலும் குட்டரோகத்துடன் உற்பவித்தனன் என்ருர்கள். சூரசேனன் இவனையும் அழைத்துச் செல்வதற்கு உபாயந்தேடுமாறு வேண்டினன். தேவகணங்கள் அவனை அழைத்து அவனது காதில் "கணபதி" என்னும் நாமத்தை மூன்று தரம் உபதேசஞ் செய்தனர். உடனே குட்டரோகமானது நீங்கித் தெய்வசரீரம் பெற்ருன். சூரசேனராசன் நகரத்தார் புடைசூழ விமானத்தில் ஏறி விநாயகலோகம் போய்ச்சேர்ந்தனன். எல்லோரும் அளவற்ற காலம் பல அநுக்கிரகங்களைப்பெற்று கணேசப்பெருமானின் சரணுரவிந்தங்களை அடைந்தனர்.

## பரசுராமன் வரம்பெறு படலம்

முனிசிரேட்டர்களே! இதுகாறும் விநாயகருடைய சங்கடசதுர்த்தியைச் சூரசேனன் அநுட்டித்து முத்தியடைந்த வரலாறு கூறினேன். இனிமேல் பரசுராமன் வரம்பெற்றதிறனையும் செப்புகிறேன் கேட்பீராக. பவள வனத்தில் கார்த்தவீரியனுனவன் பவளத்தினுல் ஓர் விநாயகமூர்த்தியைச் செய்வித்துப் பிரதிட்டைசெய்து வழிபட்டான். அவனுக்குக் கணேசப்பெருமான் வரங்கள் பலவற்றை நல்கினுர். அவன் அவற்றைப் பெற்றுக்கொண்டதும் தந்தையைப் பணிந்தான் தான் விநாயகரது அருளால் தான் நற்பேறு பெற்றதை நவின்ருன். இதனைக்கேட்ட கிருதவீரியன் மிகுந்த மகிழ்ச்சி கொண்டு தனது அரசுரிமையைக் குமாரனுக்கு வழங்கினுன். இதன்மேல் சதாகாலமும் விநாயகமூர்த்தியைத் தியானித்து வழிபாடு செய்து கொண்டிருந்தான். கிருதவீரியனது வழிபாட்டிற்கு இருபைசுரந்த ஐங்கரப்பெருமான் கிருதவீரியராசனை அழைத்துவருமாறு தேவகணங்களை அனுப்பினுர். அரசன் தெய்வ ரூபம்பெற்ருன். மனைவி சுதன்மையும் தெய்வரூபத்தைப் பெற்றனள். இருவரும் கணேசலோகம் சேர்ந்தனர்.

சமதக்கினி முனிவரானவர் சையவரைச்சாரலில் ஐம்பொறிகளை அடக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தார். அவருடன் கற்பினில் மேம்பட்ட அவரது மனைவி ரேணுகையும் இருந்தாள். இவர்களுக்குப் பிருகு முனிவரின் சாபத்தினால் மகாவிஷ்ணு பிள்ளையாகப்பிறந்து பரசுராமன் என்னும் பெயருடன் சகலமுனிவர்களும் கொண்டாடத் தக்க அவர்கட்குப் பணிசெய்து வருகின்றநாளில் கார்த்தவீரியராசன் சேனுசமூகங்களோடு காட்டில் வேட்டையாடிவிட்டுச் சென்றான். செல்லுகையில் முனிவரின் ஆச்சிரமத்தைக்கண்டான். மந்திரிபிர தானிகளை நிறுத்தித் தான் மாத்திரஞ் சென்று முனிவரை வணங்கினன்.

சமதக்கினி முனிவர் ஆசீர்வதித்து நீ யார் என்று கேட்டனர். அரசன் கூறுவான் அடியேன் கார்த்தவீரியன் வேட்டையின் பொருட்டுக் காட்டிற்கு வந்தேன் என்றான். முனிசிரேட்டர் அரசனை ஆசனத்தில் இருக்கச்செய்து மேலும் புகலுவார் அரசனே! நீ மிகவும் களைப்பு அடைந்து விட்டனை. இவ்விடத்தில் அமுது உட்கொண்டு சாவசமாகச் செல்லலாம் என்றார். கார்த்தவீரியன் சொல்லுவான் சுவாமீ! தேவரீரிடம் தண்ணீர் அருந்துவதாயினும் தபோபலம் வேண்டும். யானே ஒருவனாய் வரவில்லை. அளவற்ற சேனைசமூகங்களுடன் வந்திருக்கின்றேன். ஆகவே அடியேன் செல்வதற்கு விடைகொடுத்தருள வேண்டும் என்று பிரார்த்தித்தனன். சமதக்கினிமுனிவர் விளம்புவார். நீயும் உன்னோடுவந்த அத்தனைபேரும் நதிக்கரைசென்று இளைப்பாறுங்கள் எனப்பணித்தார். தனது மனைவி ரேணுகையை அழைத்து அரசன் விருந்திற்கு வருகின்றான் என்றசெய்தியைக் கூறினார். அதன் மேல் காமதேனுவை மனதில் தியானித்தார் காமதேனு வந்ததும் முனிவரும் பத்தினியும் பூசை செய்து தங்கள் எண்ணத்தை அறியச்செய்தனர் அதன்மேல் காமதேனு மாடமாளிகைகள்முதலியவற்றை நிர்மாணித்து நால்வகை உணவுகளையும் பாத்திரங்களையும் வரச்செய்தது. அதன் மேல் முனிவருக்கு அறியச்செய்தது. அரசனானவன் இதுவரை கண்டிராத உபசாரங்களையும் கண்டு முனிவரது பாதகமலங்களை வணங்கினன். தனது பரிசனங்களோடும் உணவு உண்டான். பின்னர் இளைப்பாறி ஆயாசம் தீர்த்துக்கொண்டான்.

இதன்மேல் அரசன் சமதக்கினி முனிவரைப் பணிந்து சுவாமீ! இந்தப்பசுவை எனக்குத் தரவேண்டும் என்று கேட்டான். முனிவர் உனது அரண்மனைக்கு வருமாயின் நீ கூட்டிச்செல் என்றார். அரசன் காமதேனுவைக்கட்டி இழுத்துக்கொண்டு வாருங்கள் என்று ஏவலாளரிடம் கட்டளையிட்டான். இதனை அறிந்த காமதேனு மயிரைச் சிலிர்த்தது. அருகில் வந்த சனங்கள் எல்லோரும் மாண்டனர். காம

தேனுவுடன் பல வீரர்கள் உருவானார்கள் இருபக்கத்துச் சேனைகளுக்கும் கடுஞ்சமர் இடம்பெற்றது. கார்த்தவீரியன் ஐந்நூறு பாணங்கள் வீதம் செலுத்தினன். காமதேனுவினால் உருவாக்கப்பட்ட படைவீரர்கள் இவற்றையெல்லாம் நாசஞ் செய்தனர். தனது எண்ணம் நிறைவேறா ததால்கோபங்கொண்ட அரசன் சமதக்கினி முனிவர் தவத்தில்இருக்கும் சமயம் பார்த்து அவருடலை வாளினால் மாய்த்துவிட்டான்.

இதனைக்கண்ட முனிவர் பத்தினி ரேணுகா கூறுவாள் அடா துரோகி உண்டவீட்டிற்கு இரண்டகஞ் செய்வதில் உனக்கு ஒப்பான பாவியாருமுண்டோ? என்றாள். மேலும் தவஞ்செய்வோரைக் கொல் லுவதோ தரணிவேந்தர் முறை என்று கேட்டாள். பின் தன்காதல ரைத் தியானஞ்செய்து புத்திரனாகிய இராமன் வருமளவும் உயிர் தரித்திருந்தனள். ராமன் வந்ததும் ரேணுகை மனமுடைந்து பல வசனங்களைச் சொன்னாள். இவையாவற்றையும் இராமன் கேட்டதும் ரேணுகை உயிர் நீத்தாள், மகன் இராமன் ஆத்திரங் கொண்டு அரச குலம் முழுவதையும் ஒழிப்பேன் என்று சபதம்எடுத்தான். அதன்மேல் தாய் தந்தையருக்குச் செய்யவேண்டிய கடன்களை முறைப்படி நிறை வேற்றினன். ஐந்தாம் நாள்இரவில் ரேணுகையானவள் இவன் அம்மா எனக்கூப்பிட்டதும் தனது முகத்தை மட்டும் காட்டினாள். தேதாத்திரி முனிவர் இராமனை பதின்மூன்றும் நாள் முடியுமுன் அழைத்தபடியால் முகத்தைக்காட்டினார். எனக்கூறினர். இராமன் பிதிர்க்கடன்களைச் செவ்வனே நிறைவேற்றினன். சமதக்கினிமுனிவர் பிரமலோகம் போய்ச்சேர்ந்தார். ரேணுகை உலகம் வணங்கும் தெய்வத் தன்மை யைப் பெற்றுக் கொண்டாள். இதன்மேல் இராமன் கைலைவரை அடைந்து சிவபெருமானது அருளையும்பெற்று கணேசப்பெருமானின் சடாக்கரமந்திரத்தைச் சிவபிரானிடம் உபதேசம் பெற்று மயூரம் என்னும் தலத்தை அடைந்தான். கணேசப்பெருமானின் திருவடிகளைப் பூசைசெய்தான். ஐம்புலன்களையும் அடக்கிச் சடாட்சரமந்திரசெபஞ் செய்தான். விநாயகப்பெருமான் கிருபைசுரந்து பிரசன்னமாயினர். இராமன் அளவற்ற ஆகமங்களால் துதிசெய்து தனது தாய் தந்தை யரைக் கொலை செய்த கார்த்தவீரியனது அரசகுலம் முழுவதையும் வெற்றிகொள்ளும்படியான வரத்தை நல்க வேண்டும் எனப்பணிந் தான், ஐங்கரப்பெருமான் அவ்வாறே கொடுத்தருளித் திருவுருவைக் கரந்தருளினர்.

அதன் மேல் பரசுராமன் கார்த்தவீரியன் முதலாய அரசகுலங்களை எல்லாம் அழித்தான். அவர்கள் ஆட்சிசெய்த உலகங்கள் யாவற்றையும் அந்தணர்கட்கு வழங்கினன். தனது சபதத்தை நிறைவேற்றிவிட்டுச் சிரஞ்சீவியாகப்பல்லாண்டு காலம் வாழ்ந்து வந்தான்.

# இராவணன் பூசித்த படலம்

திருவருட் செல்வராகிய முனிசிரேட்டர்களே! இது காறும் சமதக்கினிமுனிவர் புத்திரனுகிய பரசுராமன் விநாயகப்பெருமானின் சடாக்கரத்தை அநுட்டித்து அப்பெருமானின் அருளால் அரசகுலங்களை வெற்றிபெற்றதை விளம்பினேம். இனிமேல் இலங்கைவேந்தன் இராவணன்பூசித்த செயலினையும் செப்புவோம் என்ருர். இராவணனுனவன் முன்னொரு காலத்திலே கைலையங்கிரியை அடுத்துச்சிவபிரானைநோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தான். சிவபெருமான் சடாமகுடத்துடன் காட்சி நல்கினுர். உனக்கு வேண்டியதைக் கேட்பாய்என்று கூறினுர். இராவணனுனவன் சுவாமீ! இலங்காபுரி அழியாது நிலைபெற்றிருக்க வேண்டுமெனக் கேட்டனன். பரமசிவனுனவர் இராவணனது கையிலே ஒரு சிவலிங்கத்தைக் கொடுத்தார். அதன்மேல் இராவணனே! இந்தச் சிவலிங்கத்தை இலங்கைப் பதியில் வைத்துப் பூசை செய்யக்கடவாய் இந்த இலிங்கத்தை வாகனத்திலே கொண்டு செல்ல வேண்டும் சித்தி புத்தியோடு கொண்டுசெல்ல வேண்டும். நிலத்திலே வைத்தால் மீண்டும் எடுக்கமாட்டாய். இவ்வாறு கூறிய சிவபிரான் திருவுருவைக்கரந் தருளினுர்.

இராவணன் சிவலிங்கத்தை மிகுந்த பயபக்தியுடன் கையில் கொண்டு காடுகளையும் மரங்களையும் கடந்து இலங்கையை நோக்கிச் சென்ருன். இதனைக்கண்ட தேவேந்திரன் முதலாய முப்பத்து முக்கோடி தேவர்களும் கணேசமூர்த்தியின் சந்நிதானத்தை அடைந்தனர். விநாயகரது பாதங்களைப் பணிந்து சுவாமீ! இராவணன் சிவலிங்கத்தை இலங்கையில் வைத்துப்பூசிப்பானுயின் அவனுக்கு எதிர்காலத்திலும் மரணம் ஏற்படமாட்டாது அவன் தேவர்குலங்களை நாசஞ் செய்வான். அவன் இலங்கைக்குக் கொண்டுசெல்ல முடியாதவகை செய்யவேண்டும். என இரந்தனர்.

தேவர்களின் வேண்டுதற்பிரகாரம் கணேசமூர்த்தியானவர் இராவணனுக்குச் சலஉபாதை ஏற்படுத்துமாறு வருணனிடம் பணித்தார். தான் பிராமணப்பிள்ளை வடிவத்துடன் இராவணன் எதிரில் வந்தார். பிராமணச்சிறுவனைக்கண்ட இலங்கேஸ்வரன் அப்பா மகனே யான் ஜலஸ்பரிசஞ் செய்து வருகின்றேன். இச்சிவலிங்கத்தை உனது கரத்தில் வைத்திருக்க வேண்டும் எனக்கூறினுன். யானே சிறுவன் எனக்கோ தாங்கும் சக்திஇல்லை. மும்முறை அழைப்பேன் அதற்குள் வராவிட்டால் நிலத்தில் வைத்துவிடுவேன். எனக்கூறினுர். இதற்குச்சம்மதம் தெரிவித்த இராவணன் சிவலிங்கத்தைச் சிறுவன் கையில் கொடுத்துவிட்டுச் சல உபாதைநீக்குவதற்குச் சென்றுவிட்டான். பிராமணச் சிறுவன் மும்முறை கூப்பிட்டான் இலங்கேஸ்வரன் வரவில்லை. சிவலிங்கத்தை நிலத்தில் வைத்துவிட்டான் சிறுவன் ஓடிவந்த இராவணனுல் சிவலிங்கத்தை எடுக்க முடியவில்லை. பிராமணச்சிறுவனைக்குட்டுவதற்கு ஓடிச்சென்ருன்,

கணேசப்பெருமான் காட்சி கொடுத்தார். இராவணனைப் பாதாளத்தில் விழும்படி தள்ளி ஆடினுர். தாங்கமுடியாத இராவணன் அபயம் என அனந்தமுறை ஓலமிட்டான். மேலும் இலங்கேஸ்வரன்

ஆகமங்களால் துதிசெய்து பரிமளமிக்க புட்பங்களால் அருச்சித்தான். இராவணனே எம்மைக்குட்ட வந்த நீ உனது சிரசில் குட்டிக்கொள் என்று கூறினர். இராவணன் தனது சிரசின் உதிரம் ஒழுகும்படி குட்டினன். மேலும் கணேசப்பெருமான் சொல்லுவார். யாவரேனும் எம்மை இவ்வாறு குட்டி வழிபாடு செய்வாராயின் அவர்களது துன்பத்தை நீக்கியருளுவோம் என்று கூறினர். இலங்கேஸ்வரன் விநாயகப் பெருமானை வணங்கி வரங்களைப்பெற்றுக்கொண்டு இலங்காபுரியை அடைந்து இன்புற்றிருந்தான்.

## அகத்தியர் பூசித்த படலம்

சவனகாதி முனிவர்களே! இராவணன் விநாயகமூர்த்தியைப்பூசித்து வரம்பெற்று சரிதையை யாம் சொன்னேம். இனிமேல் அகத்தியர் வந்தித்ததிறனையும் விளம்புகின்றேம் கேட்பீராக. எனவே பிதிர்தேவனைப் பிரமதேவன் கருணையோடு நோக்கிச்சொல்லுவான். கைலாசபதியாகிய சிவபெருமானிடம் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் ஆளும் வரத்தைப்பெற்றுக்கொண்ட சூரபத்மனுனவன் தேவர்களைத் துன்புறுத்தி வந்தான் தேவேந்திரன் இந்திராணி ஆகியோர்பூலோகத்தில் சீகாழியில் ஓர் நந்தவனத்தை அமைத்தனர். அதில் புட்பங்களை எடுத்துச் சிவபூசை செய்து வந்தார்கள் சூரபத்மனுடைய ஆணைப்பிரகாரம் சீகாழியில் மழைபெய்யவில்லை. இதனுல் தேவேந்திரன் மிகவும் கவலை கொண்டு வாடினன். அவ்வமயம் அங்குவந்த நாரதமுனிவர் தேவேந்திரனே அகத்தியருடைய கமண்டலத்தில் காவேரிநதி இருக்கின்றது. சர்வ காரணராகிய விநாயகரை வழிபட்டால் அந்நதியினைப் பெருகச் செய்வார் என்று எடுத்துரைத்தார்.

தேவராஜன் விநாயகப்பெருமானை வேண்டுதல் செய்தான். கணேசப் பெருமான் கருணைசெய்வதாக வாக்குறுதி தந்தார் கைலமலைச்சாரலில அகத்தியரது கமண்டலத்தின்மேல் காகவடிவுடன்உட்கார்ந்து கமண்டம் நீரைக்கவிழ்த்து விட்டார். அகத்தியர் கோபத்துடன் சென்ற சமயப் பிராமணப்பிள்ளையாகக் காட்சி நல்கினர். பிராமணச்சிறுவனைக் குட்டச்சென்றபோது பயந்தவர்போல ஓடினர். அகத்தியர் இளைப்புற்று இருந்தபோது யானைமுகத்தோடு காட்சிகொடுத்தார். அகத்தியமுனிவர் திகைத்துத் தமது தலையிலே குட்டிக்கொண்டார். கணேசப்பெருமான் தமிழ்முனியே! உனது அன்புக்கு மெச்சினேம். எனக்கூறினர். மேலும் காவிரியின் ஜலத்தை கையால் அள்ளிக் கமண்டலத்தில் நிரப்பிக் கொடுத்தார். அத்துடன் அகத்தியர் வேண்டியவரங்களையும் நல்கினர். விநாயகப்பெருமான் இருவுருவைக்கரந்தருளியதும் தமிழ்முனி கமண்டலத்தையும் கொண்டு பொதியமலை சென்றர். காவிரிநதியானது பெருகித் தேவேந்திரனுடைய நந்தவனம் முழுவதும் பாய்ந்து கடலிற் சேர்ந்தது. கணேசபெருமானல் உண்டாக்கப்பட்ட காவிரிநதியானது காலந்தவருது அடியார்களுக்குத் திருவருள் நல்கிவருகின்றது.

# காசிபர்முதலியோர் அநுட்டித்த படலம்

முனிசிரேட்டர்களே! இந்திரன் விநாயகமூர்த்தியைப்பூசித்துக்காவிரி நதியினைப்பெற்றுக்கொண்டதையும் அகத்தியர் பூசித்து அளவற்ற வரங்களைப் பெற்றதையும் விளம்பினோம். இனிமேல் காசிபர் முதலியோர் அநுட்டித்த செயற்பாட்டினையும் சொல்லுகின்றோம். கேட்பீர்களாக. என ஆரம்பித்தார். முன்னர் ஒரு பிரளயமுடிவில் பிரமனானவன் தன்மனத்தால் ஏழு புதல்வர்களை உண்டாக்கினான். அவருள் காசிப முனிவர் அறிவும் மேன்மையும் உடையவராக விளங்கினார். பிரமன் அவருக்குக் கணேசப்பெருமானுடைய ஏகாட்சரமந்திரத்தை உபதேசஞ் செய்தார். அதனைச் செபிக்கும் முறையையும் அறிவுறுத்தினார். மைந்தனே! ஐம்பொறிகளையும் அடக்கிக் கணேசமூர்த்தியின் திருவடிகளிலே மனதைச்செலுத்தி மந்திரசெபஞ் செய்து அவரது அருளினாலே சகல ஆன்மாக்களையும் சிருட்டி செய்வாய் என்று அனுப்பி வைத்தார். அதன் பிரகாரம் தேவவருடம் ஆயிரம் வரையில் காசிபர் தவஞ் செய்துகொண்டார். யானைமுகப்பெருமான் மூஷிகவாகனத்துடன் காட்சிநல்கினார்.

காசிபர் அனந்தமுறை தோத்திரஞ் செய்து இருகரங்களையும் சிரமேற் கூப்பி வணங்கினார் சுவாமீ! அடியேன் உலகத்தில் உயிர்த் தொகைகளைச் சிருட்டி செய்யுமாறு அருள வேண்டும் அத்துடன் தேவரீர் கசியபநந்தனென்னும் பெயரோடு எனக்குப்புத்திரராக வர வேண்டும் எனப்பிரார்த்தித்தார். கணேசப்பெருமான் அவற்றைத் தருவதாக அநுக்கிரகித்துத் திருவுருவைக் கரந்தருளினார். காசிபர் தமது ஆச்சிரமஞ் சென்று பத்தினிமாருடன் இல்லறம் நடாத்தி இன்புற்றிருந்தார். அவர்கள் கருப்பத்தினின்றும் தேவர் முதலிய அளவற்ற சராசரங்கள் உண்டாயின. அவர்களுக்குக் காசிபர் விநாயகமூர்த்தியினுடைய திருமந்திரங்களைச் சோதித்து எடுத்து 1,4,5,8,12,16,19 என்னும் எழுத்துக்களையுடைய மந்திரத்தைமுறைப்படி உபதேசித்தார், பின்னர் அவர்கள் ஒவ்வொருமந்திரங்களைக் கடைபடித்து விநாயகரை வெவ்வேறு விதங்களாகத்தங்களுக்குள் தியானித்துக் தேவவருடத்தில் 1000 வருடம் தவஞ்செய்தனர். அவர்கள் தவத்திற்குக் கிருபை கரந்த கணேசப்பெருமான் அவர்கள் எவ்வாறு தியானித்தார்களோ அவ்வாறே காட்சி நல்கினார்.

கணேசமூர்த்தியின் திருக்காட்சியைக் கண்டு அனைவரும் அட்டாங்க நமஸ்காரஞ் செய்து துதித்தனர். காசிபர் முதலாயினோர் சுவாமீ! அடியேங்கள் கிருகஸ்தர்கள் ஆகும் படி கருணைபுரியவேண்டும் என்றிரந்தார்கள். விநாயகப்பெருமான் உங்கள் தோத்திரங்களை மெச்சினோம். நீங்கள் விரும்பிய வரங்களை அருளுகின்றோம் எனக்கூறித் திருவுருவைக்கரந்தருளினார். தேவர்கள் முதலாயினோர் ஐங்கரப்பெருமானுக்கு ஆலயம் அமைத்து தங்களுக்குக் காட்சிகொடுத்த உருவங்களுக்கு ஒவ்வோர் நாமம் சூட்டி வணங்கி வரம் பெற்றார்கள்.

## காசிபர்முதலாயினோர் அநுட்டித்த சகஸ்திரநாமப் படலம்

அஞ்ஞானத்தை வென்ற முனிசிரேட்டர்களே!

காசிபர் முதலாயினோர் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரப் பெருமானின் சகஸ்திரநாமங்களோடு அநாதிபரத்துவ நாமம் இருபத்துநான்கையும் சொல்லுகின்றோம் கேட்பீர்களாக என்று சொல்லியருளினார் முதலில் தியானம் கூறப்பட்டது பின்னர்சகஸ்திரநாமங்களால் அர்ச்சித்தார்கள். அளவற்ற திருப்பணிகளைச்செய்து ஞான சூரியராகி ஐக்கியமாவார்கள். விநாயகருடைய சதுர்த்தி தினத்தில் பூசை செய்து நாமங்களை உச்சரித்தால் மேலானபலன்களிலும் நூறு மடங்கு மேம்பட்ட பரமானந்த சாகரத்தில் மூழ்குவார்கள். அத்துடன் இந்நாமங்களை உச்சரித்தல். உச்சரிப்பித்தல், கேட்டல், கேட்பித்தல், அருச்சிப்பித்தல், செபித்தல் இவைகளின் ஒன்றேயேனும்செய்வார்களாயின மேலான பலன் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

சகஸ்திர நாமங்களை உச்சரிக்கமாட்டாதவர்கள் அவற்றின்மேலான இருபத்தொரு நாமங்கள் இருக்கின்றன. அவற்றை, உச்சரித்தால் சகஸ்திர நாமத்தை உச்சரித்த பலன் கிடைக்கும்.

விரத நியமங்களோடு விநாயகசதுர்த்தியில் தொடங்கி நான்குமாதம் வரை உச்சரித்தோருக்கு முன்னைய ஜெனனங்களிலும் இனிவரும் ஜெனனங்களிலும் பாவங்கள் அணுகாது விலக்கிக் கணேசப்பெருமானின் உலகத்தில் கணங்களுக்குத் தலைமை பூண்டிருக்கும் பெரும்பேறு கிட்டும் என்று முன்னம் பிரமதேவன் வேதவல்லி படர்தற்கொரு கொழுகொம்பினையொத்த மகாமகத்துவம் மிக்க வியாழபகவானுக்குக் கூறினார். அகிலாண்ட காரணகர்த்தராயுள்ள விநாயகப் பெருமானுடைய சரித்திராமிர்தத்தைச் செவிமூலம் தேக்கிச் சிவசாயுச்சியராக விளங்குகின்ற சோமகாந்தனே! சித்தபூர்வமாகச் சிந்திக்கக்கடவை என்று பிருகு முனிவர் திருவாய் மலர்ந்த பார்க்கவபுராணத்தைப் பூர்த்திசெய்து ஆசிகூறியிருந்தனர்.

முதலாவது உபாசனகாண்டம் முற்றிற்று.




காசி விநாயகர் தேவஸ்தானத்தில் எழுந்தருளி இருக்கும்
பஞ்சமுக விநாயகமூர்த்தி

ஓம்

# இலீலா காண்டம்

## காப்பு

பூத்தமலர்த் தவிசிறைவின் டானமர ரதிலாமாதி புகரிதா யாற்றமறை
- யளந்த மின்னு
மேத்தவள றமலரடைந் தாமரையுனு மருட்கடலே ழிறும்பார்பூதி
-தபூதமா யனைத்தூ யோங்கி
கரத்திகமா யருளாலே மட்மை கொள்ளக் கசமுசமு நால்வாயு மதிகதியு
முடித்தி மண்ணோர்க்
காத்தழைத்த கடவுளிறும் பூப்பதமே ணாப்போது கதித்துநலங் கைத்த
- ருமா றிசைந்து மன்றே.

வேண்டுவார் வேண்டுவதை நல்கும் ஸ்ரீ பஞ்சாட்சரத்திற்கு ஒப் பாக விளங்குவது பிரணவ சொரூபம் பேரின்பத்தைக் கொடுத்து உத வுவதாகிய நைமிய சாரிணியத்தில் சௌனகாதி முனிவர்களால் செய்து வரும் யாகம் மேலும் நிறைவு பெறாமையால் முனிசிரேட்டர்கள் அனை வரும் ஒன்று கூடிச் சூதபுராணிகரை நோக்கி ஐயனே! கிருபாநிதியே! தேவரீரது திருவாக்காகிய அமுதமுண்ட விசேடத்தினால் சாதுசங்க மம், சாத்திரமுதிர்ச்சி முதலான சிவஞான திக்கங்களை எல்லாம் எளி திற் பெற்றுக் கொண்டோம். மேலும் விநாயக பிரபாவம் உண்டாயின் திருவாய் மலர்ந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தனர். சூதமகா முனிவர் அவ்வேண்டுதலை ஏற்றுப் பின்வருமாறு புகலுவராயினர்

# 1வது வக்கிர துண்ட விநாயகர் திருவவதாரப் படலம்

சௌனகாதி முனிபுங்கவர்களே! உங்கள் சித்தப்படி கூறுவதற்கு யாம் விழைகின்றோம். இங்ஙனம் கூறுவதனால் யானும் கிருகஸ்தராகிக் கணேசப் பெருமானின் கருணைக்கு ஆளாகின்றேன். நீவிர் சித்தத்தை ஒருமுகப்படுத்திக் கேட்பீர்களாக என்று ஆரம்பித்தார். ஆசாரியராகிய வேதவியாசர் மலர்மகள் வாழும் நாவினைக் கொண்ட சதுர்முகக் கடவுளை வழிபாடு செய்து ஞானமூர்த்தியே! நதி, மதி தரித்த சடாமகுடத்தையுடைய விநாயகக் கடவுள் அடியார்களின் பொருட்டு நடாத்திய திருவிளையாடல்களைக் கிருபை செய்தீரே! அஃதேபோல் அப்பெருமான் செய்தருளிய லீலா வைபவங்களையும் செப்பியருள வேண்டும் எனப் பிரார்த்தித்தார். அப்போது பிரமதேவன் சொல்லியருளினார். அதனை யாமும் தெரிந்த வண்ணம் உங்களுக்குக் கூறுகின்றோம் என ஆரம்பித்தார். மும்மதங்களையும் பொழிகின்ற யானைமுகப் பெருமான் யுகங்கள் தோறும் அடியார்களின் அன்பின் வழியே கிருபைபுரிவான் எனக்கருதியே வெவ்வேறு திருவுருவந் தாங்கிப் பிரகிருதாதி மூவகை ஆன்மாக்களுக்கும் காத்தருளிய திருவிளையாடல் அளவிட்டுக் கூறமுடியாது. எனினும் அகிலாண்டேஸ்வரியாகிய சாட்சாத் உமைமணாளராகிய பரமசிவன் சிவசண்முகக்கடவுளுக்குப் பன்னிரண்டு திருவிளையாடல்களைக் கூறியிருக்கின்றனர் அவைகளை முறையாகச் செப்புகின்றேன். அவையாவன:-

1) வக்கிரதுண்டவிநாயகர்
2) சிந்தாமணிவிநாயகர்
3) கஜானனவிநாயகர்
4) விக்கினராஜவிநாயகர்
5) மயூரேசவிநாயகர்
6) பாலச்சந்திரவிநாயகர்
7) தூமகேதுவிநாயகர்
8) கணேசவிநாயகர்
9) கணபதிவிநாயகர்
10) மாதோற்கடவிநாயகர்
11) துண்டிவிநாயகர்
12) வல்லபைவிநாயகர்

இறுதியான இரண்டும் அநேகமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இவையே முக்கியமானவையாகும். இவைகளுள் வக்கிரதுண்ட விநாயகர் திருவவதாரமும் அவர் செய்தருளிய வைபவங்களும் உபாசனா காண்ட பிரதமத்தில் மூவர் வரம் பெறுபடலத்தில் சொல்லியிருக்கின்றோம். அடுத்துச் சிந்தாமணி விநாயகர் திருவிளையாடலைக் கூறுவோம்.

## 2வது சிந்தாமணி விநாயகர், திருவவதாரப்படலம்:-

ஞான விரதர்களே! தமிழ்நாட்டிலே உலகமெங்கணும் தனது ஆட்சியைச் செலுத்தி வந்த அபிசித் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் மனைவி குணவதி இருவரும் இல்லறம் என்னும் நல்லறத்தை நடாத்தி வந்தனர். ஆண்டு பலசென்றும் அவர்களுக்குப் புத்திரப் பேறு கிடைக்கவில்லை. மனவேதனை கொண்ட அரசனும் மனைவியும் வனஞ் சென்றார்கள். வனத்திலே ஓர் ஆச்சிரமம் இருப்பதைக் கண்டு அங்கு சென்றார்கள் அங்கே சிவவேடத்துடன் மாதவத்தராகிய வைசம்பாணமுனிவர் இருப்பதைக் கண்டு அவரது பாதத்தில் வீழ்ந்து வணங்கினார்கள். முனிவர் பிரான் கிருபையோடும் நோக்கினார். அரசனே! நீவிர் இவ்விடம் வரக் காரணம் யாது? என வினவினார். அபிசித் பதில் கூறாது மௌனமாக இருந்தான். ஞான நிஷ்டையில் இருந்த வைசம்பாணர் அரசனே! உனக்குப் புத்திரப் பேறு உண்டாகக் கடவது என்று ஆசி வழங்கினார்

அபிசித்மன்னன் இருகரங்களையும் கூப்பிவணக்கஞ் செய்து சுவாமி! தங்கள் ஆசி சித்தியாகும் மார்க்கத்தையும் அநுக்கிரகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தான். வைசம்பாணர் கூறுவார் சமுத்திர நதி சங்கமத்தின் மேற்புறத்தில் ஓர் வனமும் தடாகமும் உண்டு அங்கே நீ சென்று உனது மனைவி பணி செய்ய நீ நான் கூறும் மந்திரத்தை நான்கு மாதம் வரை செபஞ் செய்து இறுதியில் ஓமம், தர்ப்பணம் இவைகளை நிறைவேற்றி விட்டு உனது இராச்சியம் செல்வாயானால் உமாபரமேஸ்வரன் கிருபையால் புத்திரப்பேறு உண்டாகும் என்று கூறி அரசனை அனுப்பி வைத்தார். வைசம்பாணர் கூறிய பிரகாரம் அபிசித் மன்னனும் அவன் மனைவி குணவதியும் முனிவரிடம் விடை பெற்றுச் சென்று தடாகக் கரையை அடைந்தனர் அங்கே சரஸ்வதி தேவியார் பணிசெய்யப் பிரம்தேவன் தவஞ்செய்து கொண்டு இருப்பதைக் கண்டனர் இவர்களும் பிறிதோர் இடத்தில் குணவதி பணி செய்ய அபிசித் மன்னன் செபஞ் செய்து கொண்டு இருந்தான் பணி விடை தவிர்ந்த நேரங்களிலும் சரஸ்வதியும் குணவதியும் காட்டிற்குச்சென்று கனிவர்க்கங்களை கொண்டுவந்து நாயகர்களுக்குகொடுத்து வந்தனர். சரஸ்வதி ஓர் தினம் சிறிது மனக்குழப்பம் அடைந்தாள். அவ்வமயம் பிரமதேவன் கூறுவான் தவத்திற்கு வந்த நாமே தவறு விட்டால் பரம்பொருள் நம்மைச் சபித்து விடுவார். பின்னர் சரஸ்வதிதேவி அவ்விடம் விட்டு அகலுதலும் பிரமதேவன் தடாகஞ் சென்று

ஸ்நானஞ் செய்தான். அப்போது பிரமனது வீரியமானது வெளிப்பட்டது. சிலநாட்களில் குணவதியின் வயிற்றில் கருவாய் உருப்பெற்றது

வைசம்பாணர் கூறிய பிரகாரம் நான்கு திங்களும் முடிவுற்றபின் அபிசித்து மன்னன் தருப்பணாதிகளை நிறைவேற்றினான். அதன்மேல் மனைவியோடும் நகரத்தை அடைந்தான். தேவர் கடன்களையும் நிறைவேற்றினான் பத்தாந்திங்களில் குணவதி ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத்தாள். புத்திரனுக்குக் கணன் என்று நாமஞ் சூட்டப்பட்டது அன்னப்பிராசனம், வித்தியாரம்பம் முதலாம் சடங்குகள் செய்யப்பட்டன கணனானவன் பிள்ளைப் பருவத்தில் செய்த திருவிளையாடல் அநேகம், இவ்வாறு திருவிளையாடல்கள் புரிந்த கணன் சிவ பூசை முதலாய நியமங்களையும் வழுவாது நிறைவேற்றி வந்தான். வளர்ந்து பெரியவன் ஆனதும் தந்தையின் அனுமதி பெற்றுத் தடாகக் கரை சென்று ஒற்றைக்காலில் நின்று ஆயிரத்து முப்பது வருடம் பஞ்சாக்கரம் செபித்துக் கொண்டு கடுந்தவம் இயற்றினான்.

கணனது தவத்தைக் கண்டு தேவர்களும் நடுங்கினார்கள் சிவ பிரான் இடப வாகனத்தில் பார்வதி சமேதராகக் காட்சி நல்கினார். கணனானவன் பலமுறை பணிந்து துதி செய்தான். சிவபிரான் கணன் கேட்டுக் கொண்ட பிரகாரம் அரிபிரமேந்திராதி தேவர்களும் ஏவல் புரியும் ஆட்சியை அவனுக்கு வழங்கினார். கணராஜன் தாய் தந்தையரைப் பணிந்து விடை பெற்றுச் சென்றுமூன்று உலகங்களையும் ஆட்சி செய்து வந்தான் பின்னர் ஓர் தினம் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். சிங்கம், யானை முதலாம் மிருகங்களை வேட்டையாடி விட்டுத் திரும்புகையில் ஓர் மரநிழலில் இளைப்பு நீங்குவதற்காக சேனைகளுடன் தங்கியிருந்தான் அந்த வனத்தில் கபில முனிவரது ஆச்சிரமம் இருந்தது. கணராஜன் இளைப்பு நீங்க இருப்பதை அறிந்த கபிலமுனிவர் சீடர்களை அழைத்து அரசனைக் கூட்டி வருமாறு பணித்தார். கணராஜனுக்கும் சேனைகளுக்கும் உணவு கொடுக்க விரும்பிய முனிவர் தம்கழுத்தில் அணிந்திருந்த சிந்தாமணியைக் கழற்றி ஆசனத்தில் வைத்துப் பூசை வழிபாடுகள் நிகழ்த்தினார். பின்பு அரசனுக்கும் சேனைகளுக்கும் உணவு கொடுக்குமாறு பணித்தார், சிந்தாமணியானது ஓர் அழகான நகரத்தை உண்டாக்கி அதிலே அரசனுக்கும் சேனைகளுக்கும் விருந்து கொடுத்தது, கணராஜனுக்குச் சிந்தாமணி மேல் விருப்பம் உண்டானது கபிலமுனிவரை அணுகிச் சிந்தாமணியைத் தனக்குத் தருமாறு கேட்டான் முனிவர் பிரான் அரசனே சிந்தாமணி எனது உயிரினும் மேலானது. அதனைக் கேளாதே என்

றார் அறியாமையுடைய கணராஜன் முனிவரிடமிருந்து சிந்தாமணியைப் பறித்துக் கொண்டான். முனிவருக்கு கோபம் ஏற்பட்டது. பதிதனே! கடவுளானவர் அவதாரஞ் செய்து உன்னை நாசஞ் செய்வார் என்று சாபமிட்டார் கணராஜன் அரண்மனை சென்று சிந்தாமணி மூலம் அளவற்ற சித்திகளைப் பெற்று ஆட்சி நடத்தினான்.

கபிலமுனிவர் கவலை மேலிட்டவராய் விநாயகக் கடவுளை நோக்கி அகோரமான தவஞ் செய்தார் பதினெட்டு உருச்செபித்து ஓமம் தர்ப்பணம் இவைகளை நிகழ்த்தினார்- கணேசப் பெருமான் முனிவர் முன் காட்சி நல்கினார். சுவாமீ! இழந்த சிந்தாமணியைத் மீட்டுத் தரவேண்டும் என்று வேண்டினார், ஐங்கரப் பெருமான் அவ்வாறே அருளுவதாகக் கூறியருளினார். இதன் மேல் கணராஜன் கனவிலே தோன்றிய கணேசப்பெருமான் சிந்தாமணியைக் கொடாவிட்டால் பல அனர்த்தங்கள் நிகழுமென அறிவுறுத்தினார் (அபிசித்து மன்னன்) தந்தையார் கூறிய அறிவுரைகளையும் கணராஜன் ஏற்கவில்லை, போருக்குப் புறப்பட்டுக் கபிலமுனிவரது ஆச்சிரமத்தை அடைந்தான்.

முனிவர் பிரான் விநாயகப் பெருமானுக்கு பூசைகள் நிகழ்த்திக் கொண்டிருந்தார். சித்தி - புத்தி சமேதரான கணேசமூர்த்தியைக் கண்டான். முனிபுங்கவர் விநாயகப் பெருமானுக்கு ஆராதனைகள் நிகழ்தினார். சகஸ்ர நாமங்களால் அருச்சித்தார். வேதங்களால் துதி செய்தார். எங்களைக் காத்தருள வேண்டுமென இரந்தார். விநாயகப் பெருமான் தனது சக்திகளை முதலில் போருக்கு அனுப்பினார். போர் ஆரம்பமானது. சுலபன், சூலபாணி ஆகியோருடன் உக்கிரப் போர் நிகழ்ந்தது, இறுதியில் அனைவரும் விண்ணுலகம் சென்றார்கள், மேலும் அநேக சேனைகள் சிருஷ்டிக்கப்பட்டன. இலக்க வீரர்களுடன போர் நிகழ்த்திய கணராஜன் முனிவரை நோக்கி ஓ கபிலா? உன்னையும் உனக்காகவந்த அனைவரையும் ஒரு கணையால் அழிப்பேன் என்று சபதமிட்டான். யானைமுகப் பெருமான் மீது அளவற்ற கணைகளை எய்தான், கணேசமூர்த்தி மழுவாயுதத்தை எடுத்தார், அனைவரையும் துன்புறுத்துகின்ற கணனுடைய சிரசை அறுத்து வருமாறு பணித்தார் மழுப்படையானது அளவற்ற பிரகாசத்துடன்சென்று கணராஜனுடைய சிரசை அறுத்து வீழ்த்தி விட்டுக் கங்கையில் நீராடி மீண்டும் கணேசப் பெருமானின் திருக்கரத்தில் வந்து இருந்தது தேவர்கள் புஸ்பமாரி பொழிந்தார்கள். அபிசித்து மன்னன் தனது

மகனால் கவரப்பட்ட சிந்தாமணியை எடுத்து வந்து கணேச மூர்த்தியினது பாதங்களில் ஒப்படைத்தான். விநாயகப் பெருமான் கபில முனிவரிடம் சிந்தாமணியை ஒப்படைத்தார். கபில முனிவர் கணேசமூர்த்தியின் கண்டத்தில் அணிந்து மகிழ்ந்தார். அபிசித்து மன்னன் தனது பௌத்திரர்களிடம் அரச பரிபாலனத்தை ஒப்படைத்து நீதிதவறாது செங்கோல் நடைபெற வழிவகுத்தான். **சிந்தாமணியின் வரலாறு** முன்னொருகால் தேவேந்திரன் கபில முனிவரது ஆச்சிரமம் சென்ற போது முனிவரானவர் அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து உணவுவகைகளைக் கொடுத்து உபசரித்தார். இதனால் மகிழ்ச்சி கொண்ட தேவராசன் மகாவிஷ்ணுவால் தமக்கு அளிக்கப்பட்ட சிந்தாமணியை கபிலமுனிவருக்கு அணிவித்து வணங்கினான்.

## 3வது கஜானன விநாயகர் திருவவதாரப் படலம்:

முனிசிரேட்டர்களே! விக்கினங்களை நீக்குகின்ற விநாயகப் பெருமான் கபில முனிவரது ஆச்சிரமத்தில் தோன்றி கணராஜனைச் சங்கரித்து சிந்தாமணியை மீட்ட திருவிளையாடலைக் கூறினோம். இனிமேல் கஜானன விநாயகராக அவதரித்துச் செய்தருளிய திருவிளையாடலைக் கூறுவோம் கேட்பீராக என்று தொடங்கினார். முன்னர் ஓர்கால் பிரமதேவனது கொட்டாவியினின்றும் ஓர் புருடன் உதித்தான் அவனைப் பிரமதேவன் நீ யார்? என்று கேட்டான். அதற்கு அப்புருடன் உனது முகத்தினின்றும் உதித்துள்ளேன் யான். உனக்கு மகனாகவும் எனக்குத் தங்க இடமும் பெயரும் நல்க வேண்டும் எனக் கேட்டான். பிரமதேவன் நீ சிந்தூரன் என்னும் பெயரினைப் பெறுவாய் உலகனைத்தும் உன்வசமாகும். உனது கரத்தால் யாரையாவது தழுவுவாயானால் அவர் உடல் நீறாகும் உனக்கு எந்த ஆயுதத்தினாலும் அழிவில்லை என வரங் கொடுத்தருளினான். சிந்தூரன் இந்த வரத்தை பரீட்சிக்க விரும்பி தந்தையிடமே சென்றான். இதனைக்கண்ட பிரமன் வைகுந்தம் சென்றான். பின்னர் விஷ்ணு, பிரமன் முதலாம் தேவர்கள் அனைவரும் சிவபிரானிடஞ் சென்று முறையிட்டார்கள். சிந்தூரன் கைலாயம் வந்தபோது சிவபிரான் அவனுடன் போர்செய்தார்: விநாயகப் பெருமான் பிராமணச் சிறுவனாக வந்து சிவபெருமானது சூலாயுதத்தினால் அழியப் போகின்றாய் எனக் கூறினார்- சிந்தூரன் பூவுலகை நோக்கிச் சென்றான், விநாயகப் பெருமான் தனது சுயரூபத்தைக் காட்டி நாம் உமை

வயிற்றில் உதித்துச் சிந்தூரனைச் சங்கரிப்போம் எனக் கூறித் திருவுருவைக் கரந்தருளினார் சிவபெருமானும் உமாதேவியாரும் இடபவாகனத்தில் சென்று அழகுமிக்க மண்டபத்தில் தங்கினார்கள், அங்கே கணேசப் பெருமான் உமை வயிற்றில் கருவானார். கயமுகன் பிரதஸ்பதி தேவரின் கூற்றுப்படி எல்லோராலும் வணங்கப்படும் போது பலிக்கும் யானையின் உடலோடு அவதரிக்கும் போது முத்தியடைவாய் எனக் கூறினார். கயாமுகா சூரன் காட்டில் சஞ்சரித்தான். சூலாயுதத்தினால் கொலை செய்தார் சிவபிரான். அவனது தோலை உரித்தருத்தருளினார் அவனுக்குச் சாரூபத்தைக் கொடுத்தருளினார்,

உமாதேவியார் வயிற்றில் உருவாகும் கருவைச் சிந்தூரன் சிதைக்க முற்பட்டான். விநாயகப் பெருமான் அவதரித்த தினம் ஆவணி மாதத்துப் பூர்வபக்க சதுர்த்தியாகும். கணேசப் பெருமான் சிந்தூரனைத் துதிக்கையால் எடுத்துக் குழைத்துத் தமது மத்தகத்தில் பூசிக்கொண்டார் இதனைக் கண்ட தேவர்கள் அனைவரும் விநாயக மூர்த்தியை வணங்கினார்கள்.

## 4 வது விக்கினராஜ விநாயகர் திருவவதாரப்படலம்:

சவுனகாதி முனிவர்களே! இது காலம் கஜான விநாயகர் அவதாரஞ் செய்து சிந்தூரனைக் கொன்றருளினர், இனிமேல் விக்கின விநாயகராக அவதாரஞ் செய்து அருளிய திருவிளையாடலை கூற இருக்கின்றோம். மேலான உள்ளத்தையுடைய சவுபரி என்னும் ஒரு முனிவர் இருந்தார், அவரது மனைவி பெயர் மனோமயை அவர்கள் இருவரும் இல்லறமென்னும் நல்லறத்தை மேற்கொண்டு வந்தார்கள், ஓர் தினம் இருவரும் ஸ்நானஞ் செய்வதற்கு நதிக்கரை சென்ற ஞான்று கிரவுஞ்சன் என்னும் அவுணன முனிவர் பத்தினியின் கையைப் பிடித்தான், சவுபரி முனிவர் கோபங் கொண்டார், ஓர் அபராதமும் செய்யாத இவளை நீ இவ்வாறு செய்தமையால் மூஷிகமாகக் கடவாய் என்று சாபம் இட்டார்-

கிரவுஞ்சனானவன் சுவாமீ! அறியாமையினால் இவ்வாறு செய்துவிட்டேன் கருணை செய்ய வேண்டும் என இரந்தான் முனிவர் அரசனே! எமது வாக்கு எக்காலத்திலும பொய்த்ததில்லை விநாயக மூர்த்தி பராசுவ முனிவருடைய இல்லத்தில் அவதரிப்பார். நீ அவருக்கு

வாகனமாகி முதன்மையும் முத்தியும் பெறுவாய் என அனுக்கிரகித் தார்; கிரவுஞ்சன் மூஷிக வடிவு பெற்றான் தேவேந்திரனானவன் காலரூபியை அழைத்து நீ அபியந்தராசன் செய்யும் யாகத்தை அழித்துப் பல விக்கினங்களைச் செய்வாய் என்று கட்டளையிட்டான் காலரூபி அதன்படியே யாகசாலையைத் துகளாக்கி அங்கு சேகரித்து வைத்திருந்த பொருட்களை நாசமாக்கிப் பல விக்கினங்களை செய்து வந்தான். முனிவர்கள் அனைவரும் ஒன்று கூடித் தயாபரமூர்த்தியைத் துதி செய்தார்கள் சகல வியாபகராகிய விநாயக மூர்த்தியானவர் கிருபை சுரந்து முனிவர்களே! உங்கள் குறையாது? என வினவினார் முனிவர்கள் காலரூபியினது துன்பங்களைத் தாங்க முடியாது துயருகின்றோம் எங்களைக் காத்தருள வேண்டும் என இரந்தனர் கணேசப் பெருமான் கருணை செய்து புகலுவார் வரேணியராசன் கிருகத்தில் நாம் அவதரிக்கப் போகின்றோம் காலரூபியை அடக்கி உங்களுக்கு நல்லருள் செய்வோம் எனக்கூறித் திருவுருவைக் கரந்தருளினார்.

பின்னர் விநாயகப் பெருமானுடைய கிருபையினால் புட்பகையினுடைய வயிற்றிலே கருவுண்டானது. பத்தாந் திங்களில் ஒரு புத்திரனைப் பெற்றாள். விநாயகப் பெருமான் அப் புத்கிரனை இல்லாது செய்து தாமே குழந்தையாகக் காட்சி நல்கினார் நீண்ட துதிக்கையும் பெருத்த வயிறும் கொண்ட குழந்தையைக் கண்டு புட்பகை முதலாய அனைவரும் நடுங்கினார்கள் வரேணியராசன அப்பிள்ளையை மடுக்கரையில் வைப்பித்தான். பராசர முனிவர் தண்டு கமண்டலங்களுடன் மடுக்கரைக்குச் சென்றார். அங்கே ஜகத்காரணராகிய கணேச மூர்த்தியைக் கண்டார். நியமங்களை முடித்துக் கொண்டு செல்லும் போது குழந்தையைக் கையில் எடுத்துச் சென்று மனைவி வீரியகலை கையிற் கொடுத்தார். வீரியற்கலை செய்த புண்ணியம் அளவிடற்கரியது

சவுபரிய முனிவருடைய சாபத்தினால் மூஷிகமான கிரவுஞ்சன் அந்த ஆச்சிரமம் வந்து அளவற்ற துன்பங்களை விளைவித்தான் விநாயகமூர்த்தி பாசத்தை ஏவினார் பாசமானது அவனைக்கொண்டு வந்து அவரது முன்னிலையில் நிறுத்தியது. மூஷிகமானது சுவாமீ! சரண் அடைகின்றேன் என்று தனது வரலாற்றை எடுத்துரைத்தது விநாயகப்பெருமான் அதன் முதுகில் ஆரோகணித்து வாகனமாக்கினார் அப்போது பராசுர முனிவர் காலரூபி என்னும் விக்கினனை சங்கரித்து எங்களைக் காத்தருள வேண்டும் என்று வேண்டினார்.

தேவர்கள் முதலாயினோரும் தங்கள் யாகங்கள் முதலாயின நடப்பதற்கு இடையூறு விளைவிக்கின்ற விக்கினனை அழிக்கவேண்டும் என்று முனிவரது ஆச்சிரமம் சென்று கணேசமூர்த்திக்கு விண்ணப்பித்தனர் விநாயகமூர்த்தி தமது அங்குசத்தை எடுத்து விக்கினனைப் பிடித்து வரக்கடவாய் எனப் பணிந்தார். அவ்வாறு கொண்டு வரப்பட்டதும் விநாயகப்பெருமான் தாமரை மலரை ஏவினர். அவன் பல ஆயுதங்களை ஏவினான் கணேசமூர்த்தியானவர் ஓர் வேலாயுதத்தை சிருஷ்டித்து ஏவினர். அது சென்று விக்கினனின் மாயவடிவங்களையெல்லாம் அழித்து அவனை தோற்கடித்தது. காலரூபியானவன் தனது சுயரூபத்துடன் பணிந்து அடியேனை அங்கீகரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனன். அப்போது ஐங்கரப்பெருமான் வேலாயுதத்தை வருமாறு அழைத்தார். மேலும் கூறுவார் காலரூபியே உன்னைச் சங்கரிக்கவே வந்தனம். நீ சரணடைந்தபடியால் உயிருடன் பிழைத்தனை இன்றுமுதல் என்னை விக்கினராச விநாயகர் என்று துதிக்கக்கடவர் என்று திருவாய்மலர்ந் தருளினார் தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்- வரேணியரசனும் புட்பகையும் விநாயகமூர்த்தியைப்பணிந்து பலவரங்களைப் பெற்றுச் சென்றனர். விக்கினராசா விநாயகர் மீண்டும் முனிவர் ஆச்சிரமஞ் சென்று அவர்களுக்கும் வரங்களை நல்கிவிட்டு விடைபெற்றுத் தமது திருவுருவைக் கரந்தருளினார்.

## 5 வது மயூரேச விநாயகர் திருவவதாரப்படலம்:

மேலான தவத்தையுடைய முனிவர்களே! விநாயக மூர்த்தியானவர் விக்கினராசர் அவதாரங் கொண்டு கிரவுஞ்சன் என்னும் அசுரனை மூஷிகத்தை வாகனமாக ஊர்ந்தருளியதும் காலரூபி என்னும் விக்கினனை ஆட்கொண்ட திருவிளையாடலையும் கூறினோம். இனிமேல் மயூரேசர் அவதாரங் கொண்டு செய்தருளிய திருவிளையாடலைச் செப்புகின்றோம் என ஆரம்பித்தார்.

முன்னர் ஓர்கால் பிரமதேவனானவன் சிவபிரானிடம் அனுக்கிரகம் பெற்று விஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தினின்றும் உதித்தார் பின்னர் பரமசிவன் மலர்ந்தருள வேத புராணங்களைக் கேட்டு அம்முறைப்படி சகலலோகங்களை சிருஷ்டி செய்து வேதபுராணங்கள் எழுதப்பட்ட புத்தகங்களைப் பூசை செய்து வந்தார். அவ்வமயம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பகமை ஏற்பட்டு இருபகுதியினரும் யுத்தம் செய்தார்கள். தேவர்கள் வேதமனுக்களைப் படைகளாக்கிப்

பிரமாஸ்திரத்தோடும் சேர்த்து அசுரர்கள் மீது பிரயோகித்தார்கள். இதனால் அசுரர்களினால் ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. அளவற்ற வரங்களைப் பெற்று வலிமை நிறைந்த இரு அசுரர்கள் இருந்தார் கள். மூத்தவன் சங்கினை ஒத்த வடிவுடையவன் பெயர் சங்காசூரன் இளையவன் மாயைகள் செய்வதில் சூரன். பெயர் கமலாசூரன். அசுரர்கள் இவர்களிடஞ் சென்று தங்கள் குறையை முறையிட்டார் கள்.

மூத்தவனாகிய சங்காசூரன் இளையவனைப் பார்த்து வேத புத்தகங்களை அபகரித்து வருமாறு கட்டளையிட்டான். அப்பாதகன் பிரமதேவன் தியானத்தில் இருக்கும் சமயம் பார்த்து வேதமனுக் களைக் கவர்ந்து கொண்டு வந்து தமையன் முன்னிலையில் வைத் தான். தமையனாகிய சங்காசூரன் அவற்றைக் காவலில் வைத்தான், மூவுலகங்களிலும் வேதமுறைகள் ஒன்றும் நடைபெறவில்லை. எல்லோ ரும் மனம் போனவாறு நடந்தார்கள். உலகங்கள் யாவற்றிலும் கொலைகளும், வறுமையும் தாண்டவமாடின. பிரமவிஷ்ணுக்கள், தேவர்கள் அனைவரும் சிவபிரானிடம் முறையிட்டார்கள். அப்போது பரமசிவன் கூறுவார். பதினாயிரம் விஷ்ணுக்கள் இலட்சம் பிரமர்கள் ஒன்று சேர்ந்தாலும் அந்த அசுரர்களை வெல்ல மாட்டீர்கள். அடுத் தோர்க்குச் சகல இடர்களையும் போக்கி ஆதரிப்பவர் விக்கினராச ராகும், அவரிடம் சரணடைவீர்களாயின் அசுரர்களைச் சங்கரித்து வேதபுத்தகங்களை மீட்டுத் தருவார் என்று திருவாய்மலர்ந்தருளினார்

இதன் மேல் பிரமதேவன் தமது சத்தியலோகஞ் சென்று பது மாசனத்தில் இருந்து ஏகாட்சர மந்திரத்தைச் செபஞ்செய்து யோகத் தில் இருந்து விக்கினராசரைத் தியானித்து வழிபட்டார். அந்த வழி பாட்டிற்கு இரங்கிய கணேசமூர்த்தியானவர் சித்தி – புத்தி சமேதராக காட்சி நல்கினார்; பின்னர் பிரமனிடம் செப்புவார். உங்கள் துயரம் விரைவில் நீங்குமாறு விரைவில் அனுக்கிரகிப்போம் எனக் கூறியருளி னார். பின்னர் பிராமண வடிவு கொண்டு வேதபுத்தகங்களையும் தோழில் ஏந்தியவராய்ப் பூலோகஞ் சென்றார். நமது நாமத்தை மல் லாளரென்று கூறுவார்கள். முனிவர்களே! வேத புத்தகங்கள் யாவும் என்னிடம் இருக்கின்றன. இதன்படி கருமங்கள் யாவற்றையும் நடத் துவீர்கள் என்று அருளிச் செய்தார் முனிவர்கள் அந்தப் பிராமண ருக்கு ஓர் விடுதி அமைத்துக் கொடுத்து அவரிடம் வேத புராணங் களைச் சொல்லுமாறு விளம்பினார். அதன்மேல் அந்தணர் கௌதமர்

மூதலாய முனிவர்களுக்கு வேத புராணங்களைப் போதித்தருளினார். இதனால் உலகமனைத்தும் வேதபுராணங்கள் பரவின.

கமலாசுரன் சங்காசுரனை அடைந்து அந்தணன் ஒருவன் வந்து வேதங்களைப் பரப்புகின்றான். நாங்கள் காவலில் வைத்துப் பிரயோசனமில்லை என்றான். இதனைக் கேட்ட சங்காசூரன் நகைத்து தம்பீ! விரைவில் அவனைக் கொன்று அப்புத்தகங்களை எடுத்து வருவாய் என்று கட்டளையிட்டனன். கமலாசுரன் தும்பைமாலை சூடி யுத்தசன்னத்தனாய்ச் சென்றான், இசனைக் கண்ட முனிவர்கள், தேவர்கள் யாவரும் பயந்து மல்லாளராகிய விநாயகரிடம் முறையிட்டார்கள், விநாயக மூர்த்தி தவசீலர்களே! அஞ்சற்க! என்று அத்யங் கொடுத்து ஆயுதத்துடன் பலவீரர்களை சிருஷ்டித்தார். புண்ணிமும் பாவமும் எதிர்த்தாற் போல் இருபக்க வீரர்களும் போர் செய்தார்கள். மல்லாள மூர்த்தி தனது மழுப்படையை ஏவினார். அது சென்று அசுரனை மூன்று துண்டங்களாக்கி விட்டுக் கிருஷ்ணா நதி தீரத்திலும் இமயமலைச் சாரலிலும் பிரவாள நகரத்திலும் வீழ்த்தி விட்டுத் திரும்பியது. கணேசமூர்த்தியினுடைய திருவடிகளில் உயிரானது ஐக்கியமானது. இத்தலத்திற்குத் திரிசந்திசேத்திரம் என்னும் நாமம் உண்டாயிற்று

## பிந்திய மயூரேச விநாயகர் திருவவதாரப்படலம்:

முனி சிரேட்டர்களே! இது காலும் மயூரேசர் கமலாசூரனை வென்ற வரலாறு கூறினோம். இன்னும் ஓர் யுகத்தில் கணேசப்பெருமான் மயூர அவதாரங் கொண்டு செய்தருளிய செயற்பாட்டினையும் சொல்லுகின்றோம் கேட்பீராக; என்று ஆரம்பித்தார். மைதவதேசத்திலே கண்டகர் என்னும் பட்டணம் இருந்தது. அங்கே சங்கிரபாணி என்னும் அரசன் அரசாண்டு வந்தான். அவன் மனைவி பெயர் உக்கிரை. இருவரும் இல்லறத்தை நல்லறமாக மேற்கொண்டு வந்தார்கள். பலதான தருமங்களைச் செய்தார்கள். அவ்வாறு செய்தும் புத்திரப்பேறு கிடைக்கவில்லை. அரசனும் மனைவியும் நாட்டை மந்திரிமார் வசம் ஒப்படைத்து விட்டுக் காட்டிற்கு தவம் செய்யச் சென்றார்கள் அவர்களைச் சவுனக முனிவர் கண்டார் அரசனும் மனைவியும் தங்களது குறையை முனிவருக்கு முறையிட்டார்கள். முனிவர் சூரியனுடைய மந்திரத்தை உபதேசித்து அதனை அநுட்டிக்கும் முறையினையும் எடுத்துரைத்தார்.

சங்கிரபாணியும் மனைவியும் பன்னிரு மந்திரங்களால் சூரியனை அர்ச்சித்தார்கள், இலட்சம்பிராமணர்களுக்குத்தானம் வழங்கினார்கள் சூரியனுடைய அருளினால் ஒரு புத்திரன் பிறந்தான் இதன் மேல் வருணனானவன் பிராமண வேடத்தில் வந்து குழந்தையை எடுத்துக் கையில் கொடுத்துச் சிந்தூரன் என நாமஞ் சூட்டுமாறு பணித்தார். அரசனும் அவ்வாறே வளர்த்து வருநாளில் அசுரகுரு சிந்தூரனுக்கு பஞ்சாட்சர உபதேசம் செய்தார். சிந்தூரன் (2000) இரண்டாயிரம் வருடம் பஞ்சாட்சரம் செபித்துக் கடுந் தவஞ் செய்தான்- சிவபெருமான் காட்சி கொடுத்ததும் சுவாமீ மூன்று லோகங்களையும் ஆட்சி செய்யும் வரத்தை நல்க வேண்டும் என்று வேண்டினான், பரமசிவன் உனது எண்ணப்படி தருகின்றோம் கணேசமூர்த்தி அவதரித்தாலன்றி உனக்கு அழிவில்லை எனக் கூறித் திருவுருவைக் கரந்தருளினார். சிந்தூரராஜன் தாய் தந்தையரைப் பணிந்து வரம் பெற்ற செய்தியைச் சொல்லி வணங்கினான் மித்திரன், கவுத்திரன் என்னும் மந்திரிகளை அனுப்பி மூன்றுலோகங்களையும்வென்று ஏக சக்கிராதிபதியாக விளங்கினான் உத்தமை என்னும் பெண்ணைத் திருமணஞ் செய்து தன்மன் அதன்மன் எனும் இருபுத்திரர்களைப் பெற்றுக் கொடுங்கோலாட்சி நடத்தினான் அவுணர்களுக்கு மேலான பதவிகளை வழங்கினான் தேவர்களைத் துன்புறுத்தினான் தேவர்கள் கணேசப் பெருமானின் சதுர்த்தி விரதத்தை அனுட்டித்து வழிபட்டார்கள், ஐங்கரப்பெருமான் காட்சி நல்கிக் கூறுவார் உமையிடம் யாம் அவதரித்து சிந்துவைச் சங்கரித்து உங்களுக்கு அருள்புரிவோம் எனக் கூறித் திருவுருவைக் கரந்தருளினார்.

தேவர்கள், முனிவர்கள் அனைவரும் சிந்துஇராசனுடைய கொடுமைகளைச் சகிக்க மாட்டாதவர்களாய் தங்கள் உருவங்களை மறைத்துக் கொண்டு சிவபிரானை நோக்கிக் கடுந்தவஞ் செய்துார்கள். சிவபெருமான் காட்சி கொடுத்ததும் அவர்கள் சுவாமீ, சிந்தூரனுக்கு நாசகாலம் ஏற்படும் வரை இவ்விடம் எழுந்தருளியிருக்க வேண்டும் என்று வேண்டினார்கள். பார்வதி சமேதராக எழுந்தருளிக் கிருபாகடாட்சத்தோடும் யோக பாவனையில் இருந்தார். அவ்வமயம் தேவியார் சுவாமீ! எல்லோரும் உங்களைத் தியானித்து வரங்களைப் பெறுகின்றார்கள். தாங்கள் யாரை நோக்கித் தியானிக்கின்றீர்கள் என வினாவினார். அப்போது பரமேஸ்வரன் கூறுவார் நம்மால் தியானிக்கப்படும் பொருள் ஒன்றுஉண்டு. அந்தமேலான பொருள் உன்னிடத்தில் புத்திரனாக அவதாரஞ் செய்து சிந்தூரனைச் சங்கரிக்கும். எனவே

யான் சொல்லும் மந்திரத்தை செபித்துப் பன்னிரண்டு வருடம் அநுட்டிப்பாய் என்று மந்திரத்தை உபதேசித்து அநுஷ்டிக்கும் முறையையும் கூறியருளினார்.

உமாதேவியார் விநாயகரது ஏகாட்சர மந்திரத்தைச் செபித்து பன்னிரண்டு ஆண்டுகள் தவம் புரிதலும் கணேசமூர்த்தி அவர்முன் தோன்றி அன்னையே உம்மிடம் புத்திரனாக அவதாரஞ் செய்து எல்லோரது துன்பங்களையும் நீக்கி வைப்போம் என்று விளம்பினார். மேலும் உமாதேவியார் பூசனைகள் புரிந்து வந்தார். ஓர் தினம் சோதி வடிவாகத் தோன்றுதலும் தேவியார் அதனைக் கண்டு அஞ்சினார். பின்னர் அன்று பிறந்த பாலகனாய் மூன்று விழிகளும் ஆறுகரங்களும் உடையவராய்த தேவியார் எதிரில் அமர்ந்தார் அப்போது பார்வதி தேவியார் குழந்தையை எடுத்துப் பாலூட்டினார். இதனைக் கேள்வியுற்ற முனிவர்கள், தேவர்கள் யாவரும் வந்து பாலவிநாயகரை வணங்கினார்கள். கிருச்சதமர் பீதாம்பரம் சாத்தினார். "கணேசர்" என்று நாமம் சூட்டப்பட்டது. எல்லோரும் விநாயக கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கும் அவர் மாண்டவிய முனிவருக்கும் அவர் பின்னர் எமக்கும்உபதேசஞ் செய்துள்ளார் என்று அதனையும் பகர்ந்தார்.

இதன் பின்பு சிந்தூரனால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் சுவர்க்கம் பாதாளம் எங்கும் தேடி விட்டுப் பூலோகத்தில் திரிசந்தீசேத்திரத்தில் பார்வதிபரமேஸ்வரன் எழுந்தருளிஇருப்பதையும் அங்கே கணேசர் அவதாரஞ் செய்திருப்பதையும் அவனே உன்னைக்கொலை செய்வான் என்பதனையும் கூறினார்கள். சிந்தூரன் ஏவலாளர்களைப் பார்த்து அவனை வெட்டி எறிமின் என்று கட்டளையிட்டான். ஏவலாளர்கள் தேடிவிட்டு அச்சிறுவனைக் காணவில்லை என்று கூறினார்கள் இதன் பின்னர் மந்திரிமாரின் ஆலோசனைப்படி சில அசுரர்களை அழைத்து எனது எதிரியாகிய குமாரனை வதம் செய்து விட்டு வாருங்கள் என்று ஆணை பிறப்பித்தான், அந்த அசுரர்கள் பூனை, நாய், கழுகு, பாம்பு ஆகியவற்றின் உருவந்தாங்கி வந்து குழந்தையாகிய கணேசப் பெருமானை கொல்வதற்கு உபாயந் தேடினார்கள். பாலவிநாயகர் இரண்டாம் திங்கள் முதல் 3ம், 4ம், 5ம் 6ம், 7ம், 8ம், 9ம், 10ம், 11ம், 12ம் திங்கள் வரை வெவ்வேறு உருவங்களைத் தாங்கி வந்து கொலை முயற்சிகளை மேற் கொண்டார்கள். பாலவிநாயகர் அவற்றையெல்லாம்

முறியடித்து அசுரர்களைக்கொன்று விட்டு உமாதேவியாரது மடியில் வந்து வீற்றிருந்தார். இதன் பின்னர் 2ம், 3ம், 4ம், 5ம், 6ம், 7ம், 8ம் 9ம், 10ம், 11ம் ஆண்டுவரை சிந்தூரனால் அனுப்பப்பட்ட அசுரர் குழாம் வெவ்வேறு வடிவங்களில் வந்து விநாயகராகிய சிறுவனைக் கொல்ல முயற்சித்தார்கள். அவற்றையெல்லாம் எம்பெருமான் தோற் கடித்து அந்த அசுரர்களைக் கொலை செய்து விட்டார்.

சிந்தூரராஜன் மேலும் அமைச்சர் பிரதானிகளின் ஆலோசனைப் பிரகாரம் அளவற்ற சேனைகளுடன் கனலாசுரனைப் போருக்கு அனுப் பினான். மயூரேசர் மயில்வாகனத்தில் இவர்ந்து சென்று போர் செய் செய்தார், சிந்தூரனால் ஏவப்பட்ட அஸ்திரங்களையெல்லாம் முறி யடித்தார். மயூரேசரால் அனுப்பப்பட்ட வேலாயுதம் கமலாசூரனை நீறாக்கியது, இதன் பின்னர் சிந்தூரன் கடுங்கோபங் கொண்டான். விநாயக மூர்த்தி நந்திதேவரைத் தூதாக அனுப்பினார். நந்திதேவர் சென்று தேவர்களை சிறையினின்றும் விடுமாறு கேட்டார். சிந்தூ ரனுக்குக் கடுங்கோபம் ஏற்பட்டது அவன் சேனா சமூகங்களையும் அழைத்துக் கொண்டு போருக்கு வந்தான் வீரர்களோடு வீரர்கள் மோதினார்கள். தெய்வப்படைக் கலங்களோடு தெய்வப் படைகள் மோதின எமது கணேசமூர்த்தி அநேக படைக்கலங்களை உண்டாக்கி யுத்தம் நிகழ்த்தினார். இறுதியில் மயூரேசர் பாசத்தை ஏவினார். அப்பாசமானது சிந்தூரனது மார்பைப் பிளந்து அவனைக் கீழே வீழ்த்தி தான் உண்டாக்கிய பாணங்களையும் திருப்பிக் கொண்டு மயூரேசரு டைய திருக்கரத்தில் வந்து வீற்றிருந்தது. இதனைக் கண்ட பார்வதி பரமேஸ்வரன் சண்முகப்பெருமான் முதலியோரும் எழுந்தருளிக் காட்சி நல்கினார். திரிஷேத்திரத்தில் தேவர்கள் முனிவர்கள் ஆகியோர் விநா யகமூர்த்தியைப் பூசை செய்தார்கள். கணேசப் பெருமான் மயில் வாகனத்தை முருகப் பெருமானுக்குக் கொடுத்தருளினார். தம்மை மயூரேசர் என்று அழைக்க அநுக்கிரகஞ் செய்து சித்தி புத்திகளோடும் சகலருக்கும் விடை கொடுத்துத் தமது உலோகத்தை அடைந்தருளி னார்.

## 6வது பாலச்சந்திர விநாயகர் திருவவதாரப் படலம்:

முனிவர்களே! விநாயக மூர்த்தி மயூரேச அவதாரத்தில் வேத சாஸ்திரங்களைத் தேவர்களிடத்தில் இருந்து கவர்ந்த கமலாசுரனைச் சங்கரித்தும் பிந்திய அவதாரத்தில் தேவர்களைச் சிறைவைத்த சிந்

தூரனைச் சங்கரித்து அவனது மாயைகளை ஒழித்த திருவிளையாடலைச் சொன்னோம். அவரே மற்றுமோர் அவதாரத்தில் பாலச்சந்திரர் அவதாரங்கொண்டு யம தருமராசனிடத்திலின்றும் உதித்த அனலாசுரனைப் பிராமணச் சிறுவனாகத் திருவுருக்கொண்டு விழுங்கினார். அந்த வெப்பம் தீருவதற்கு எண்பதாயிரம் முனிவர்கள் செய்தருளிய தூர்வை அர்ச்சனையை ஏற்று வெப்பத்தைத் தணித்தருளிய திருவிளையாடல் ஒன்றுண்டு. அதனை முன்னமே உபாசனா காண்டத்தில் சொல்லியுள்ளோம். இனிமேல் தூமகேது அவதாரஞ் செய்த திருவிளையாடலையும் சொல்லுகின்றோம் என்றார்.

## 7 வது தூமகேது விநாயகர் திருவவதாரப்படலம்:

முனிசிரேட்டர்களே! விந்திய தேசத்திலே மதிபாதினி நகரத்திலே பரமசிவத்தையே தியானிக்கும் தூமராசன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவனுக்கு எட்டு அமைச்சர்கள் இருந்தார்கள். அவனுக்கு ஐந்து மனைவியர்கள் அவர்களுக்கு மகிபாலன், நந்தன், வீரபத்திரன், தரைதன் ஆகிய நான்கு புத்திரர்களும் இருந்தனர். அரசனானவன் சகல செல்வங்களோடும் இந்திரனைப் போலச் சிங்காசனத்திலிருந்து ஆட்சி செய்து வந்தான். இவ்வாறு இருக்கும் நாளில் மூன்று காலங்களையும் அறியவல்ல மகாஞானியாகிய பிருகுமகாமுனிவர் தனது சீடர்களுடன் அரசமாளிகைக்கு எழுந்தருளினார். தூரசராசன் முனிவரை அட்டாங்க நமஸ்காரஞ் செய்து ஆசனத்தில் இருத்திப் பூசைகள் செய்தான். அதன் மேல் சுவாமீ! தாங்கள் எழுந்தருளிய காரணம் யாது? என்று கேட்டான். முனிவர்சொல்லுவார் தருமரூபியாக இருந்து சிவபிரானை மறவாத சிந்தையுடன் அரசாட்சி செய்கின்ற உன்னைக் காண வந்தனம் என்றார் தூமராசன் சுவாமீ இவ்வளவு செல்வங்களும் அடியேனுக்கு வந்த காரணத்தை விளம்புவீர்களா? என்று கேட்டான்.

அதற்கு பிருகுமுனிவர் கூறுவார் நீ முற்பிறப்பில் விருதி என்னும் அரசனாக இருந்தாய், பலபற்பல தான தருமங்களை நிகழ்த்தினாய் தொண்ணூற்று ஒன்பது யாகங்கள் செய்து நூறாவது யாகஞ் செய்யத் தொடங்கினாய். இதனை அறிந்த தேவேந்திரன் நூறாவதுயாகம் நிறைவேறினால் தனது பதவி பறிபோய் விடும் எனக் கருதினான். நாரதமுனிவரைப் பணிந்து இந்த யாகத்தைத் தடுக்க வேண்டும். என்று இரந்தான். நாரதர் தூமராசனுடைய யாகசாலைக்கு அந்தண

வடிவில் வந்தார். அரசன் வரவேற்றுச் சுவாமிகள் எழுந்தருளிய காரணம் யாது! என்றான். உனது மனையை விரும்பி வந்தேன் என்றார். அரசனானவன் என்னிடம் ஒரு இராச்சியமும் ஒரு மனைவியும் தான் உண்டு. உங்களுக்கு கன்னிகையைத் தருகின்றேன் அவளை விவாகம் செய்து கிருகஸ்தராகுங்கள் என்று கூறினான். தேவேந்திரனுடைய ஏவலினால் வந்த வேதியர் யாகசாலை யாவற்றையும் சின்னாபின்னப் படுத்தினார். அதன்மேல் கவலைநீங்கியதும் சிவபூசை செய்து கொண்டு இருந்து அந்த சனனத்தைக் கழித்தாய். நாரதரது சாபத்தினால் இராட்சத குலத்தில் பிறந்தாய். முன் செய்த புண்ணிய பலத்தினால் இன்று இவ்வாறு திகழ்கின்றாய் எனக்கூறிப் பிருகு முனிவர் தமது ஆச்சிரமஞ் சென்றார்.

தூமராசன் காலத்திலே சகல கீர்த்திகளிலும் சிறந்த மாதவராசன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனது மனைவி சுமுதை. இவர்களுக்குச் சகல செல்வங்களும் இருந்தன. ஆனால் புத்திரபாக்கியம் இருக்கவில்லை. இவர்கள் மகாவிஷ்ணுவை நோக்கித் தவஞ் செய்தனர், எல்லா மூர்த்தமுமேயாக விளங்கும் விநாயகப் பெருமான் அவர்கள் முன்னிலையில் விஷ்ணுவாகக் காட்சி நல்கி நீ விரும்பியபடி புத்திரப்பேறு கிடைக்கும் எனக் கூறினார். விநாயகர் அருளால் சுமுதை கருவுற்றாள். மகாவிஷ்ணுவானவர் தூமராசனை அழிப்பதற்காகச் சுமுதை வயிற்றில் வளர்வதை அறிந்த தூமராசன் அந்தக் கருவை அளித்து வருமாறு வித்துமன் என்பவனையும் வீரர்களையும் அனுப்பினான். சுமுதையும் கணவனும் நித்திரை செய்யும் நேரம் பார்த்து வித்துமனும் வீரர்களும் கட்டிலுடன் எடுத்துச் சென்று நகரத்தை அடுத்த காட்டில் வைத்தார்கள். இதன்மேல் என்னசெய்யலாம் என்று வீரர்கள் ஆலோசனை செய்தார்கள். அவ்வமயம் சுமுதையும் மாதவராஜனும் நித்திரை விட்டெழுந்தனர். அவ்வமயம் வித்துமன் தூமராசனுடைய கட்டளையைக் கூறினார். இவர்கள் நாராயணனை வேண்டுதலும் கணேசப் பெருமான் பாலச்சந்திரராக அவதாரஞ் செய்து சகல சேனைகளுடனும் சென்று எதிர்த்தார், தமது வாயினின்று புகைப் படலங்களை வெளியிட்டார் உடனே சகல சேனைகளும் மயங்கிப் பாதாள லோகத்தில் வீழ்ந்து இறந்து போனார்கள். தூமத்தால்வெற்றியீட்டிய பாலச்சந்திர மூர்த்தியை தூமகேது என்று நாமஞ்சூட்டி வணங்கினார்கள் மாதவராஜனும் சுமுதையும் மகிமை பொருந்திய புத்திரனைப் பெற்று மோட்ச சாம்பிராஜ்யத்தை அடைந்தார்கள்.

## 8 வது கணேச விநாயகர் திருவவதாரப்படலம்:

சவுனகாதி முனிவர்களே! விநாயகமூர்த்தியானவர் தூமகேது திருவவதாரஞ் செய்து மாதவராஜனுக்கும் அவன் மனைவி சுமுதைக்கும் தீங்கு செய்த தூமராசனைச் கொண்டு அவ்விருவரையும் பாதுகாத்த திருவிளையாடலைச் செப்பினோம். அவரே மற்றுமோர் அவதாரத்தில் தம்மிடம் அளவற்ற வரங்களைப் பெற்றபெலி என்னும் ஒரு தானவனானவன் திரிபுரங்களோடும் சென்று மூன்று உலோகங்களையும் அழித்தான், அவனது கொடுமைக்கு அச்சங்கொண்ட தேவர்கள் முதலாயினோர் சிவபிரானைத் தியானிக்க அப்போது சிவபிரான் மனமிரங்கித் தம்மைத் தியானிக்க அவர் முகத்தினின்றும் தோன்றிச் சிவபிரானுக்கு திரிபுரங்களையும் நீறாக்க வரங்களைக் கொடுத்து யாவரும் கணேசர் என்று போற்றும்படி விளக்கியதிருவிளையாடலை முன்னமேஉபாசனா காண்டத்தில் சொல்லியிருக்கின்றோம் இனிமேல் "கணபதி" திருவவதாரங் கொண்டு செய்தருளிய திருவிளையாடல் ஒன்று உண்டு. அதனையும் சொல்லுகின்றோம் கேட்பீராக.

## 9 வதுகணபதி விநாயகர் திருவவதாரப்படலம்:

சவுனகாதி முனிவர்களே! சகல ஆன்மாக்கட்கும் சிருட்டிமுதலாம் தொழில்களை நடாத்துகின்ற பிரம விஷ்ணுக்கள் தங்கள் தொழில்களினின்றும் பிறழாதவாறு நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்து நான்கு நூறாயிரம் சீவான்மாக்களுக்கும் அவர்களது கன்மங்களுக்கு ஈடான சரீரங்களைக் கொடுத்து இளைப்பாறும் படியான ஆனந்த நிருத்தஞ் செய்து அருளுகின்ற சதாசிவமூர்த்தியானவர் முத்தி இன்பத்தைக் கொடுத்தருளுவார். அத்தகைய சிவபிரானது கீர்த்தியை ஊழிதோறும் விளக்கி நிற்பது கைலையங் கிரியாகும் இத்தகைய சிறப்பு வாய்ந்த கைலையங்கிரியிலே அடியார்கள் சென்று வழிபாடு செய்து கொண்டு சென்றார்கள்.

சாம்பசிவ மூர்த்தியானவர் தனது தேவியாரோடும் வனத்தை அடைந்து அங்குள்ள மரங்களை எல்லாம் பார்த்துக் கொண்டு ஓர் சித்திரமண்டபத்தை அடைந்தனர். அங்குள்ள யானைகளின் சித்திரங்களை அவர்கள் நோக்கினார் அதன் முடிவில் பிரணவ ரூபியாகிய விநாயகர் தோன்றியருளினார். அங்ஙனம் தோன்றிய விநாயகர் பார்வதி பரமேஸ்வரனை வணங்கினார். பரமசிவன் கூறுவார். குமாரனே! என்னின் வேறாகாது எனக்கு மகனாக அவதரித்துள்ளாய்

நீ கணங்களுக்கு எல்லாம் தலைமை பூண்டு "கணபதி" என்னும் நாமத்துடன் திகழ்வாய். தேவர்களுக்குத் துன்பம் செய்கின்ற கஜ முகன் என்னும் அவுணனைப் போர்களத்தில் சங்கரித்து எல்லோருக் கும் கிருபை கரந்தருளுவாய் எனக் கூறினார். பின்னர் கணபதி யையும் அழைத்துக் கொண்டு கைலை சென்றருளினார்.

## 10 வது மதோற்கட விநாயகர் திருவவதாரப்படலம்:

முனிசிரேஷ்டர்களே! கணேசப்பெருமான் கணபதி என்னும் அவ தாரங் கொண்டு தேவர்களைத் துன்புறுத்திய திருவிளையாடலைச் செப்பினோம். இதன் மேல் மதோற்கட விநாயகராக அவதாரங் கொண்டு செய்த திருவிளையாடலையும் கூறுகின்றோம். வளங்கள் நிறைந்த அங்க தேசத்திலே காத்திரமென்னும் பட்டினத்திலே யாகாதி களைத் தவறாது இயற்றும் இரவுத்திர கேது என்பவன் இருந்தான். அவன் மனைவி சாரதை. இருவரும் இல்லறமென்னும் நல்லறத்தை மேற்கொண்டு வரும் நாளில் அவர்களுக்குத் தேவகாந்தன், நாரகாந்தன் என்னும் இரட்டைப் புதல்வர்கள் பிறந்தார்கள். ஓர் தினம் இவர் களது இல்லத்திற்கு நாரத முனிவர் எழுந்தருளினார். அந்தணனும் மனைவியும் முனிவரை ஆசனத்தில் இருத்திப் பல உபசாரங்களை நிகழ்த்தினர். இரண்டு புதல்வர்களும் வந்து வணங்கினார்கள். நாரத முனிவர் அவ்விருவருக்கும் தீக்கை செய்து ஆசி நல்கிச் சென்றார்

புத்திரர்கள் இருவரும் தடாகைக்கரையை அடைந்து ஐம்புலன் களையும் அடக்கிப் பதினாறு வருடம் கடுந்தவம் செய்தார்கள். உமா மகேசுவரர் இடபாரூடராகக் காட்சி நல்கினார். இருவரும் ஒரேகுர லில் கூறுவார்கள் சுவாமீ! காலை மாலை என்னும் இருவகைப் பொழு திலும், இருவகைத் திணைகளாலும் அழிவற்ற வரத்தை வேண்டி னார்கள். அவ்வாறே வரத்தை நல்கிய பரமேஸ்வரன் கணேசமூர்த்தி யினுடைய திருக்கரத்தால் அன்றி ஏனையோரால் உங்களுக்கு அழி வில்லை எனக்கூறித் திருவுருவைக் கரந்தருளினார். இரட்டையர்கள் சுப முகூர்த்தத்திலே போருக்குச் சென்று போர் புரிந்தார்கள். மூத்த வன் சுவர்க்கலோகத்தையும் இளையவன் பூமி, பாதாளம் ஆகியவற் றையும் கைப்பற்றி அரசாட்சி செய்தார்கள். இதனால் இராட்சத குலம் மேலீட்டது. இதனால் கவலை கொண்ட திதியானவள் கணவ ராகிய காசிப முனிவருக்குத் கவலையை வெளியிட்டாள். நூறு வரு டம் தவம் செய்தாள், காசிப முனிவரது அருளினால் விநாயகமூர்த்தி குழந்தையாக வந்து அதிதியின் மடியில் அமர்ந்தார், அதிதியானவள்

பாலூட்டிச் சீராட்டி வளர்த்தான். காசிப முனிவர் தெய்வக் குழந்தைக்கு மதோற்கடர் என்ற நாமஞ் சூட்டினர். ஏனைய சடங்குகளையும் நிறைவேற்றினார். மதோற்கடராகிய குழந்தையானது சிறு பிராயத்திலேயே அவுணர்கள் செய்த சூட்சிகளையெல்லாம் மூழ் கடித்தது. இதன்மேல் காசிராஜனானவன் தான் செய்யும் யாகத்திற்கு அவுணர்கள் இடையூறு செய்யாமல் தடுப்பதற்குக் காசிபமுனிவரின் அநுமதியுடன் மதோற்கட மூர்த்தியை அழைத்துச் சென்றபோது அங்கேயும் அவுணர்கள் செய்தஇடையூறுகளை நீக்கியருளினார் பின்பு சித்தி புத்திகளைத் திருமணஞ் செய்தருளினார். இதன்மேல் தன்னை வளர்த்த காசிபர் - அதிதி ஆகியோரை நோக்கிக் கூறுவார் குரவர்களே! நீங்கள் அளவற்ற தவங்களை இயற்றினமையால் நாம் உங்களுக்குப் புத்திரராக அவதரித்துத் துஷ்டர்களைச் சங்கரித்தோம் தேவர்களுக்குச் சுவர்க்க லோக வாழ்வைக் கொடுத்தோம், வேதாகமங்களைப் பரவச் செய்தோம். இனி நமது உலகத்திற்குச் செல்ல வேண்டும். இதனைக் கேட்ட முனிவரும் பத்தினியும் முனிவர்களும் கலக்கமடைந்தனர். மதோற்கட மூர்த்தி கூறுவார் இனிமேல் உமையிடத்தில் அவதரிக்கப் போகின்றோம், நீங்கள் கிலேசப்படவேண்டாம் எனக் கூறிவிட்டுச் சித்தி - புத்திகளுடன் விநாயக லோகஞ் சென்றடைந்தார்.

## 11 வது துண்டி விநாயகர் திருவவதாரப்படலம்:

முனிவர்களே! விநாயகப் பெருமானது மதோற்கட அவதாரத்தைச் செய்து அருளிய திருவிளையாடலைக் கூறினோம் இனிமேல் துண்டி விநாயகராக அவதரித்துச் செய்தருளிய திருவிளையாடலைச் செப்புகின்றோம் கேட்பீராக என்று ஆரம்பித்தார். 'கைவர்த்தனம்'' என்னும் தேசத்திலே பல சிறப்புக்கள் அமைந்த ''பன்மகம்'' என்ற பட்டினத்திலே பிரமாசுரன் என்னும் அரசன் வாழ்ந்து வந்தான்; அவன் சிவபிரானை நோக்கி அளவற்ற தவத்தினை இயற்றினான். அதற்கு கிருபை சுரந்த சிவபிரான் அவன் முன் தோன்றினார், பிரமாசுரன் தீனதயாநிதியே! யான் எவர்களது தலையிலே எனது கைகளை வைத்தாலும் அவர்கள் வெந்து நீறாக வேண்டும் என வேண்டினான்- பரமசிவனானவர் அவ்வாறே தந்தோம் எனக் கூறித் திருவுருவைக் கரந்தருளினார்.

வரத்தைப் பரீட்சையிக்க வேண்டிப் பிரமாசுரன் சிவபிரானது தலையிலே தனது கைகளை வைக்கச் சென்றான், இறைவன் மறைந்

தருளினார் அவரைக் காணாது எங்கும் தேடினான் தேடித்தேடொ ணாத் தேவனை அசுரனால் காணமுடியவில்லை. இதன்மேல் தேவர் கள் அனைவரும் ஒன்று கூடி விஷ்ணுவிடஞ் சென்று முறையிட்டனர். விஷ்ணுவானவர் பிரமாசுரனை அளிக்கும் நோக்குடன் மோகினி வடிவு கொண்டு அசுரனிடஞ் சென்றார். பிரமாசுரன் மோகினியை உண்மை யான பெண் என நினைத்துப் பெண்கள் சிகாமணியே! உனது திரு நாமம் யாது? என வினாவினான், அப்போது மோகினியாகிய விஷ்ணு வானவர் பற்பல சாகசங்களைச் செய்து காண்பித்தலும் இவற்றில் மயக்கம் கொண்ட பிரமாசுரன் உனது விருப்பம் யாது? என்றலும் மோகினி வடிவுகொண்ட விஷ்ணுவானவர் புகலுவார், நானோ நாட்டி யக்காரி. யான் செய்யும் அபிநயம் போல் செய்வாயானால் உனது விருப்பத்தை நிறைவேற்றுவேன் என்று கூறினார். அதற்கு பிரமா சுரன் சம்மதம் தெரிவித்ததும் மோகினியானது தனது இரு கரங் களையும் கூப்பிக் கொண்டு நின்றது. பிரமாசுரனும் அவ்வாறே செய் தான். இரண்டாவது கூட்டமாக விஷ்ணுவாகிய மோகினி தனது இரு கைகளையும் தனது சிரசில் வைத்தது. தனது வரத்தை மறந்த பிர மாசுரனும் அவ்வாறே செய்தான். சிவபிரானது வரத்தின் பிரகாரம் அசுரனானவன் உடனே எரிந்து சாம்பலாயினான்.

தந்தையானவர் மகாவிஷ்ணுவின் சூட்சியினால் இறந்த செய்தியை அவனது மகனாகிய தூமாசுரன் என்பவன் அறிந்தான். கவலை கொண்ட அவன் விஷ்ணு முதலாம் தேவர்களுக்கு வஞ்சம் தீர்க்க முற்பட்டான். குலகுருவாகிய சுக்கிராச்சாரியாரிடம் உபதேசம் பெற் றுக் கொண்டான். அங்குட்ட விரலை நிலத்தில் ஊன்றிச் சிவபிரானை நோக்கி ஆயிரம் வருடம் கடுந்தவஞ் செய்தான். இவன் தவத்திற்கு இரங்கிய பரமசிவன் காட்சி நல்கினார். சுவாமியை வணங்கிய தூமா சுரன் எந்த யோனி பேதத்தாலும்அழிக்க முடியாத வரத்தைப் பெற்றுக் கொண்டான். தூமாசுரன் தேவர்களைத் துன்புறுத்தினான்; தந் தையை வஞ்சகமாக கொலை செய்த விஷ்ணுமூர்த்திக்கு எண்ணற்ற இடையூறுகளை விளைவித்தான். மூவுலகங்களையும் வெற்றி கொண்டு தனது ஆட்சியை நடாத்தி வந்தான். தூமாசுரனது துஷ்பத்தைப் பொறுக்க முடியாத தேவர்கள் கணேசமூர்த்தியிடம் முறையிட்டார் கள். விஷ்ணு - இலக்குமி ஆகியோர் சோதிடர்களாகச் சென்று காசித் தலத்தை விஸ்வநாதப் பெருமானிடம் ஒப்படைக்காவிடில் துண்டி விநாயகரால் அழிவு நிகழும் என முன்னறிவித்தல் கொடுத்தார்கள், இதனைத் தூமாசுரன் பொருட்படுத்தவில்லை. இதன் பின் யாசன

முகப்பெருமானுக்கும் அசுரனுக்கும் பெரும் போர் நிகழ்ந்தது. விநாயகப் பெருமானை வெல்ல முடியாது எனக் கண்ட தூமாசுரன் காசித் தலத்தை விஸ்வநாத மூர்த்தியிடம் ஒப்படைத்தான்- அதன்மேல் சிவலிங்க பூசை நிகழ்த்தி இறுதியில் சிவலிங்கத்தில் ஐக்கியமானான், பின்பு மாதாமாதத்தில் வரும் அபர பக்கச் (சதுர்த்தியை) அங்காரக சதுர்த்தியாக யாவரும் அனுட்டித்தார்கள்.

## 12 வது வல்லபை விநாயகர் திருவவதாரப்படலம்:

முனி சிரேட்டர்களே! இது காறும் துண்டி விநாயகர் திருவிளையாடல் செப்பினோம். இனி வல்லபை விநாயகரது திருவிளையாடலைக் கூறுவோம் என ஆரம்பித்தார். முன்னொரு காலத்திலே பிரமதேவனானவன் சிங்காசனத்தில் இருக்கும் போது பிரமபுத்திரனாகிய மரீசி என்பவர் தந்தையை வணங்கி மும் மூர்த்திகட்கும் முதல்வர் யார்? என வினாவினார்- அதற்குப் பிரம்மதேவர் விநாயக மூர்த்தியே எனக் கூறினார். மரீசி முனிவர் இருபத்தோராயிர வருடம் விநாயகரை நோக்கிக் கடுந் தவம் புரிந்தார், கணேசப் பெருமான் காட்சி நல்கி மரீசி கேட்டவரங்களை வழங்கினார் மரீசிமுனிவர் கேட்டபிரகாரம் உமாதேவியார் தனக்குமகளாசப்பிறந்து வளர்ந்து கணேசப் பெருமானுக்குச் சக்தியாக வரவும் ஒப்புக் கொண்டார். மரீசி முனிவரானவர் மனைவியாகிய தேவவல்லியுடன் தைமாத மக நட்சத்திரத்திலன்று யமுனா நதியில் ஸ்நானஞ் செய்யச் சென்றார் அங்கே ஒரு கமலத்தின் மீது தெய்வீகமுள்ள சங்கு இருப்பதைக் கண்டார்கள். முனிவரானவர் சங்கினை எடுக்கச் சென்ற போது உமாதேவியார் குழந்தை வடிவானார். மரீசி முனிவர் குழந்தையை எடுத்துத் தேவவல்லியிடம் கொடுத்தார். இருவரும் ஆச்சிரமம் சென்று தெய்வக்குழந்தையை அன்போடு வளர்த்து வந்தனர். வல்லபை என நாமஞ் சூட்டி வளர்த்தனர். வல்லபையானவர் தவச்சாலையில் இருந்து கணேசப் பெருமானை நோக்கித் தவஞ் செய்தார். உரிய வயதை அடைந்ததும் மரீசி முனிவரும் தேவவல்லியும் கணேசமூர்த்தியினுடைய திருவருட்பிரகாரம் வல்லபாதேவியினுடைய திருக்கரங்களை விநாயகப் பெருமானுடைய திருக்கரத்தில் வைத்துத் தாராதத்தஞ் செய்து கொடுத்தார்கள், அரிபிரேமந்திராதி தேவர்கள் வேத கோஷஞ் செய்தார்கள். கணேசப் பெருமான் அனைவருக்குங் கிருபா நோக்கஞ் செய்தருளினார். இவ்வமயம் விஷ்ணுமூர்த்தி தமது புத்திரிகளுக்கும் கிருபை செய்யுமாறும் வேண்டுதல் செய்தார், விநாயகப்

பெருமான் அவர்களைத் தமது புத்திரிகளாகப் பாவித்து ஆசி வழங்கினார்.

## 13 வது வியாசமகா முனிவர்உபதேசம்பெறும்படலம்

சவுனகாதி முனிவர்களே; இது வரை விநாயக பிரபாவம் முடிந்த தன்றோ. எமது கருணைக்கடலாகிய கணேசப் பெருமான் விஷ்ணுவிற்கு உபதேசித்த படி அவர் பிரமதேவருக்கு உபதேசிக்க அவர் எமது ஆசிரியராகிய மகாத்துவம் மிக்க வேதவியாசர் பாந்தமாக உபதேசித்திருக்கின்றனர். சித்த சாந்தமாகக் கேட்பீர்களாக என்று மேலும் சொல்லுவார். விஷ்ணுவுக்கு வல்லபைக் கணேசர் உபதேசித்தருளிய யோக ஞானமும் அவர் கடாட்சித்தருளிய விஸ்ப ரூபத்தின் விபரமும் வேதவியாசர் உபதேசஞ் செய்ததும் இதுவாகும், இம் மேலான ஞானத்தை நீங்கள் அனைவரும் வழிபட்டு அருளைப் பெறுவீர்கள் என்று சூத புராணிகர் கூறினார் நைமிசாரிணிய முனிவர்கள் அனைவரும் அளவற்ற சந்தோஷத்தோடு வணங்கினார்கள். மேலும் சுவாமீ! விநாயக மகத்துவத்தை அடியேங்களுக்கு எளிதில் புகட்டினீர்கள். மானிடதேகம் எடுத்த பலனை (முத்தி வீட்டினை) அடைவதற்கு பாத்திரரானோம் நாயினுங் கடையேங்களால் என்ன கைமாறு செய்ய முடியும் என்று கூறினார்கள். மேற்படி பிரபாவத்தைப் பிரதி தினமும் பாராயணஞ் செய்து வாழ்ந்து வந்தார்கள்.

விருத்தம்

அருள்மொழி கணேசன் செய்ய வடிமலர் வாழ்க வன்னான்
பொருவிலிப் புராணமோங்கிப் பொலிகவீ துணர்ந் தெல்லோரு
மருவுக பயன்க ணான்கு மன்னுக வுலக மெல்லாம்
திருவொடு சிறக்க வெங்குஞ் செயிரிலாச் சைவ மென்னும்.

# இலீலா காண்டம் முற்றிற்று.

## விநாயக புராண வசனச் சுருக்கம் சம்பூரணம்

திருச்சிற்றம்பலம்.

சுபம் — சுபம் — சுபம்